→சங்ககால மக்கள் ரோம், கீரிஸ், ஆப்பிரிக்கா, இலங்கை ஆகிய நாடுகளுடன் வணிகம் செய்தனர்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

→கடவுள் : – பெண்கடவுள் , சிவன், பிரம்மன், இந்திரன், வருணன்.

→கிரேக்க எழுத்தாளரான மெகஸ்தனிஸ் எழுதிய இண்டிகா என்ற நூல் தமிழ் அரசுகளைப் பற்றி குறிப்பிடுகிறது.

→கிரேக்கர்களே முதன் முதலில் தமிழகத்துடன் வர்த்தகம் மேற்கொண்டனர்.

→2004ம் ஆண்டு மைய அரசு தமிழ் ஒரு செம்மொழி என அறிவித்துள்ளது.

கருப்பொருள்	குறிஞ்சி	முல்லை	மருதம்	நெய்தல்	பாலை
தெய்வம்	முருகன்	திருமால்	இந்திரன்	வருணன்	கொற்றவை
மக்கள்	**வெற்பன், குறவர், குறத்தியர்**	**தோன்றல், ஆயர், ஆய்ச்சியர்**	**ஊரன், உழவர், உழத்தியர்**	**சேர்ப்பன், பரதன், பரத்தியர்**	**எயினர், எயிற்றியர்**
உணவு	**மலைநெல், தினை**	**வரகு, சாமை**	**செந்நெல், வெண்ணெல்**	**மீன், உப்புக்கு பெற்ற பொருள்**	**சூறையாடலால் வரும் பொருள்**
விலங்கு	**புலி, கரடி, சிங்கம்**	**முயல், மான், புலி**	**எருமை, நீர்நாய்**	**முதலை, சுறா**	**வலியிழந்தத யானை**
பூ	**குறிஞ்சி, காந்தள்**	**முல்லை, தோன்றி**	**செங்கழுநீர் தாமரை**	**தாழை,நெய்தல்**	**குரவம், பாதிரி**
மரம்	**அகில், வேங்கை**	**கொன்றை, காயா**	**காஞ்சி, மருதம்**	**புன்னை,ஞாழல்**	**இலுப்பை, பாலை**
பறவை	**கிளி,மயில்**	**காட்டுக்கோழி, மயில்**	**நாரை, நீர்க்கோழி, அன்னம்**	**கடற்காகம்**	**புறா, பருந்து**
ஊர்	**சிறுகுடி**	**பாடி, சேரி**	**பேரூர், மூதூர்**	**பட்டினம்,பாக்கம்**	**குறும்பு**
நீர்	**அருவிநீர், சுனைநீர்**	**காட்டாறு**	**மனைக்கிணறு, பொய்கை**	**மணற்கிணறு, உவர்க்கழி**	**வற்றிய சுனை, கிணறு**
யாழ்	**குறிஞ்சியாழ்**	**முல்லை யாழ்**	**மருத யாழ்**	**விளரி யாழ்**	**பாலை யாழ்**
பறை	**தொண்டகம்**	**ஏறுகோட்டறை**	**மணமுழா, நெல்லரிகினை**	**மீன்கோட்பறை**	**துடி**
பண்	**குறிஞ்சிப்பண்**	**முல்லைப்பண்**	**மருதப்பண்**	**செவ்வழிப்பண்**	**பஞ்சுரப்பண்**
தொழில்	**தேனெடுத்தல், கிழங்கு அகழ்தல்**	**ஏறுதழுவுதல், நிரை மேய்த்தல்**	**நெல்லரிதல், களை பறித்தல்**	**மீன்பிடித்தல், உப்பு விளைவித்தல்**	**வழிப்பறி, நிரை கவர்தல்.**

சேரர்கள்

→தற்போதைய கேரளா மற்றும் தமிழகத்தின் மேற்குப்பகுதி சேரநாடு, தலைநகர் வஞ்சி. சிறந்த மன்னர் செங்குட்டுவன்.

→சின்னம் – **வில்**

→துறைமுகம் – **தொண்டி, முசிறி**

→நெடுஞ்சேரலாதன் என்ற மன்னம் இமயம் வரை சென்று வெற்றியுடன் திரும்பி இமயவரம்பன் என்று புகழ்பெற்றார்.

சோழர்கள்

→முற்காலச் சோழர்கள் கி.பி. முதல் மற்றும் இரண்டாம் நூற்றாண்டு (சங்ககாலம்)

→சோழர்கள் பருத்தி துணி ஏற்றுமதி மூலம் பொருள் ஈட்டினர்.

→சோழநாடு, காவிரிநாடு, காவிரி சூழ்நாடு, நீர்நாடு மற்றும் புனல் நாடு என்ற பெயர்களாலும் சோழ அரசு அறியப்படுகிறது.

→**மகாபாரதம், அசோகர் கல்வெட்டு, மெகஸ்தனிஸ்** மற்றும் **தாலமி** குறிப்புகளிலிருந்து சோழர் பற்றி அறிய முடிகிறது.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

→சங்க காலத்தில் சோழர்கள் திருச்சி, தஞ்சை பகுதிகளை ஆட்சி செய்துள்ளனர்.

கரிகாலன்:

→முற்காலச் சோழர்களில் சிறந்தவர் **கரிகாலன்**, கல்லணையைக் கட்டினார். மற்றொரு பெயர் **திருமாவளவன்**,

→தலைநகர் உறையூர், துறைமுக பட்டினம் பூம்புகார். இவர் வெண்ணிப் பறந்தலையில் பாண்டியன் சேரரை வென்றார். அவைப் புலவர்கள் உருத்திரங்கண்ணனார் மற்றும் முடத்தாமக் கண்ணியார்.

→கொடி – **புலிக்கொடி**

→வீரசோழியம், நவசோழ சரிதம், ஸ்தல புராணம் ஆகிய இலக்கியங்கள் முற்காலச் சோழ அரசர்கள் பற்றி அறிய உதவுகின்றன.

பிற்காலச் சோழர்கள் (கி.பி.850–1279)

→தஞ்சையை ஆண்ட முத்தரையத்களிடமிருந்து கைப்பற்றி நிறுவியர் விஜயாலயச் சோழன்.

→தலைநகர் – **தஞ்சை**

→தஞ்சையில் உள்ள **பிரகதீஸ்வரர் ஆலயம், கங்கை கொண்ட சோழப்புரம்** கோவில், தாராபுரத்திலுள்ள **ஐராவதீஸ்வரர் ஆலயம், திருபுவனத்திலுள்ள கம்பகரேஸ்வர**ர் ஆலயம் சோழர் காலத்தைய நினைவுச் சின்னங்களாகும்.

→சோழர்கால கல்வி மற்றம் சமயநிலை குறித்து எண்ணாயிரம், **திருமுக்கூடல், திருபுவனம்** கல்வெட்டுகள் கூறுகின்றன.

→சேக்கிழாரின் – **பெரியபுராணம்** (திருத்தொண்டர் புராணம்), திருத்தக்க தேவரின் – **சீவக சிந்தாமணி**, ஒட்டக்கூத்தரின் –மூவருலா, **குலோத்துங்க பிள்ளைத் தமிழ், தக்கயாகபரணி,** கம்பரின்– கம்பராமாயணம், ஜெயங்கொண்டாரின்–**கலிங்கத்துப்பரணி** சோழர் காலத்திய படைப்புகள்.

→உரையாசிரியர்களான இளம்பூரனார், நச்சினார்க்கினியர், பரிமேலழகர் இக்காலத்தவர்

→சைவ நூலான **பன்னிரு திருமுறைகளை** – நம்மியாண்டார் நம்பியும், வைணவ நூலான நாலாயிரதிவ்ய பிரபந்தத்தை நாதமுனிவரும் இக்காலத்தில்தான் தொகுத்தனர்.

→**குடவோலை** முறை, கிராம நிர்வாகம், வரி வசூல் முறை, நில நிர்வாகம் ஆகியவை குறித்து

→**உத்திரமேரூர் கல்வெட்டுகள்** கூறுகின்றன.

→சேக்கிழார் இரண்டாம் குலோத்துங்கன் காலத்தில் வாழ்ந்தார்.

→கடற்படை சோழர் காலத்தில் பலம் வாய்ந்ததாக காணப்பட்டது.

→கோயில்களின் வாசற்படியில் கோபுரங்கள் அமைக்கும் முறை சோழர்காலத்தில் தோன்றியது.

→**தேவதாசி** முறை இக்காலத்தில் காணப்பட்டது.

→ **"சதிர்"** எனப்பட்ட பரத நாட்டிய கலை தஞ்சை கோயில்களில் உருவானது.

→மூன்றாம் ராஜேந்திரன் ஆட்சி முறை பற்றி **திருவந்திரம் கல்வெட்டு** கூறுகிறது.

→சில கல்வெட்டுகளில் **மெய்கீர்த்திகள்** எனப்படும் மன்னர்களின் வெற்றி வரலாறுகள் காணப்படுகின்றன.

→சோழர்களின் சமகால அரசர்கள் – **சேரர்,பாண்டியர்,இராஷ்டிர கூடர்கள்.**

→சோழர்கள் ஆட்சியில் **சைவ மதம்** சிறப்புற்றிருந்தது.

→இக்காலத்தில் பொன், வெள்ளி, செப்பு நாணங்கள் வெளியிடப்பட்டன.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

→ஜெயங்கொண்டாரின் **கலிங்கத்துப்பரணி.** ஒட்டக் கூத்தரின் (விக்கிரம சோழன், நம் குலோத்துங்கன், நம் ராஜராஜன்) **மூவருலா, குலோத்துங்கங்கன் பிள்ளைத் தமிழ்** சோழர்பற்றி அறிய உதவுகிறது. சரஸ்வதி அந்தாதி ஒட்டக்கூத்தரின் படைப்பாகும்.

→முதலாம் குலோத்துங்கன் **சுங்கம் தவிர்த்த சோழன்** எனப்பட்டார். ஜெயங்கொண்டார், ஒட்டக்கூத்தர்,புகழேந்தி, கம்பர் முதலான கவிஞர்களை ஆதரித்தார்.

→சோழர்காலம் தமிழ்பண்பாட்டின் பொற்காலம் ஆகும்.

→ஏரிவாரியம், தோட்டவாரியம், பஞ்சவாரியம் சமவத்சர வாரியம், பொன்வாரியம், புறவுவரி வாரியம் போன்ற வாரியங்கள் அமைக்கப்பட்டன. இதன் உறுப்பினர்கள் வாரியப் பெருமக்கள் எனப்பட்டனர்.

→சோழர்கள் தஞ்சையைத் தலை நகராக கொண்டிருந்தனர்.

→சோழ நிர்வாகத்தின் தலைவர் **அரசர்.**

→அரச பதவி பரம்பரையானது. தந்தைக்கு பிறகு மூத்த மகன் ஆட்சிக்கு வரவேண்டும்.

→விக்கிரமச் சோழனின் அவைப்புலவர் **ஒட்டக்கூத்தர்.**

→பட்டத்து இளவரசர் **யுவராஜா** எனப்பட்டார்.

→பேரரசு – மண்டலம், கோட்டம் (வளநாடு), ஊர் (அ) கிராமம் என நான்கு பிரிவுகளாக பிரிக்கப்பட்டது. (ஊர் – நாடு– வளநாடு – மண்டலம்) நிர்வாக அடிப்படை அலகு ஊர்.

→விளைச்சலில் **1/6** பங்காக வரி இருந்தது.

→பிராமணர்களின் குடியிருப்பு **'சதுர்வேதி மங்கலம்'** எனப்பட்டது.

→இக்காலத்தைய துறைமுகங்கள், மகாபலிபுரம், காவிரிபூம்பட்டினம், சோலையூர், கொற்கை. இராமானுஜர் சோழர்கள் காலத்தில் வாழ்ந்தார்.

→கம்பராமாயணத்தை எழுதிய கம்பர் – மூன்றாம் குலோத்துங்கனால் **கவிச்சக்கரவர்த்தி** என்ற பட்டம் வழங்கப்பட்டு கவுரவிக்கப்பட்டார்.

→கம்பரின் இதர படைப்புகள் சடகோபர் அந்தாதி, மும்மணிக் கோவை.

→தென்னிந்தியாவில் சூரியக் கடவுளுக்கென முதல் கோவில் கும்பகோணத்தில் **முதலாம் குலோத்துங்கன்** காலத்தில் கட்டப்பட்டது.

→இரண்டாம் குலோத்துங்கன் காலத்தில் **பெரிய புராணம்** என்ற நூலை **சேக்கிழார்** எழுதினார்.

→தமிழ்நாட்டிலேயே மிகவும் உயரமான மற்றும் அகலமான கோவில் **தஞ்சை பிரகதீஸ்வரர் கோவில்.**

→கூத்து என்பது ஒரு வகையான **நாடகம்.**

→இக்காலத்தில் கம்பர், சேக்கிழார் வாழ்ந்தனர்.

→சோழ வம்சத்தின் கடைசி அரசர் **மூன்றாம் இராஜேந்திரன்**

<u>முதலாம் ஆதித்தன் (கி.பி.817–907)</u>

→விஜயாலாயச் சோழனின் மகனாவார்.

→**கோதண்ட ராமன்** எனவும் அழைக்கப்பட்டார்.

<u>முதலாம் பராந்தகன் (கி.பி. 907–955)</u>

→**பரகேசரி** பட்டத்துடன் ஆட்சி செய்தார்.

→பாண்டிய நாட்டை வென்று மதுரை கொண்ட **கோப்பரகேசரி** (மதுரை கொண்டான்) பட்டம் பெற்றார்.

→இலங்கை மற்றும் பாண்டிய மன்னர்களின் கூட்டு ராணுவத்தை வென்று **மதுரையும், ஈழமும்**

கொண்டான் என்ற பட்டம் பெற்றார்.
→சிதம்பரம் கோயிலுக்கு பொற்கூரை வேய்ந்ததால் " **பொன் வேய்ந்த சோழன்**" எனப்பட்டார்.

முதலாம் ராஜராஜன் கி.பி.985–1014

→சிறப்பு பெயர்கள் : **– ஜெயங்கொண்டான், சிவபாதசேகரன்.**
→சோழவம்சத்தின் சிறந்த மன்னர் இராஜராஜ சோழன். இயற்பெயர் **அருண்மொழி வர்மன்.**
→**திருவளங்காடு செப்பேடுகள்** ராஜராஜன் பற்றி கூறுகின்றன.
→இவரது காலத்தில் அரசு நிர்வாகம் சிறப்புற்றிருந்தது.
→கொல்லத்தை சார்ந்த பாஸ்கர ரவி என்ற மன்னரை தோற்கடித்து "**காந்தளூர் சாலைக் கலமருதருளிய**" என்ற பட்டம் பெற்றார்.
→இலங்கை மன்னன் 5ம் மகிந்தனை வென்று இலங்கை தலைநகரை அனுராதபுரத்திலிருந்து பொலனருக்கு மாற்றினார்.
→மாலத்தீவு (முந்நீர் பழந்தீவு) களையும் வென்றார்.
→இவருக்கு ராஜகேசரி, சிவபாத கேசரன், மும்முடிச் சோழன், பொன்னியின் செல்வன் போன்ற பட்டங்கள் உண்டு.
→**கி.பி.1010ல்** தஞ்சை பிரகதீஸ்வரர் ஆலயத்தை கரூவூர் தேவர் என்ற கட்டட வல்லுநரைக் கொண்டு கட்டினார். உயரம் 216 அடி.
→இவர் புத்த மற்றும் சைவ மதங்களை ஆதரித்தார்.
→சேர,பாண்டிய,இலங்கை மன்னர்களை வென்று " **மும்முடிச்சோழன்**" என்ற பட்டம் பெற்றார்.
→இவரின் தலைநகர் தஞ்சை.
→இவர் காலத்து கல்வெட்டுகள் **அகவற்பாவில்** பொறிக்கப்பட்டது.
→தேவாரத்தைத் தொகுத்தவர் **– நம்பியாண்டார் நம்பி,** தொகுப்பித்தவர் **இராஜராஜன்**
→**நிலஅளவை** முறையை அறிமுகம் செய்தார்.

முதலாம் ராஜேந்திரன் (1014–1044)

→இயற்பெயர் **மதுராந்தகன்**
→இலங்கையை முழுமையாக வெற்றி கொண்டார்.
→கங்கை நதியை கடந்து வங்காள அரசர் முதலாம் மகிபாலனை வெற்றி கொண்டு கங்கையிலிருந்து கங்கை கொண்ட சோழபுரத்திற்கு அருகே உள்ள சோழகங்கம் என்ற ஏரிக்கு தண்ணீர் கொண்டு வந்ததால் **கங்கை கொண்ட சோழன்** என அழைக்கப்பட்டார்.
→சுமத்திரா, மலேயா நாடுகளை 1025ல் வெற்றி கொண்டதால் **கடாரம் கொண்டான்** எனப்பட்டார்.
→கங்கை கொண்ட சோழபுரம் என்ற நகரை உருவாக்கி அதனை புதிய தலைநகராக்கினார்.
→இவரின் இதர பட்டங்கள் முடிக்கொண்டான், பண்டித சோழன், உத்தம சோழன்.
→இவரைப் பற்றி திருவாலங்காடு செப்பேடுகள், கரந்தை செப்பேடுகள் பல தகவல்களை கூறுகின்றன.
→வலிமையான கடற்படை கொண்டிருந்தார்.

பாண்டிய அரசு

→முற்காலப் பாண்டியர் (சங்ககால பாண்டியர்) 2 மற்றும் 3ம் நூற்றாண்டு

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

→மதுரை, இராமநாதபுரம் , திருநெல்வேலி, திருச்சியின் ஒரு பகுதி மற்றும் திருவாங்கூரின் பகுதிகளைக் கொண்டது **பாண்டிய அரசு.**

→இவர்கள் **கபாடபுரத்தை** (மதுரை) தலை நகராகக் கொண்டு ஆண்டதாக சங்க இலக்கியங்கள் கூறுகின்றன.

→**மெகஸ்தனிஸ்,பிளினி, கிரேக்க எழுத்தாளர்கள், சமஸ்கிருத இலக்கண அறிஞர் கத்யாயணர்** ஆகியோர் குறிப்புகள், பழந்தமிழ் இலக்கியங்கள், **யுவான்சுவாங், மார்க்கோ போலோ, இஸ்லாமிய வரலாற்று ஆசிரியர் வாசஃப்** ஆகிய வெளிநாட்டவர் குறிப்புகள் மூலம் பாண்டியர் பற்றி அறிய முடிகிறது.

→இராமாயணம் மற்றும் மகாபாரதத்தில் **பாண்டியர்கள்** பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.

→முதல் மன்னன் **நிலந்தரு திருவின் நெடியோன்.**

→முதலாம் நெடுஞ்செழியன் சிலப்பதிகார காலத்தவர். இவரே **ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்** எனப்பட்டார். இவரே கோவலனுக்கு தவறாக தண்டனை வழங்கியவர்.

→இரண்டாம் நெடுஞ்செழியன் தலையானங்கானத்தில் சேரர், சோழரை வென்றார். இவரின் அவைப்புலவர்கள் **நக்கீரர், கல்லாடர், மாங்குடி மருதனார்** ஆகியோர், மிகச் சிறந்த பாண்டிய ' மன்னராக இவர் கருதப்படுகிறார்.

→சங்ககால பாண்டிய மன்னர்கள் மதுரையில் **மூன்று தமிழ்ச் சங்கங்களை** ஏற்படுத்தினார்.

→முதற்ச்சங்கம் – தென்மதுரை, இடைச்சங்கம் – கபாடபுரம், கடைச்சங்கம் – வடமதுரை (தற்போதைய மதுரை)

→அகத்தியம், தொல்காப்பியம், சிலப்பதிகாரம், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு போன்ற தமிழ் இலக்கியங்கள். இத்தமிழ் சங்க கூடங்களில் வெளியிடப்பட்டன. கடைச்சங்க காலத்திற்கு முன்னரே தோன்றிய இலக்கண நூல் **தொல்காப்பியம்.**

→இக்காலத்தில் மதுரை மாநகரம் **தமிழ்க் கூடல்** என போற்றப்பட்டது.

→பாண்டிய நாடு பற்றி விவரிக்கும் நூல் – **மதுரைக் காஞ்சி (பத்துப்பாட்டு நூல்)**

→சங்க காலத்தில் தமிழ்நாட்டை ஆண்ட பாண்டியர் **சங்ககால பாண்டியர்** ஆவார்.

→களப்பிரர்களை தோற்கடித்து **கி.பி.550** முதல் **950** வரை ஆட்சி செய்த **முதலாம் பாண்டியர்** ஆவர். முதல் மன்னர் கடுங்கோன்.

→**மாறவர்மன் அரிகேசரி** முதலாம் பாண்டிய மன்னர்களில் தலைசிறந்தவர்.

→பல்லவர் மற்றும் சோழர் வீழ்ச்சிக்குப் பிறகு கி.பி.1190 முதல் 1310 வரை தமிழ்நாட்டை மீண்டும் ஆண்ட பாண்டியர் **இரண்டாம் பாண்டியர்.** நிறுவியவர் விக்கிரம பாண்டியன்.

→பாண்டியர் 3 முறை சுமார் **400 ஆண்டுகள்** ஆட்சி செய்தனர்.

→பாண்டியரின் தலைநகர் **மதுரை.** துறைமுகம் **– கொற்கை,** சின்னம்**–மீன்.**

→ பாண்டியரின் நிர்வாகம் மற்றும் போர் வெற்றிகள் குறித்து வேள்விக்குடி செப்பேடுகள், சீரமங்கலம் செப்பேடுகள், தளவாய்புரம் செப்பேடுகள், சின்னமனூர் செப்பேடுகள் கூறுகின்றன.

→முதலாம் மாறவர்மன் சுந்தர பாண்டியன் காலத்தில் வெளியிடப்பட்ட நாணயங்களில் '**சோனாடு கொ'காண்டான்**' என பொறிக்கப்பட்டுள்ளது. சோனாடு வழங்கியருளிய சுந்தர பாண்டியன் எனப்பட்டார்.

→இரண்டாம் மாறவர்மன் சுந்தர பாண்டியன் (கி.பி.1238–1253) சோழ அரசர் மூன்றாம் ராஜேந்திரனை தோற்கடித்தார்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

→முதலாம் சடையவர்மன் (ஜடாவர்மன்) சுந்தர பாண்டியன் (கி.பி.1251–1268) இலங்கை, கொங்கு நாடு, வல்லம் மற்றும் சோழ அரசை வெற்றி கொண்டதால் " **திருபுவன சக்கரவர்த்தி**" என்றும், **"எம்மண்டலமும் கொண்டருளிய பாண்டியன்" "மகாராசாதிராசா", " ஸ்ரீபரமேஸ்வரன்" என்றும் சிறப்பு பெயர் பெற்றார்.**

→ இவர் சிதம்பரம் நடரா ஜர்கோவிலுக்கும், ஸ்ரீரங்கத்தின் ரங்கநாதர் கோவிலுக்கும் பொன் தகட்டால் கூரை வேய்ந்ததால் **பொன் வேய்ந்த பெருமாள் என்னும் பட்டம் பெற்றார்.**

→முதலாம் மாறவர்மன் குலசேகரன் கி.பி.1268–1308 சேர நாட்டிலுள்ள கொல்லம் பகுதியை வென்றதால் கொல்லம் கொண்ட பாண்டியன் என்ற பெயர் பெற்றார். இவரின் ஆட்சியின் போது **மார்க்கோ போலோ** வருகை புரிந்தார்.

→**குகைக் கோயில்கள்** – திரமலைபுரம், திருப்பரங்குன்றம், ஆனைமலை, குன்றக்குடி, கழுகுமலை.

→மதுரை மீனாட்சி அம்மன் கோயில், ஸ்ரீரங்கம் ரங்கநாதர் கோவில் பாண்டியர்களின் படைப்பாகும்.

→களப்பிறர்களை தோற்கடித்த பாண்டிய மன்னன் **கடுங்கோன்**

→கடைசி அரசன் – வீரபாண்டியன் (ஆதித்ய சோழனால் தோற்கடிக்கப்பட்டார்)

→**நம்மாழ்வார் ,பெரியாழ்வார், ஆண்டாள்** பாண்டிய நாட்டினர்.

→வேளாண்மை, வாணிபம் மக்களின் முக்கிய தொழில். வேளாண் தொழில் செய்வோர் **பூமி புத்திரர்கள்** எனப்பட்டனர்.

→**கொற்கை, தொண்டி** சிறந்த துறைமுகங்கள்

→பாண்டிய நாடு **முத்துக்குளிக்கும்** தொழில் சிறப்புற்றிருந்தது.

→திருவாசகம் **– மாணிக்கவாசகர்,** திருப்பாவை – **ஆண்டாள்**, திருப்பல்லாண்டு – **நம்மாழ்வார்,** மகாபாரதம் **– வில்லிபுத்தூர்**, நைடதம் **– அதிவீரராமபாண்டியன்,** ஸ்ரீகவிராயரின் **– சேயூர் முருகன் உலா, இரத்தினகிரி உலா** பாண்டியர் காலத்தவை.

→கற்களால் அமைக்கப்பட்ட கோயில்கள் '**கற்றளிகள்**'

→கற்றளிகள் – மதுரை, கோயில்பட்டி, திருப்பத்தூரில் உள்ளன.

→2ம் பாண்டியர் ஆட்சி **120 ஆண்டுகள்** நடைபெற்றது. இக்கால இறுதியில் மாலிக்காபூர் படையெடுத்து பெரும் செல்வத்தை அள்ளிச் சென்றார்.

குறுநில மன்னர்கள், வேளிர்கள் எனப்பட்டனர். இவர்களில் கடையேழு வள்ளல்கள் : பாரி, காரி, எழினி, பேகன், ஆய், நள்ளி ஆகியோர்.

→கடை ஏழு வள்ளல்கள் பற்றி குறிப்பிடும் நூல் **சிறுபாணாற்றுப்படை.**

→போரில் உயிர்நீத்த வீரர்களுக்கு அளிக்கப்பட்ட நிலம் உதிரப்பட்டி.

→களப்பிரர் காலத்தில் புத்த, சமண சமயங்கள் செல்வாக்கு பெற்றிருந்தன.

இந்தியாவில் முஸ்லீம் ஆதிக்கம்

→அரேபியாவிலுள்ள மெக்கா நகரில் இஸ்லாம் பிறந்தது. இதனைதோற்றுவித்தவர் **– முகம்மது நபி (கி.பி.570–632)**

→**ஹிஜிரா சகாப்தம் – கி.பி.622** முகமது நபி – மெக்காவிலிருந்து மெதினாவுக்கு சென்ற நிகழ்வே ஹிஜிரா.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

→இந்தியாவின் மீது படையெடுத்த முதல் இஸ்லாமியர்கள் **அரேபியர்கள்.**

→அரேபியரின் சிந்து படையெடுப்பால் இஸ்லாம் மதம் இந்தியாவில் புகுத்தப்பட்டது.

→முதன்முதலில் கி.பி. 622ல் சிந்துவை அரேபியர் தாக்கினார். ஆனால் தோல்வியுற்றனர். பின்னர் கி.பி.712ல் முகமது பின் காசிம், தாகீர் ஆண்ட சிந்துவை கைப்பற்றினார். தாகீரின் மனைவி ராணிபாய் ஜவ்ஹர் வழக்கப்படி தீயில் குதித்தார்.

→முகமது பின் காசீம் ஆல் **தங்கநகரம்** என அழைக்கப்பட்ட நகரம் **முல்தான்.**

→முஸ்லீம் அல்லதோர் மீது ஜிசியா வரி வசூலிக்கப்பட்டது.

→பிரம்ம குப்தரின் பிரம்ம சித்தாந்தம் அரபு மொழியில் பெயர்க்கப்பட்டது.

→**பாக்தாத்** நகரின் மருத்துவ மனையில் **தாணா** என்ற இந்தியர் தலைமை மருத்துவராக நியமிக்கப்பட்டார்.

கஜினி முகமது (கஜினி மாமூத்)

→இவர் **சன்னி முஸ்லீம்** பிரிவைச் சேர்ந்தவர்.

→கஜினி பகுதியானது தற்போது **ஆப்கானிஸ்தானில்** உள்ளது.

→வடமேற்குப் பகுதியில் உள்ள கைபர், போலன் கணவாய் வழியாக இந்தியவிற்குள் நுழைந்தார்.

→முதன் முதலில் கி.பி.1000ல் பெஷாவருக்கு எதிராக போரிட்டு எல்லைக் கோட்டைகளைக் கைப்பற்றினார்.

→சுஹி மரபைச்சார்ந்த இந்து அரசர் **ஜெயபாலரை** தோற்கடித்தார்.

→**பிர்தௌசி, அல்பருனி** இவரின் அவைப்புலவர்கள்.

→இவரின் முக்கிய படையெடுப்பு கி.பி.1025ல் சோமநாதபுரம் படையெடுப்பு (குஜராத்) அப்போதைய மன்னர் **பீமதேவர்.**

→இவரின் கடைசி படையெடுப்பு **கி.பி. 1027ல்** ஜாட்டுகளுக்குகெதிரான படையெடுப்பாகும்.

→இவரைப் பற்றிய பாரசீக நூல் பிர்தௌசி எழுதிய ஷாநாமா, கஜினி முகமதுவின் வாழ்க்கை வரலாறை விளக்குகிறது. இவரின் பட்டப்பெயர் **யாமீன் உத் தௌலத்.**

→17 முறை படையெடுத்து இந்தியாவை கொள்ளையடித்தார். (கி.பி.1000–1027) என சர் ஹென்றி எழுதிய இந்திய வரலாறு நூலில் குறிப்பு உள்ளது.

கோரிமுகமது (சகாபுதீன் முகமது)

→கோரி பகுதி ஆப்கானிஸ்தானில் உள்ளது. இந்திய பகுதிக்கு **டெல்லி** தலைநகரம்.

→இந்தியாவில் முஸ்லீம் சாம்ராஜ்யத்தை ஏற்படுத்தினார்.

→கி.பி.1191ல் **முதல் தரெயின் போரில்** தோல்வியுற்று கி.பி.1192ல் 2ம் தரெயின் போரில் **மூன்றாம் பிருதிவிராஜனை** வென்றார். இதன்மூலம் இஸ்லாம் சமயத்திற்க்கும் துருக்கியர் ஆட்சிக்கும் அடித்தளம் அமைக்கப்பட்டது.

→இந்திய வரலாற்றிலேயே துருக்கிய முஸ்லீம் அரசுகள் இந்திய பகுதியில் நுழைய **இரண்டாம் தரெயின் போர்** வித்திட்டது.

→இந்தியாவில் முஸ்லீம் ஆட்சி ஏற்பட அடிகோலிய போர் **இரண்டாம் தரெயின்போர்.**

→முகமது கோரியின் தளபதி முகமது – பின்–பக்தியார் கில்ஜி, கி.பி. 1202–1203ல் விக்கிரமசீலா, நாளந்தா ஆகிய பல்கலைகழகங்களை இடித்தார். வங்காளத்தில் **நாடியா** பகுதியையும் **பீகார்** பகுதியையும் கைப்பற்றினார்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

→இந்திய பகுதிகளுக்கு **குத்புதீன் ஐபெக்கை** பிரதிநிதியாக நியமித்து நாடு திரும்பினார்.

→1206 ல் சிந்து நதிக்கரையில் தமயக் என்ற இடத்தில் கோக்கர்களால் கொல்லப்பட்டார். மறைவுக்கு பிறகு குத்புதீன் ஐபக் டெல்லியின் சுல்தானாக தன்னை அறிவித்துக் கொண்டார்.

டில்லிசுல்தான்கள் (1206–1526)

அடிமை (மாம்லுக்) வம்சம் (1206–1290)

குத்புதீன் ஐபெக் (கி.பி.1206–1210)

→அடிமை வம்சத்தை தோற்றுவித்தவர் **குத்புதீன் ஐபக்.**

→டெல்லியின் முதல் சுல்தான் இவரே. இந்தியாவில் துருக்கிய ஆட்சியை உண்மையில் நிறுவியவர் **குத்புதீன் ஐபக்.**

→இவரின் வழித்தோன்றலே **அடிமை வம்சம் (அ) இல்பாரி** துருக்கி வம்சம் (அ)மாம்லூத் வம்சம் எனப்படுகிறது.

→**லாக் பக்ஷா** (இலட்சங்களை வழங்குபவர்) எனப்பட்டார்.

→**குதுப் – உத்– தீன்– பக்தியார்** என்ற துறவியின் நினைவாக **குதுப்பினாரை டில்லியில்** கட்ட துவங்கினார். கட்டி முடித்தவர் /

→கட்டப்பட்ட காலம் 1205–1210

→குதிரை போலோ விளையாட்டின் .(சவ்கன்) பேதவறி விழுந்து இறந்தார்.

டெல்லியில் **அதாய்டின்கா – ஜோன்பரா** என்ற மசூதியையும் அஜ்மீரில் குவாட் – உல் – இசலாம் என்ற மசூதியையும் கட்டினார். இந்தியாவில் கட்டப்பட்ட முதல் மசூதி இதுவாகும்.

→**லாகூரை** தலைநகராக கொண்டு ஆட்சியை துவக்கினார்.

இல்துத்மிஷ் (சம்சுதீன் அல்ட்டமிஷ்) (கி.பி.1211 – 1236)

→அரேபியா மொழியில் நாணயங்களை வெளியிட்ட **முதல் துருக்கியர்.**

→இல்பாரி இனத்தை சார்ந்தவர். குத்புதீன ஐபக்கின் மகன் **ஆரம்ஷாவைக்** கொன்று அரசரானார்.

→குதுப்மினாரை **கி.பி.1232ல்** கட்டி முடித்தார்.

→அடிமைக்கு அடிமை எனப்படுகிறார். பட்டப்பெயர் **நசீர் அமீர் உல்ம் மினின்**

→டாங்கா எனப்படும் வெள்ளி நாணயம், **ஜிடால்** என்ற செப்பு நாணயம் வெளியிட்டார்.

→தனது தலைநகரை **அஜ் மீரிலிருந்து** டெல்லிக்கு மாற்றினார்.

→**டெல்லி** முதன முறையாக இவரது காலத்தில் தலைநகரானது

→படைப்பிரிவில் **College of Forty** (நாற்பதின்மர் குழு) **(Chahalgni)** என்ற அமைப்பை ஏற்படுத்தினார்.

→**1221ல்** மங்கோலிய தலைவனான செங்கிஸ்கான் படையெடுப்பிலிருந்து இந்தியாவை காத்தார்.

இரஸியா (1236–1240)

→**இல்துரத்மிஷ்** –ன் மகள்

→டெல்லியின் முதல் மற்றும் ஒரே பெண் பேரரசி.

கியாசுதீன் பால்பன் (1265–1287)

→Chahalgni (Group of Forty) முறையை ஒழித்தார். சிறந்த ஒற்றர் படையை அறிமுகம் செய்தார்.

→அடிமை வம்சத்தின் தலை சிறந்த மன்னர்

→சன்னி பிரிவைச் சேர்ந்த இவர் **இல்பாரி இனத்தை** சேர்ந்தவர்

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

→**இந்துஸ்தானத்தின் கிளி** (பறவை) என்றழைக்கப்பட்ட பாரசீகக் கவி **அமீர்குஸ்ரு** இவரால் ஆதரிக்கப்பட்டவர். ஆதரிக்கப்பட்ட அறிஞர் **– அமீர்ஹாசன்**

→தெய்வீக உரிமைக் கோட்பாட்டில் நம்பிக்கை கொண்டவராக இருந்தார் " **பைபோஸ்**" என்னும் புதிய வணக்க முறையை நடைமுறைபடுத்தினார்.

→தன்னை **ஜில் – இ –இலாஹி (Zil-i-ilahi) (கடவுளின் நிழல்)** என அழைத்துக் கொண்டார்.

அடிமை வம்சம் (இல்பாரி வம்சம்)

→பெரோஷா –ரசியா–பஷ்ரம்ஷா–அலாவுதீன் மமுதுஷா–நசுருதீன் முகமது – **பால்பன் கைகுபாத் – கையுமார்.**

கில்ஜி வம்சம் (கி.பி.1290–1320)

ஜலாலுதீன் கில்ஜி (1290–96)

→கில்ஜி மரபை தோற்றுவித்தவர், **கருணை உள்ளம் கொண்ட ஜலாலுதீன்** என புகழப்பட்டார்.

அலாவுதீன் கில்ஜி (1296–1316)

→கில்ஜி மரபின் தலைசிறந்த மன்னர். தன்னை கடவுளின் பிரதிநியாக கருதினார்.

→இயற்பெயர் **அலி குர்ஷாப்.** ஜலாலுதீன் கில்ஜியின் மருமகன்.

→இவரின் படைத்தளபதி **மாலிக்காபூர்** (கருப்பு புலி)

→தென்இந்தியா மீது படையெடுத்த முதல் **டெல்லி சுல்தான்** இவரே.

→**பரித்** என்ற செய்தி சேகரிப்பாளர்களையும், முன்ஹிஸ் என்ற ஒற்றர்களையும் நியமித்தார்.

→அரசியலையும், மதத்தையும் (உலோமாக்கல்) தனித்தனியாக பிரித்த **முதல் டெல்லி சுல்தான்.**

→காரி என்ற **வீட்டு வரியையும்,** சராய் என்ற **மேய்ச்சல் வரியையும்** விதித்தார்.

→குதிரைகளுக்கு சூடு போடும் முறையையும், (Dagh) – அரசு முத்திரையிடுதல்) ஊதியத்தை பணமாக தரும் முறையையும் கொண்டுவந்தார். **ஷெர்ஷாவின் முன்னோடி** என அழைக்கப்பட்டார்.

→பால்பனால் ஆதரிக்கப்பட்ட **அமிர்குஸ்ரு** இவரது அவையையும் அலங்கரித்தார்.

→விலைக் கட்டுப்பாட்டு முறையை (அங்காடி கட்டுபாட்டு சீர்திருத்தம்) கொண்டு வந்தார்.

→அங்காடியை கட்டுப்படுத்த திவானி ரியாஸத், ஹானாயி மண்டி என இரு அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர்.

→**இரண்டாம் அலெக்சாண்டர்** என பெயர் சூட்டிக்கொண்டார்.

→முதன்முதலில் நிலவரியினை வசூலித்த டெல்லி சுல்தான் இவரே. விளைச்சலின் **1/2** பங்கு நிலவரியாக வசூலிக்கப்பட்டது.

→குதுப்மினாருக்கு நுழைவுவாயில் "**அலாய் – தர்வாசா**" கட்டியவர் அலாவுதீன் கில்ஜி.

→கில்ஜி வம்சத்தின் கடைசி அரசர் **நஸிர் – உத்தீன் குஸ்ரு–ஷா** (குஸ்ரோகான்)

→அலாவுதீன் கில்ஜி இந்துக்கள் மீது **ஜிசியா** வரியை திணித்தார்.

→**அமிர்குஸ்ரு** 8 சுல்தான்கள் காலத்தில் வாழ்ந்தவர், இவர் எழுதிய நூல்கள் – **துக்ளக் நாமா**, தாரிக்–இ–அலாய், அசிகா. **Tuti – Hind (parrot of India)** என அழைக்கப்பட்டார்.

→கில்ஜி வம்சம்:– ஜலாலுதீன் கில்ஜி – அலாவுதீன் கில்ஜி – சகாபுதீன் உமர் – குத்புதீன் முபாரக்ஷா – நஸிர் உத்தீன் குஸ்ருஷா.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

துக்ளக் வம்சம் (கி.பி. 1320–1414)

கியாசுதீன் துக்ளக் (1320–25) (காஸி மாலிக்)

→துக்ளக் வம்சத்தை தொடங்கியவர்.

முகமது பின் துக்ளக் (ஜுனோகான்) (1325–51)

→துக்ளக் வம்சத்தில் சிறந்தவர். இந்துக்களின் **ஹோலி பண்டிகையில்** கலந்து கொண்ட முதல் சுல்தான் இவரே.

→மொராக்கோ நாட்டு பயணி **இபின் பதுதா** குறிப்புகள் இவரின் ஆட்சி முறை பற்றி குறிப்பிடுகிறது.

→இபின் பதுதா நூல் – சாபர் நாமா

→இரு நதிகளுக்கு இடையிலான வளமான பகுதியான தோவாப் பகுதிக்கு அதிகவரி வசூலிக்கப்பட்டது.

→**உடன்கட்டை (சதி)** ஏறும் வழக்கத்தை ஒழிக்க முயன்றார்.

→தினார் என்ற தங்க நாணயத்தையும் **அடில்** என்ற வெள்ளி நாணயத்தையும், அடையாள நாணயத்தையும் (Token Currency) – **செப்பு நாணயம்** வெளியிட்டார்.

→**திவானிகோஹி** என்ற விவசாய துறையை ஏற்படுத்தினார்.

→மங்கோலிய படையெடுப்பிலிருந்து தலை நகரை பாதுகாத்துக் கொள்ள தனது தலைநகரை டெல்லியிலிருந்து கி.பி.1327–28ல் தேவகிரி (தௌலதாபாத்)க்கு மாற்றினார்.

→**முரண்பாடுகளின் மொத்த உருவம்** என்றழைக்கப்படுகிறார்.

பெரோஷா துக்ளக் (1351–1388)

→முகமது பின்துக்ளக்கினால் வழங்கப்பட்ட **தக்காவி** எனும் விவசாய கடனை தள்ளுபடி செய்தார்.

→பிராமணர்கள் மீது **ஜிஸியா** வரியை விதித்தார்.

→தனது மக்களிடமிருந்து 4 வகையான வரி வசூலித்தார்.

→கரோஜ் – விளைச்சலில் 1/10 பங்கு

→கம்ஸ் – போர்களில் கைப்பற்றிய பொருட்களில் 1/5 பங்கு

→ஜிஸியா – இஸ்லாம் அல்லாதோர் மீது திணிக்கப்பட்ட தலைவரி

→ஜகாத் – இஸ்லாமிய மத சடங்குகளை நிறைவேற்ற வசூலிக்கப்படுகிறது.

→அலாவுதீன் கில்ஜியால் கைவிடப்பட்ட **ஜாகிர்தாரி (இக்தார்)** முறை இவரது காலத்தில் கொண்டு வரப்பட்டது.

→வேலைவாய்ப்பு அலுவலகத்தை ஏற்படுத்திய முதல் டில்லி சுல்தான்

→டெல்லிக்கு அருகே **பெரோஷாபாத்** என்ற நகரை உருவாக்கினார்.

→இவரின் சுயசரிதை **Futuhat I – Firueshahi**

→சமர்கண்ட பகுதியை ஆண்ட **தைமூர் படையெடுப்பு** துக்ளக் மரபின் வீழ்ச்சிக்கு அடிகோலியது.

→கியாசுதீன் துக்ளக் – முகமதுபின் துகளக்– பெரோஸ் துக்ளக்– கியாசுதீன் துக்ளக் II – அபுபக்கர் – முகமது பின் பெரோஸ் – ஹீமாயுன் – நசுருதீன் முகமது

சையத் மரபு (கி.பி. 1414–1451)

→இம்மரபு கிசிர்கான் என்பவரால் தோற்றுவிக்கப்பட்டது.

→கிஸிர்கான் மகன் முபாரக்ஷா என்பவரால் யமுனை நதிக்கரையில் **முபாரக் பாத்நகர்** உருவாக்கப்பட்டது.

→**அலாவுதீன் ஆலம் ஷா** இம்மரபின் கடைசி அரசர்.

லோடிமரபு (கி.பி.1451–1526)

→முதல் மன்னர் **பகலால் லோடி** (தோற்றுவித்தவர், அதிக காலம் ஆட்சி செய்தவர்)

→அடுத்த மன்னர் **சிக்கந்தர் லோடி**, தன் தலை நகரை டெல்லியிலிருந்து **ஆக்ரா** என்ற புதிய நகருக்கு கி.பி.1504ல் மாற்றினார். லோடி வம்சத்தின் சிறந்த மன்னர்.

இப்ராகிம் லோடி

→**1526**ல் முதல் பானிப்பட்டு போரில் பாபரிடம் தோற்றார். டெல்லி சுல்தானியத்துக்கு முடிவு கட்டிய போர்

→லோடி வம்சத்தின் கடைசி அரசர் இவரே.

→இவருடன் டெல்லி சுல்தான்களின் ஆட்சி முடிவுற்றது.

டில்லி சுல்தான்களின் அமைச்சர்கள்

வசீர் – பிரதம அமைச்சர் (ம) நிதி அமைச்சர்

திவானி ரிஸாலத் – வெளியுறவு அமைச்சர்

ஸாதர் – உஸ்–சாதர் – சட்ட அமைச்சர்

திவானி இன்ஷா – அஞ்சல்துறை அமைச்சர்

திவானி அர்ஸ் – பாதுகாப்பு (படைத்துறை) அமைச்சர்

காஸி – உல் – கஸாத் – நீதித்துறை அமைச்சர்

Delhi Sultanate ordering: - Slave. Khalji. Tughlaq. Syyid, Lodhi.

பக்தி இயக்கங்கள்

→இடைக்காலத்தில் தோன்றிய பக்தி இயக்கமானது இந்தியா முழுமைக்கும் பரவியது.

→முதன்முதலில் பக்தி இயக்கம் கி.பி.7ம் நூற்றாண்டில் தென்னிந்தியாவில் தோன்றியது.

→வட இந்தியாவில் சேர்த்தவர் **இராமானந்தர்.**

→**ஆதிசங்கரர் :** கேரளாவின் காலடியில் பிறந்தார். பத்ரிநாத், பூரி, துவாரகா, சிருங்கேரியில் மடங்களை நிறுவினார். **பக்தி இயக்கம்** தொடங்கி வைத்தவர் இவரே.

→**வைகுந்த சுவாமிகள் :** (1809–1851) நாடார் சமூகத்தில் பிறந்த இவரின் இயற்பெயர்**முடிசூடும் பெருமாள்.** தமிழகத்தில் தலித் இயக்கம் தோன்றுவதற்கான விதையை விதைத்தவர் இவர்.

→**மாதவாச்சாரியார்:** (1199–1278) கர்நாடகாவில் உள்ள கல்யாணபுரத்தில் பிறந்தார். **பிரம்ம சூத்திரம்** என்ற நூலை எழுதினார்.

→**ஸ்ரீகாந்தாச்சாரியார்:** – இவர் கண்டது சிவாத்வைதம்

→**ராம்தாஸ் :–**(1608–1681) சிவாஜியின் குருவான இவர் **தாசபோதம்** எழுதினார்.

→**ராமானந்தர்:–** **பிராயாகை** என்ற அலகாபாத்தில் பிறந்தார். (1400–1470) இராமானுஜரின் சீடர். வட இந்தியாவில் பக்தி மார்க்கத்தை பரப்பினார். இவரின் சீடர்கள் – **கபீர், ராய்தாசர், சேனா, பிபா.**

→**பத்மாவதி :–** இவர் ஹிந்தி மொழியில் பக்தி மார்க்கத்தை பரப்பினர். இவரின் முதன்மையான சீடர் **கபீர்.**

→இவரின் படைப்பு **ஆனந்த பாஷ்யம்**

→பசவர்:– வீரசைவம் என்ற பிரிவைத் தொடங்கினார். சிவனை வழிபட்ட இவரைப்

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

பின்பற்றியவர்கள் **வீரசைவர் (அ) லிங்காயத்துகள்** எனப்பட்டனர்.

→**மீரான் சாகிப் :–** **குவாதிர் வாலி** என்று மக்களால் புகழப்பட்டவர் நாகூர் ஆண்டவர். நாகூரில் இவரின் கல்லறை உள்ளது. **கந்தூரி உருஸ்** விழாவில் அனைத்து மதத்தினரும் பங்கேற்பர். 16ம் நூற்றாண்டை சேர்ந்தவர்.

→மகாராட்டினத்தில் உருவான ஞானசேகர் **பகவத்கீதைக்கு – ஞானேஸ்வரி** என்ற உரை எழுதினார்

→சிவாஜியின் சமகால பக்தி இயக்கத்தவர் – துக்காராம் – கிருஷ்ணபகவான் பக்திபாடல்கள் இயற்றினார்.

→**விஷ்ணுவை, வித்தோபா** என பெயரிட்டு அழைத்தவர் – நம தேவர் – இவரின் பாடல்களில் சில கிரந்த் சாகிப் ல் இடம் பெற்றுள்ளன.

→**சைதன்யர்** :– (கி.பி.1485)ல் நாடியாவில் (வங்காளம்) பிறந்தார். கிருஷ்ண வழிபாட்டை பிரபலபடுத்தினார்.

→சங்கீர்த்தனம் (அ) கடவுளின் புகழை பொது இடங்களில் பாடும் முறையை பிரபலபடுத்தியவர்

→பாரசீகத்தில் (ஈரான்) தோன்றிய சூபி இயக்கம் இந்தியாவுக்கு வந்த காலம் **11 ஆம் நூற்றாண்டு.**

→இந்தியாவில் சூபி துறவிகளிலே புகழ்மிக்கவர். குவாஜா மொய்னுதீன் சிஷ்டி. கரிப் நவாஜ்

துளசிதாசர் :

→கி.பி.1522ல் பிராமண குடும்பத்தில் பிறந்தார். இவர் ஒரு **ராமபக்தர்.**

→**இராமசரிதாமானாஸ், வினய பத்திரிகா, கவிதாவளி** என்ற நூல்களை படைத்துள்ளார்.

மீராபாய்

→இராசபுத்திர இளவரசியாவார்.

→கிருஷ்ண பகவானின் பக்தர். **பஜன்** என்ற இவரது பாடல்கள் ராஜஸ்தான் பகுதியில் சிறப்புற்றது.

→மேவார் பகுதியை ஆட்சி செய்த ராணாசங்காவின் மகனான **போஜ்ராஜாவின்** மனைவியாவார்.

→வாழ்நாளின் பெரும்பகுதியை கிருஷ்ணன் பிறந்த இடமான மதுராவிலும், வளர்ந்த இடமான பிருந்தாவனத்திலும் கழித்தார்.

→கீதைப் பாணிச் **செய்யுளின் தேவதை** என புகழப்படுகிறார்.

ஜோதிபா பூலே :– (1827–1890)

→சத்திய ஷோடக் சமாஜம் (அ) **வாய்மையைத் தேடும் சங்கம்** என்ற அமைப்பை உருவாக்கினார்.

நாராயணகுரு:– (1854–1928)

→கேரள தீண்டதகாத வகுப்பில் பிறப்பு. திருவனந்தபுரம் அருகே **அருவிபுரம்** எனும் ஊரில் கோவில் கட்டி அனைத்து சாதியினரும் வழிபடச் செய்தார்.

கபீர் (1440–1518)

→**இந்துக்களும், முஸ்லீம்களும் ஒரே களிமண்ணால் செய்யப்பட்ட குடங்கள்** எனக் கூறினார். அல்லாவும், ஈசுவரனும், ராமரும், ரஹிமும் ஒருவரே என்பது இவரின் பொன்மொழி. கபீரின் முக்கிய சீடர் குருநானக். கபீரின் கொள்கையை பின்பற்றியவர்கள் **கபீர் பண்டிதர்** (Kapirpanthis) எனப்பட்டனர்.

இராமானுஜர் :– (1060–1118)

→ஸ்ரீபெரும்புதூரில் பிறந்தார். **வைணவப் பெரியார்.**

→பக்தி இயக்க மகான்களின் முன்னோடி'

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

→கடவுளை அன்புக்கடல், அழகின் இருப்பிடம் என கருதினார்.

→இவரின் போதனைகள் கீதை, உபநிடதங்களை அடிப்படையாக கொண்டது.

→மாதாவாச்சாரியா, இராமானந்தர், வல்லபாச்சாரியர் இவரின் சீடர்கள்.

கோட்பாடு		போதித்தவர்
அத்வைதம்	**–**	**சங்கரர் (சங்கராச்சாரியார்)**
விசிஷ்டாத்வைதம்	**–**	**இராமானுஜர்**
த்வைதம்	**–**	**மத்துவாச்சாரியார்**
சுத்தாத்வைதம் (அ) புஷ்டிமார்க்கம்	**–**	**வல்லபாச்சாரியார்**
த்வைத் அத்வைதம் (Dvaitadvaita)	**-**	**நிம்பார்க்கசாரியார்**
சிவாத் வைதம்	**–**	**ஸ்ரீகந்தாச்சாரியார்**

குருநானக் (1469–1539) (முதல் குரு)

→**தால்வண்டி** (பாகிஸ்தான்–பஞ்சாப்) என்னுமிடத்தில் பிறப்பு. சீக்கிய மதத்தை நிறுவினார்

→இவரின் போதனைகள் **ஆதிகிரந்தம்** (அ) கிரந்த்சாஹிப் (சீக்கியரின் புனித நூல்)

→**லாங்கர்** என்ற சமபந்தி உணவுக் கூடம் ஆரம்பித்தார்.

மூன்றாம் குருவான அமர்தாஸ்

→இவரது காலத்தில் சீக்கிய உருப்பெற்றது.

→**சதி, பர்தா** அணிவதை தடை செய்தார்.

நான்காம் குருவான குரு ராம்தாஸ்

→அக்பரிடம் நிலம் பெற்று **ராமதாஸ்புரம்** என்ற நகரை உருவாக்கினார். பின்னாளில் அமிர்தசரஸ் நகரமானது. அமிர்தசரசில் பொற்கோயிலை கட்ட ஆரம்பித்தார்.

ஐந்தாம் குருவான குரு அர்ஜூன் சிங்

→குருநானக் மற்றும் மற்ற குருக்களின் சொற்பொழிவை தொகுத்து **ஆதிகிரந்தம்** என்ற சீக்கியரின் புனித நூலை கி.பி.1604ல் தொகுத்தார். **அமிர்தசரசை** கட்டி முடித்தார். முகலாய மன்னர் **ஜஹாங்கீரால்** கொல்லப்பட்டார்.

ஆறாம் குருவான ஹர்கோவிந்த்சிங்

→சீக்கியரை ஆயுதம் ஏந்த வைத்தார்

→**சாச்சா பாதுஷா** என்ற பட்டத்தை கொண்டிருந்தார்

ஒன்பதாம் குருவான தேஜ்பகதூர்

→ '**ஔரங்கசீப்பால்** 1675ல் கொல்லப்பட்டார்

பத்தாம் குருவான குரு கோவிந்த்சிங்

→சீக்கியர்களுக்கு போர்ப் பயிற்சி அளித்து சிங் (சிங்கம்) என்ற பட்டத்தை கொடுத்தார். 1699ல் **கால்சா** என்ற சீக்கிய படை அமைப்பினை உருவாக்கினார். கடைசி குரு ஆவார். 1708ல் ஆப்கானியரால் கொல்லப்பட்டார். **5K** வை உருவாக்கினார். (Kangha, kada, kesh, kripan,kachcha)

தென்னிந்தியாவில் பக்தி இயக்கங்கள்

→நாயன்மார்கள் –63 பேர்

திருநாவுக்கரசர் (எ) அப்பர்

→ கி.பி. 600ல் தென்னாற்காடு மாவட்டத்தில் பிறந்தார். 49000 பதிகங்களை பாடினார். 311– பதிகங்களே கிடைத்துள்ளன.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

சம்பந்தர்

→16000 பதிகம் பாடியதில் 384 மட்டுமே கிடைக்கப்பெற்றன.

சுந்தரர்

→ 8ம் நூற்றாண்டு இறுதியில் தென்னாற்காடு மாவட்டத்தில் பிறந்தார். 38000 பதிகம் பாடினார்.

→100 மட்டுமே கிடைத்துள்ளன.

→சேக்கிழாரின் **பெரியபுராணம்** நாயன்மார்களின் வாழ்க்கை வரலாற்று நூலாகும்.

→நாயன்மார்களின் பாடல்கள் **நம்பியாண்டார் நம்பி** என்பவரால் தொகுக்கப்பட்டன.

→தேவாரப் பாடல்களை **அப்பர்,சம்பந்தர் , சுந்தரரும்** திருவாசகப் பாடல்களை **மாணிக்க வாசகரும்** இயற்றினர்.

→சைவ சமய குரவர்கள் 4 பேர்

ஆழ்வார்கள்

→விஷ்ணுவின் புகழ் பரப்பியோர் ஆழ்வார்கள் ஆவர்.

→ஆழ்வார்கள் 12 பேர். இவர்களில் **நம்மாழ்வார், பெரியாழ்வார்,ஆண்டாள், திருமங்கையாழ்வார்** குறிப்பிடத்தக்கவர்

→ஆழ்வார்கள் பாடிய 4000 பாடல்களை **நாதமுனி** என்பவர் நாலாயிர திவ்ய பிரபந்தம் என்னும் நூலாக தொகுத்தார்.

விஜய நகர பேரரசு

→டெல்லி சுல்தான்களின் வீழ்ச்சி தக்காணத்தில் பல அரசுகள் தோன்ற வழிவகுத்தது. துக்ளக் வம்சத்தின் வீழ்ச்சிக்குப் பிறகு தக்காணத்தில் தோன்றிய இரு முக்கிய அரசுகள் **பாமினி மற்றும் விஜய நகர அரசுகள்**

→இஸ்லாம் தெற்கில் பரவுவதை தடுக்கவும் இந்து சமயத்தை பாதுகாக்கவும் விஜய நகர அரசு அமைக்கப்பட்டது

→**1336ல் மாதவாச்சாரியார் (அ) வித்யாரண்யரின்** ஆசியுடன் **ஹரிஹரர், புக்கர்** ஆகியோரால் **துங்கபத்திரா** நதிக்கரையில் விஜய நகர பேரரசு நிறுவப்பட்டது.

விஜயநகர பேரரசின் நான்கு வம்சங்கள்:

வம்சம்		காலம்	தோற்றுவித்தவர்	கடைசி அரசர்
1	**சங்கம்**	1336–1485	ஹரிஹரர், புக்கர்	பிரௌத்தேவராயர்
2	**சாளுவ**	1485–1505	சாளுவ நரசிம்மன்	ஹமதாதி நரசிம்மன்
3	**துளுவ**	1505–1570	வீர நரசிம்மன்	சதாசிவாராயர்
4	**ஆரவீடு**	1570–1646	திருமலா	ஸ்ரீரங்கா

→**கிராமத்தலைவர் கௌடா** எனப்பட்டார்.

→விஜயநகர பேரரசின் தலைநகர் **ஹம்பி (கர்நாடகா)**

→முகமதுபின் துக்ளக் காலத்தில் கி.பி. 1336ல் விஜயநகர பேரரசு தனது சுதந்திரத்தை அறிவித்துக்கொண்டது.

→விஜய நகர பேரரசின் பரம எதிரி பாமினி சுல்தான்கள்

→விஜயநகர பேரரசின் சிறந்த மன்னர் **கிருஷ்ணதேவராயர்.**

→விஜயநகர சங்கம ஆட்சியாளர்களின் கடவுள் விருபாட்சா (சிவன்)

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

மலேயா, பர்மா, சீனா, அரேபியா, பாரசீகம், தென்ஆப்ரிக்கா, அபினீசியா, போர்ச்சுக்கல் ஆகிய நாட்டுடன் வணிகத் தொடர்பு கொண்டிருந்தனர்.

→**கோவா,டையூ, கொல்லம், கொச்சி** ஆகியன துறைமுகங்களாக விளங்கின.

→விஜயநகர மன்னர்களால் ஆதரிக்கப்பட்ட சமயம் **– வைணவம்**

→விஜயநகர பேரரசின் முக்கிய **வருவாய் நிலவரி (1/6** – பங்கு)

→இப்பேரரசின் முதல் கோவில் **முதலாம் ஹரிஹரரால்** ஹம்பியில் கட்டப்பட்ட ஸ்ரீவிருப்பாக்ஷா ஆலயம் ஆகும்.

→சிதம்பரம் **– பார்வதி கோவில், காஞ்சிபுரம் வரதராஜர்** மற்றும் **ஏகாம்பரநாதர்** கோவில் விஜயநகர மன்னர்களால் கட்டப்பட்டது.

→இடைக்கால இந்தியாவில் பெண்களுக்குஉயர்வான நிலை அளிக்கப்பட்டது இப்பேரரசில்தான் Varahas or pagodas என்ற தங்க நாணயங்கள் இப்பேரரசில் வெளியிடப்பட்டன.

→தேவராயர் I காலத்தில் **நிகோலா காண்டி** என்ற **இத்தாலிய** பயணி வருகை புரிந்தார்.

→தமிழகத்தை வென்ற விஜய நகர தளபதி – **குமார கம்பணர்.**

→இப்பேரரசின் சிதைவு **'ஹம்பி'** யில் காணப்படுகிறது.

→**1565ல் தலைக்கோட்டை போருக்கு** பிறகு விஜயநகர பேரரசு அழிவை சந்தித்தது.

கிருஷ்ணதேவராயர் (கி.பி. 1509 – 1529) துளுவ மரபு

→இவரின் ஆட்சி காலத்தில் விஜய நகரம் வளர்ச்சியின் உச்சியை எட்டியது.

→இவர் **துளுவ வம்சத்தை** சார்ந்தவர். இவரது குரு **வியாசராஜா**

இவர் ஒரு கவிஞர். எழுதிய நூல்கள் **அமுக்த மல்யாதா** (வைணவ மதத்தில் அவருக்கு இருந்த தீவிர பக்தி – தெலுங்கு நூல்), **ஜாம்பாவதி கல்யாணம்** (சமஸ்கிருத நூல்), **உஷா பரிணயம்** (சமஸ்கிருத நாடகம்)

→இவரின் சிறப்பு பெயர்கள் : **அபிநவ போஜா, ஆந்திரபோஜா, ஆந்திர பிதாமகர்,**

→இவரின் காலம் தெலுங்கு இலக்கியத்தின் பொற்காலம்.

→இவருடைய அவை '**அஸ்டதிகஜங்கள்**' (எட்டு கவிஞர்கள்) என அழைக்கப்பட்டது. இவர்களில் தலையானவர் **அல்சாணி பெத்தண்ணா, மேலும் தெனாலி ராமகிருஷ்ணா** (விகடகவி), **துர்ஜத் நந்தி திம்மண்ணா, பட்டுமூர்த்தி, புனவீரபத்திரன், மல்லண்ணா, பனாஜிசூராணா.**

→இவரது அவைக்கு வந்த வங்காள பக்தி இயக்கத்தவர் சைதன்யர்.

→போர்த்துகீசிய கவர்னரான **அல்போன்சா – டி.அல்புகர்க்** இவரது அரண்மனைக்கு வந்தார்

→தனது தாய் **நாகலாதேவி** நினைவாக **நாகலாபுரம்** என்ற தலைநகராக உருவாக்கினார்.

→இவர் முகலாய மன்னர் பாபரின் சமகாலத்தவர்.

→இவரை '**முழு நிறைவான அரசர்**' என டொமிங்கோ பயஸ் கூறுகிறார்.

→மொராக்கோ நாட்டு பயணி இவரது அவைக்கு வருகை தந்தனர்.

→வைணவ சமயத்தில் **வடகலை, தென்கலை** என்ற இரு பிரிவுகள் இருந்தன. வடகலை பிரிவுக்கு வேதாந்த தேசிகர் தலைவராக விளங்கினார். இப்பிரிவினர் சமஸ்கிருத வேதங்களை பின்பற்றினர்.

→தென்கலைப் பிரிவுக்கு தலைவராக விளங்கியவர் **மணவாள மகாமுனி,** இவர்கள் பிரபந்தங்களை பின்பற்றினார்.

பாமினி அரசுகள் (1347–1526)

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

முகமது பின் துக்ளக்–ன்

→சீர்திருத்தங்களால் தக்காண சிற்றரசுகள் கலகங்கள் மூலம் சுதந்திரம் அடைந்தன. இவற்றில் தேவகிரியில் உருவானதே பாமினி அரசு.

→தோற்றுவித்தவர் **ஹாசன் கங்கு** – **அலாவுதீன் அசன் பாமன்ஷா** என்ற பெயரைச் சூட்டிக்கொண்டார்.

→தலைநகர் **குல்பர்கா** (எ) **ஆசனாபாத்** (கர்நாடகா)

→**அரபு, பாரசீக** மொழிகளை கற்க ஊக்கமளித்தனர்

→**பெரோஷ் ஷா பாமினி** அரசர்களில் மிகவும் சிறந்தவராக கருதப்படுகிறார்.

→குல்பர்காவிலிருந்து பீடாருக்கு தலைநகரை மாற்றிய பாமினி அரசர் **அகமது ஷா.**

→**மூன்றாம் முகமது ஷா** காலத்தில் பாமினி அரசு புகழின் உச்சிக்கு சென்றது. இவரின் பாதுகாவலர் **முகமது கவான்,** இவரது காலத்தில் கோவா விஜயநகர அரசிடமிருந்து கைப்பற்றப்பட்டது. முகமது கவான் மரணத்திற்கு பிறகு இப்பேரரசு 5 சிற்றரசுளாக பிரிந்தது.

→பாமினி அரசின் கட்டக்கலை சிறப்பை விளக்குகிறது **கோல்கும்பாஸ்** (பிஜப்பூர்). இது உலகிலே மிகப்பெரிய கவிகை மாடம் (Dome) ஆகும். இதனை கட்டியவர் **சுல்தான் அடில்ஷா** இது 18000 ச.அடி பரப்புடையது. இது **முணுமுணுக்கும் அரங்கம்** எனப்படுகிறது.

→தக்காண நரி எனப்பட்டவர் **அமீர் அலி பரித்.**

→**ஹைதராபாத்** நகரை உருவாக்கி சார்மினார் கோபுரத்தை எழுப்பியவர் **முகம்மத் கலி குதுப்ஷா.**

→பாமினி அரசின் கடைசி ஆட்சியாளர் **கலிமுல்லாஷா.**

முகலாய பேரரசு

ஜாகிருதீன் முகமது பாபர் (1526–30)

→முகலாய வம்சத்தை தோற்றுவித்தவர் **பாபர்.**

→தந்தை – **தைமூர்** மரபு, தாய் – **செங்கிஸ்கான் மரபு.**

→பாபர் என்றால் **புலி** என பொருள்.

→முகலாய வம்சத்திற்கு அடிக்கல் நாட்டிய போர் **முதலாம் பானிப்பட்டு போர்** 1526. டெல்லியின் **இப்ராஹிம் லோடி Vs பாபர்** இப்போரில் பாபர் வெற்றி.

→இவரை இந்தியா மீது படையெடுத்து வர அழைத்தவர்கள் **தெளலத்கான்லோடி ,ஆலம் லோடி.**

→இந்தியாவில் **முதன் முதலில் பீரங்கியை** அறிமுகம் செய்தவர் பாபர்.

→முதலாவது பானிபட் (ஹரியானா) போரில் பாபரின் வெற்றிக்கு உதவிய பீரங்கி படை தலைவன் **உஸ்தாத் அலி முஸ்தபா.**

→1527ல் கான்வா போரில் பாபர், ராஜபுத்திர மன்னர் ரானாசங்காவை தோற்கடித்து '**காஸி**' என்ற பட்டத்தை சூட்டிக்கொண்டார்.

→**சந்தேரி போர் 1528**, இராஜபுத்திர மன்னர் மேதினி ராயை பாபர் தோற்கடித்தார்.

→இவரின் சுயசரிதை **பாபர் நாமா** (துருக்கி மொழியில் – துசுகி பாபரி)

→கி.பி. 1527ல் **அயோத்தி** என்னும் இடத்தில் (U.P) பாபர் மசூதியை கட்டினார்.

→பாபரின் நினைவிடம் **காபூலில்** உள்ளது

நசிருதீன் முகமது ஹுமாயூன் (1530–1540) (1555–56)

→ஹுமாயூன் என்றால் அதிர்ஷ்டம் என பொருள். மனைவி **அமிதாபானு பேகம்**

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

→**ஹீமாயூன் நாமா** எழுதியவர் **குல்பதன் பேகம்.** (in persian language)

→**1539ல் சௌசா போர், 1540ல் கன்னோசி** (அ) **பில்கிராம்** போரில் ஷெர்ஷாவிடம் (ஷெர்கான்) தோற்று 15 ஆண்டுகள் நாடோடியானார்.

→1555ல் டெல்லியை கைப்பற்றிய இவர் 1556ல் நூலக மாடிப்படியிலிருந்து இடறி விழுந்து இறந்தார்.

→**டெல்லிக்**கு அருகில் **தீன்பனா** என்ற நகரை நிறுவி தனது **2**வது **தலைநகராக்கினார்.**

→**தாஜ்மகாலின் முன்னோடி** என அழைக்கப்படுவது – **ஹீமாயூன் கல்லறை**

சூர்வம்சம் – ஷெர்ஷா சூர் (1540–45)

→**ஃபரித்கான்** இவரின் இயற்பெயர் கி.பி. 1540ல் டெல்லி அரியணையில் அமர்ந்தார்.

→**ஷெர்கான்** என அழைக்கப்பட்டார்.

→சூர் வம்சத்தை தோற்றுவித்தவர் இவரே. இவ்வம்சத்தின் சிறந்த மன்னர்.

→**ஹீமாயூனை சௌசா** மற்றும் **கன்னோசிப்** போரில் தோற்கடித்தார்.

→**பீகாரை** கைப்பற்றிய ஷெர்கான் தன்னை **ஷெர்ஷா** என அழைத்துக் கொண்டார்.

→ஷெர்ஷாவால் வெளியிடப்பட்ட நாணயங்கள் : **ரூபியா**(வெள்ளி), **டாம்** (செம்பு)

→**அக்பரின் முன்னோடி** என அழைக்கப்படுகிறார்.

→குதிரைக்கு சூடு போடும் **தாக்** முறையை அறிமுகப்படுத்தினார்.

→இவரின் கல்லறை **சசாரம்** (பீகார்)

→Grand Trunk Road : **ஆக்ரா to பெஷாவர், ஆக்ரா to ஜோத்பூர், லாகூர் to முல்தான், சோனார்கான் (வங்காளம்) to கட்டாக்**

→டெல்லியில் **புராணகிலாவை** கட்டினார்.

→நீதி நிர்வாகத்தில் தலைமைக்காசி உதவிபுரிந்தார்.

→நில சீர்திருத்தமுறை மிகச் சிறந்தது. நில உரிமை குறித்து பட்டா வழங்கப்பட்டது.

→**இரயத்துவாரி** முறையின் தந்தை எனப்பட்டார். **ஜமீன்தாரர்கள்** நீக்கப்பட்டனர்.

→குதிரைகளில் தபால் பட்டுவாடா செய்யும்முறை கொண்டு வந்தார்.

→**நவீன நாணய முறையின் தந்தை** எனப்படுகிறார். நாணயங்களில் தனது பெயரை **தேவநாகிரி** எழுத்தில் பொறிக்கச் செய்தார்.

→இவருக்குப் பிறகு **இஸ்லாம் ஷா** ஆட்சிக்கு வந்தார்.

→இவர் **முஸ்லீம் மறுமலர்ச்சியின்** தந்தை ஆவார்.

ஜலாலுதீன் முகமது அக்பர் (1556– 1605)

→கி.பி. 1542ல் சிந்துவில் உள்ள **அமரக் கோட்டையில்** பிறந்தார்.

→14–வது வயதில் அரசராக பதவியேற்ற இடம் காலாநார்(பஞ்சாப்)

→இவருக்கு பாதுகாவலராக ஆட்சி செய்தவர் **– பைராம்கான்** (1556 – 60)

→**2ம் பானிப்பட்டு போர் 1556** ஹெமு Vs பைரம்கான் **–** பைரம்கான் வெற்றி

→1571–72 அக்பர் குஜராத் படையெடுப்பு வெற்றியால் **பதேபூர் சிக்ரியில் புலந்தர் வாசா** நுழைவாயிலை கட்டினார்.

→1576 ஹால் டிகாட் (கணவாய்) போரில் ராணா பிரதாப் சிங்கை தோற்கடித்தார்.

→அக்பர் மணந்த ஜெய்ப்பூர் இளவரசி **ஜோத்பாய்**

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

→பாபரால் தோற்றுவிக்கப்பட்ட முகலாய பேரரசு அக்பரால் பலப்படுத்தப்பட்டது.

→விளைச்சலில் 1/3 பங்கு வரியாக வசூலிக்கப்பட்டது. நிலவரி தொடர்பாக செய்து கொண்ட ஒப்பந்தம் – **குபிலியாத்.**

→இந்து மற்றும் முஸ்லீம் அல்லாதோரிடமிருந்து வசூலிக்கப்பட்ட **ஜெசியா** வரியும் (1546ல்) **புனிதப் பயணங்கள்** மீதான வரியும் (1563ல்) நீக்கினார்.

→அக்பரால் ஆதரிக்கப்பட்ட அறிஞர்கள் – **அபுல்பாசல், அபுல்பைசி, துளசிதாசர்.**

→அக்பரால் ஆதரிக்கப்பட்ட இசை கலைஞர் – **தான்சேன்(குவாலியர்).**

→அக்பரால் ஆதரிக்கப்பட்ட நகைச்சுவை மேதை **பீர்பால்**

→அக்பரின் வருவாய்த்துறை அமைச்சர் – **தோடர்மால்.** பாகவத புராணத்தை பாரசீக மொழியில் மொழிபெயர்த்தார்.

→இராமயணத்தை ஹிந்தியில் மொழிபெயர்த்தவர் – **துளசிதாசர்.**

→பஞ்சதந்திர கதைகளை பாரசீக மொழிக்கு மொழி பெயர்த்தவர் – **அபுல்பாசல்**

→அக்பரின் கல்லறை **சிக்கந்தரில்** உள்ளது. **ஜகாங்கீர்** கட்டினார்.

→**தீன் இலாஹி (அ) தெய்வீக சமயத்தை 1582ல்** ஏற்படுத்தினார். குற்றமற்ற கோட்பாடு (infalliable Decree) 1579

→**பதேபூர் சிக்ரி** என்ற நகரை நிர்மானித்தார்.

→அக்பரின் இராணுவ முறைக்கு மன்சப்தாரி முறை (1570ல் அறிமுகம்) எனப்பெயர்.

→அரசவை கூட்டத்திற்கு **திவானி ஆம்** என்று பெயர்.

→சிறப்பு கூட்டத்திற்கு **திவானி காஸ்** என்று பெயர்.

→அபுல்பாசல் – **அயனி அக்பரி, அக்பர் நாமா** எழுதினார்.

→அக்பரின் **மான்சப்தாரி** தலைவர்களில் சிறந்தவர் – **இராஜா மான்சிங்**

→அக்பரின், **தேசிய அரசர்/ தேசிய பேரரசர்** என அழைக்கப்படுகிறார்.

→அபுல்பைசி– **இராமாயணம், மகாபாரதம், பகவத்கீதையை பாரசீக மொழியில்** மொழிமாற்றம் செய்தார்.

→Ralph Fitch என்ற ஆங்கில பயணி 1585ல் இவரின் அரசவைக்கு வந்தார்.

→அக்பர் ஆட்சிகால பாரசீக புலவர் – **இசாலி**

→இராமாயணத்தை பாரசீக மொழிக்கு மொழி பெயர்த்தவர் – **பதானி**

→அக்பரின் வளர்ப்புத்தாயான **மாகம் அனகா** கி.பி. 1560 முதல் 1562 வரை அரசு நிர்வாகத்தை கட்டுப்படுத்தி வந்த காலம் அந்தப்புர அரசாங்க காலம் எனப்படுகிறது.

→அக்பரால் கட்டப்பட்ட கோட்டைகள் : – **அலகாபாத், ஆக்ரா, லாகூர்**

→சீக்கிய பொற்கோவில் கட்ட நிலம் அளித்தவர் **அக்பர்.**

→மதவிஷயங்களை ஆலோசிப்பதற்காக **பதேபூர் சிக்ரியில்** Ibadat khana வை கட்டினார். (கி.பி.1575)

<u>நூருதீன் முகமது ஜஹாங்கீர் (கி.பி.1605–1627)</u>

→இயற்பெயர் முகமது **சுல்தான் சலீம்**

→ஜகாங்கீர் என்ற சொல்லுக்கு **உலகை வெல்பவர்** என பொருள்

→சீக்கியர்களின் 5ம் குருவான **குரு அர்ஜூன் சிங்கை** கொன்றார்

→இங்கிலாந்து மன்னர் **முதலாம் ஜேம்ஸ்** என்பவர் வில்லியம் ஹாக்கின்ஸ் (1609–11),

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

சர்தாமஸ்ரோ(1615–18) ஐ இவரின் அரசவைக்கு தூதுவர்களாக அனுப்பினார்.

→ஞாயிறு மற்றும் வியாழக்கிமைகளில் விலங்குகள் கொல்லப்படுவதை தடை செய்தார்.

→**சூரத்–**ல் வியாபாரம் செய்ய ஆங்கிலேயர்களுக்கு அனுமதி அளித்தவர் இவரே.

→**துசிக்–இ–ஜஹாங்கீர்** என்ற தன் சுயசரிதையை (துருக்கி மொழியில்) எழுதினார்.

→சுயசரிதை எழுதிய முகலாய மன்னர்கள் : **ஜகாங்கீர், பாபர்**

→இவரின் மனைவி **மெகருன்னிசா** என்ற இயற்பெயர் கொண்ட **நூர்ஜகான்(** உலகின் ஒளி).

→கி.பி.1611– 1626 வரையிலான காலம் முகலாய வரலாற்றில் **நூர்ஜஹானின் காலம்** எனப்படுகிறது.

→ஜகாங்கீர் அரசவையில் உண்மையான அதிகாரம் நூர்ஜகானிடம் இருந்தது.

→**டெல்லியிலிருந்து ஆக்ரா** வரை **நீதிச் சங்கிலியை** கட்டி நீதி அளித்தார்.

→சிக்கந்தரில் தன் தந்தை அக்பரின் கல்லறையை கட்டினார் **ஜஹாங்கீர்**

→ஜகாங்கீர் காலத்தில் இந்தியாவில் முதன்முதலாக **புகையிலை** அறிமுகப்படுத்தப்பட்டது.

→ஜகாங்கீர் கல்லறை – **லாகூர்** (தில்குசா பூங்கா)

→இவர் காலத்தில் இந்தியாவில் ஓவியக்கலை உச்சத்தை அடைந்தது.

ஷாஜகான் (1627–1658)

→இயற்பெயர் **குர்ரம்**

→ஷாஜகான் என்ற சொல்லுக்கு **உலகத்தின் அரசன்** என பொருள்

→மனைவி **மும்தாஜ் மஹால்** (அர்ஜுமென் பானு பேகம்)

→மும்தாஜ் நினைவாக **ஆக்ராவில் (1632–1653) தாஜ்மஹால்** கட்டினார். உஸ்தாத் இஷா என்ற தலைமை சிற்பி மேற்பார்வையில் ரூ.20 லட்சம் செலவில் கட்டப்பட்டது. (22 ஆண்டுகள்)

→**டெல்லி செங்கோட்டையை** கட்டினார்.

→**ஷாஜகானாபாத்** என்ற தலைநகரையும் நிர்மானித்தார்.

→இவர் காலம் கட்டிடக்கலையின் பொற்காலம் ஆகும்.

→ "**கட்டிடக்கலையின் இளவரசர்**" "**பொறியாளர் பேரரசர்**" எனப்படுகிறார்.

→இவர் காலத்தில் வருகை புரிந்த இத்தாலிய பயணி **மனூச்சி**

→**ஆக்ராவில் முத்து மசூதியையும், டெல்லியில் மோதி மசூதியையும்** கட்டினார்.

→இந்தியாவின் மிகப்பெரிய **மசூதியான ஜும்மா** மசூதியையும் கட்டினார்.

→இவர் காலம் **முகலாயர்களின் பொற்காலம்** ஆகும்

→ஷாஜகான் நாமா எழுதியவர் இனயத்கான்

→இவரது ஆட்சியில் இங்கிலாந்திலிருந்து வந்தவர்கள் **பெர்னியர்,டிராவர்னியர்** மற்றும் இத்தாலியிலிருந்து வந்த **மனுச்சி** வரலாற்று குறிப்புகளை பதிவு செய்துள்ளனர்.

→ஔரங்கசீப் ஆல் சிறைபிடிக்கப்பட்ட இவர் 1666ல் இறந்தார்.

→திவானி ஆம்,திவானிகாஸை கட்டினார். தங்க **மயிலாசனம்** மற்றும் **கோகினூர் வைரம்** இவருடையது. 1739ல் நாதிர்ஷா படையெடுப்பில் கொள்ளையடிக்கப்பட்டது.

→**திவானி ஆம், திவனி காஸ்** பற்றி " If there is a paradise on earth, it is this, it is this" என கூறியவர் **அமிர்குஸ்ரு.**

முஹி உத்தீன் முகமது அவுரங்கசீப் (கி.பி. 1658–1707)

→ஷாஜகான் 3வது மகனான இவர் **ஆலம் கீர்** என்ற பட்டப் பெயருடன் அரியணை ஏறினார்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

→**ஜின்டாபீர்** (உயிர் வாழும் புனிதர்) என அழைக்கப்பட்டார்.
→முஸ்லீம் அல்லாதோர் மீது மீண்டும் **ஜிஸியா** வரியினை 1679ல் விதித்தார்.
→சீக்கியரின் 9ம் குருவான குரு தேஜ்பகதூரை தூக்கிலிட்டார்.
→இவருக்கு வீணை வாசிக்க தெரியும்
→**பிஜப்பூரையும், கோல்கொண்டாவையும்** வெற்றி கொண்டார்
ஆனால் மராத்தியர்களை அவரால் வெற்றி கொள்ள முடியவில்லை
→இசையை ஆதரிக்காத முகலாய மன்னர் இவர்.
→இந்திய சரித்திரத்தில் மிக நீண்ட காலம் (50 ஆண்டு) ஆட்சி புரிந்தவர்
→இவர் ஒரு தீவிர மத வெறியர்
→இவரது கல்லறை **அவுரங்காபாத்தில்** உள்ளது
→இணைத்துக் கொள்ளப்பட்ட கடைசி தக்காண அரசு **கோல்கொண்டா**
→**நாதிர்ஷா** படையெடுப்பு முகலாய பேரரசுக்க சாவுமணி அடித்தது
→முகலாய ஆட்சி முறை :– **கிராமங்கள்–பர்கானாக்கள்– சர்க்கார்–சுபா–மாகாணங்கள்–அரசு**
→**முகலாய வம்சம் :– ஹீமாயூன் – அக்பர்–ஜகாங்கீர்–ஷாஜகான்–ஔரங்கசீப்–பகதூர் ஷாII**

மராத்தியர்கள்

சிவாஜி (கி.பி.1627–1680)

→இவரின் பாதுகாவலர் தாதாஜி கொண்ட தேவ். சிவாஜியின் குரு – **ராம்தாஸ்**
→கி.பி.1665ல் **சிவாஜி – ராஜா ஜெய்சிங்** இடையே ஏற்பட்ட உடன்படிக்கை புரந்தர் உடன்படிக்கை
→இவரின் தலைநகர் **ரெய்கார்.** முதலில் கட்டிய கோட்டை – **ரெய்கார்.**
→**ரெய்காரில் சத்ரபதி, மஹாராஜா** என்ற பட்டங்களை 1674ல் சூட்டிக் கொண்டார்.
→அரசு மொழி – **மராத்தி**
→**மலை எலி** எனவும் **தக்காண புற்று நோய்** எனவும் ஔரங்கசீப்பால் அழைக்கப்பட்டார்.
→அஷ்டபிரதான் (எட்டு அமைச்சர்கள்) என்ற அமைச்சரவையை கொண்டிருந்தார்.

1. **பிஷ்வா (P.M) 2. மந்திரி (காலமுறை அமைச்சர்) 3. சச்சிவா (உள்துறை அமைச்சர்) 4. சுமந்த்**
2. **(வெளியுறவு அமைச்சர்) 5. சேனாதிபதி (இராணுவ அமைச்சர்) 6. அமத்தியா (நிதி அமைச்சர்)**

7. பண்டிட்ராவ் (சமயதலைவர்) 8. நியாயதீஷ் (நீதி துறை)

→பட்டேல் என்ற அதிகாரி குற்றவியல் வழக்குகளை விசாரித்தார்
→தமிழ்நாட்டின் மீது படையெடுத்து **செஞ்சி, வேலூர், தஞ்சாவூர்** பகுதிகளை கைப்பற்றினார்
→நிலங்களை சர்வே செய்ய கதி என்ற அளவீட்டு முறையை அறிமுகப்படுத்தினார்
→**வெங்காஜி** (சிவாஜியின் சகோதரர்) தஞ்சை மராத்திய அரசின் முதல் அரசர் ஆவார். (கி.பி.1675)
→இவர் **எக்கோஜி** என்றும் அழைக்கப்பட்டார்
→2–ம் சரபோஜி தஞ்சையில் **சரஸ்வதி மஹால்** நிறுவினார்
→நாடு இழக்கும் கொள்கைப்படி தஞ்சை 1856ல் ஆங்கில பேரரசுடன் இணைக்கப்பட்டது.
→**ஆந்திர காளிதாசர்** என்று போற்றப்பட்ட அளூரிக்குப்பனா சிறந்த தெலுங்கு கவிஞர்
→**எகோஜி, ஷாஜிபோன்சிலே** என்பவரின் மகனாவர்
→**பாஸ்கர தீட்சிதர் –** தஞ்சை மராத்தியர்களால் ஆதரிக்கப்பட்டவர்.

மதுரை நாயக்கர்கள்

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

→கிருஷ்ணதேவராயரின் நெருங்கிய தளபதி **விஸ்வநாத நாயக்கர்** மதுரை நாயக்கர் ஆட்சியின் முதல் நாயக்கர் ஆவார். பாளையக்காரர் முறையை அறிமுகம் செய்தவர் இவரே. இவரின் அமைச்சர் **ஆரிய நாதர்** புகுத்திய வரி காவல் பிச்சை.

→மதுரை நாயக்கர்களிலேயே சிறந்த மன்னராக கருதப்படுபவர் **திருமலை நாயக்கர்.** மஹால் இவரின் படைப்பாகும். மதுரை நாயக்கர் வரலாற்றில் திருமலை நாயக்கர் ஆட்சிகாலம் புதுசகாப்தமாகும். தலை நகரை **திருச்சியிலிருந்து மதுரைக்கு** மாற்றினார்.

→திருமலை நாயக்கர் மைசூர் படையினரை தோற்கடித்து எதிரிகளின் மூக்கினை துண்டித்த சம்பவம் **மூக்கறுப்புப் போர்** எனப்பட்டது.

→மதுரையை ஆண்ட **இராணி மங்கம்மாள்** (சொக்கநாத நாயக்கர் மனைவி) திருவாங்கூர் அரசர் **ரவிவர்மாவை** தோற்கடித்து அப்பகுதியை தன்வசம் கொண்டு வந்தார்.

→விஜயரங்க சொக்க நாதரின் மனைவி **மீனாட்சி** மதுரை நாயக்கர்களில் கடைசி ஆட்சியாளர் ஆவார்.

→மதுரை நாயக்கர் ஆட்சி 1736ல் முடிவு.

→**மதுரை விஸ்வநாத நாயக்கர்** காலத்தில் பாளையக்காரர் தோன்றினர்

→ **அச்சுதப்ப நாயக்கர்** திருவண்ணாமலை அருணாலச்சலேசுவரர் கோயிலை கட்டினார்

→ரகுநாத நாயக்கர் **ருக்மணிபரிநயம், பாரிஜாதம். புஷ்பகர்ணம், இராமயண**ம் போன்ற நூல்களை தெலுங்கு மொழியில் எழுதினார்.

→நாயக்கர்கள் தமிழகத்தில் **மதுரை, தஞ்சை, செஞ்சி** ஆகிய நகரங்களை தலைமையிடமாகக் கொண்டு ஆட்சி செய்தனர்.

→தஞ்சையில் மராத்தியர் ஆட்சி கி.பி.1076ல் ஏற்படுத்தியவர் **வெங்கோஜி** (எக்காஜி)

→ தஞ்சை நாயக்கர் ஆட்சி 1673ல் முடிவுற்றது.

→**பாஸ்கர தீட்சிதர்** – தஞ்சை மராத்தியர்களால் ஆதரிக்கப்பட்டவர்

→**ஜாக்சன்** – மராத்தியர்களால் ஆதரிக்கப்பட்டவர்

→**தென்னிந்திய கலகம் – 1801**

→**பானர்மேன் – ஆங்கில தளபதி**

→தஞ்சையில் உள்ள சிவகங்கை கோட்டை கட்டியவர் **சேவப்பநாயக்கர்**

→திருமலை நாயக்கரின் சிதம்பர புராண, பரஞ்சோதியாரின் சிதம்பரபாட்டியல், ஹரிதாசரின் இரு

→சமய விளக்கம், உமறுப்புலவரின் சீறாப்புராணம், குமரகுருபரின் கந்தர் கலிவெண்பா, திருவேங்கடம் எழுதிய மெய்ஞான விளக்கம் நாயக்கர்ஆட்சிகால நூல்கள்

→கட்ட பொம்மன் **1761**ல் – பிறப்பு

→கட்ட பொம்மன் அமைச்சர் **சிவசுப்ரமணியம்பிள்ளை**

→கட்டபொம்மன் **16.10.1799ல்** மேஜர் **பானர்மேன்** என்பவரால் கயத்தாறில் புளியமரத்தில் தூக்கிலிடப்பட்டார்.

→ஊமைத்துரைக்கு அடைக்கலம் கொடுத்தவர்கள் **மருது சகோதரர்கள்**

→ **சின்ன மருது – சிவகங்கை சிங்கம்**

→1799ம் ஆண்டு ஆங்கில கிழக்கிந்திய கம்பெனிக்கு எதிராக **பாளையக்காரர்கள் புரட்சி** ஏற்பட்டது.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

திருநெல்வேலியின் மேற்குப் பகுதியில் வாழ்ந்த பாளையக்காரர்கள் மறவர்கள் என்றும் கிழக்குப் பகுதியினர் நாயக்கர்கள் என்றும் அழைக்கப்பட்டனர். மேற்குப் பகுதியினர் பூலித்தேவன் கட்டுப்பாட்டின் கீழும் கிழக்குப் பகுதியினர் கட்டபொம்மன் கட்டுப்பாட்டின் கீழும் வாழ்ந்தனர்.

1792ம் ஆண்டு **கர்நாடக உடன்படிக்கையின்படி** பாளையக்காரர்களை ஆங்கிலேயர்கள் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தனர்.

→இந்தியாவில் ஆங்கிலேய ஆட்சியை தமிழ்நாட்டிலிருந்து முதன்முதலில் எதிர்த்தவர் பூலித்தேவன் இவர் திருநெல்வேலிக்க அருகில் உள்ள " **நெற்கட்டும் சேவல்**" என்ற பாளையத்தில் ஆதிக்கம் செலுத்தினார். இவரை அடக்க அனுப்பப்பட்ட பிரிட்டிஷ் தளபதி கேப்டன் கேம்பல்

→புதுக்கோட்டை அரசர் **இராஜ ரகுநாத தொண்டைமான்** களப்பூர் காட்டில் ஒளிந்திருந்த கட்டபொம்மனை சிறைபிடித்து ஆங்கிலேயரிடம் ஒப்படைத்தார்.

→18ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தென்னிந்தியாவில் ஆங்கிலேயர்களுக்கு எதிராக மருது சகோதரர்கள் கலகம் செய்தனர்.

→ராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள **திருப்பத்தூர் கோட்டையில் (24.10.1801)** மருது சகோதரர்கள் தூக்கிலிடப்பட்டனர்.

→மைசூர் அரசை தோற்றுவித்தவர் **ஹைதர் அலி**

→விஜய நகர பேரரசின் வீழ்ச்சிக்குப்பிறகு தோன்றிய சுதந்திர அரசுகளில் மைசூர் அரசு குறிப்பிடத்தக்கது.

→**ஸ்ரீ ரங்க பட்டினத்தை** தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்தனர்.

<u>**முதல் மைசூர் போர் :**</u> (கி.பி.1767–1769) ஹைதர் அலி Vs ஆங்கிலேயர். ஸ்மித் என்ற ஆங்கில →தளபதியால் **ஹைதர் அலி** தோற்கடிக்கப்பட்டார்.

→கி.பி.1769ல் மதராஸ் உடன்படிக்கை கையெழுத்தானது. ஒருவர் தாக்கப்பட்டால் மற்றவர் உதவ வேண்டும் என்ற உடன்பாடு ஏற்பட்டது.

<u>**இரண்டாவது மைசூர் போர்**</u> **:** (கி.பி.1780–84) கி.பி.1771ல் மராத்தியர்கள் மைசூரை தாக்கிய போது மதராஸ் உடன்படிக்கைப் படி ஆங்கிலேயர் உதவவில்லை. மேலும் **ஹைதர் அலி**யின் பகுதியிலிருந்த பிரெஞ்சுக்குச் சொந்தமான மாஹியை ஆங்கிலேயர் தாக்கியபோது **திப்பு** 2ம் மைசூர் போரை (கி.பி.1780–84) அறிவித்தார். அயர்கூட் தலைமையிலான ஆங்கிலப்படை ஐதர் அலியை போர்ட் நோவா என்னுமிடத்தில் தோற்கடித்தது. புற்றுநோயால் ஐதர் அலி 1782ல் இறந்தார். 1784ல் **மங்களூர் உடன்படிக்கை** மூலம் போர் முடிவு. இப்போர் வெற்றி தோல்வியின்றி முடிவுற்றது.

<u>**மூன்றாவது மைசூர் போர் (1790–92)**</u>

காரன்வாலிஸ் பிரபு தலைமை ஆளுநராக 1786ல் பதவி ஏற்றார். ஆங்கிலேயர் ஐதராபாத் நிஜாமுடனும் மராத்தியருடனும் உடன்படிக்கை செய்து கொண்டனர். திப்பு பிரெஞ்சுக்காரர்களின் உதவியைப் பெற்றார். 1789ல் ஆங்கிலேயர் நட்பு நாடான திருவிதாங்கூரை தாக்கினார் திப்பு. ஏனவே **கார்ன் வாலிஸ் போர்** அறிவிப்பு செய்தார். ஆங்கில படைக்கு, '**வாட்டர் லூ**' படைக்கு தலைமை தாங்கி நெப்போலியனை தோற்கடித்த ஆர்தர் வெல்லெஸ்லி தலைமை தாங்கி பெங்களூரை கைப்பற்றினார்.

திப்புசுல்தான் Vs ஆங்கிலேயர் – திப்பு தோல்வி **ஸ்ரீரங்க பட்டினம் உடன் படிக்கை 1792ல்**

நீலகிரியிலுள்ள தூர்க் கோட்டை இவரின் புகழ்மிக்க கோட்டையாகும்

மைசூரின் புலி எனப்படுகிறார்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

நான்காவது மைசூர் போர் (1799)

வெல்லெஸ்லி பிரபு 1798ல் கொண்டு வந்த துணைப்படை திட்டத்தை ஏற்கமறுத்ததால் 1799ல் நான்காவது மைசூர் போர். திப்புசுல்தான் Vs ஆங்கிலேயர். இதில் திப்பு கொல்லப்பட்டார்.

- **தென் இந்தியாவில், தமிழ்நாட்டில் சி. ராஜகோபாலாச்சாரியார் தலைமையில்** திருச்சியிலிருந்து தொண்டர்கள் பாதயாத்திரை மேற்கொண்டு தஞ்சாவூர் கடற்கரைப் பகுதியில் வேதாரண்யத்தில் உப்புச் சட்டங்களை மீறி உப்பு காய்ச்சினார்.
- மலபார் கடற்கரையில் கோழிக்கோட்டிலிருந்து பையனூர் வரை கேளப்பன் தலைமையில் பயணம் மேற்கொண்டு உப்பு வரியை எதிர்த்தனர்.
- வட மேற்குப் பகுதியில் **எல்லை காந்தி** என அழைக்கப்பட்ட கான் **அப்துல் காபர்கான் சட்ட மறுப்பு இயக்கத்தை** நடத்தினார்.

வில்லிங்டன் பிரபு 1931 – 1934

இரண்டாம் வட்டமேசை மாநாடு – 1931

- இரண்டாம் வட்டமேசை மாநாடு இலண்டனில் 1931–ல் நடைபெற்றது.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

பூனா ஒப்பந்தம் – 1932

- 1932 ஆம் ஆண்டு அம்பேத்காருடன் ஏற்பட்ட **பூனா உடன்படிக்கைக்குப்பின்** காந்தியடிகள் உண்ணாவிரத்தை கைவிட்டார். இவ்வுடன்படிக்கையின்படி தாழ்த்தப்பட்ட மக்களுக்கான தனித் தொகுதி ஒதுக்கீடு கைவிடப்பட்டது.

மூன்றாம் வட்டமேசை மாநாடு – 1932

- 1932 ஆம் ஆண்டு மூன்றாவது வட்டமேசை மாநாடு லண்டனில் நடைபெற்றது.
- மூன்று வட்ட மேசை மாநாடுகளிலும் கலந்து கொண்டவர் டாக்டர், பி.ஆர்.அம்பேத்கர் ஆவார்.

லின்லித்கோ பிரபு 1934 – 1936

இந்திய அரசுச்சட்டம் – 1935

- மாகாணங்களில் தன்னாட்சி அறிமுகம்.
- **இரண்டாம் உலகப்போர் 1939 –1945**

பாகிஸ்தான் கோரிக்கை – 1940

- **முகமது அலி ஜின்னா 1940** ஆம் ஆண்டு **லாகூரில்** நடைபெற்ற **முஸ்லீம் லீக் மாநாட்டில** தனது **தனி நாடு கோரிக்கையை** வெளியிட்டார்.

ஆகஸ்ட் நன்கொடை – 1940 (ஆகஸ்ட் –8)

- ஆங்கில அரசப் பிரதிநிதி **லின்லித்கோ இந்தியர்களை இரண்டாம் உலகப்போரில்** ஈடுபடுத்தினார். இதனை காங்கிரஸ் காங்கிரஸ் எதிர்த்தது. காங்கிரஸ் ஆட்சி செய்யும் மாநிலங்களிலிருந்தும் பதவி விலகியது. இதனால் காங்கிரசை திருப்தி செய்ய சில உறுதி மொழிகளை லின்லித்கோ வழங்கினார்.

கிரிப்ஸ் தூதுக்குழு 1942

- இரண்டாவது உலகபோரில் ஜப்பான் இங்கிலாந்திற்கு எதிராக ஈடுபட்டது. இங்கிலாந்து போரில் வெற்றி பெற, இந்தியாவின் ஆதரவு தேவைப்பட்டது. ஏனவே காங்கிரசின் ஒத்துழைப்பைப் பெறவும், இந்திய அரசியல் பிரச்சனைகளுக்கு தீர்வு காணவும், 1942 ஆம் ஆண்டு
- **சர்.ஸ்டாபோர்டு கிரிப்ஸ்** தலைமையில் **ஒரு தூதுக்குழுவை** இந்தியாவிற்கு அனுப்பியது. இக்குழு கிரிப்ஸ் தூதுக்குழு என்று அழைக்கப்பட்டது.

வெள்ளையனே வெளியேறு இயக்கம் – 1942

- **1942 –ம் ஆண்டு** ஆகஸ்டு 8–ம் நாள் 1942 **பம்பாய் காங்கிரஸ் மாநாட்டில்** ஆங்கிலேயர்கள் இந்தியாவை விட்டு உடனடியாக வெளியேற வேண்டும் என்று **வெள்ளையனே வெளியேறு தீர்மானத்தைக்** கொண்டு வந்தது.
- முழுச்சுதந்திரம் தவிர வேறு எதனாலும் நான் திருப்தி அடையமாட்டேன். நாம் அதற்காக வாழ்வோம் அல்லது வீழ்வோம். இந்தியாவை விடுதலை பெறச் செய்வோம் அல்லது அதற்காக செத்து மடிவோம் என்றார்.
- **சுபாஷ் சந்திரபோஸ் – இந்திய தேசிய ராணுவம் (I.N.A) 1942**
- 1927 ஆண்டு இந்திய தேசிய காங்கிரசில் சேர்ந்தார். ஜவஹர்லால் நேருவுடன் இணைந்து பணியாற்றினார்.
- 1938 ஆம் ஆண்டு இந்திய தேசிய காங்கிரசின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

- ❖ 1939 –ல் அவர் மற்போக்கு கட்சியை தொடங்கினார். பல நாடுகளுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டு, இந்தியா மீது அந்நாடுகளின் அனுதாபத்தைப் பெற்றார்.
- ❖ பின்னர் 1942 ஆம் ஆண்டு பர்மாவிற்கு சென்றார். ஜப்பானியர்களால் பர்மா ஆக்கிரமிக்கப்பட்டது. அச்சமயத்தில் பிரிட்டிஷ் பிடியிலிருந்து ஏராளமான இந்தியக் கைதிகளை ஜப்பான் கைப்பற்றியது.
- ❖ ஜப்பானிய அரசாங்கத்துடன் கூட்டுச்சேர்ந்து சுபாஷ் சந்திரபோஸ் இந்திய தேசிய இராணுவத்தை அமைத்தார்.
- ❖ **ஆசாத் ஹிந்த் பவுஜ்** என்று அழைக்கப்பட்ட இந்திய தேசிய இராணுவத்தின் தளபதியாக சுபாஷ் சந்திரபோஸ் பொறுப்பேற்றார். இதனைத் தொடர்ந்து சுபாஷ் சந்திரபோஸ் **'நேதாஜி'** என்றழைக்கப்பட்டார்.
- ❖ **நேதாஜி** என்றால் **தலைவர்** என்று பொருள்.
- ❖ இந்திய தேசிய ராணுவத்தின் பெண்கள் பிரிவு தமிழ்நாட்டைச் சேர்ந்த லஷ்மி என்ற பெண்ணின் தலைமையில் ஜான்சி ராணி பெயரில் அமைக்கப்பட்டது.
- ❖ **ஜெய்ஹிந்த்** என்ற **சுபாஷ் சந்திரபோசின் முழக்கமாக மாறி,** இந்தியா முழுக்க எதிரொலித்தது. **'டெல்லியை நோக்கிச் செல்'** என்ற மற்றொரு புகழ்பெற்ற முழக்கமும் போசினுடையதாகும்.

<u>வேவல் (1944 – 1947)</u>

- ❖ சிம்லா மாநாடு ஜீன் 25, 1945
- ❖ ராசகோபாலச்சாரி விதி –1945
- ❖ வேவல் திட்டம் 1945: ஆளுநரின் நிர்வாகக் குழுவில் இந்தியர்களுக்கு வாய்ப்பு அளிக்கப்படும் (கவர்னர் ஜெனரல் மற்றும் கமாண்டர் பதவி தவிர)

அமைச்சரவைத் தூதுக்குழு – 1946

- ❖ 1946 ஆம் ஆண்டு மார்ச் மாதம் **பெதிக் லாரன்ஸ், ஏ.வி. அலெக்சாண்டர் மற்றும் சர்ஸ்டாபோர்டு கிரிப்ஸ் ஆகிய மூவர் அடங்கிய குழு இந்தியாவிற்கு வந்தது**. அவர்கள் மூவருமே பிரிட்டிஷ் அமைச்சரவையில் உறுப்பினர்களாக இருந்தனர். எனவே, இக்குழு காபினெட் அல்லது அமைச்சரவை தூதுக்குழு என்றழைக்கப்பட்டது.
- ❖ மவுண்ட்பேட்டன் (24 மார்ச் 1947 –15 ஆகஸ்ட் 1947)
- ❖ மவுண்ட்பேட்டன் (1947 – 1948)
- ❖ இராஜகோபாலச்சாரி (1948 –1950)

இந்திய விடுதலைச் சட்டம் – 1947

- ❖ 1948 ஆம் ஆண்டு சனவரி 30 ஆம் நாள் காந்திஜி சுட்டுக்கொல்லப்பட்டார். இதனை ஜவஹர்லால் நேரு நம் வாழ்வில் ஒளி மறைந்து எங்கும் இருள் சூழ்ந்துவிட்டது என்றார்.
- ❖ 1950 ஜனவரி 26ம் நாள் இந்தியா குடியரசானது. முதல் குடியரசுத் தலைவர்Dr. ராஜேந்திர பிரசாத்.

<u>சுதேசி சமஸ்தானங்களின் இணைப்பு</u>

- ❖ 1948ம் ஆண்டு **காஷ்மீரை ஆண்ட மகாராஜா ஹரிசிங் காஷ்மீரை இந்தியாவுடன்** இணைத்தார்.
- ❖ சுதேச அரசுகளில் பெரியது ஐதராபாத் ஆகும். இந்துக்கள் அதிகமாக வாழ்ந்த இப்பகுதியை நிஜாம் என்ற முஸ்லீம் ஆட்சி புரிந்தார். ஐதராபாத் நிஜாமிடம் பிரதம அமைச்சராக இருந்த **காசிம், ராஸ்வி, ராசக்கார் இயக்கம்** என்ற முஸ்லீம் இயக்கம் தொடங்கினார்.

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

- கத்தியவார் பகுதியில் இருந்த இந்துக்கள் அதிகம் வாழ்ந்த **ஜூனாகத்** பகுதியை முஸ்லீம் மன்னர் ஆண்டார்.

  பிரெஞ்சுப் பகுதிகள்இணைக்கப்படுதல் – 1954
- பிரெஞ்சு அரசின்அனுமதியுடன் பாண்டிச்சேரி, காரைக்கால், மாஹி, ஏனாம் மற்றும் சந்திரநாகூர் ஆகிய பகுதிகள் 1954 ஆம் ஆண்டு இந்திய யூனியனுடன் இணைக்கப்பட்டன.

தமிழ்நாட்டின் வரலாறு

- **வேலூர் புரட்சி –கி.பி. 1806 புரட்சிக்கான காரணங்கள்**
- ஸ்ரீரங்கப்பட்டனம் போரில் 1799ம் ஆண்டு திப்புசுல்தான் கொல்லப்பட்டதால் இந்தக் கலகம் ஏற்பட்டது.
- திப்புசுல்தானின் மரணத்திற்கு பிறகு வேலூர் கோட்டையில் சிறைப்படுத்தப்பட்ட திப்புசுல்தானின் உறவினர்களால் இப்புரட்சி மேற்கொள்ளப்பட்டது.
- இந்து சிப்பாய்கள் காதணிகள், நெற்றியில் சமயக் குறிகள் இடுதல் போன்றவற்றிற்கு தடை விதிக்கப்பட்டது.
- முஸ்லீம்கள் தங்களுடைய தாடி, மீசைகளை குறிப்பிட்ட அளவுதான் வைத்துக் கொள்ள வேண்டும் என்று கட்டுப்பாடு விதிக்கப்பட்டது. இது வீரர்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தியது.

வேலூர் கலகம் 1806

- ஆங்கிலேயர்கள்இராணுவத்தில் புகுத்திய சில கட்டுப்பாடுகள் வேலூர் கலகத்திற்கு வழி வகுத்தது. இந்து வீரர்கள் தங்கள் நெற்றியில் சமயக் குறிகளை இடக்கூடாது என்றும், முஸ்லீம் வீரர்கள் தங்கள் தாடி மீசைகளை வெட்டி சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டது. இது ராணுவ வீரர்களிடையே கடும் அதிருப்தியை ஏற்படுத்தியது. திப்புவின் பிள்ளைகள் இவர்களை ஆங்கிலேயர்களுக்கு எதிராக கிளர்ச்சியில் ஈடுபடத் தூண்டினர்.
- 1806 ஜீலை 9ஆம் நாள் வேலூர் கோட்டையில் திப்புவின் மகள் திருமணம் நடைபெற்றது. இத்திருமணத்தில் கலந்து கொள்ளுவதற்காக வீரர்கள் வேலூர் கோட்டையில் கூடினர். நள்ளிரவில் இங்கு கூடியிருந்த வீரர்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டு, ஆங்கிலேயர்களைத் தாக்கி ஜீலை 10ம் நாள் கோட்டையைக் கைப்பற்றினர். திப்புவின் கொடி, வேலூர் கோட்டையில் ஏற்றப்பட்டது.
-

இந்திய விடுதலை இயக்கத்தில் தமிழ் நாட்டின் பங்கு

வ.உ.சிதம்பரம்பிள்ளை

- வ.உ.சிதம்பரம்பிள்ளை சுதேசி நீராவிக் கப்பல் என்ற நிறுவனத்தை தூத்துக்குடியில் தொடங்கினார். ஆகவே **கப்பலோட்டிய தமிழன்** என்றழைக்கப்பட்டார்.
- செக்கிழுத்த செம்மல் என்று அழைக்கப்பட்ட சிதம்பரம்பிள்ளை செப்டம்பர் 5, 1872 ஆம் ஆண்டு ஒட்டப்பிடாரத்தில் பிறந்தார்.
- வ.உ.சி. பாலகங்காதர திலகரைப் பின்பற்றி தீவிரவாதத்தை தீவிரமாக பரப்பினார். இவர் மீது தேசத் துரோகக் குற்றம் சுமத்தப்பட்டு, 40 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டது.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

இவருடைய வலதுகால் சங்கிலியால் கோர்க்கப்பட்டு மாடுபோல் சிறையில் செக்கிழுத்தார்.இவர் முறையீடு செய்ததால் இந்த தண்டனை பின்னர் குறைக்கப்பட்டது.

சுப்பிரமணிய சிவா

- ❖ சுப்பிரமணிய சிவா, திண்டுக்கல் மாவட்டத்தில் வத்தலக்குண்டு கிராமத்தில் பிறந்தார்.
- ❖ ஆங்கிலேயருக்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபட்டதால் 1908 – 1922 இடைப்பட்டகாலத்தில் பலமுறை கைது செய்யப்பட்டார்.
- ❖ சிறையில் இருந்த போது தொழு நோயால் பாதிக்கப்பட்டார். இதனால் சேலம் சிறைக்கு மாற்றப்பட்டார். இவரால் நடக்க முடியாத நிலை ஏற்பட்டது. இதற்கிடையில் ஆங்கில அரசு இவருக்காகவே தொழு நோயாளிகள் இரயிலில் பயணம் செய்யக்கூடாது என்று சட்டம் ஒன்றை கொண்டு வந்தது. இதன் விளைவாக சுப்பிரமணிய சிவா உடல் முழுவதும் தொழு நோய் புண்களுடன் தமிழகம் முழுவதும் நீண்ட நடை பயணமாகவே சுற்றி வந்தார். 78 பின்னர் தனது நோயின் காரணமாக ஜீலை 23, 1925 –ல் காலமானார்.

சுப்பிரமணிய பாரதியார்

- ❖ சுப்பிரமணிய பாரதியார் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள எட்டயபுரத்தில் டிசம்பர்11, 1882 ஆம் ஆண்டு பிறந்தார். மதுரையில் தமிழாசிரியராக சிறிது காலம் பணியாற்றினார்.
- ❖ சுதேசமித்ரன் பத்திரிக்கையின் உதவி ஆசிரியராகப் பணியாற்றினார்.
- ❖ 1907ஆம் ஆண்டு சூரத்தில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் கலந்துகொண்டார்.
- ❖ 1907 ஆம் ஆண்டு தமிழ் வாரப் பத்திரிக்கையான ‘இந்தியா’ பத்திரிக்கையின் ஆசிரியரானார். அதே சமயத்தில் ‘ **பாலபாரதம்**’ என்ற ஆங்கிலப் பத்திரிக்கையை வெளியிட்டார்.
- ❖ சென்னையிலிருந்து சுதேசமித்ரன் பத்திரிகையின் ஆசிரியராக மீண்டும் பணியாற்றினார். செப்டம்பர்11, 1921 ஆம் ஆண்டு காலமானார்.

வாஞ்சிநாதன்

- ❖ வாஞ்சிநாதன் திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் பணியாற்றினார்.
- ❖ 1908ம் ஆண்டு தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி பஞ்சாலைத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். அப்போது திருநெல்வேலி மாவட்ட ஆட்சியாளராக இருந்த ஆஷ் என்பவர் 4 பேரை திருநெல்வேலியில் சுட்டுக்கொன்றார்

எஸ். சத்தியமூர்த்தி

- ❖ 1887 ஆம் ஆண்டு ஆகஸ்டு 19 ஆம் நாள் சென்னை மாகாணத்திலுள்ளள திருமயம் என்னும் ஊரில் பிறந்தார்.
- ❖ காமராரின் அரசியல் குருவான சத்தியமூர்த்தி ஒரு சிறந்த அரசியல்வாதி.
- ❖ 1919 ஆம் ஆண்டு மாண்டேகு – செம்ஸ்போர்டு சீர்திருத்தம் மற்றும் ரௌலட் சட்டத்தை எதிர்ப்பதற்காக அமைக்கப்பட்டிருந்த கூட்டுக் குழுவில் ஒரு உறுப்பினராக காங்கிரசால் நியமிக்கப்பட்டார்.
- ❖ தமிழ்நாடு காங்கிரசுக் கமிட்டி தலைமையகத்திற்கு சத்தியமூர்த்தி பவன் எனப் பெயரிடப்பட்டது.

சி. இராசகோபாலாச்சாரி

- ❖ இராஜாஜி என்று புகழப் பெற்ற இராஜகோபாலாச்சாரி, டிசம்பர் – 10, 1878 ஆம் ஆண்டு தொரப்பள்ளி என்ற கிராமத்தில் பிறந்தார்.
- ❖ 1907 –ம் ஆண்டு சூரத் மாநாட்டில் கலந்து கொண்டார். காந்தியின் தீவிர ஆதரவாளர் ஆனார்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

- 1930 ஆம் ஆண்டு வேதாரண்யம் சத்தியாகிரகத்தைத் தலைமையேற்று நடத்தினார். தமது தலைமையில் திருச்சியில் இருந்து 100 தொண்டர்களுடன் வேதாரண்யத்திற்கு பயணம் மேற்கொண்டு, உப்பு காய்ச்சி உப்புச்சட்டங்களை மீறினார்.
- 1955 – ஆம் ஆண்டு இவருக்கு பாரத ரத்னா விருது வழங்கப்பட்டது. இவர் டிசம்பர் 25, 1972 ஆம் ஆண்டு காலமானார்.

கே. காமராஜர்

- கர்மவீரர், பெருந்தலைவர் என்று போற்றப்பட்ட காமராஜர், விருதுநகருக்கு அருகில் உள்ள விருதுப்பட்டி கிராமத்தில் ஜூலை 15, 1903 ஆம் ஆண்டு பிறந்தார்.

தமிழ்நாட்டில் சமுதாய மாற்றங்கள்

சுயமரியாதை இயக்கம் – ஈ. வே. இராமசாமி

- ஈ. வே. இராமசாமி 1879 ஆம் ஆண்டு செப்டம்பர் 17ஆம் நாள் ஈரோட்டில் செல்வ வளம் மிக்க இந்து குடும்பத்தில் பிறந்தார். தமது 13 ஆம் வயதில் திருமணம் செய்து கொண்ட பெரியார், தனது 19வது வயதில் இல்லற வாழ்வைத் துறந்தார்.
- 1924 ஆம் ஆண்டு கேரளாவில் உள்ள வைக்கத்தில் நடைபெற்ற சத்தியாகிரகப் போராட்டத்தில் பங்கேற்று தாழ்த்தப்பட்ட மக்களின் ஆலய நுழைவுத் தடைச் சட்டத்தை எதிர்த்துப் போராடினார். இறுதியில் திருவிதாங்கூர் அரசு ஆலய நுழைவு தடைச் சட்டத்தை தளர்த்தி, அனைவரும் ஆலயத்திற்குள் நுழையலாம் என அறிவித்தது. இதன் காரணமாக பெரியாருக்கு 'வைக்கம் வீரர்' என்ற பட்டம் வழங்கப்பட்டது.

சி. என். அண்ணாதுரை

- பேரறிஞர் அண்ணா என்று அழைக்கப்படும் சி. என். அண்ணாதுரை, 1909 ஆம் ஆண்டு, செப்டம்பர் 15ஆம் நாள் காஞ்சிபுரத்தில் பிறந்தார்.
- 1944 ஆம் ஆண்டு சேலத்தில் நடைபெற்ற மாநாட்டில் நீதிக்கட்சியின் பெயரை திராவிடர் கழகம் என முன் மொழிந்தார். இதனால் பெரியாருக்கு நெருக்கமானார்.
- 1947 ஆம் ஆண்டு நடைபெற்ற பெரியார் – மணியம்மை திருமணத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து அண்ணாஅக்கட்சியிலிருந்து விலகி 1949 ஆம் ஆண்டு செப்டம்பர் 17ஆம் நாள் திராவிட முன்னேற்றக் கழகம் கட்சியைத் தொடங்கினார்.
- சித்திரை முதல் தேதியை தமிழ் புது வருட நாளாக அறிவித்தார். (14.04.1967)1967 ஆம் ஆண்டு ஏப்ரல் 16ம் நாள் சென்னை மாநிலம் என்பதை தமிழ் நாடு (தமிழகம்) என பெயர் மாற்றம் செய்தார்.
- புனித ஜார்ஜ்கோட்டையில் அமைந்துள்ள செக்ரடேரியட் என்பதை தலைமைச் செயலகம் எனப் பெயர் மாற்றம் செய்தார். அதே தேதியில் சத்யமேவ ஜெயதே என்ற அரசுக் குறிக்கோளை வாய்மையே வெல்லும் என்று மாற்றி அறிவித்தார்.
- ஸ்ரீ, ஸ்ரீமதி மற்றும் குமாரி போன்ற சமஸ்கிருத வார்த்தைகளுக்கு மாற்றாக திரு, திருமத மற்றும் செல்வி என்ற தமிழ் சொற்களை அறிவித்தார்.

சமுதாய மாற்றத்தில் பெண்களின் பங்கு

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி

- டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி ஜீலை 30, 1886 ஆம் ஆண்டு புதுக்கோட்டையில் பிறந்தார்.
- சமுதாய மாற்றத்திற்கு முன்னோடியாக தமிழ்நாடு விளங்குகிறது. தமிழ் சமூகத்தில் காணப்பட்ட தேவதாசி முறையை போக்க டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி தீவிரமாக போராடினார்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

- இந்தியாவின் முதல் பெண் மருத்துவராவார்.
- 1923 ஆம் ஆண்டு இவரது தங்கை புற்றுநோயால் பாதிக்கப்பட்டு இறந்தார். அதனால் புற்று நோயை அடியோடு ஒழிக்க வேண்டும் என்று, 1949 ஆம் ஆண்டு புற்றுநோய் நிவாரண மருத்துவமனையை தொடங்கினார்.
- இவரது சீரிய முயற்சியால் சென்னை அடையாறு புற்றுநோய் ஆராய்ச்சி நிறுவனம் தோற்றுவிக்கப்பட்டது. இந்தியப் பிரதமர் ஜவஹர்லால் நேரு இந்த மருத்துவமனைக்கான அடிக்கல்லை நாட்டினார்.
- 1930 ஆம் ஆண்டு பூனாவில் அனைத்திந்தியப் பெண்கள் மாநாட்டை நடத்தினார்.
- ஆதரவற்றவர்களுக்கு மறுவாழ்வு தரும் பொருட்டு அவ்வை இல்லம் என்ற அடைக்கல நிலையத்தை சாந்தோமில் தொடங்கினார். தற்சமயம் இவ்வில்லம் சென்னை அடையாறில் செயல்பட்டு வருகிறது.

டாக்டர் எஸ். தருமாம்பாள்

- 1883 – ஆம் ஆண்டு திருவாரூரில் பிறந்தார்.
- தம் குலத்துப் பெண்கள் தாழ்ந்த நிலையில் இருப்பதையும், பல்வேறு வழிகளில் துன்புறுத்தப்படுவதையும் உணர்ந்த இராமாமிர்தம் அம்மையார், அவர்களின் விடுதலைக்காக தனது வாழ்வை அர்ப்பணிக்க முடிவு செய்தார். நாடு முழுவதும் தங்கள் இனப் பெண்களுகு இழைக்கப்படும் அநீதிகளை எடுத்துச் சொல்லி அவர்களது விடுதலைக்கு ஆதரவு திரட்டினார்.
- Dr. முத்துலட்சுமி ரெட்டி, தேவதாசி முறை ஒழிப்புச் சட்டம் 1930 கொண்டுவர ஆணிவேராக அமைந்தார்.
- 1961ல் வரதட்சணைத் தடைச் சட்டம் இயற்றப்பட்டது.
- தமிழக அரசு, ஏழைப் பெண்களுக்கு திருமண நிதி உதவியளிக்கும் ஒரு சமூகத் திட்டத்தை ஏற்படுத்தி அதற்கு மூவலூர் இராமாமிர்தம் அம்மாள் நினைவு திருமண உதவித் திட்டம் என்று பெயரிட்டு இவரை கௌரவித்தது.

இந்திய அரசியலமைப்புச் சட்டம்

ஒழுங்குமுறைச் சட்டம் - 1773

☞ கம்பெனியின் செயல்பாடுகளை ஒடுக்குமுறை செய்வதற்காக வேண்டி ஆங்கிலேய பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட முதல் சட்டமாகும். .

☞ இது **வில்லியம்** கோட்டையின் ஆளுநரை **வங்காளத்தின் கவர்னர் ஜெனரலாக** நியமனம் செய்தது.

☞ அவருக்கு ஆலோசனை சொல்வதற்காக வேண்டி நான்கு உறுப்பினர்களைக் கொண்ட கவர்னர் ஜெனரால் **நிர்வாக குழுவினையும்** நிர்ணயம் செய்தது. முதல் நான்கு உறுப்பினர்களான **கி.கிளோவரிங், மாண்சன், பார்டுவல் மற்றும் பிலிப்ஸ் பிரான்சிஸ்** போன்றோர்கள் சட்டத்திலேயே சொல்லப்பட்டிருந்தது.

☞ நிர்வாக குழு உறுப்பினர்களின் பதவிக்காலம் ஐந்து ஆண்டுகளாகும்.

☞ வங்காளத்தின் கவர்னர் ஜெனரலின் கட்டுப்பாட்டின் கீழ் **மெட்ராஸ்** மற்றும் **பம்பாய்** மாகாணங்கள் வைக்கப்பட்டன. போர் மற்றும் அமைதி போன்ற விவகாரங்களில் கட்டுப்பாடு மற்றும் மேலாண்மை செய்ய கவர்னர் ஜெனரலுக்கு அதிகாரம் வழங்கப்பட்டது.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

☞ இந்தியாவிற்கான ஒரு உச்ச நீதிமன்றத்தை உருவாக்கியது. **சர் எலிஜா இம்பே** என்பவர் இந்தியாவின் **முதல் உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதியாக நியமனம்** செய்யப்பட்டார்.

சட்டத்தின் குறைபாடுகள்

☞ கவர்னர் ஜெனரல் மற்றும் கவுன்சில் மற்றும் உச்ச நீதிமன்றம் ஆகிய இரண்டிற்கும் இடையே அதிகார வரம்பெல்லை முழுமையாக பிரிக்கப்படாத காரணத்தினால் இவ்விரண்டுக்கும் இடையே எப்பொழுதும் ஒரு மோதல் காணப்பட்டது.

☞ மாகாணங்கள் முழுமையான கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்படவில்லை.

☞ இதன் விளைவாக குறைகளை நிவர்த்தி செய்வதற்காக 1781-ம் ஆண்டு பிட் இந்தியச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. இந்த சட்டத்தின் மூலமாக உச்ச நீதிமன்றம் மற்றும் கவர்னர் ஜெனரலின் கவுன்சில் இரண்டுக்கும் இடையே வரம்பெல்லை தெளிவாக வரையறுக்கப்பட்டது.

பிட் இந்தியச் சட்டம் - 1784

☞ இங்கிலாந்தின் பிரதமரான **இளையபிட்** -டினால் கொண்டுவரப்பட்ட சட்டம் என்பதால் பிட் இந்திய சட்டம் எனப்பட்டது.

☞ கம்பெனியின் பகுதிகள் முதன் முதலாக 1781-ம் ஆண்டு சட்டத்தினில்தான் இந்தியாவில் இங்கிலாந்தின் பகுதிகள் என்று முதன் முதலாக கூறப்பட்டது.

☞ இது இங்கிலாந்தினில் இந்தி விவகாரங்களுக்கானத் துறையினை உருவாக்கியது. இது **போர்டு ஆ.்.ப் கன்ட்ரோல் (Board of Control) கட்டுப்பாட்டு குழுவினையும்** அதற்கான தலைவர் பதவியையும் உருவாக்கியது.

☞ இயக்குனர் குழுவிற்கு கம்பெனி பணியிடங்களை நிரப்புவதற்கான அதிகாரததைத் தொகுத்தது. (Patronage)

☞ இந்தியாவில் கவர்னர் ஜெனரலின் நிர்வாக குழு உறுப்பினர்களின் எண்ணிக்கையினை நான்கிலிருந்து மூன்றாக குறைத்தது. கம்பெனி படைகளின் படைத் தளபதி அதனில் ஒருவராக இருப்பார்.

☞ இந்தியாவினில் கம்பெனி விவகாரங்களை இயக்குனர்கள் குழு மற்றும் போர்டு ஆ.்.ப் கன்ட்ரோல் ஆகிய இரண்டும் ஒரு சேர கட்டுப்பாடு செய்தது. இது **இரட்டைக் கட்டுப்பாட்டு முறை** என்றழைக்கப்பட்டது. இந்த முறையான 1858-ம் ஆண்டு இந்திய அரசு சட்டம் வரையிலும் நீடித்தது.

☞ தலையிடாக் கொள்கையினை பின்பற்றவும், தலையீட்டுப் போர்களை தடுக்கவும் வழிவகை செய்தது.

பட்டயச் சட்டம் - 1786

☞ காரன்வாலிஸ் பிரபுவிற்கு சிறப்பு அதிகாரங்களை வழங்குவதற்காக நிறைவேற்றப்பட்டது. அதன்படி **கவர்னர் ஜெனரல் மற்றும் ராணுவ படைத் தளபதி** ஆகிய இரண்டு பதவிக்கும் ஒருவர் வசம் ஒப்படைக்கப்பட்டது.

பட்டயச் சட்டம் - 1793

☞ போர்டு ஆ.்.ப் கன்ட்ரோலின் தலைவர் மற்றும் அதன் உறுப்பினர்கள் சம்பள செலவுகள் இந்திய வருவாயிலிருந்து கொடுக்கப்பட்டது. இது பின்னாளில் 1919 –ம் ஆண்டு நிறுத்தப்பட்டது.

☞ கம்பெனியின் ஆட்சி மேலும் 20 ஆண்டுகளுக்கு நீட்டிப்பு செய்யப்பட்டது.

பட்டயச் சட்டம் - 1813

☞ கிழக்கிந்திய கம்பெனியின் ஆட்சி மேலும் 20 ஆண்டுகளுக்கு நீட்டிப்பு செய்யப்பட்டது.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

☞ கிழக்கிந்திய கம்பெனியின் வாணிப முற்றுரிமை ஒழிக்கப்பட்டது.

☞ பிரிட்டிஷ் இந்தியாவில் உள்ள கம்பெனியின் பகுதிகளின் அரசியல் சாசன ரீதியான நிலையினை முதன் முதலாக தெளிவாக வரையறை செய்தது.

☞ இந்தியாவின் **இலக்கியம் மற்றும் கல்வி வளர்ச்சிக்காக** வேண்டி ஆண்டு தோறும் ரூ.1,00,000/- ஒதுக்கீடு செய்ய வழிவகை செய்தது.

☞ கம்பெனி பணியினில் சேர முன் பயிற்சி கட்டாயம் எனக் கூறியது. ராணுவ பயிற்சிக்காக **அடிஸ்கோம்பே** என்னும் இடத்தினில் **ராணுவ கல்லூரியும்**, சிவில் பயிற்சிக்காக **ஹெய்லிபுர்ரியிலும்** ஒரு **சிவில் கல்லூரியினையும்** நிறுவியது.

☞ **மதப் பிரச்சாரம் செய்ய கிருத்துவ சமய பரப்பு சங்கங்களுக்கு அனுமதி** வழங்கப்பட்டது

பட்டயச் சட்டம் -1833

☞ சீனாவுடனான கிழக்கிந்திய கம்பெனியின் தேயிலை மற்றும் ஒபியம் வாணிப முற்றுரிமை ஒழிக்கப்பட்டது.

☞ இதுவரையிலும் ஒரு வாணிப அமைப்பாக இருந்த சி.சி. கம்பெனி தற்பொழுது முற்றிலும் ஒரு அரசியல் நிறுவனமாக மாறியது.

☞ வங்காளத்தின் கவர்னர் ஜெனரல் என்ற பதவியின் பெயர் இந்தியாவின் கவர்னர் ஜெனரல் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது. அதன்படி **வில்லியம் பெண்டிங் பிரபு இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனரலாக** நியமனம் செய்யப்பட்டார்.

☞ மாகாணங்கள் சட்டம் இயற்றும் அதிகாரத்தை இழந்தன. இந்தியா முழுமைக்கும் கவர்னர் ஜெனரலின் நிர்வாக குழு சட்டங்களை இயற்றும். எனவே மாகாணங்கள் சட்டம் இயற்றுதலில் சுதந்திரத்தை இழந்தன.

☞ இந்தியாவிற்கு சட்டங்களை தொகுப்பதற்காக வேண்டி ஓட்டுரிமை இல்லாமல் கவர்னர் ஜெனரலின் நிர்வாக குழுவினில் ஒரு சட்ட உறுப்பினர் சேர்க்கப்பட்டார். **மெக்காலே பிரபு முதல் சட்ட உறுப்பினராக நியமனம்** செய்யப்பட்டார். அவர் **சட்ட ஆணையத்தின் தலைவராகவும்** நியமனம் செய்யப்பட்டார்.

☞ **ஒற்றையாட்சி முறை அறிமுகம்** செய்யப்பட்டது.

☞ எந்தவிதமான பாரபட்சமின்றி இந்தியர்களுக்கும் கம்பெனியில் பணியிடங்கள் வழங்க வழிவகை செய்யப்பட்டது.

☞ மதம், நிறம் போன்ற காரணங்களைக் காட்டி கம்பெனியின் பணியிடங்களுக்கு இந்தியர்களை பாரபட்சம் காட்டக் கூடாது என்று கூறியது.

☞ அடிமை முறையினை ஒழிக்க வழிவகை செய்யப்பட்டு அதன்படி பின்னர் **1843-ம் ஆண்டு** இந்தியாவில் **அடிமை முறை ஒழிக்கப்பட்டது.**

பட்டயச் சட்டம் 1853

☞ கம்பெனியின் ஆட்சி நீட்டிப்பு எந்தவிதமான கால நிர்ணயம் சொல்லப்படாமல் நீட்டிப்பு செய்யப்பட்டது.

☞ வங்காள மாகாணத்தை நிர்வாகம் செய்வதற்காக வேண்டி அதன்கென்று தனித்த ஒரு கவர்னர் ஜெனரல் நியமனம் செய்யப்பட்டார்.

☞ இதற்காக இந்தியாவின் கவர்னர் ஜெனரல் கூடுதல் பணியாக வங்காளத்தின் கவர்னராகவும் செயல்பட்டு வந்தார். எனவே முதன் முதலாக கவர்னர் ஜெனரல் எவ்விதமான கூடுதல் பொறுப்புகள் இல்லாமல் வெறும் கவர்னர் ஜெனரலாக மட்டும் செயல்பட்டார்.

☞ அவ்வகையினில் டல்ஹௌசி பிரபு இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனரலாக நியமனம் செய்யப்பட்டார்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

(வில்லியம் பெண்டிங் பிரபுவிற்கும், டல்ஹௌசி பிரவிற்கும் இடையே வேறுபாட்டைக் காண்க)

☞ சட்ட உறுப்பினர் கவர்னல் ஜெனரல் நிர்வாக குழுவின் முழு உறுப்பினராக நியமனம் செய்யப்பட்டார்.

☞ கவர்னர் ஜெனரல் சட்டமியற்றும் குழுவினை உருவாக்கியது. இதுதான் பின்னாளில் படிப்படியாக இந்திய சட்டமியற்றும் அவை (அ) இம்பீரியல் சட்டமன்றம் (அ) மத்திய சட்டமன்றமாக பின்னாளில் உருப்பெற்றது.

☞ கம்பெனியின் பணியிடங்கள் இயக்குனர் குழுவினால் நியமனம் செய்யப்பட்டு வரும் முறை ஒழிக்கப்பட்டு, அதற்குப் பதிலாக இனி வருங்காலங்களில் போட்டித் தேர்வின் மூலம் நியமனம் செய்யப்படும் என்று தெரிவித்தது.

☞ அதற்கான மெக்காலே பிரபுவின் தலைமையினில் ஒரு சிவில் சர்வீஸ் கமிஷனை நியமனம் செய்தது.

☞ இந்தியாவின் சட்டங்களை மறுஆய்வு செய்வதற்காக இங்கிலாந்தில் ஒரு சட்ட கமிஷனை நியமனம் செய்தது.

விக்டோரியா பேரரசியின் பிரகடனம் - 1858

☞ இந்தியப்பெரும் புரட்சி 1857 –க்குப் பிறகு கிழக்கிந்திய கம்பெனியின் ஆட்சி 1858 –ல் ஒழிக்கப்பட்டு, பிரிட்டிஷ் பேரரசியின் கீழ் கொண்டு வரப்பட்டது. இந்திய மக்கள் மற்றும் சுதேச மன்னர்களின் நம்பிக்கையினை பெறவும், ஆங்கிலேயர் ஆட்சியின் நிலைப்பாட்டினை தெரிவிக்கவும் ஒரு பிரகடனத்தை வெளியிட்டார்.

☞ இப்பிரகடனம் 1858 –ல் கானிங் பிரபுவினால் அலகபாத் தர்பாரில் பிரகடனம் வெளியிடப்பட்டது.

☞ சுதேச மன்னர்களின் தத்துக் கொடுக்கும் உரிமை ஏற்றுக் கொள்ளப்பட்டது. அவர்களுடன் செய்துக் கொண்ட ஒப்பந்தங்கள் மதிக்கப்படும் என்று சொல்லப்பட்டது.

☞ இந்தியர்களுக்கு பணியிடங்கள் வழங்கவும், மதச் சுதந்திரம் வழங்கப்படுவதும் அளிக்கப்பட்டது.

இந்திய அரசுச் சட்டம் - 1858

☞ பேரரசியின் கீழ் ஆட்சி கொண்டுவரப்பட்டப் பின்னர் இயற்றப்பட்ட முதல் சட்டம்

☞ இதன்படி கிழக்கிந்திய கம்பெனியின் ஆட்சி ஒழிக்கப்பட்டு பேரரசியின் கீழ்க் கொண்டுவரப்பட்டது.

☞ 1784 –ம் ஆண்டு முதலாக இருந்து வந்த இரட்டைக் கட்டுப்பாடுமுறை ஒழிக்கப்பட்டது.

☞ போர்டு ஆ∴ப் கன்ட்ரோல் மற்றும் அதன் தலைவர் பதவி போன்றவை ஒழிக்கப்பட்டு அதற்குப் பதிலாக இந்தியாவிற்கான வெளியுறவுச் செயலாளர் என்ற பதவி உருவாக்கப்பட்டு போர்டு ஆ∴ப் கன்ட்ரோலின் கடைசி தலைவரான சர் சார்லஸ் வுட், இந்தியாவிற்காக முதல் வெளியுறவு செயலராக நியமனம் செய்யப்பட்டார்.

☞ இப்பதவிக்கான ஊதியம் இந்திய வருவாயிலிருந்து வழங்கப்படும் (1919 வரை)

☞ இயக்குனர் குழு ஒழிக்கப்பட்டு அது இந்திய கவுன்சிலாக உருமாற்றம் பெற்றது. இது இந்தியாவிற்கான வெளியுறவு செயலாளருக்கு ஆலோசனை வழங்கும் குழுவாக செயல்பட்டது.

☞ அரசுப் பணியிடங்கள் சிவில் சர்வீஸ் தேர்வின் மூலமாக நியமனம் செய்யப்படும்.

☞ கவர்னர் ஜெனரல் பதவியின் பெயர் **வைசிராய்** என்று மாற்றம் பெற்றது.

இந்திய கவுன்சில் சட்டம் - 1861

☞ இது மத்தியிலும், மாகாணங்களிலும் சட்டமன்றங்களை உருவாக்கியது.

☞ வைசிராயின் சட்டமன்ற குழு மத்திய சட்டமன்ற குழுவாக நியமனம் செய்தது.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

☞ துறை சார்ந்த முறை அல்லது கேபினெட் முறை அறிமுகம்.

☞ **அவசரநிலை சரத்துகள் முதன் முதலாக அறிமுகம்** செய்யப்பட்டது.

☞ **பட்ஜெட் முறை அறிமுகம்.**

☞ **அட்வகேட் ஜெனரல் பதவி உருவாக்கம்.**

இந்திய கவுன்சில் சட்டம் - 1892

☞ மத்திய சட்டமன்றத்திற்கு முதன் முதலாக தேர்தல் என்ற பதத்தினைப் பயன்படுத்தாது தேர்தல் போன்ற மறைமுகமான சராம்சத்தை அறிமுகம் செய்தது.

☞ மத்திய சட்டமன்ற உறுப்பினர்கள் நியமனம் மூலமாக நிரப்பட்டார்கள்.

☞ மாகாண சட்டமன்றங்களுக்கான உறுப்பினர்கள் உள்ளாட்சி மன்றங்களினால் தேர்வு செய்யப்பட்டனர்.

இந்திய அரசுச் சட்டம் - 1909

☞ இது கவர்னர் ஜெனரல் மிண்டோ பிரபு மற்றும் இந்தியாவிற்கான வெளியுறவுச் செயலாளர் மார்லி பிரபுவினால் கொண்டுவரப்பட்டது. எனவே மிண்டோ-மார்லி சீர்திருத்தங்கள் எனப்படுகிறது.

☞ முதன் முதலாக நேரடி தேர்தல் முறை அறிமுகம் செய்யப்பட்டது.

☞ முஸ்லீம்களுக்கு வகுப்புவாத இடஒதுக்கீட்டு முறையினை அறிமுகம் செய்தது. எனவே முஸ்லீம் உறுப்பினர்களை தேர்வு செய்ய முஸ்லீம் வாக்காளர்கள் மட்டுமே வாக்களித்து தேர்வு செய்வர்.

☞ கவர்னர் ஜெனரல் மற்றும் கவர்னரின் நிர்வாக குழுவினில் முதன் முதலாக இந்தியர்கள் நியமனம் செய்யப்பட்டனர்.

☞ அவ்வகையினில் சத்யேந்திர பிரசாத் சின்கா கவர்னர் ஜெனரலின் நிர்வாக குழுவினில் நியமனம் செய்யப்பட்ட முதல் இந்தியர் ஆவார்.

இந்திய அரசுச் சட்டம் - 1919

☞ இச்சட்டமானது கவர்னர் ஜெனரல் செல்ம்ஸ்போர்டு மற்றும் இந்தியாவிற்கான வெளியுறவுச் செயலாளர் மாண்டேகு போன்றோரால் கொண்டு வரப்பட்டது. எனவே இது மாண்டேகு செல்ம்ஸ் போர்டு சீர்திருத்தங்கள் என்றழைக்கப்படுகிறது.

☞ 1917-ம் ஆண்டு மாண்டேகு பிரபுவினால் பிரகடனம் செய்யப்பட்ட மாண்டேகு பிரகடனம் (அ) ஆகஸ்ட் பிரகடனம் இச்சட்டத்தின் முன்நோக்கமாக ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது.

☞ இது மாகாணங்களில் இரட்டையாட்சி முறையினை அறிமுகம் செய்தது.

☞ மத்தியில் ஈரவை சட்டமன்றத்தை அறிமுகம் செய்தது.

☞ மாகாண பட்டியலில் உள்ள விவகாரங்கள் ஒதுக்கப்பட்டவை (மாற்றப்பட்டவை), ஒதுக்கப்படாதவை (மாற்றப்படாதவை) என இரண்டாக பிரிக்கப்பட்டது.

☞ இந்தியாவிற்கான வெளியுறவு செயலாளருக்கான ஊதியம் இந்திய வருவாயிலிருந்து கொடுக்கப்பட்டு வந்த முறை நிறுத்தப்பட்டது.

☞ இந்தியாவில் விவகாரங்களுக்காக, இந்திய அரசினால் லண்டனில் இந்திய ஹை கமிஷனர் என்ற பணியிடம் ஏற்படுத்தப்பட்டது.

☞ ஆடிட்டர் ஜெனரல் என்ற பணியிடம் பதவி உருவாக்கப்பட்டது.

☞ நரேந்திர மண்டல் எனப்படும் சுதேச மன்னர்களின் அவையினை உருவாக்க சட்ட வழிவகை செய்யப்பட்டது.

இந்தியச் அரசுச் சட்டம் - 1933

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

☞ இந்தச் சட்டம் இயற்றப்படுவதற்கு முன்பாக 1919 –ம் ஆண்டு சட்டத்தை மறுஆய்வு செய்வதற்காக நியமனம் செய்யப்பட்ட சைமன் கமிஷனனின் அறிக்கை, மூன்று வட்டமேசை மாநாடுகளின் நிகழ்வுகள், 1932 பூனா ஒப்பந்தம், பட்லர் குழுவின் அறிக்கைப் போன்ற அனைத்தும் ஒருங்கிணைக்கப்பட்டு இந்திய அரசுச் சட்டம் 1935 –ஆக கொண்டுவரப்பட்டது.

☞ இந்தச் சட்டம் 1937 –ம் ஆண்டு நடைமுறைக்கு வந்தது.

☞ இது மாகாணங்களில் இரட்டையாட்சி முறையினை ஒழித்தது.

☞ மத்தியினில் இரட்டையாட்சி முறையினை அறிமுகம் செய்தது.

☞ பிரிட்டிஷ் இந்திய மாகாணங்கள் மற்றும் சுதேச மன்னர் சமஸ்தானங்கள் போன்றவற்றை உள்ளடக்கிய ஒரு கூட்டாட்சி / கூட்டமைப்பு முறையினை அறிமுகம் செய்தது. ஆனால் சுதேச மன்னர்கள் ஒப்புதல் கொடுக்காத காரணத்தினால் இச்சட்டத்தின் கூட்டாட்சி கூறு (அல்லது) மத்திய அரசு பகுதியானது. இறுதி வரையிலும் நடைமுறைக்கு கொண்டுவரப்படவில்லை.

☞ இந்திய ரிசர்வ் வங்கி உருவாக்கப்பட்டது. (1935) கூட்டமைப்பிற்கான நீதிமன்றம் (Fader Court) உருவாக்கப்பட்டது. இதுதான் பின்னாளில் உச்ச நீதிமன்றமாக உருமாற்றம் பெற்றது. இது 1937 –ல் உருவாக்கப்பட்டது.

☞ இச்சட்டத்தின்படி மாகாணங்களுக்கு தன்னாட்சி வழங்கப்பட்டது. அதன்படி 1937 –ம் ஆண்டு மாகாணச் சட்டமன்றங்களுக்கான தேர்தல் நடைபெற்றது.

அலகு –2– இந்தியா ஓர் அறிமுகம்

- இந்தியா உலகின் மிகப்பெரிய நாடாளுமன்ற மக்களாட்சி நாடாகும். இது இறையாண்மையுடைய, சமதர்ம மதசார்பற்ற மக்களாட்சிக் குடியரசு நாடு.
- இந்திய அரசியல் அமைப்பின் படி இந்திய குடியரசானது நிர்வகிக்கப்படுகிறது.

இந்திய தேசியச் சின்னங்கள்

- உலகத்தில் உள்ள சுதந்திரமான நாடுகள் அனைத்தும் தங்கள் நாட்டிற்கென்று சிறப்பான அடையாளங்களைக் கொண்டுள்ளன. அவற்றை தேசியச் சின்னங்கள் என்று அழைக்கிறோம்.
- வலிமையான அரசியல் அமைப்பு, தேசியச் சின்னங்கள் ஆகியவை நமது நாட்டின் ஒருமைப்பாட்டை மேம்படுத்துவதாகவும் விளங்குகின்றன.

தேசியக் கொடி

- தேசியக் கொடியை வடிவமைத்தவர் பிங்காலி வெங்கையா.
- **1947–ம் ஆண்டு ஜுலை மாதம் 22–** ஆம் தேதி அரசியல் நிர்ணய சபையால் ஏற்கப்பட்டு அதே ஆண்டு **ஆகஸ்ட் 14–**ஆம் தேதி நம் நாட்டிற்கு வழங்கப்பட்டது.
- செவ்வக வடிவமுள்ள தேசியக் கொடியின் **நீள, அகல விகிதம் 3: 2** ஆகும்.
- கொடியின் மேல் உள்ள **இளஞ்சிவப்பு** நிறமானது **தியாகத்தையும்,** தைரியத்தையும் சுதந்திரப்போராட்ட வீரர்களின் தியாகத்தையும் குறிக்கிறது.
- நடுவில் உள்ள **வெண்மை** நிறம் **தூய்மையையும்,உண்மையையும்** குறிக்கிறது. வெண்மைப்பகுதியில் **கருநீலநிறத்தில்** அமைந்துள்ள **சக்கரம் அறவழியில்** முன்னேறிச் சென்று அமைதியினையும் செழுமையினையும் பெற்றுத்தர தூண்டுகிறது.
- இந்த சக்கரத்தின் வடிவம் சாரநாத் அசோகத்தூணின் தலைப்பகுதிக்குக் கீழ் உள்ள வடிவமாகும். சக்கரத்தின் விட்டமும், வெள்ளைப்பட்டயின் அகலமும் சரிசம வீதத்தில் உள்ளது. வெள்ளைப் பகுதியில் கருநீலத்தில் உள்ள 24 ஆரங்கள் கொண்ட அசோக சக்கரம் இயக்கத்தையும், தலைமை பண்பையும் குறிக்கிறது.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

- கீழே உள்ள **கரும்பச்சை நிறம் இந்தியாவின் செழிப்பையும்,** வளமான நிலத்தையும், பசுமையினையும், நம்பிக்கையினையும் குறிக்கின்றது.

கொடியைப் பற்றி விதி முறைகள்

- வேறு எந்த ஒரு கொடியையும் நமது தேசியக்கொடியின் வலதுபுறமோ அல்லது கொடியை விட உயரமாகவோ பறக்கவிடக் கூடாது.
- கம்பத்தின் உச்சி வரை கொடி உயர்ந்திருக்க வேண்டும்
- சூரியன் மறைவிற்குள் தேசியக் கொடியை இறக்கிவிட வேண்டும்,
- நமது நாட்டின், தலைவர் இறந்து விட்டாலோ அல்லது நட்பு நாட்டின் தலைவர் இறந்துவிட்டாலோ நமது தேசியக் கொடியை அரைக்கம்பத்தில் பறக்கவிட வேண்டும்.

தேசிய கீதம்

நமது தேசிய கீதத்தை இயற்றியவர் தேசியக்கவிஞர் இரவீந்திரநாத் தாகூர் ஆவார்.

- வங்காள மொழியில் இயற்றப்பட்ட இப்பாடல் 5 பத்திகளைக் கொண்டது. அவற்றில் முதல் பத்தியில் உள்ள பாடல் மட்டுமே தேசியகீதமாக தேர்வு செய்யப்பட்டுள்ளது.
- **1950–ஆம் ஆண்டு ஜனவரி 24–ஆம்** நாள் நமது அரசியல் நிர்ணய சபையால் நமது **தேசிய கீதம்** ஏற்றுக் கொள்ளப்பட்டது.
- **1911–ஆம் ஆண்டு டிசம்பர் 27**–ஆம் நாள், **கல்கத்தாவில்** நடந்த இந்திய தேசிய காங்கிரஸ் மாநாட்டில் **தேசிய கீதம் முதன் முறையாகப்** பாடப்பட்டது
- தேசிய கீதத்தைப் பாடும் கால நேரம் **52 வினாடிகள்** ஆகும்.
- குறுகிய வடிவ (Short Version) தேசீய கீதத்தைப் பாடும் கால நேரம் 20 வினாடிகள் ஆகும்.
- தேசிய கீதம், தாய்நாட்டின் பெருமை, புகழ் ஆகியவற்றை பிரதிபலிப்பதாக உள்ளது. அது தேசிய ஒற்றுமை, ஒருமைப்பாடு, சகிப்புத்தன்மை, நாட்டுப்பற்று ஆகிய அறச்செய்திகளை உணர்த்துகிறது.

தேசியச் சின்னம்

- நமது நாட்டு இலச்சினை **அசோகரின் சாரநாத் தூணில்** உள்ள சிங்கங்களின் உருவமாகும்.
- 1950–ஆம் ஆண்டு **ஜனவரி 26**–ஆம் நாள் நமது இந்திய நாட்டின் இலச்சினையாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.
- நமது தேசியச் சின்னத்தில் நான்கு சிங்கங்கள் முதுகோடு முதுகு இணைந்த நிலையில், வட்டபீடத்தின் மேல் அமைக்கப்பட்டுள்ளது. (பார்ப்பதற்கு மூன்று சிங்கள்கள் மட்டுமே தெரியும். நான்காவது சிங்கம் பின்புறம் மறைவாக உள்ளது) சிங்கங்களின் உருவங்களானது அதிகாரத்தையும், கம்பீரத்தையும் காட்டுகிறது.
- சிங்கங்களின் கீழே உள்ள அடித்தட்டுப் பீடத்தின் அடியில் இடம்புறம் குதிரையும், மத்தியில் சக்கரமும், வலதுபுறம் காளையும் உள்ளது.
- **குதிரை: ஆற்றலையும், வேகத்தையும்** குறிக்கிறது
- **காளை: கடின உழைப்பும், உறுதியையும்** குறிக்கிறது.
- **சக்கரம்: தர்மத்தையும், அறவழியையும்** குறிக்கிறது.
- இதன் கீழே **"தேவநாகரி"** மொழியில், **"சத்யமேவஜெயதே"** என்னும் வார்த்தைகள் பொறிக்கப்பட்டுள்ளது. இதன் பொருள் **"வாய்மையே வெல்லும்"** என்பதாகும்.

தேசியப்பாடல்

- நமது தேசியப் பாடல் வந்தே மாதரம் ஆகும்.
- "**ஆனந்த மடம்**" என்னும் ஏட்டில் 1882–ல் வெளியிடப்பட்ட இப்பாடலை சமஸ்கிருத மொழியில் இயற்றியவர் **"வங்காளக் கவிஞர் பங்கிம் சந்திர சட்டர்ஜி"** ஆவார்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

- 1896இல் கல்கத்தாவில் நடைபெற்ற இந்தியத் தேசிய காங்கிரஸ் மாநாட்டில் இப்பாடல் முதல்முறையாகப் பாடப்பட்டது.
- இப்பாடலை **முதல் முதலில் கல்கத்தாவில்** பாடியவர் **"ரவீந்தரநாத் தாகூர்".**
- 1950–ஆம் ஆண்டு ஜனவரி 24–ஆம் நாள் தேசியப் பாடல் நமது தேசிய கீதத்திற்கு இணையான மதிப்பினை கொண்டது.

தேசிய விலங்கு

- **தேசிய விலங்காக புலி (வங்காளத்து புலி)** ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.
- வலிமை, திறமை, மிகுந்த ஆற்றல் ஆகிய பண்புகளை குறிக்கும் நோக்குடன் புலி தேசிய விலங்காக தேர்வு செய்யப்பட்டது.

தேசிய பறவை

- நமது **தேசியப் பறவை மயில்** ஆகும். இதன் அழகான இறகுகள் நம் நாட்டின் இயற்கை அழகைப் பிரதிபலிக்கின்றன. இந்திய இலக்கியங்கள் மயிலின் பெருமையைப்பற்றி உயர்வாகப் பேசுகின்றன.

தேசிய மலர்

- **தாமரை நமது தேசியமலர்** ஆகும். அதன் தோற்றம், பேரழகு மணம் ஆகியன ஒப்பற்றதாகும் இதன் இதழ்கள் ஒன்று சேர்ந்திருப்பது நமது நாட்டின் ஒற்றுமையைக் குறிக்கிறது, புராண இலக்கியங்களில் முக்கிய இடத்தை இம்மலர் பெற்றுள்ளது

தேசிய மரம்

- **ஆலமரம் நமது தேசியமரம்** ஆகும் இது நம் அனைவரையும் ஒரு குடையின் கீழ் ஒன்றிணைக்கும் அடையாளமாகக் கருதப்படுகிறது

தேசிய மொழிகள்

- இந்திய **அரசியலமைப்புச் சட்டம் 22 மொழிகளை** தேசிய மொழிகளாக அங்கீகரித்துள்ளது.
- இந்தியாவின் அதிகாரப்பூர்வ ஆட்சி மொழி இந்தி.
- இந்த மொழிகள் இந்திய **அரசியல் அமைப்புச் சட்டத்தின் 8வது அட்டவணையில்** உள்ளது.

தேசிய நாள் காட்டி

- கிரிகேறிய நாள் காட்டி சக ஆண்டு முறையை இந்தியா 22.03.1957 முதல் பின்பற்றுகிறது.
- சக ஆண்டில் 365 நாட்கள் உள்ளது

அலகு –2– அரசியலமைப்புச் சட்டம்

மந்திரிசபையின் காரியத் திட்டம் (Cabinet Mission) 1946ன் படி அரசியல் நிர்ணய சபை 1946-ம் ஆண்டு நவம்பர் மாதம் அமைக்கப்பட்டது.

☐ இதன் அங்கத்தினர்கள் மாகாணச்சபைகளின் (Provincial Assemblies) மூலமாக ஒரு மில்லியன் மக்கள் தொகைக்கு ஒருவர் என்ற விகதப்படி மறைமுகமாக தேர்தெடுக்கப்பட்டனர்.

☐ அரசியல் நிர்ணய சபையில் மொத்தம் **389 உறுப்பினர்கள்** இருந்தனர். அவர்களுள் 296 போர் மாகாணச் சபையின் உறுப்பினர்களால் தேர்ந்து எடுக்கப்பட்டவர்கள். மற்றவர்கள் அரசர்களால் ஆளப்பட்ட மாகாணங்களினால் (Princley States) நியமிக்கப்பட்டவர்கள்.

☐ இதன் முதல் ஆலோசனைக் கூட்டம் 1946 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 9ஆம் நாள் சச்சிதானந்த சின்காவை இடைக்காலத் தலைவராகக் கொண்டு நடைபெற்றது.

☐ 1946 ஆம் ஆண்டு **டிசம்பர் 11 ஆம் நாள் டாக்டர் ராஜேந்திரபிரசாத் அரசியல் நிர்ணயம் சபையின் தலைவராகத்** தேர்ந்தெடுக்கப்பட்டார்.

☐ வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த **,,குறிக்கோள் தீர்மானம்" (Objective Resolution)** பண்டிட் ஜவஹர்லால் நேரு அவர்களால் அரசியல் நிர்ணய சபையில் **1946ம் ஆண்டு டிசம்பர் 13ம் நாள்** கொண்டுவரப்பட்டது.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

☐ அரசியல் நிர்ணய சபை 13 முக்கிய குழுக்களை அரசியல் அமைப்பை உருவாக்குவதற்காக அமைத்தது

- 1947ஆம் ஆண்டு ஆகஸ்ட் 29ம் நாள் **வரைவுக்குழு டாக்டர் B. R. அம்பேத்கார்** தலைமையில் அமைக்கப்பட்டது.

☐ 1947ம் ஆண்டு அக்டோபர் மாதம் இந்திய அரசியல் அமைப்பின் முதல் வரைவு தயாரிக்கப்பட்டது.

☐ வரைவுக்குழுவினால் தயாரிக்கப்பட்ட இந்திய அரசியலமைப்பின் வரைவு 1948ஆம் ஆண்டு பிப்ரவரி 21ம் நாள் அவைத் தலைவரிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

☐ 1948ம் ஆண்டு நவம்பர் 15 முதல் 1949ம் ஆண்டு அக்டோபர் 17 வரை இந்திய அரசியலமைப்பின் வரைவு ஒவ்வொரு ஷரத்துக்களாக பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

☐ 1949ம் ஆண்டு நவம்பர் 26ம் நாள் இந்திய அரசியல் அமைப்பு இந்திய மக்களால் அரசியல் நிர்ணய சபையின் மூலமாக ஏற்றுக் கொள்ளப்பட்டு சட்டமாக இயற்றப்பட்டது.

☐ இந்திய அரசியலமைப்பு அரசியல் நிர்ணய சபையால் அதன் கடைசி நாளான 1950ம் ஆண்டு ஜனவரி 24ம் நாள் அதன் உறுப்பினர்களால் கையெழுத்திடப்பட்டது.

☐ 1950ஆம் ஆண்டு ஜனவரி 26ம் நாள் இந்திய அரசியல் அமைப்பு முழுவதுமாக நடைமுறைக்கு வந்தது.

☐ இந்தக்காலக் கட்டத்தில் அரசியல் நிர்ணய சபை தற்காலிக பாராளுமன்றமாக செயல்பட்டது. (1947 ஆகஸ்ட் 15, 1949 நவம்பர் 26).

☐ இந்திய அரசியல் அமைப்பே உலகின் முதலாவது நீளமான அரசியலமைப்பாக கருதப்பட்டது.

☐ ஆரம்பத்தில் இவ்வரசியலமைப்பு 22 பிரிவுகளையும் 395 ஒப்பந்தங்களையும் 8 அட்டவணைகளையும் கொண்டிருந்தது.

☐ அரசியல் முறை நிர்ணயம் செய்யக்கூடிய சபை அரசியல் அமைப்பை உருவாக்க 2 வருடங்கள் 11 மாதங்கள் மற்றும் 18 நாட்களை எடுத்துக் கொண்டது.

☐ இதற்காக 6.4 கோடி ரூபாய் அரசுப்பணம் செலவழிக்கப்பட்டது.

☐ தேசியக்கொடியின் வரைபடம் அரசியல் நிர்ணய சபையால் 1947ம் ஆண்டு ஜூலை மாதம் 22ம் நாள் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

☐ தேசிய கீதம் அரசியல் நிர்ணய சபையால் 1950ஆம் ஆண்டு ஜனவரி 24ம் நாள் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

☐ இந்தியாவின் அரசியல் நிர்ணய சபை 1949ம் ஆண்டு நவம்பர் மாதம் 26ம் நாள் இந்திய பாராளுமன்றமாக மாற்றப்பட்டது.

☐ தனது சொந்த அரசியலமைப்பைக் கொண்ட ஒரே இந்திய மாநிலம் ஜம்மு கஷ்மீர்.

☐ 1952ம் ஆண்டு பாராளுமன்றத்திற்கான முதல் தேர்தல் நடைபெற்றது.

☐ 1951ம் ஆண்டு இந்திய அரசியலமைப்பு முதன்முறையாக திருத்தப்பட்டது.

☐ 1991ம் ஆண்டு டெல்லி இந்தியாவின் தலைநகரப் பகுதியாக்கப்பட்டது.

☐ காங்கிரஸ் கட்சியினால் இந்திய அரசியலமைப்பின் வரைவு தயாரிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை 1935ம் ஆண்டு அரசியல் முறை நிர்ணயம் செய்யக்கூடிய சபையில் எழுப்பப்பட்டது.

☐ ஆங்கிலேய அரசு இக்கோரிக்கைகளை 1940ம் ஆண்டு ஆகஸ்ட் கொடையின் போது ஏற்றுக் கொண்டது.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

- முஸ்லீம் சீக்கியர்கள் மற்றும் பொதுப்பிரிவினர் ஆகியோருக்கு அவர்களின் மக்கள் தொகை விகிதப்படி இடங்கள் ஒதுக்கப்பட்டது.

☐ 1947ம் ஆண்டு ஜுன் 3ம் தேதியில் மௌன்ட்பாட்டன் பிரபுவின் திட்டப்படி **பாகிஸ்தான்** நாட்டின் பிரிவும் அந்நாட்டிற்கான தனியான **அரசியல் முறை நிர்ணயம் செய்யக்கூடிய சபையும்** அறிவிக்கப்பட்டன.

☐ இதன் தொடர்ச்சியாக பாகிஸ்தான் நாட்டிற்குட்பட்ட பகுதிகளான கிழக்கு வங்கம், வடமேற்கு எல்லை மாகாணம், மேற்கு பஞ்சாப், சிந்து, பலுசிஸ்தான், அஸ்ஸாமின் சில்கெட் மாவட்டம் ஆகியவற்றிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் இந்திய அரசியல் முறை நிர்ணயம் செய்யக்கூடிய சபையின் உறுப்பினர்களாக கருதப்படவில்லை.

☐ **வடமேற்கு எல்லை மாகாணம் மற்றும் சில்கெட்** ஆகியவை **பொது ஜன வாக்கெடுப்பின்** மூலம் **பாகிஸ்தானிடமே** இருக்க வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

☐ ஆகையால் பிரிவினைக்கு பிறகு இந்திய அரசியல் முறை நிர்ணயம் செய்யக்கூடிய சபையின் உறுப்பினர்களின் எண்ணிக்கை 299 ஆக குறைந்தது.

☐ அரசியல் முறை நிர்ணயம் செய்யக்கூடிய சபையின் முதல் ஆலோசனைக் கூட்டம் முஸ்லீம் லீக்கால் புறக்கணிக்கப்பட்டது.

☐ **திரு. B. N. ராவ்** அரசியல் முறை நிர்ணயம் செய்யக்கூடிய **சபையின் சட்ட ஆலோசகராக** நியமிக்கப்பட்டார்.

☐ **டாக்டர் B. R. அம்பேத்கார் இந்திய அரசியலமைப்பின் தந்தை** என்றழைக்கப்பட்டார்.

☐ 394ம் ஒப்பந்தத்தின்படி, குடியுரிமை, தேர்தல், பாராளுமன்றம், தற்காலிக மற்றும் மாறக்கூடிய உடன்படிக்கைகளை கொண்ட விதிகள் (Articles) 5, 6, 7, 8, 9, 60, 324, 366, 367, 379, 380, 388, 391, 392 மற்றும் 393 ஆகியவை இந்திய அரசியல் அமைப்பு ஏற்றுக கொள்ளப்பட்ட நாள் முதல் (1949 நவம்பர் 26) அமலுக்கு வந்தன. மற்ற உடன்படிக்கைகள் இந்திய அரசியலமைப்பு தொடங்கப்பட்ட நாள் முதல் (1950 ஜனவரி 26) அமலுக்கு வந்தன.

☐ 395வது ஒப்பந்தத்தின்படி இந்திய அரசுச்சட்டம் 1935 மற்றும் இந்திய சுதந்திரச் சட்டம் 1947 ஆகியவற்றுக்கு பதிலாக அரசியல் அமைப்பு கொண்டு வரப்பட்டது.

இந்திய அரசியலமைப்பின் இயல்பு (**NATURE OF THE INDIAN CONSTITUTION**)

1. இந்திய அரசியலமைப்பு ஒரு முழு கூட்டாட்சி நாடு அல்ல
2. இது ஒரு அரைகுறை கூட்டாட்சி

- 1947 ஆகஸ்ட் 29–ஆம் நாள் வரைவுக்குழுவின் தலைவராக டாக்டர் பி.ஆர் அம்பேத்கர் நியமனம் செய்யப்பட்டார்.
- திறமையான சட்ட வல்லுநரான டாக்டர் அம்பேத்கர் **இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் 'சிற்பி' ஆவார்.**
- சட்ட வரைவுக் குழு, 60 நாடுகளின் அரசியலமைப்புச் சட்டத்தை ஆய்ந்துப்படித்து, அவற்றில் உள்ள தகுதிமிக்க சிறப்புக் கூறுகளை ஏற்றுக் கொண்டது.
- அரசியலமைப்புச் சட்டம் இயற்ற **2 ஆண்டுகள்11 மாதங்கள் 18 நாட்கள்** ஆனது.
- 11 திட்டமிட்டக் கூட்டங்களில் அரசியலமைப்புச் சட்டத்தை பற்றி கலந்துரையாட 144 நாட்கள் ஆயிற்று.
- 1929–ஆம் ஆண்டு லாகூரில் நடைபெற்ற இந்திய தேசியக் காங்கிரஸ் மாநாட்டு பூரண சுயராஜ்யம் தீர்மானத்தின்படி 1930–ஆம் ஆண்டு. ஜனவரி 26–ஆம் நாள் முதல் இந்திய சுதந்திர தினம் கொண்டாடப்பட்டது. அதனை நினைவு கூறும் வகையில் 1950 ஜனவரி 26ஆம் நாள் இந்திய அரசியலமைப்புச் சட்டம் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

- அரசியலமைப்பு நிர்ணய சபை 1950 ஜனவரி 24–ஆம் நாள் கடைசியாக கூடியது.
- இந்திய அரசியலமைப்பு ஏற்றுக் கொண்ட போது. **22 பாகங்களையும் ,8 அட்டவணைகளையும் 395 சரத்துக்களையும்** கொண்டிருந்தது
- தற்போது இந்திய அரசியலமைப்பு **25 பாகங்களையும், 12 அட்டவணைகளையும்** கொண்டுள்ளது.

அரசியல் வரைவுக்குழு

- டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் (குழுத் தலைவர்)
- என். கோபால்சுவாமி அய்யங்கார்
- அல்லாடி கிருஷ்ணசாமி ஐயர்
- டாக்டர் கே.எம். முன்சி.
- சையத் முகமது சாதுல்லா
- பி.எல். மித்ரா(என். மாதவராவ்)
- டி.டி. கிருஷ்ணமாச்சாரி(டி.பி. கைத்தான்)

குழுக்கள்

குழுக்கள்	**குழுத் தலைவர்**
அடிப்படை உரிமைகள் மற்றும் சிறுபான்மையினர் குழு	வல்லபாய் பட்டேல்
மாகாண அரசியலமைப்பு குழு	வல்லவாய் பட்டேல்
மத்திய அதிகார குழு	ஜவஹர்லால் நேரு
மத்திய அரசியலமைப்பு குழு	ஜவஹர்லால் நேரு
கொடிக் குழு	ஜெ.பி. கிருபளானி
நெறிமுறைக் குழு	கே. எம். முன்சி
நடைமுறை விதிக் குழு	இராஜேந்திர பிரசாத்

இந்திய அரசியலமைப்பின் தன்மைகள்

1. **கூட்டாட்சி (கூட்டாட்சி போல்வு) :** கூட்டாட்சி என்பது மத்திய அரசும் மாநில அரசுகளும் ஒருங்கிணைந்து செயல்படுவது(அதாவது ஒரு நிலப்பரப்பை இரு அரசாங்கங்கள் ஆட்சி செய்வது)
2. **அதிகாரப்பகிர்வு:** அதிகாரப் பகிர்வு என்பது மத்திய அரசுக்கும் மாநில அரசுகளுக்கும் அதிகாரங்கள் பகிர்ந்து அளிக்கப்பட்டுள்ளன.
3. **அரசியலமைப்பின் மேலாண்மை:** இந்தியாவில் மிக உயர்ந்தது இந்த சட்டம் இது சட்டத்தின் ஆட்சி நடைபெறுகிறது என்பதை குறிக்கிறது.
4. **எழுதப்பட்ட அரசியலமைப்பு:** அரசியலமைப்புச் சட்டம் இயற்ற ஒரு குழுஅமைத்து தனியாக ஒரு ஆவணமாக உள்ளது. நாட்டில் உள்ள அனைத்துச் சட்டங்களும் இதற்கு உட்பட்டு இருக்க வேண்டும்.
5. **நீதிமன்றங்களின் அதிகாரம்:** இந்தியாவின் மூன்று அதிகார அமைப்புகளான சட்டமியற்றும் துறை, செயல்படுத்தும் துறை (நிர்வாகத் துறை) நீதித்துறை ஆகியவற்றில், நீதித்துறையானது மற்ற இரு துறைகளின் செயல்பாடுகளை, அதாவது இந்திய அரசியலமைப்பு சட்டத்திற்கு உட்பட்டு செயல்படுகிறதா என்று கவனிக்கிறது.

இந்திய அரசியலமைப்பு சட்டத்தை மீறி சட்டம் இயற்றப்பட்டாலோ அல்லது செயல்பட்டாலோ அதை செல்லாது என்று அறிவிக்க உச்சநீதிமன்றத்திற்கு அதிகாரம் உள்ளது.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

6. **ஒன்றையாட்சி அரசியலமைப்பு:** வேற்றுமையில் ஒற்றுமை என்பது போல இந்தியா பல மாநிலங்களாக பிரிக்கப்பட்டிருந்தாலும் , அனைத்து மாநிலங்களுக்கும் பொதுவான ஒரே ஒரு அரசியலமைப்புச் சட்டம் உள்ளது.

கூட்டாட்சி அரசியலமைப்பில் ஒற்றையாட்சி கூறுகள்

1. பட்டியல்களில் இயற்றப்படும் சட்டங்களில் மத்திய அரசு சட்டமே செல்லும்.
2. மாநிலங்களவை.
3. தேசிய நலன் கருதி நாடாளுமன்றம் சட்டமியற்ற அதிகாரம் பெற்றுள்ளது.
4. மாநில ஆளுநர் நியமனம்
5. மத்திய அரசின் உத்திரவுகளுக்கு மாநிலங்கள் கீழ்ப்படுதல்
6. மத்திய நிதிக் கட்டுப்பாடு
7. மாநில உருவாக்கம், எல்லை மாற்றம், பெயர் மாற்றம் ஆகியவைகள் நாடாளுமன்றத்தில் மட்டும் செய்ய முடியும்
8. ஒருங்கிணைக்கப்பட்ட நீதிமன்றங்கள்
9. அரசியலமைப்பு சட்டத் திருத்தம்
10. நெருக்கடி நிலைகள்

இந்திய அரசியலமைப்பின் சிறப்புகள்

1. உலகின் மிக நீளமான அரசியலமைப்பு
2. நாடாளுமன்ற முறை அரசாங்கம்
3. இறையாண்மை/ இறைமை வாய்ந்த அரசு
4. மக்களாட்சி நாடு
5. நெகிழ்வற்ற மற்றும் நெகிழ்வுடைய தன்மையின் கலப்பு
6. கூட்டாட்சி போல்வு
7. அடிப்படை உரிமைகள்
8. அடிப்படைக் கடமைகள்
9. அரசு நெறிமுறைக் கோட்பாடு
10. சுதந்திரமான நீதித்துறை
11. சமயச் சார்பற்ற அரசு/ மதச்சார்பின்மை
12. வயது வந்தோர் வாக்குரிமை
13. ஒற்றைக் குடியுரிமை.

பிற நாடுகளிலிருந்து பெறப்பட்டவைகள்

இங்கிலாந்து

- சட்டம் இயற்றும் முறை
- நாடாளுமன்ற முறை அரசாங்கம்
- கூட்டுப் பொறுப்பு
- ஒற்றைக் குடியுரிமை
- சட்டத்தின் ஆட்சி
- குடியரசுத் தலைவர் பெயரளவு தலைவர்
- அதிக அதிகாரம் வாய்ந்த கீழ் அவை(மக்களவை)
- அமைச்சரவை மற்றும் அதன் தலைவராக பிரதமர் செயல்டுவது

அமெரிக்கா

- குடியரசுத் தலைவர் பதவி
- குடியரசுத் தலைவர் நிர்வாகத் துறை தலைவராக செயல்படுதல்
- குடியரசுத் தலைவர் முப்படை தலைவராக செயல்படுதல்
- எழுதப்பட்ட அரசியலமைப்புச் சட்டம்

- சுதந்திரமான நீதித்துறை
- நீதி மறு ஆய்வு, நீதிப்புனராய்வு
- அடிப்படை உரிமைகள்
- முகவுரை
- குடியரசு துணைத் தலைவர் மாநிலங்களவையின் பதவி வழித் தலைவராக செயல்படுதல்.
- உச்சநீதிமன்ற மற்றும் உயர்நீதிமன்ற நீதிபதிகளின் நியமனம் மற்றும் பதவி நீக்கம்.

கனடா

- கூட்டாட்சித் தத்துவம்
- வலிமையான மத்திய அரசு
- மத்திய மாநில அரசுகளுக்கிடையான அதிகார பகிர்வு எஞ்சிய அதிகாரம் மத்திய அரசிடம் உள்ளது.

அயர்லாந்து

- அரசு நெறிமுறையுறுத்தும் கோட்பாடுகள்
- குடியரசுத் தலைவர் தேர்தல் முறை
- மாநிலங்களவைக்கு குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படும் உறுப்பினர்கள்.

ஜெர்மனி

- நெருக்கடி காலநிலை மற்றும் இதனால் அடிப்படை உரிமைகள் மீது ஏற்படும் தாக்கம்

ஆஸ்திரேலியா

- பொதுப் பட்டியல் (மத்திய பட்டியல் மற்றும் மாநில பட்டியல், இந்திய அரசுச் சட்டம் 1935– லிருந்து எடுக்கப்பட்டது)

இரஷ்யா

- அடிப்படைக் கடமைகள்

தென் ஆப்பிரிக்கா

- அரசியலமைப்புச் சட்டத்திருத்த முறை

பிரான்ஸ்

- குடியரசு அரசாங்கம்

அலகு –4– முகப்புரை

இந்திய மக்களாகிய நாம்,

இந்தியாவை ஒரு இறைமை வாய்ந்த சமநிலமை நெறி சார்ந்த சமயச் சார்பற்ற, மக்களாட்சி குடியரசாக அமைக்கவும், அதன் குடிமக்கள்அனைவருக்கும்.

சமுதாய, பொருளாதார மற்றும் அரசியல் நிதியும்

சிந்தனையில், சிந்தனை வெளிப்பாட்டில், நம்பிக்கையில், பற்றார்வத்தில் மற்றும் வழிபாட்டில் சுதந்திரமும்

தகுநிலையில் மற்றும் வாய்ப்பில் சமத்துவமும், உறுதியாகக் கிடைக்கச் செய்யவும்.

தனி ஒருவரின் மாண்புக்கும் நாட்டின் ஒற்றுமைக்கும், ஒருமைப்பாட்டுக்கும் உறுதியளிக்கும் உடன்பிறப்புணர்வை அவர்கள் அனைவரிடையே வளர்க்கவும்.

விழுமிய முறைமையுடன் உறுதி பூண்டு.

1949, நவம்பர் இருபத்து ஆறாம் நாளாகிய இன்று நம்முடைய அரசியலமைப்பு பேரவையில், ஈங்கிதனால், இந்த அரசியலமைப்பை ஏற்று சட்டமாக இயற்றி, நமக்கு நாமே வழங்கிக் கொள்கிறோம்.

முகப்புரை– விளக்கம்

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

- சட்ட அறிமுகமே அரசியலமைப்புச் சட்டத்தின் முன்னுரை ஆகும்
- மக்களே அதிகாரத்தின் தோற்றுவாய் என்றும், இந்தியா ஓர் இறையாண்மையுடைய சமதர்ம சமய/ மதச்சார்பற்ற, மக்களாட்சி நாடாக உள்ளது என முகப்புரைத் தெளிவுபடுத்துகிறது
- நீதி, சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவை நமது நோக்கங்கள் எனவும் அரசியலமைப்புச் சட்டத்தின் முகப்புரை கூறுகிறது.
- **ரீ பெருபாரி(Re Berubari) (1960)** வழக்கில் முகப்புரை என்பது **இந்திய அரசியலமைப்பின் ஒரு பகுதி அல்ல** என்று கூறப்பட்டது.
- **கேசவானந்த பாரதி (1973)** வழக்கில் முகப்புரையானது **இந்திய அரசியலமைப்பின் ஒரு பகுதி** எனப்பட்டது
- **S.R.பொம்மை (1994)** என்ற வழக்கில் முகப்புரை **இந்திய அரசியலமைப்பின் ஒரு பகுதி** எனப்பட்டது.
- கேசவானந்த பாரதி (1973) வழக்கில் முகப்புரையை திருத்தலாம் ஆனால் அரசியலமைப்பின் அடிப்படை அம்சங்களை(கட்டமைப்புகளை) திருத்த முடியாது எனப்பட்டது
- சமத்துவமும் (Socialist), சமயச் சார்பின்மை (Secular) மற்றும் ஒருமைப்பாடு (Integrity) ஆகிய சொற்கள் 1976–ஆம் ஆண்டின் 42–வது சட்டத் திருத்தத்தின் மூலம் புகுத்தப்பட்டது.

இறையாண்மை

- இது அரசியலமைப்புச் சட்டத்தின் பல பகுதிகளில், குறிப்பாக தேர்தல் என்னும் அதிகாரத்தில் இந்திய மக்களுக்கு முழு உரிமைகளும் உறுதி செய்யப்பட்டுள்ளது.
- மத்திய, மாநில அரசுகள் மக்களிடமிருந்துதான் அதிகாரங்களைப் பெற்றுக் கொள்கின்றன. குறிப்பிட்ட கால இடைவெளியில் மத்திய, மாநில அரசுகளுக்கு பிரதிநிதிகளை மக்கள் தேர்ந்தெடுக்கின்றனர். இப்பிரதிநிதிகள் அரசின் நிர்வாக அதிகாரங்களை பெற்றுள்ளார்கள்
- இவர்கள் சட்டமன்றங்களுக்கு பொறுப்பாளர்களாகவும், மக்களுக்கு சட்டமன்றங்களின் வழியாக பணியாற்ற கடமைப்பட்டவர்களும் ஆவர். ஆகவே இவர்களை தேர்ந்தெடுக்கின்றனர். இப்பிரதிநிதிகள் அரசியல் நிர்வாக அதிகாரங்களை பெற்றுள்ளார்கள்
- இவர்கள் சட்டமன்றங்களுக்கு பொறுப்பாளர்களாகவும், மக்களுக்கு சட்டமன்றங்களின் வழியாக பணியாற்ற கடமைப்பட்டவர்களும் ஆவர். ஆகவே இவர்களை தேர்ந்தெடுக்கும் மக்களே உயர் அதிகாரம் மிக்கவர்கள், இதுவே இறையாண்மை கோட்பாட்டின் அடிப்படை ஆகும்.

மதச்சார்பின்மை/ சமய சார்பின்மை

- இந்தியா மதச் சார்பற்ற கொள்கையை கடைபிடித்து வருகிறது
- **செக்யூலரிசம்(Secularism)** என்ற ஆங்கிலச் சொல் **செக்யூலம்** என்ற லத்தீன் மொழிச் சொல்லில் இருந்து வந்தது
- 1789–ம் ஆண்டு பிரஞ்சுப் புரட்சி மதச் சார்பின்மையை வலியுறுத்தியது
- 1791–ம் ஆண்டு பிரெஞ்சு அரசியலமைப்புச் சட்டம் பிரான்சு அரசை மதச்சார்பற்ற அரசாக மாற்றியது
- **மகாராஜா ரஞ்சித் சிங்** முதன் முதலில் அரசாங்கத்தின் மூலம் **மதச்சார்பின்மை கொள்கையை** நடைமுறைப்படுத்தினார்
- **1888–ல் இந்திய தேசிய காங்கிரஸ் மதச்சார்பின்மையை** அறிமுகப்படுத்தியது.
- மகாத்மா காந்தி துருக்கி சுல்தானுக்கு ஆதரவாக கிலாபத் இயக்கம் ஆரம்பித்த போது மதச் சார்பின்மை கருத்து பிரபலமடைந்தது
- வேற்றுமையில் ஒற்றுமை என்ற கொள்கைக்கு ஆதாரம் மதச் சார்பின்மை ஆகும்.
- இந்திய அரசாங்கம் எந்த மதத்தையும் அரசாங்க மதமாக அறிவிக்கவில்லை
- அனைத்துக் குடிமக்களும் தமது சமயத்தின்படி சுதந்திரமாக வழிபடவும் சமூக மற்றும் அரசியலில் சமமான உரிமைகளை அனுபவிக்கவும் முடியும்.

நாடாளுமன்ற அரசு முறை

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

- இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படி நாடாளுமன்ற முறை அரசு நடைமுறையில் உள்ளது
- அரசியல் நிர்வாகக்குழு, சட்டமன்ற நடவடிக்கைகள் இவைகளுக்கு இந்நாடாளுமன்றமே பொறுப்பாகும்
- நாடாளுமன்ற அரசு முறையை **பொறுப்பு அரசு அல்லது காபினேட்** அரசு என்றும் அழைப்பர்.

மக்களாட்சி

- மக்களாட்சி முறையில் அரசின் அதிகாரங்கள் மக்களின் கையில் கொடுக்கப்பட்டன.
- மக்களாட்சியில் மக்கள் குடிமக்கள் என அழைக்கப்படுகிறார்கள்
- மக்களாட்சியின் தூண் என்பது **தேர்தல்** ஆகும்.
- சமத்துவம், உரிமை, சுதந்திரம் ஆகியவை மக்களாட்சியின் அடிப்படை ஆகும்.
- மக்களாட்சியில் நேரடி மக்களாட்சி, மறைமுக மக்களாட்சி என இருவகை உண்டு.
- சுவிட்சர்லாந்து போன்ற மக்கள்தொகை குறைவாக உள்ள நாடுகளில் நேரடி மக்களாட்சி முறை நடைமுறையில் உள்ளது
- மக்கள் பிரதிநிதிகளை தேர்ந்தெடுத்து அவர்கள் ஆட்சி அமைத்து அரசாங்கத்தை நடத்துகிறார்கள்.
- இந்தியா, இங்கிலாந்து, பிரான்சு, அமெரிக்கா போன்ற நாடுகள் மறைமுக மக்களாட்சி முறையைப் பின்பற்றுகின்றன.
- இந்தியா நாடாளுமன்ற மக்களாட்சி முறையை பின்பற்றுகிறது
- இந்தியா பல மாநிலங்களைக் கொண்ட கூட்டாட்சி முறையை பின்பற்றுகிறது
- மத்திய அரசில் மக்கள் பிரதிநிதிகளின் அமைப்பு நாடாளுமன்றம் எனவும். மாநிலங்களில் சட்டமன்றம் எனவும் அழைக்கப்படுகிறது.
- மறைமுக அல்லது மக்களின் பிரதிநிதித்துவ மக்களாட்சி முறையில் பிரதிநிதிகள் பொதுத் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

அலகு–4–ஒன்றியமும் அதன் ஆட்சி எல்லையும் (சரத்து 1–4) (பகுதி–I)

- இந்தியா அதாவது பாரதம் மாநிலங்களின் ஓர் ஒன்றியமாக இருத்தல் வேண்டும். (சரத்து–1)
- மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் முதலாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளன.
- இந்திய ஒன்றியத்திற்குள் புதிய மாநிலங்களை சேர்த்துக் கொள்ளும் அதிகாரம் நாடாளுமன்றத்திற்கு உள்ளது (சரத்து2)
- புதிய மாநிலத்தை உருவாக்கவும், மாநில பரப்புகளை, எல்லைகளை, பெயர்களை மாற்றவும் அதிகாரம் படைத்தது நாடாளுமன்றம் ஆகும். (சரத்து 3)
- இந்திய குடியரசு 29 மாநிலங்களையும் (02.06.2014 முதல் 29 மாநிலங்கள்) 7 யூனியன் பிரதேசங்களையும் உடையது.
- புதிய மாநிலத்தை உருவாக்கும் மசோதா, குடியரசுத் தலைவரின் பரிந்துரைக்குப் பிறகு நாடாளுமன்ற இரு அவைகளில் ஏதேனும் ஒரு அவையில் கொண்டுவரப்படலாம்.
- புதிய மாநிலத்தை உருவாக்கும், மாநில பரப்புகளை, எல்லைகளை, பெயர்களை மாற்றவுள்ள மசோதா, அந்த மாநிலத்திற்கு குடியரசுத் தலைவரால் அனுப்ப வேண்டும்.
- அந்த மாநிலம் தங்கள் கருத்துக்களை குடியரசுத் தலைவரால் குறிப்பிடப்பட்ட காலத்திற்குள் தெரிவிக்கலாம். ஆனால் அந்த கருத்துக்கள் குடியரசுத் தலைவரை கட்டுப்படுத்தாது.

சரத்து–4

- சரத்து 2 அல்லது 3–ன் படி சட்டம் இயற்றப்பட்டால் (புதிய மாநிலங்களை உருவாக்கினால்) அட்டவணை I மற்றும் IV தானாக திருத்தம் பெறும்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

- இவ்வாறு இயற்றப்பட்ட சட்டம் அரசியலமைப்புச் சட்டத்திருத்தமாக கருதப்பட மாட்டாது.

அலகு –5–குடியுரிமை (சரத்துக்கள் 5–10) (பகுதி –2)

- இந்தியாவில் ஒற்றை குடியுரிமை பின்பற்றப்படுகிறது.
- குடியுரிமை பற்றி சட்டம் இயற்றும் அதிகாரம் கொண்டது நாடாளுமன்றம் ஆகும்.
- 1955–ல் இந்திய குடியுரிமை சட்டம் இயற்றப்பட்டது.

குடியுரிமை பெறும் முறைகள்

இந்திய அரசியலமைப்புச் சட்டம் தொடங்கிய பொழுது

- இந்தியாவை உறைவிடமாக கொண்டு, இந்தியாவில் பிறந்தவராக இருந்தாலோ அல்லது அவரது பெற்றோரில் எவரேனும் ஒருவர் இந்தியாவில் பிறந்தவராகவோ அல்லது இந்திய அரசியலமைப்புச் சட்டம் தொடக்கத்திற்கு உடன் முந்திய 5 ஆண்டுகளுக்கு குறையாமல் குடியிருந்து வந்தவராக இருக்க வேண்டும்.

குடிபெயர்தல் மூலம் குடியுரிமை பெறுதல் (சரத்து 6–7)

- இந்திய அரசியலமைப்புச் சட்டம் தொடங்கும் பொழுது பாகிஸ்தானிலிருந்து இந்தியாவிற்கு குடிபெயர்ந்து வந்தவர்களும் இந்தியக் குடிமக்களாவர்.
- ஆனால் அவர்களோ அல்லது அவர்களது பெற்றோரோ அல்லது பெற்றோரின் பெற்றோரில் ஒருவரோ 1935–ம் ஆண்டு இந்திய அரசாங்கச் சட்டத்தில் வரையறுக்கப்பட்டபடி இந்தியாவில் பிறந்தவராக இருக்க வேண்டும் மற்றும் அவர்கள் 19.07.1948–ம் தேதிக்கு முன்னர் அவ்வாறு குடிபெயர்ந்து வந்தவர்களாக இருப்பின். குடிபெயர்ந்த நாள் முதல் இந்தியாவில் வழக்கமாக குடியிருந்து வந்தவராக இருக்க வேண்டும். அல்லது 19.07.1948–ம் தேதிக்கு பின் குடிபெயர்ந்தவராக இருப்பின் ஆறுமாத காலமாவது இந்தியாவில் குடியிருந்து குடிமக்களாக ஆவதற்கு பதிவு செய்திருக்க வேண்டும்

பதிவு செய்து கொள்ளல் மூலம் குடியுரிமை பெறல் (சரத்து 8)

- ஒருவர் தாமோ அல்லது தம் பெற்றோரில் ஒருவரோ அல்லது தம் பெற்றோரின் பெற்றோரில் ஒருவரோ 1935–ம் ஆண்டின் இந்திய அரசாங்க சட்டத்தில் வரையறுக்கப்பட்டபடி இந்தியாவில் பிறந்து, இந்திய எல்லைக்கு அப்பால் உள்ள வெளிநாட்டில் வழக்கமாக குடியிருந்து வருபவராக இருந்தால் இந்தியக் குடிமகனாக கருதப்படுவார். ஆனால் அவர் தற்போது குடியிருந்து வரும் நாட்டில் உள்ள இந்திய தூதுவரிடம் விண்ணப்பம் செய்து. துய்மை ஒரு இந்தியக் குடிமகனாக பதிவு செய்து கொள்ள வேண்டும்.

இந்தியக் குடியுரிமையை இழத்தல் (சரத்து9)

- இந்திய அரசியலமைப்புச் சட்டம் தொடங்குவதற்கு முன்பு ஒரு இந்தியக் குடிமகன் தன்னிச்சையாக ஒரு வெளிநாட்டு குடியுரிமையைப் பெற்றால் அவர் இந்தியக் குடியுரிமையை இழந்தவராகிறார்.

சரத்து11

- குடியுரிமையை ஒழுங்குபடுத்த சட்டமியற்றும் அதிகாரம் பெற்றது நாடாளுமன்றம் ஆகும், இதன்படி இந்தியக் குடியுரிமைச் சட்டம் –1955 இயற்றப்பட்டது.

இந்தியக் குடியுரிமைச் சட்டம் 1955

இச்சட்டம் இந்திய அரசியலமைப்புச் சட்டம் தொடங்கிய பின்னர் குடியுரிமை பற்றி வகைமுறைப்படுத்துகிறது.

1. பிறப்பால் குடியுரிமைப் பெறல்

- ஒரு நபர் 26.01.1950 – ஆம் தேதிலோ அல்லது அதற்கு பின்போ ஆனால் 1986–ஆம் ஆண்டு திருத்தச்சட்டம் தொடங்குவதற்கு முன்போ பிறந்திருந்தால் அல்லது 1986–ஆம் ஆண்டு திருத்தச் சட்டம் தொடங்குவதற்கு பின்பு பிறந்திருந்தால் அவரது பெற்றோரில் எவரேனும் ஒருவர் அவரது பிறப்பின் பொழுது இந்தியக் குடிமகனாக இருப்பின், அவர் பிறப்பால் குடிமகனாவார்.

- வண்டி ஓட்டும் போது கைப்பேசியைப் பயன்படுத்துதல் கூடாது.
- நான்கு சக்கர வாகனத்தை ஓட்டும்பொழுது வார்ப்பட்டை (Belt)அணிய வேண்டும்.
- மது (போதையில்) அருந்திவிட்டு வாகனத்தை இயக்கக் கூடாது.
- வேகக்கட்டுப்பாட்டை பின்பற்ற வேண்டும்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

- பாதசாரிகள் கவனமுடன் நடைபாதையில் செல்ல வேண்டும்.
- இரு சக்கர வாகன ஓட்டிகள் தலைக்கவசம் அவசியம் அணிய வேண்டும்.
- பாதசாரிகள் மஞ்சள் கோடுகள் போடப்பட்டுள்ள இடத்தில் மட்டுமே சாலையைக் கடக்க வேண்டும்.
- வாகன ஓட்டுநர்கள் போக்குவரத்து சைகைகளை கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டும்.
- அவசர ஊர்திகளுக்கு வாகன ஓட்டுநர்கள், அவ்வாகனங்களை முந்திச் செல்ல வழிவிடல் வேண்டும்.
- வாகனங்களை அதற்கென்று ஒதுக்கப்பட்டுள்ள இடங்களில் மட்டுமே நிறுத்த வேண்டும். நடைபாதையில் கடைகள் நடத்தப்படுவதை தவிர்க்க வேண்டும்.
- 18 வயதிற்கு உட்பட்டவர்கள் இரண்டு சக்கர வாகனத்தையோ அல்லது நான்கு சக்கர வாகனத்தையோ ஓட்டுதல் கூடாது என்ற விதிமுறைகள் பின்பற்ற வேண்டும்.

சாலை பாதுகாப்பு வாரம்

- ஆண்டு தோறும் ஜனவரி முதல் வாரம் சாலை பாதுகாப்பு வாரமாக கடைபிடிக்கப்பட்டு வருகிறது. இது பள்ளி, கல்லூரி மாணவர்கள், வாகன ஓட்டுநர்கள், பாதசாரிகள் ஆகியவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளது.
- "எச்சரிக்கையாக வாகனம் ஓட்டுங்கள்
- இலக்கை உயிருடன் அடையுங்கள்"
- என்ற பொன்மொழி அரசால் வலியுறுத்தப்படுகிறது.
-

10. இந்தியாவும் உலக அமைதியும்

- இந்தியா ஆகஸ்ட் 15, 1947 – ஆம் ஆண்டு விடுதலை பெறும் வரை ஒரு சார்பு நாடாக விளங்கியது.
- விடுதலைக்குப் பிறகு, உலக விவகாரங்களில் தீவிரமாகவும், தன்னிச்சையாகவும் ஈடுபட்டு வருகிறது.
- இந்தியா அமைதியை அடிப்படையாகக் கொண்ட நாடு. ஏனவே உலகில் அமைதியை நிலைநாட்ட தொடர்ந்து பாடுபட்டு வருகிறது. சர்வதேச அரங்கில் அமைதி, பாதுகாப்பு மற்றும் ஒத்துழைப்பை மேம்படுத்த பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

உலக அமைதியை மேம்படுத்துபவர்

- இந்தியா பல்வேறு உலகப் பிரச்சனைகளை தீர்த்து வைப்பதில முக்கியப் பங்காற்றி வருகிறது.
- இந்தியாவின் பெரும் முயற்சியினால் கொரியா மற்றும் இந்தோ – சீனாவில் அமைதி நிலைநாட்டப்பட்டது. இதுபோன்று இஸ்ரேல், இங்கிலாந்து மற்றும் பிரான்ஸ் போன்ற நாடுகள் எகிப்தை தாக்கியபோது உலகப்போர் ஏற்படும் ஆபத்து தோன்றியது. ஆனால் தகுந்த நேரத்தில் இந்தியா தலையிட்டு போரைத் தவிர்த்தது.

பஞ்சசீலம்

- இந்தியா 'ஒரு மாபெரும் அமைதியை உருவாக்கும் நாடு' என்றழைக்கப்படுகிறது.
- இந்தியாவின் பிரதமராக இருந்த ஜவஹர்லால்நேரு 1955 இல் பாண்டுங் மாநாட்டில், அமைதிக்காக 5 அம்ச கொள்கையினை வெளியிட்டார். அவை 'பஞ்சசீலம்' என அழைக்கப்படுகிறது. அவை

1. ஒவ்வொரு நாடும் பிற நாடுகளின் ஒற்றுமை மற்றும் இறையாண்மையை மதிக்க வேண்டும்
2. எந்த ஒரு நாடும் பிற நாட்டை தாக்கக்கூடாது.
3. ஒரு நாட்டின் உள்நாட்டு விவகாரங்களில், பிற நாடுகள் தலையிடக்கூடாது.
4. அனைத்து நாடுகளும் சமத்துவம் மற்றும் பரஸ்பர நல்லுறவு கொண்டிருக்க வேண்டும்.
5. ஒவ்வொரு நாடும் பிற நாடுகளுடன் அமைதியான முறையில் இணங்கியிருத்தல் வேண்டும்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

- இப்பஞ்சசீலக் கொள்கை உலக அரங்கில் இந்தியாவின் பெருமையை மேலும் உயர்த்துகிறது.

ஆயுதக்குறைப்பு மற்றும் அணு ஆயுதங்கள்

- உலக நாடுகளின் பொருளாதார வளர்ச்சி உலக அமைதி மூலம் மட்டுமே அடைய முடியும். உலக அமைதி இந்திய பொருளாதார வளர்ச்சிக்கு மட்டுமன்றி, வளரும் நாடுகளின் வளர்ச்சிக்கும் அவசியமானதாகும்.
- உலக நாடுகளில் சில பெரும் ஆபத்தை விளைவிக்கும் அணுகுண்டு மற்றும் ஹைட்ரஜன் குண்டுகள் போன்றவற்றை உருவாக்கி வருகின்றன. இதனைத் தடுக்கவில்லையென்றால், உலகம் அழிக்கப்பட்டுவிடும். எனவே இந்தியா அணுஆயுத உற்பத்தியை கடுமையாக எதிர்த்ததோடு மட்டுமன்றி, அணுஆயுத உற்பத்திக்கு எதிராகவும் குரலெழுப்பி வருகிறது.
- ஐ. நா. பொதுச் சபையில் 1956 – ஆம் ஆண்டு ஆயுதக் குறைப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்த முதல் நாடு இந்தியா ஆகும்.
- 1963 – ஆம் ஆண்டு ஆயுதத் தடை ஒப்பந்தம் உருவாவதற்கும் இந்தியா முக்கியப் பங்காற்றியது.

அணிசேராக் கொள்கை

- இரண்டாம் உலகப்போருக்கு பிறகு, அமெரிக்காவின் தலைமையில் ஒரு அணியும், ரஷ்யாவின் தலைமையில் மற்றொரு அணியும் உருவாகின. இந்த இரண்டு அணிகளும் தங்களது செல்வாக்கை நிலைநாட்ட பல முயற்சிகளில் இறங்கின. இதனால் உலகில் பதற்ற நிலை மற்றும் அமைதியின்மை ஏற்பட்டன.
- இந்த இரண்டு அணிகளிலும் சேராமல் இந்தியா நடுநிலை நாடாக (அணிசேரா நாடாக) விளங்கி வருகிறது. இந்த இரண்டு அணிகளுக்கிடையில் கருத்து வேறுபாடுகள் தோன்றிய சமயத்தில் இந்தியா அவற்றை தீர்க்கும் முயற்சியில் ஈடுபட்டு தொடர்ந்து உலகில் அமைதியை நிலைநாட்டி வருகிறது.

மாபெரும் உதவியாளர்

- அடிப்படையில் இந்தியா குடியேற்றக் கொள்கைக்கு எதிரானது. உலகநாடுகள் பிறநாடுகளின் பிடியிலிருந்து தங்களை விடுவித்துக் கொள்வதற்கு இந்தியா ஆதரவு நல்கி வருகிறது.
- ஹாலந்து நாட்டின் பிடியிலிருந்து இந்தோனேசியா விடுதலை பெறுவதற்கு பெரிதும் உதவிபுரிந்தது. இதேபோன்று எகிப்து சூடான், இந்தோ – சீனா, கானா, மொரர்க்கோ மற்றும் வங்காளதேசம் போன்ற நாடுகளில் நடைபெற்ற தேசிய இயக்கத்திற்கு இந்தியா முழு அதரவைக் கொடுத்தது.

இராணுவ ஒப்பந்தங்களுக்கு எதிரானது

- தற்கால உலகில், உலக நாடுகள் ராணுவ ஒப்பந்தங்கள் மற்றும் எதிர் ஒப்பந்தங்களை செய்து கொள்வதில் அதிக கவனம் செலுத்தி வருகின்றன. இதன் விளைவாக தற்பொழுது நேட்டோ, சீட்டோ, சென்ட்டோ, பாக்தாத் மற்றும் வார்சா போன்ற ஒப்பந்தங்கள் ஏற்பட்டுள்ளன. ஆனால் இந்த ஒப்பந்தங்களில் எதிலும் இந்தியா சேரவில்லை. மேலும், இந்த ஒப்பந்தங்களுக்கு கடும் எதிர்ப்பும் தெரிவித்து வருகிறது.

அடக்கு முறை மற்றும் அநீதிக்கு எதிரானது

- உலகில் எந்தப்பகுதியிலும் அடக்கு முறை மற்றும் அநீதி இழைக்கப்படுமேயானால், இந்தியா அதற்கு உடனடியாக தனது எதிர்ப்பைத் தெரிவிக்கிறது. பிரான்சு அல்ஜீரியாவிற்கு எதிராக ஆக்கிரமிப்பை மேற்கொண்டபோதும், இங்கிலாந்து சைப்ரஸ்–க்கு எதிராகவும், ரஷ்யா ஹங்கேரிக்கு எதிராகவும் ஆக்கிரமிப்பை மேற்கொண்ட போதும் இந்தியா அந்நாடுகளை வன்மையாக் கண்டித்தது, இதுபோன்று சீனா ஐ.நா. சபையில் உறுப்பினராவதற்கு இந்தியா தனது ஆதரவை தெரிவித்தது. இதன்மூலம் அநீதிக்கு எதிராக இந்தியா தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

ஐ.நாவின் தீவிர ஆதரவாளர்

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

- இந்தியா ஐ.நா.வின் தீவிர ஆதரவாளராக தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. ஐ. நா.வின் கொள்கைகளுக்கு முழு ஆதரவு கொடுப்பதோடு, அக்கொள்கை வெற்றிபெறவும் அதன்மூலம் உலக அமைதியை நிலைநாட்டவும் தொடர்ந்து பாடுபட்டு வருகிறது.

இன ஒதுக்கல் கொள்கைக்கு எதிரானது

- இன ஒதுக்கல் கொள்கை என்பது ஆப்பிரிக்காவில் பின்பற்றப்பட்ட இன வேறுபாட்டுக் கொள்கையாகும்.
- உலகில் அனைத்துப் பகுதியில் வாழும் மக்ககளும் சமமானவர்கள் என்ற கொள்கை இந்தியாவின் அயல்நாட்டு கொள்கைக்கு அடிப்படையாகத் திகழ்கிறது. தென் ஆப்பிரிக்காவில் வெள்ளையர்கள், ஆப்பிரிக்க குடிமக்களுக்கு சம உரிமை வழங்க மறுத்தனர். இப்பிரச்சனையை

1946 – ஆம் ஆண்டு ஐ. நா. பொதுச் சபையில் இந்தியா முதன் முதலில் எழுப்பியது. இந்தியா வழங்கிய தொடர் ஆதரவு மற்றும் நெல்சன் மண்டேலாவின் தொடர் போராட்டம் காரணமாக 1990 – ஆம் ஆண்டு இன ஒதுக்கல் கொள்கை முடிவுக்கு வந்தது.

- நெல்சன் மண்டேலா ஆப்பிரிக்க தேசிய காங்கிரசின் தலைவரானார். தென் ஆப்பிரிக்காவில் காணப்பட்ட இனப் பிரச்சனைக்கு எதிராகப் பாடுபட்டார். 27 ஆண்டுகள் சிறையில் அடைக்கப்பட்டார். பின்னர் 1994 – ஆம் ஆண்டு தென்னாப்பிரிக்க குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

வட்டாரக் கூட்டமைப்பு

- அமைதியை நிலைநாட்ட, வட்டாரக் கூட்டமைப்பை ஏற்படுத்தும் முயற்சியில் இந்தியா ஈடுபட்டது. இதன் விளைவாக சார்க் அமைப்பு தோன்றியது. தெற்கு ஆசிய நாடுகளில் பிராந்தியக் கூட்டமைப்பு முதல் கூட்டம் டிசம்பர் 7, 1985 – ஆம் ஆண்டு வங்காளத்தில் டாக்கா நகரில் நடைபெற்றது. வங்காளத்தில் டாக்கா நகரில் நடைபெற்றது. வங்காளதேசத்தைச் சேர்ந்த ஆஷான், சார்க் அமைப்பின் முதல் பொதுச் செயலாளராகப் பொறுப்பேற்றார். வங்காளதேசம், பூடான், இந்தியா, மாலத்தீவு, நேபாளம், பாகிஸ்தான், இலங்கை ஆகிய ஏழு நாடுகள் உறுப்பு நாடுகளாக இடம் பெற்றன. 2007 ஏப்ரல் 3 இல், டெல்லியில் நடைபெற்ற சார்க் வருடாந்திர மாநாட்டில் ஆப்கானிய அதிபர் ஹமீது கர்சாய் கலந்து கொண்டார். தற்போது ஆப்கானிஸ்தான் இதில் 8 வது உறுப்பு நாடாக சேர்ந்துள்ளது.
- பூடான் தலைநகர் திம்புவில் 2010 ஏப்ரல் 28 மற்றும் 29 – இல் சார்க் அமைப்பின் 16 – வது மாநாடு நடைபெற்றது.
- சார்க்கின் உறுப்பு நாடுகள் தங்களுக்குள் பரஸ்பர நல்லுறவின் அடிப்படையில் போக்குவரத்து, கடித சேவை, சுற்றுலா, வானியல், சுகாதாரம், வேளாண்மை மற்றும் கிராமப் புனரமைப்பு மற்றும் தகவல் தொடர்பு போன்றவற்றில் உதவி செய்து கொள்ளுதல் என்ற அடிப்படையில் செயல்பட்டு வருகின்றன.

அண்டை நாடுகளுடன் நல்லுறவு

இந்தியா – பாகிஸ்தான்

- இந்தியா பாகிஸ்தானிடையே கடந்த காலங்களில் பகைமை நிலவி வந்தபோதிலும், அவற்றை முறியடித்து இருநாடுகளும் நல்லுறவை ஏற்படுத்த முயற்சி மேற்கொண்டு வருகின்றன. மார்ச் 16, 1999 டெல்லி – லாகூர் இடையே பேருந்து போக்குவரத்து தொடங்கப்பட்டு இரு நாடுகளிடையே நெருக்கம் ஏற்பட்டது. ஈரான், பாகிஸ்தான், இந்தியா இடையே எரிவாயு குழாய் இணைப்பு மேற்கொள்ள முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்தியா – சீனா

- 1949 – ஆம் ஆண்டு சீனா குடியரசானதை முதலில் அங்கீகரித்த நாடு இந்தியா. இதனைத் தொடர்ந்து இரு நாடுகளும் தங்களது பொருளாதாரத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முயற்சி மேற்கொண்டன. ஐ. நா. வில் சீனா உறுப்பு நாடாகச் சேருவதற்கு இந்தியா தனது ஆதரவை

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

நல்கியது. இதற்கு ஐ. நா. வின் பாதுகாப்புக் குழுவில் நிரந்தர உறுப்பு நாடாக இந்தியா இடம்பெற சீனா ஆதரவு நல்கியது.

இந்தியா – இலங்கை

- இலங்கை புத்தமதத்தை அடிப்படையாகக் கொண்ட நாடு மௌரியப் பேரரசர் அசோகர் தனது மகள் மற்றும் மகனை இலங்கைக்கு அனுப்பி புத்தமதத்தை பரப்பினார். இதனைத் தொடர்ந்து இருநாடுகளுக்குமிடையில் வியாபார உறவு ஏற்பட்டது. இலங்கைக்கு இந்தியா தொடர்ந்து தனது ஆதரவை வழங்கி வருகிறது. இந்த உறவு அமைதியான முறையில் தொடர்ந்து நீடித்து வருகிறது.

இந்தியா – வங்காளதேசம்

- முன்னாள் இந்தியப் பிரதமர் இந்திரா காந்தியின் பெருமுயற்சி மற்றும் ஆதரவினால் பாகிஸ்தானிடமிருந்து 1971 – ஆம் ஆண்டு வங்காளதேசம் பிரிந்து தனி நாடாகியது. 1972 – ஆம் ஆண்டு இவ்விரு நாடுகளுக்கிடையில் நட்புறவு, ஒத்துழைப்பு மற்றும் அமைதி பராமரிப்பிற்கான 25 வருட ஒப்பந்தம் ஒன்று டாக்கா நகரில் செய்து கொள்ளப்பட்டது. கங்கை நீரைப் பகிர்ந்து கொள்வது தொடர்பாக ஏற்பட்ட பராக்கா அணைகட்டும் பிரச்சனைக்கு அமைதியான முறையில் தீர்வு காணப்பட்டது. இந்தியா தொடர்ந்து வங்காள தேசத்திற்கு உற்ற நண்பனாகத் திகழ்ந்து வருகிறது.
-

சூயஸ் கால்வாய்

- 1956 – ஆம் ஆண்டு எகிப்து அதிபர் நாசர் சூயஸ் கால்வாயை தேசிய மயமாக்கினார். இதனை எதிர்த்து பிரான்சு, இங்கிலாந்து மற்றும் இஸ்ரேல் ஆகிய நாடுகள் எகிப்தின் மீது படையெடுத்தன. இந்தியாவின் தலையீட்டால் போர் தவிர்க்கப்பட்டு அமைதி நிலைநாட்டப்பட்டது.

காங்கோ

- இது ஒரு ஆப்பிரிக்கா நாடு. 1960 – ஆம் ஆண்டு, இங்கு உள்நாட்டுப்போர் வெடித்தது. ஐ. நா. சபை இப்பிரச்சனைக்குத் தீர்வு காணும்படி இந்தியாவைக் கேட்டு கொண்டது. இதனைத் தொடர்ந்து படைத்தளபதி கே. ஏ. எஸ். இராஜா தலைமையில் இந்திய அமைதிப்படை காங்கோவிற்கு அனுப்பபட்டு அங்கு அமைதி நிலைநாட்டப்பட்டது.

சைப்ரஸ்

- தீவிர கிறித்துவர்கள் மற்றும் துருக்கி முஸ்லீம்கள் இடையே சைப்ரஸ் தீவில் உள்நாட்டுப் போர் தோன்றியது. இந்திய படைத் தளபதி திம்மையா தலைமையில் ஐ. நா. அமைதிப் பாதுகாப்புப் படை ஒன்று அனுப்பப்பட்டது. இவரது தீவிர முயற்சியால் சைப்ரஸ் தீவில் அமைதி நிலைநாட்டப்பட்டது.
- இந்தியா வன்முறையற்ற மற்றும் அஹிம்சை கொள்கைகள் மூலம் மகாத்மா காந்தியின் தலைமையில் விடுதலை அடைந்தது. விடுதலைக்குப் பிறகு உலக நாடுகளிடையே அமைதி மற்றும் நிலைப்பாட்டை நிலைநிறுத்த கடுமையாக பாடுபட்டு வருகிறது.

11. ஐக்கிய நாடுகள் அவை

- நமது உலகில் கி. பி. 1939 முதல் கி.பி. 1945 – ஆம் ஆண்டு வரையில் நடைபெற்ற இரண்டாவது உலகப் போர், முதல் உலகப் போரைவிட பெரும் அழிவை ஏற்படுத்தியது. இந்தப் போரில் 50 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் உயிரிழந்தனர்.
- முதல் உலகப் போரின் முடிவில் ஏற்படுத்தப்பட்ட பன்னாட்டுக் கழகம் உலக அமைதியையும், பாதுகாப்பையும் நிலைநாட்டாத காரணத்தினால் இரண்டாம் உலகப்போர் ஏற்பட்டது.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

- அமெரிக்கா, சோவியத் ரஷ்யா மற்றும் இங்கிலாந்து ஆகிய நாடுகள் உலகத்தில் உடனடியாக நிரந்தரமான அமைதி ஏற்படுத்த ஒரு புதிய அமைப்புத் தேவை என உணர்ந்தன. அதன் விளைவாக ஐக்கிய நாடுகள் அவை உருவானது.

ஐக்கிய நாடுகள் சபையின் தோற்றமும், தொடக்கக் கால திட்டங்களும்

- உலக அமைதியை நிலைநாட்ட உருவாக்கிய பன்னாட்டு நிறுவனத்தின் அடிப்படைத் திட்டங்கள், அமெரிக்காவின் ஆதரவுடன் 1939 – ஆம் ஆண்டு உருவாயின.
- ஊலக அமைதிக்காக செயலாற்றும் நேசநாடுகளைக் குறிப்பதற்காக "**ஐக்கிய நாடுகள்**" என்ற பெயரை அமெரிக்காவின் முன்னாள் குடியரசுத் தலைவர் **பிராங்கிளின் டி ரூஸ்வெல்ட்** உருவாக்கினார்.
- ஜனவரி 1 – ஆம் நாள் 1942 – ஆம் ஆண்டு, 26 நாடுகள் சேர்ந்து **அட்லாண்டிக் சாசனத்தில்** கையெழுத்திட்டனர். அந்தச் சாசனத்தில் 'ஐக்கிய நாடுகள்' என் பெயர் முதன் முதலில் அதிகாரப்பூர்வமாகப் பயன்படுத்தப்பட்டது.

அட்லாண்டிக் சாசனம்

- இது உலக மக்களிடையே அமைதி மற்றும் பாதுகாப்பை உருவாக்க ஏற்படுத்தப்பட்ட ஒரு கொள்கை அமைப்பாகும்.
- 1941 – ஆம் ஆண்டு ஆகஸ்ட் 14 – ஆம் நாள், அமெரிக்கா அதிபர் பிராங்களின் டி ரூஸ்வெல்ட்டு, இங்கிலாந்து பிரதமர் வின்ஸ்டன் சர்ச்சில் அட்லாண்டிக் கடலில் ஹெச். எம். எஸ். வேல்ஸ் பிரின்ஸ் என்னும் கப்பலில் பயணம் செய்யும் போது இந்த சாசனத்தில் கையொப்பமிட்டனர். எனவே இது அட்லாண்டிக் சாசனம் என அழைக்கப்படுகிறது.

ஐக்கிய நாடுகள் சாசனம்

- பல்வேறு நாடுகளில் நடைபெற்ற மாநாடுகளின் முடிவில் ஐக்கிய நாடுகள் அவை உருவானது.
- ஐக்கிய நாடுகள் அவையின் சாசனத்தை எழுதுவதற்குச் **சான் பிரான்சிஸ்கோ** நகரில் ஒரு மாநாடு **ஏப்ரல் 25 – ஆம் நாள் 1945 – ஆம்** ஆண்டு கூட்டப்பட்டது.
- ஐக்கிய நாடுகள் அவையின் இலக்குகள், நோக்கங்கள், விதிமுறைகள் ஆகியவற்றின் தொகுப்பே ஐக்கிய நாடுகள் அவை சாசனம் ஆகும். இச்சாசனத்தில் 50 நாடுகளின் பிரதிநிதிகள் ஜுன் 25 – ஆம் நாள் 1945 ஆம் ஆண்டு கையெழுத்திட்டனர்கள். போலாந்து மட்டும் பின்னர் கையெழுத்திட்டது
- அக்டோபர் 25 – ஆம் நாள் 1945 – ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் அவை தமது செயல்பாட்டைத் தொடங்கியது. எனவே அக்டோபர் 24 – ஆம் நாளை, ஐக்கிய நாடுகள் அவையின் நாளாக கொண்டாடப்படுகிறது.

ஐ.நா. சபையை உருவாக்குவதற்கு முன் கூட்டப்பட்ட மாநாடுகள்

- **1943 அக்டோபர் 30 – மாஸ்கோ**
- **1943 டிசம்பர் 1 – டெக்ரான்**
- **1944 செப்டம்பர் 21 – டம்பர்டன் ஒக்ஸ்**
- **1944 அக்டோபர் 7 – டம்பர்டன் ஒக்ஸ்**
- **1945 பிப்ரவரி 11 – யாபல்டா**

ஐ.நா. உறுப்பினர்கள்

- ஐந்து அமைதியை விரும்பும் நாடுகள் ஐ. நா. வின் உறுப்பினர்கள் ஆகலாம்.
- தற்போது 193 நாடுகள் இதில் உறுப்பினராக உள்ளனர். இதன் தலைநகர் நியூயார்க்கில் **'மன்ஹாட்டன்'னில்** பன்னாட்டு பகுதியில் அமைந்துள்ளது.

ஐ.நா. சபையின் இலச்சினை, கொடி மற்றும் மொழிகள்

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

- ஐந்து உள்வட்டங்களும், அதன்மீது வடதுருவத்திலிருந்து பார்த்தால் தெரியக்கூடிய வகையிலான உலகப்பட தோற்றமும், அதனைச் சூழ்ந்து ஆலீவ் இலைக்கொத்துகளும் கொண்ட படம் ஐ.நா.வின் இலச்சினையாக உருவாக்கப்பட்டுள்ளது.
- உலக அமைதியை குறிக்கும் வண்ணம் ஆலிவ் இலைக் கொத்துகளும், உலக அமைதி மற்றும் பாதுகாப்பினை அடைவதே ஐ.நா.வின் முக்கிய இலக்கு என்பதை எடுத்துரைக்க உலகபடமும் ஐ.நா.வின் இலச்சினையாக உருவாக்கப்பட்டுள்ளது.
- வெளிர் நீலநிறக் கொடியின் நடுவில் வெள்ளைநிறத்தில் ஐ.நா.வின் இலச்சினை பொறிக்கப்பட்ட கொடி, ஐ.நா.வின் கொடியாக அமைக்கப்பட்டுள்ளது.
- ஆங்கிலம், பிரெஞ்சு, ஸ்பானிஷ், ருஷியன், சீனமொழி மற்றும் அரேபிய மொழி ஆகியவை ஐ.நா.வின் பொது மொழிகளாக இருக்கின்றன.

ஐ.நா. வின் செயல்கள்

- அமைதியை நிலைநாட்டல், முரண்பாடுகளை களைதல்
- அகதிகளுக்கு பாதுகாப்பு அளித்தல்
- தீவிரவாதம் தடுத்தல், படைவலிமைக் குறைப்பு
- மக்களாட்சியை மேம்படுத்துதல், தொடர் வளர்ச்சி
- பன்னாட்டு மக்கள் மற்றும் குழந்தைகள் நலன் மேம்படுத்தல்
- அம்மை நோயினால் ஏற்படும் இறப்பு விகிதத்தைக் குறைத்தல்
- போலியோ நோயை ஒழித்தல்
- மலேரியா இறப்புகளைத் தடுத்தல்
- உணவு உற்பத்தியைப் பெருக்குதல்

ஐ.நா. சபையின் நோக்கங்கள்

- உறுப்பு நாடுகளுக்கு இடையே ஏற்படும் வேறுபாடுகளுக்கு அமைதியான முறையில் தீர்வு காணுதல்.
- உலக அமைதியையும், பாதுகாப்பையும் நிலைநாட்டல்
- நாடுகளிடையே நட்புறவுகளை உருவாக்குதல்
- உலகப் பொருளாதாரம் சமூகப்பண்பாடு மற்றும் மனித இனம் சார்பான பிரச்சனைகளைத் தீர்ப்பதில் ஒத்துழைத்தல்
- சமூக முன்னேற்றம், தரமான வாழ்வு மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்துதல் ஆகியன ஐ. நா. சபையின் நோக்கங்களாகும்

ஐ.நா. சபையின் ' ஆயிரம் ஆண்டு குறிக்கோள்'

1. மிகுதியான ஏழ்மையையும், பட்டினியையும் நீக்குதல்
2. அனைவருக்கும் தொடக்கக் கல்வி அளித்தல்
3. பாலின சமத்துவத்தையும், பெண்களுக்கு அதிகாரமளித்தலையும் உருவாக்குதல்
4. குழந்தைகளின் இறப்பு விகிதத்தை குறைத்தல்
5. அன்னையர் உடல்நலம் பேணுதல்
6. எய்ட்ஸ் – ஹெச்ஐவி, மலேரியா போன்ற நோய்களைக் களைய நடவடிக்கை எடுத்தல்
7. சுற்றுப்புறச் சூழலை பாதுகாத்தல்
8. முன்னேற்றப் பணிகளுக்காக உலகளாவியத் தோழமையை உருவாக்குதல்

ஐ.நா. சபையின் அமைப்புகள்

ஐ. நா. 6 முக்கிய அமைப்புகளைக் கொண்டது.

1. பொதுப்பேரவை
2. பாதுகாப்புப் பேரவை
3. பொருளாதார மற்றும் சமூகப் பேரவை
4. பன்னாட்டு நீதிமன்றம்

5. அறங்காவலர் பேரவை
6. பன்னாட்டு செயலகம்

1. பொதுப் பேரவை

- ஐ.நா.வின் அனைத்த அமைப்புகளில் மிக முக்கியமான அங்கம் பொதுப் பேரவை ஆகும்.
- இது மனித இன நாடாளுமன்றம் என்று அழைக்கப்படுகிறது.
- பொதுப்பேரவையில் அனைத்து உறுப்ப நாடுகளின் ஐந்து பிரதிநிகள் உறுப்பினர்களாக இருப்பார்கள். ஒவ்வொர் உறுப்பு நாட்டிற்கு ஒவ்வொரு வாக்கு உண்டு.
- ஆண்டுக்கு ஒருமுறை பெரும்பாலும் செப்டம்பர் மாதத்தில் பொதுக்குழுக் கூட்டம் நடைபெறும்.
- பாதுகாப்புப் பேரவையின் வேண்டுகோளின்படி தேவைப்படும்போது அவசரக் கூட்டமும் நடைபெறும்.
- முக்கிய நடவடிக்கைகளான, அமைதி, பாதுகாப்பு, புதிய உறுப்பு நாடுகளைச் சேர்த்தல், வரவு, செலவு திட்டங்களை நிறைவேற்றுதல் ஆகியவற்றிற்கு 2 / 3 பங்கு உறுப்பினர்களில் ஆதரவு தேவை. மற்றத் தீர்மானங்களுக்கு சாதாரணப் பெரும்பான்மையே போதுமானது.

பொதுப் பேரவையின் முக்கியச் செயல்பாடுகள்

- தலைவரையும், 21 துணைத் தலைவர்களையும் தேர்ந்தெடுப்பது.
- பாதுகாப்புப் பேரவையின் நிரந்தர உறுப்பினரல்லாதவர்களையும், ஐ. நா. சபையின் பிற அமைப்புகளுக்கான உறுப்பினர்களையும் தேர்ந்தெடுப்பது,
- ஆண்டு வரவு, செலவுத் திட்டங்களுக்கு ஒப்புதல் அளிப்பது,
- பாதுகாப்புப் பேரவையின் பரிந்துரையின்படி, பொதுச்செயலர் மற்றும் பன்னாட்டு நீதிமன்ற நீதிபதிகள் ஆகியோரை நியமனம் செய்வது.

பாதுகாப்புப் பேரவை

- ஐ.நா. அவையின் இரண்டாவது முக்கிய அமைப்பு பாதுகாப்பு அவை ஆகும்.
- இது ஐ. நா. அவையின் நிர்வாக அமைப்பாக விளங்கிறது
- பாதுகாப்பு பேரவையானது 5 நிரந்தர உறுப்பினர்களையும், 10 நிரந்தரமற்ற உறுப்பினர்களையும் உள்ளடக்கி, மொத்தம் 1 5 பேரைக் கொண்டது.
- ரஷ்யா, பிரான்ஸ், அமெரிக்கா, இங்கிலாந்து மற்றும் சீனா ஆகியவை நிரந்தர உறுப்பினர்கள்
- மற்ற நிரந்தரமற்ற உறுப்பினர்களின் பதவிக்காலம் 2 ஆண்டுகளாகும். இவர்கள் பொதுக்குழுவால் தேர்ந்தெடுக்கப்படுவர்.
- பாதுகாப்புப் பேரவையின் உறுப்பினர்கள் மாதம் ஒருமுறை கூடி புதிய தலைவரைத் தேர்ந்தெடுப்பர். 2 / 3 பங்கு உறுப்பினர்களின் ஆதரவின் அடிப்படையில் முடிவுகள் தீர்மானிக்கப்படும்.
- நிரந்தர உறுப்பு நாடுகளுக்குத் தடுப்புரிமை ஆணை (veto power) உண்டு. இதனைப் பயன்படுத்தி ஒரு நிரந்தர உறுப்பு நாடு எந்த ஒரு தீர்மானத்தையும் நிறைவேற்ற முடியாமல் தடுக்க இயலும்.
- 2010 – ஆம் ஆண்டில் இந்தியா, பாதுகாப்பு பேரவையின் நிரந்தரமற்ற உறுப்பினராக 2 ஆண்டு காலத்திற்கு தேர்வு செய்யப்பட்டுள்ளது.

பாதுகாப்புப் பேரவையின் முக்கியச் செயல்பாடுகள்

- உலக அமைதியையும், பாதுகாப்பையும் நிலைநிறுத்துதல்.
- உறுப்பு நாடுகளிடையே எழும் பிரச்சினைகளை அமைதி வழியில் தீர்வு காணுதல்
- புதிய உறுப்பினர்களைச் சேகரிக்கப் பரிந்துரைத்தல்
- பாதுகாப்புப் பேரவையின் பொதுச் செயலர் தேர்தலில் பங்கெடுத்தல்.

பொருளாதா மற்றும் சமூகப் பேரவை

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

- ஐ. நா. வின் பொருளாதார, சமூகச் செயல்பாடுகளையும் மற்றும் ஐ. நா. வின் சிறப்பு நிறுவனத்தின் பணிகளையும் ஒருங்கிணைக்கிறது.
- இதன் 54 உறுப்பினர்கள் ஒவ்வொரு மூன்றாம் ஆண்டும் 1 /3 உறுப்பினர்கள் பதவி விலகுவர்.
- இப்பேரவை, தேவை ஏற்படும் போதெல்லாம் ஆண்டு முழுவதும் கூடும்.
- இந்தப் பேரவையின் முக்கியக் கூட்டம் ஜுலை மாதம் நடைபெறும். இதில் பொருளாதாரப் பிரச்சனைகள், சமூக மனிதாபிமானப் பிரச்சனைகளான, சமூக வளர்ச்சி, பெண்கள் நிலை, குற்றங்களைத் தடுத்தல், போதை மருந்துகள் ஆகியவைப்பற்றி விவாதிக்கப்படும்.

அறங்காவலர் பேரவை

- தன்னாட்சி அதிகாரம் பெறாத 11 நாடுகளை நிர்வகிக்க 7 உறுப்பினர்கள் கொண்ட அறங்காவலர் பேரவை அமைக்கப்பட்டது. பேரவை மேற்பார்வை செய்த நாடுகள் தன்னாட்சி பெற உதவியது.
- 1994 – ஆம் ஆண்டுக்குள் இந்நாடுகளனைத்தும் சுதந்திரம் அடைந்தன. இப்பணி தற்போது நிறைவுற்றதால், வருங்காலத்தில் தேவை ஏற்பட்டால் அறங்காவலர் பேரவை செயல்பட தொடங்கும் வகையில் அறங்காவலர் பேரவை மாற்றியமைக்கப்பட்டது.

பன்னாட்டு நீதிமன்றம்

- பன்னாட்டு நீதிமன்றம் '**உலக நீதிமன்றம்**' என அழைக்கப்படுகிறது.
- இது ஐ. நா. அவையின் முக்கிய நீதி அமைப்பாகும். இந்நீதிமன்றத்துக்கான 15 நீதிபதிகள் பொதுக் குழுவாலும், பாதுகாப்புப் பேரவையாலும் தேர்ந்தெடுக்கப்படுவர்.
- உறுப்பு நாடுகளிடையே எழும் பிரச்சினைகளை இந்நீதிமன்றம் தீர்த்து வைக்கும். மேலும் ஐ. நா. அவைக்கும், அதன்கீழ் செயல்படும் சிறப்பு நிறுவனங்களுக்கும் தேவையான அறிவுரைகளையும் வழங்கும்.
- இது ஹாலந்து நாட்டில் உள்ள "**ஹேக்**" என்ற நகரில் அமைந்துள்ளது.

செயலகம்

- செயலகமானது ஐ. நா. சபையின் பொதுக்குழு, பாதுகாப்புப் பேரவை மற்றும் பிற அமைப்புகளின் வழிக்காட்டுதலின்படி நிர்வாகப் பணிகளைச் செய்கிறது.
- பொதுச் செயலரின் தலைமையிலும், வழிகாட்டுதலிலும் செயலகத்தின் நிர்வாகப் பணிகளானது நடைபெறுகின்றன.
- தென் கொரியாவைச் சேர்ந்த பான்கீமூன், ஐ. நா. வின் தற்போதைய பொதுச் செயலர் ஆவார். இவர் 2007 – ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- ஐ. நா. அவை மேலும் 30 சிறப்பு நிறுவனங்களின் துணையுடன் இலக்கினை அடைய அரும்பாடுபடுகிறது.
- **FAO - உலக உணவு மற்றும் வேளாண் நிறுவனம் (Food and Agricultural Organization)**
- **ILO - பன்னாட்டு தொழிலாளர் நிறுவனம் (International Labour Organization)**
- **IMF – உலக நிதி நிறுவனம் (International Monetary Fund)**
- **UNICEF - ஐ. நா. உலக நாடுகள் குழந்தைகள் நலநிதி (United Nations International & Children Emergency Fund)**
- **UNESCO – ஐ. நா. கல்வி அறிவியல் மற்றும் பண்பாட்டு நிறுவனம் (United Nations Educational Scientific and Cultural Organization)**
- **WHO - உலக மக்கள் நல நிறுவனம் (World Health Organization)**
- **WTO - உலகளாவிய வணிக நிறுவனம் (World Trade Organization)**

ஐ.நா. அவையின் சாதனைகள்

- ஊலக நாடுகளிடையே போரைத் தவிர்த்து, அமைதியையும், பாதுகாப்பையும் உருவாக்கி வருகிறது.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

- உறுப்பு நாடுகளிடையே உள்ள சமூக, கலாச்சார, பொருளாதார, மனிதாபிமானப் பிரச்சனைகளைத் தீர்க்க உதவுகிறது.

ஐ.நா. அவையின பெரும் சாதனைகள்

- **1946 –** இல் ஈரானிலிருந்து ரஷ்யப் படைகளைத் திரும்பப் பெறவும், சிரியா லெபனான் நாடுகளிலிருந்து பிரிட்டன், பிரான்ஸ் படைகளைத் திரும்பப் பெறவும் செய்தது
- 1947 – இல் டச்சு நாட்டின் பிடியிலிருந்து இந்தோனேசியாவுக்கு விடுதலை வழங்கியது.
- 1956 – இல் சூயஸ் கால்வாய் பிரச்சனையை முடிவுக்கு கொணர்ந்து அதை அனைத்து நாடுகளின் பயன்பாட்டிற்குப் பொதுவாக்கியது.
- 1962 மற்றும் 1973 இல் எழுந்த, மத்திய கிழக்கு நாடுகள் பிரச்சனையும், கியூபா ஏவுகணைப் பிரச்சனையும், முடிவுக்கு கொண்டு வந்தது.
- 1988 – இல் ஏற்பட்ட ஈரான் – ஈராக் போரை முடிவுக்கு கொண்டு வந்தது.
- 1989 – இல் ஆப்கானிஸ்தானிலிருந்து ரஷ்யப் படைகளைத் திரும்பப் பெற செய்தது.
- 1990 – இல் குவைத் நாட்டிற்கு மேலாண்மையினை பெற்றுத் தந்தது. கம்போடியா, எல் சால்வேடர், கௌட்டாமேலா, மொசாம்பிக் ஆகிய நாடுகளின் உள்நாட்டுப் போர்களை முடிவுக்கு கொண்டு வந்தது.
- ஐ. நா. சபையின் சிறப்பு அமைப்பான உலக சுகாதார நிறுவனம் (WHO) பெரியம்மையை முழுவதும் நீக்கியதுடன் போலியோ, மலேரியா, காசநோய் ஆகியவற்றை உலகிலிருந்து நீக்கவும் உறுதியேற்று செயல்பட்டு வருகிறது.
- அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் மேலாணையர் அலுவலகம் (UNCHR) அகதிகளுக்கு ஆற்றிய சேவைக்காக 1954 மற்றும் 1981 – ஆம் ஆண்டுகளில் நோபல் பரிசு பெற்றுள்ளது.

12. மனித உரிமைகள் – ஐக்கிய நாடுகள் சபை

- சமுதாயத்தில் மனிதன் சுமூகமாக வாழத் தேவையான நிலையை உரிமை என அழைக்கிறோம். மனித உரிமைகள் மனிதனால் இயற்கையாக பெறப்பட்டவை ஆகும்.
- **பேறிஞர் பொசாங்கோ : "உரிமைகள் என்பன சமூகத்தால் அங்கீகரிக்கப்பட்டு, அரசால் நடைமுறைப்படுத்தப் படுவதாகும்.**
- மனித உரிமைகள், மனிதர்கள் முழு ஆளுமைத் திறமையை வெளிப்படுத்தி, அவனை முழு வளர்ச்சி அடையச் செய்கிறது.
- சமூக பொருளாதார உரிமைகளும் மனித உரிமைகள்.
- இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு மனித உரிமைகளை பாதுகாக்க ஐக்கிய நாடுகள் சபை பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பிரகடனம் – 1948

- ஐ. நா. சபையின் முக்கியமான கோட்பாடுகளில் ஒன்று மனித உரிமைகளை பாதுகாப்பதும், அதனை மதிப்புறச் செய்வதும் ஆகும்.
- ஐ. நா. சபையின் ஆலோசனையின் பேரில், மனித உரிமைகளை உருவாக்க, மனித உரிமைகள் குழு அமைக்கப்பட்டது. இக்குழு மனித உரிமைகள் மசோதாவை தயாரித்து வழங்கியது.
- இம்மசோதா, ஐக்கிய நாடுகள் பொது சபையில் 1948 – ஆம் ஆண்டு டிசம்பர் – 10 ஆம் நாள் நிறைவேற்றப்பட்டது. இதுவே " அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம் " என்று அழைக்கப்படுகிறது.
- ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 10 ஆம் நாள் மனித உரிமைகள் தினமாக கடைபிடிக்கப்படுகிறது.
- அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம், மக்களிடையே சமத்துவத்தை உறுதி செய்கிறது. இப்பிரகடனம் 30 சரத்துகளைக் கொண்டது. இது ஒரு பகுதிகளாக பாகுபாடு செய்யப்பட்டுள்ளது.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

1. வாழ்வியல் மற்றும் அரசியல் உரிமைகள்
2. பொருளாதாரம், சமூக மற்றும் பண்பாட்டு உரிமைகள்

வாழ்வியல் மற்றும் அரசியல் உரிமைகள்

இது நவீன ஜனநாயத்தோடு நெருங்கிய தொடர்பு உடையவைகளாகும்.

- மக்களின் வாழ்வு, சுதந்திரம் மற்றும் அவர்களின் பாதுகாப்பு உரிமைகள்.
- அடிமை முறை மற்றும் சித்தரவதையில் இருந்து விடுதலை.
- சட்டத்தின் முன் அனைவரும் சமமாகக் கருதப்படுதல்
- சொத்துரிமை
- அரசியலில் ஈடுபடும் உரிமைகள்
- திருமணம் செய்து கொள்ளும் உரிமை
- அனைத்து குழந்தைகளுக்கும் சமூக பாதுகாப்பு அளிக்கும் உரிமை, ‘

போன்றவைகள் ஆகும்.

சமூக – பொருளாதார மற்றும் பண்பாட்டு உரிமைகள்

- வேலை செய்யும் உரிமை
- சமமான வேலைக்கு சமமான ஊதியம் பெறும் உரிமை
- தொழிற்சங்கத்தை உருவாக்கவும் அதில் சேரவும் உரிமை
- தேவையான வாழ்க்கைத் தரத்தினை பெறும் உரிமை
- கல்வியறிவு பெறும் உரிமை
- பண்பாட்டுக் களத்தில் சுதந்திரமாக பங்கேற்கும் உரிமை

மனித உரிமைகள் பாதுகாப்பு

- அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம், அனைத்து நாடுகளுக்கும் ஏற்புடையதாகும்.
- 1966– ஆம் ஆண்டு ஐ. நா. சபை மனித உரிமைகளை பாதுகாக்க இரு ஒப்பந்தங்களை உருவாக்கியது.
- அனைத்துலக பொருளாதார, சமூக மற்றும் பண்பாட்டு உரிமைகள் ஒப்பந்தம்.
- அனைத்துலக வாழ்வியல் மற்றும் அரசியல் உரிமைகள் ஒப்பந்தம்
- ஐ. நா.வின் உறுப்பு நாடுகள் இவ்வுரிமைகளின் பாதுகாப்பிற்கு உத்திரவாதம் அளிக்க கடமைப்பட்டுள்ளன.
- 1993 ஆம் ஆண்டு வியன்னாவில் நடைபெற்ற மனித உரிமைகள் மாநாட்டில் வெளியிடப்பட்ட, தனது பிரகடனத்தில் (வியன்னா பிரகடனம்) மனித உரிமைகளைப் பாதுகாப்பதும் மேன்மையடைச் செய்வதும் பன்னாட்டு சமூகத்தின் சட்டப்பூர்வமான நோக்கமாக இருக்க வேண்டும் எனக் கூறியது.
- இதன்படி இந்திய அரசாங்கம் 1993 – ஆம் ஆண்டு ஒரு சட்டம் இயற்றி, தேசிய மனித உரிமைகள் ஆணையத்தை டெல்லியில் கி. பி. 1993 – ஆம் ஆண்டு ஏற்படுத்தியது.
- மாநிலங்களிலும் மனித உரிமைகள் ஆணையம் உருவாக்கப்பட்டது. இவ்வாணையத்தின் நோக்கம் மனித உரிமைகளைப் பாதுகாப்பதும், மேம்பாடு அடையச் செய்வதும் ஆகும்.

தேசிய மனித உரிமைகள் ஆணையம்

- 1993 – ஆம் ஆண்டு இயற்றப்பட்ட மனித உரிமைகள் சட்டத்தின்படி தேசிய மனித உரிமைகள் ஆணையம் இந்தியாவில் அக்டோபர் 12, 1993 – ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. இவ்வாணையம் தலைவர் ஒருவரையும், நான்கு உறுப்பினர்களையும் கொண்டது.
- இவ்வாணையத்தின் தலைவர் பொதுவாக ஓய்வு பெற்ற உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக இருப்பார்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

- ஆணையத்தின் ஒரு உறுப்பினர் உச்சநீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதியாகவும், மற்றொரு உறுப்பினர் மாநில உயர்நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதியாகவும் மீதமுள்ள இரு உறுப்பினர்கள் மனித உரிமைகள் சார்ந்த செயல் அனுபவமிக்கவராக இருக்க வேண்டும். இவர்களை குடியரசுத் தலைவர் நியமனம் செய்கிறார்.

அமைப்பு

- தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் தலைமையிடம் புது டில்லி ஆகும்.
- குடியரசுத் தலைவரால் நியமனம் செய்யப்படும் மனித உரிமை ஆணையத்தின் உறுப்பினர்கள் குடியரசுத் தலைவரின் ஆணையின் பேரில் பணி நீக்கம் செய்யப்படலாம்.
- ஆணையத்தின் தலைவர் 5 ஆண்டுகளோ அல்லது 70 வயது வரையிலோ இப்பதவியில் பணியாற்றலாம். மற்ற உறுப்பினர்கள் 5 ஆண்டுகள் பதவி வகிக்கலாம்.
- குடியரசுத் தலைவர் விரும்பினால் இவர்களை மீண்டும் 5 ஆண்டுகட்கு மறுநியமனம் செய்யலாம்.

ஆணையத்தின் பணிகள்

- இதன் முக்கிய நோக்கம் மனித உரிமைகளைப் பாதுகாப்பதும், மேம்படுத்துவதும் ஆகும்.
- மனித உரிமைகள் சம்பந்தமாக ஆய்வுகள் நடத்தி, அமு சம்பந்தமான கல்வியறிவினை மக்களிடையே பரப்புவது
- ஊடகங்கள் மூலமாகவும், கருத்தரங்கம் மூலமாகவும் மனித உரிமை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது.
- மனித உரிமைகள் மீறப்படும் போது பாதிக்கப்பட்டவர்கள் மனு செய்தாலோ அல்லது ஆணையம் தானாகவே முன் வந்து பாதிக்கப்பட்டவர்களை விசாரித்து உரிய நடவடிக்கைகள் எடுக்கும்.
- தேசிய மனித உரிமைகள் ஆணையம் கீழ்க்கண்டவற்றிற்கு முன்னுரிமை வழங்கி பணியாற்றுகிறது.
- மக்களின் வாழ்வியல் சுதந்திரத்தைப் பாதுகாக்கவும்,
- மனித உரிமைகளுக்கு எதிராக கொண்டுவரப்படும் சட்டத்தினை ஆய்வு செய்யவும்,
- காவல் துறையினரின் வன்முறை மற்றும் கற்பழிப்பு போன்றவற்றை அகற்றுவது சம்பந்தமாகவும்,
- ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் குறைகளை களைவதற்கும்,
- பெண்கள் மற்றும் குழந்தைகளின் உரிமைகளைப் பாதுகாக்கவும் முன்னுரிமை வழங்குகிறது.

அதிகாரங்கள்

- தேசிய மனித உரிமைகள் ஆணையம் வாழ்வியல் நீதிமன்றத்திற்குரிய அனைத்து அதிகாரங்களையும் பெற்றிருக்கிறது.
- அரசிற்கு ஆண்டு தோறும் தனது அறிக்கையை இவ்வாணையம் அனுப்புகிறது. அரசாங்கம் இவ்வறிக்கையினை பாராளுமன்றத்தின் இரு சபைகளிலும் தாக்கல் செய்து, இதனடிப்படையில் எத்தகைய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ள அல்லது எத்தகைய நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன என்பதை தெரிவிக்கும்.

மாநில மனித உரிமைகள் ஆணையம்

- தமிழ்நாட்டில் **1997** ஆம் ஆண்டு **ஏப்ரல் 17** – ஆம் நாள் **மாநில மனித உரிமைகள் ஆணையம்** உருவாக்கப்பட்டது.

அமைப்பு

- மாநில மனித உரிமைகள் ஆணையம் ஒரு தலைவரையும், நான்கு உறுப்பினர்களையும் உள்ளடக்கியது.
- ஆணையத்தின் தலைவர் **– மாநில உயர்நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற தலைமை நீதிபதியாவார்.**

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

- ஆணையத்தின் ஒரு உறுப்பினர் ஓய்வு பெற்ற மாநில உயர் நீதிமன்றத்தின் நீதிபதியாகவும், மற்றொரு உறுப்பினர் ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதியாகவும், எஞ்சிய இரண்டு உறுப்பினர்கள் மனித உரிமைகள் சார்ந்த செயலனுபவம் மிக்கவர்களாகவும் இருக்க வேண்டும்.
- ஆணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்களை மாநில முதலமைச்சர், மாநில உள்துறை அமைச்சர், சட்டமன்ற தலைவர், சட்டமன்ற எதிர்கட்சி தலைவர் ஆகியோரைக் கொண்ட குழுவின் பரிந்துரையின் பேரில் மாநில ஆளுநர் நியமனம் செய்கிறார்.
- ஆணையத்தின் தலைமை நிர்வாக அதிகாாயாக, செயலர் செயல்படுகிறார்.
- இவ்வாணையம் சென்னையில் செயல்பட்டு வருகிறது.
- இந்திய அரசியலமைப்பில் பகுதி II, பகுதி III - ல் உத்திரவாதம் அளிக்கப்பட்டுள்ள மனித உரிமைகள் மீறப்படும் போது இவ்வாணையம் விசாரரணை செய்து பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய நிவாரணம் அளிக்கும்.
- மாநில ஆணையத்தின் உறுப்பினர்கள் முறை தவறி செயல்பட்டால், மாநில ஆளுநர் அவர்களை பணி நீக்கம் செய்யலாம்.

பணிகள்

- மாநில மனித உரிமைகள் ஆணையம் ஆண்டு தோறும் அரசாங்கத்திற்கு தனது அறிக்கையை அனுப்புகிறது.
- இவ்வறிக்கையில் தாம் செய்து முடித்த பணிகள் பற்றியும், அரசாங்கம் மனித உரிமைகளை காக்க எடுத்துக்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் குறிப்பிடப்பட்டிருக்கும். அரசாங்கம் இவ்வறிக்கையினை **சட்டமன்றத்தில் தாக்கல்** செய்யும்.

மாவட்ட மனித உரிமைகள் நீதிமன்றங்கள்

- மனித உரிமைகளை காக்க மாவட்ட அளவில் நீதிமன்றங்கள் – மாநில அரசாங்கம் உருவாக்கி உள்ளது.
- மாவட்ட அளவில் நடைபெறும் மனித உரிமைகள் மீறல்களை இந்நீதிமன்றம் விசாரணை செய்யும்
- இந்நீதிமன்றத்தில் நீதிபதியாக ஏழு ஆண்டுகள் வழக்கறிஞராக பணியாற்றியவர் அல்லது அரசு வழக்கறிஞர் நியமிக்கப்படுகிறார்.

.

பெண்களின் உரிமைகள்

- **1856** – ஆம் ஆண்டு **இந்து விதவை மறுமணம் சட்டம்** சட்டபூர்வமாக்கப்பட்டது.
- **1955 – ஆம் ஆண் இந்து திருமணச் சட்டத்தின்படி தாய் தந்தையரின் சொத்தில் பெண்களுக்கு சம உரிமை** வழங்கப்பட்டது.
- **1961** ஆம் ஆண்டு வரதட்சணை தடைச் சட்டத்தின்படி வரதட்சணை வேண்டி பெண்களை கொடுமைப்படுத்துவது கடுமையான தண்டனைக்குரிய குற்றமாகக் கருத வழி செய்தது.
- தமிழக அரசு இந்து திருமண சட்டத்தில் 1967 – ஆம் ஆண்டில் ஒரு திருத்தம் கொண்டு வந்து சுயமரியாதை திருமணங்கள் சட்டபூர்வ திருமணங்களாக அங்கீகரித்துள்ளது.
- **1997** – ஆம் ஆண்டு தமிழக அரசு பெண்களை கேலி செய்வதை தடுக்கச் சட்டம் இயற்றியுள்ளது.
- **1990** – ஆம் ஆண்டு தமிழக அரசு பெண்களை அநாகரிகமாக சித்தரித்து சுவரொட்டிகள் வெளியிடுவதை தடை செய்துள்ளது.

பெண்களின் உரிமைகளும், சட்டங்களும்

- இந்திய அரசியலமைப்புச் சட்டம், சரத்து 23 மற்றும் 24 பெண்களின் விடுதலைப் பற்றிக் கூறுகிறது.
- பெண்கள் சுரண்டப்பட்டு ஏமாற்றுதலை எதிர்ப்பதற்கான உரிமைகளும் சட்டங்களும் உள்ளன.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

- குடும்பச் சொத்துகளில் மகன்களோடு, மகள்களும் உரிமைகோர சட்டம் இடம் அளிக்கிறது.
- 1978 இல் உருவாக்கப்பட்ட குழந்தைத் திருமணத் தடைச் சட்டத் திருத்தம் – பெண்களின் திருமண வயது 15 லிருந்து 18 ஆகவும், ஆணின் திருமண வயது 18 லிருந்து 21 ஆகவும் உயர்த்தியுள்ளது. இது குழந்தைத் திருமணத்தைத் தடை செய்கிறது.
- 1986 ல் கொண்டு வரப்பட்ட வரதட்சணைத் தடைச்சட்டத்திருத்தம், வரதட்சணை வாங்குபவர், வதட்சணை தொடர்பாக பெண்களை கொடுமைப்படுத்துபவர் மீது கடுமையான தண்டனை கொடுக்க வழி வகுத்துள்ளது.
- தமிழ்நாடு அரசு 1997 இல் (ஈவ்டீசிங்) பெண்களை இகழ்தல் தடைச் சட்டம் இயற்றியுள்ளது . 2002 இல் உருவாக்கப்பட்ட இதன் திருத்தம் பெண்களுக்குத் தொல்லை கொடுப்பதைத் தடை செய்துள்ளது.
- 73 ஆவது மற்றும் 74 ஆவது அரசியல் சட்டத் திருத்தம் ஊராட்சி அமைப்புகளிலும், உள்ளூர் அமைப்புகளிலும், பெண்களுக்கு 33 விழுக்காடு இட ஒதுக்கீட்டை கொடுத்துள்ளது.

பெண் தொழிலாளர் நலச்சட்டம்

- 1948 – ஆம் ஆண்டு தொழிற்கூட சட்டம்
- 1951 – ஆம் ஆண்டின் தோட்டத் தொழிலாளர் சட்டம்
- 1952 – இல் சுரங்கச் சட்டம் ஆகியவைகள் ஆண், பெண் வேறுபாடின்றி சம ஊதியம் வழங்க வழிவகை செய்தது.
- 1961 – ஆம் ஆண்டு பெண்களின் உடல்நலம் காக்க பேறுகால பயன் சட்டம் இயற்றப்பட்டு, பேறு காலத்தில் பெண்களுக்கு முறையான ஊதியம் வழங்க வழிவகை செய்யப்பட்டது.
- மார்ச் 8 ஆம் நாள் சர்வதேச பெண்கள் தினமாகக் கொண்டாடப்படுகிறது.
- பெண்கள் உரிமையை உறுதி செய்ய 1995 – ஆம் ஆண்டு சீனத் தலைநகர் பெய்ஜிங்கில் உலக பெண்கள் ஒன்று கூடி, **“பெண்கள் உரிமைகள், மனித உரிமைகளே, மனித உரிமைகள் பெண்கள் உரிமைகளே”** என முழக்கமிட்டனர்.
- ஐ. நா. சபை 1978 ஆம் ஆண்டை சர்வதேச பெண்கள் ஆண்டாக அறிவித்தது.

பெண்களின் அமைப்புகள்

பெண்களின் நலன் காக்க இந்திய பெண்கள் சங்கம், ஜனநாயக மாதர் சங்கம் மற்றும் பெண்ணுரிமை இயக்கம் ஆகியவைகள் போராடி வருகின்றன. இவைத் தவிர அரசு சாரா தன்னார்வ அமைப்புகளான அரிமா சங்கம், ரோட்டரி சங்கம், இன்னர்வீல் சங்கம் போன்றவைகளும் பெண்களின் நலனைக் காக்க பாடுபட்டு வருகின்றன.

குழந்தைகள் உரிமைகள்

- பிரிவு 39 (e) ன் படி இந்திய அரசியலமைப்பு குழந்தைகள் சுதந்திரமாகவும் உடல் ஆரோக்கியத்துடனும் வாழ வகை செய்கிறது.
- பிரிவு 45 – ன் படி அரசாங்கம் எல்லா குழந்தைகளுக்கும் 14 வயது வரை கட்டாய இலவசக் கல்வி **வழங்கிட வழி வகை செய்துள்ளது.**
- சிறுவர்களுக்கு எதிரான அநீதி சட்டம் 1986 – ஆம் ஆண்டு இயற்றப்பட்டு இளம் சிறார்கள் முறையாக பாதுகாக்கப்படவும் அவர்கள் திருந்தி வாழவும் வழி செய்துள்ளது.
- ஐ. நா. சபை 1979 ஆம் ஆண்டை சர்வதேச குழந்தைகள் ஆண்டாக அறிவித்துள்ளது.

காசிகா IAS அகடாமி (இலவச பயிற்சி)

செயின்ட் தாமஸ் மேல்நிலைப்பள்ளிக்கு கீழ்புறம் ,

குசுமகிரி, கூடலூர் – நீலகிரி மாவட்டம்

ஆசிரியர் : அ.சுரேஷ் குமார் - 9894006772

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

புவியியல்

6–ம் வகுப்பு (புவியியல்)

- சூரியன் உதித்தபின் அதன் ஒளி வெள்ளத்தில் நம் கண்களுக்கு புலப்படாதது – விண்மீன்கள்
- சந்திரன் சிறு பிறையிலிருந்து வளர்ந்து வந்து முழுமை பெறுவது – முழுச்சந்திரன் (பௌர்ணமி)
- சந்திரன் முழு பிறையிலிருந்து தேய்ந்து வருவது – அமாவாசை
- அமாவாசை முதல் முழு சந்திரன் (பௌணர்மி) வரை கால அளவு – 1 மாதம்.
- இரவு வானில் நமது காட்சிக்கு புலப்படுவது – கோள்கள் (Plants)
- தொலை நோக்கி இல்லாமல் வெறும் கண்களால் காணும் கோள்கள் – 5
  1. புதன் 2. வெள்ளி 3. செவ்வாய் 4. வியாழன் 5. சனி
- தொலை நோக்கியால் மட்டும் காண இயலும் கோள்கள் – 2
  1. யுரேனஸ், 2. நெப்டியூன்
- சூரிய உதயத்திற்கு முன்பு (அ) மாலையின் சூரியன் மறைந்து பின்பு தெரியும் கோள்கள் – 2
  1. புதன் , 2. வெள்ளி (விடிவெள்ளி என்றும் அழைக்கப்படுகிறது)
- இரவில் வானில் கிழக்கிலோ (அ) தலைக்கு மேலாகவோ (அ) மேற்கிலோ வெறும் கண்களால் தெரியும் கோள்கள் – மூன்று (செவ்வாய், வியாழன், சனி)
- சூரியனும், விண்மீன்களும் கிழக்கே உதித்து மேற்கில் மறைவது போல் தோன்ற காரணம் – பூமி தன்னைத் தானே சுற்றிக் கொள்வதால்
- பூமி எவ்வாறு சுழல்கின்றது ? மேற்கிலிருந்து கிழக்காக
- சந்திரன் பூமியை சுற்றி வருகிறது
- அனைத்து கோள்களும் சூரியனை சுற்றி வருகிறது.
- வெறும் கண்களால் 5 கோள்களை காண முடியும், அத்துடன், **சூரியன் சந்திரனையும்**_ நாம் காணலாம்.
- சூரிய குடும்பத்தின் மொத்த கோள்கள் – 8
- பூமியியின் வளிமண்டலத்தில் மட்டும் காணப்படுவது – உயிர்வளி (ஆக்ஸிஜன்)
- திடக் கோள்கள் மொத்தம் – 4
  1. புதன், 2. வெள்ளி, 3. பூமி, 4. செவ்வாய்,
- வாயுக்கோள்கள் மொத்தம் – 4
  1. வியாழன், 2. சனி, 3. யுரேனஸ் 4. நெப்டியூன்
- வட துருவத்திலிருந்து – அனைத்து கோள்களும் கடிகாரத்தின் **எதிர் திசையில்** சுற்றுகின்றது (வெள்ளி, யுரேனஸ் தவிர)
- அனைத்து கோள்களும் ஒரே சமதளத்தில் சுற்றி வரும் பாதைக்கு – நீள் வட்டப் பாதை.
- கோள்கள் சுற்றி வரும் பாதை – சுற்றுப்பாதை எனப்படும்.
- சூரியக் குடும்பத்தின் நாயகன் – சூரியன் ஆகும் . (இது மிகப்பெரிய வாயு பந்து ஆகும்)
- பூமியிலிருந்து சூரியன் தொலைவு – 15 கோடி கி.மீ.
- சூரிய குடும்பத்தில் தானே ஒளிரும் ஒரே வான்பொருள் – சூரியன்
- எக்கோளில் வளையம் போன்ற அமைப்பு காணப்படுகிறது – சனி
- வளையம் என்பது எதனால் ஆனது ? – நுண்கற்களும், தூசும் ,பனியும்
- மேலும் சிறு வளையம் காணப்படும் கோள்கள் – வியாழன், யுரேனஸ், நெப்டியூன்
- 2006 –ம் ஆண்டு குள்ளக் கோள்களாக அறிவிக்கப்பட்டது – 5
  1. புளுட்டோ, 2. செரஸ், 3. ஏரிஸ், 4. மேக்மேக் , 5 . ஹவ்மீயே

- குள்ளக் கோள்கள் சூரியனை சுற்றி வரும் சந்திரனை விட சிறியவை.
- இந்தியாவின் வானவியல் அறிஞர் – வைணு பாப்பு
- அணுசக்தி துறையின் தந்தை – சாராபாய்
- கணித மேதை – இராமானுஜம்
- செவ்வாய் மற்றும் வியாழக் கோள்களுக்கு இடையே காணப்படுவது – குறுங்கோள்கள்
- குறுங்கோள்கள் எவ்வாறு உருவாகிறது – சிறுசிறு கற்கள் + பெரும்பாறை
- சந்திரன் வேறுபெயர்கள் – நிலவு, நிலா, மதி, திங்கள்
- சந்திரன் என்பது – ஒரு கோள் இல்லை – அது பூமியின் துணைக்கோள் ஆகும்.
- அதிக துணைக்கோள் கொண்ட கோள் எது – வியாழன் (63 துணைக்கோள்கள்)
- குறைந்த துணைக்கோள் கொண்ட கோள் எது – புதன் , வெள்ளி (0 துணைக்கோள்கள்)
- பூமியின் துணைக்கோள் எது – சந்திரன்
- செவ்வாய் எத்தனை துணைக்கோள் கொண்டது – 02
- இரண்டாவது அதிக துணைக்கோள் கொண்ட கோள் எது – சனி (60 துணைக்கோள்கள்)
- சந்திரன் பூமியின் விட்டத்தில் 1 /4 பங்கு அளவு மட்டுமே கொண்டுள்ளது.
- பூமியிலிருந்து சந்திரனின் தொலைவு – 3, 84, 401 கி . மீ
- சந்திரன் பூமியைச் சுற்றி வர எடுத்து கொள்ளும் காலமும், சந்திரன் தன்னைத் தானே சுற்றிக்கொள்ளும் காலமும் – சரி சமம் (27.3 நாட்கள்)
- மேற்கண்ட சுற்று காலம் சரிசமமாக உள்ளதால் நாம் சந்திரனின் ஒரு பகுதியை மட்டுமே காண முடிகிறது.
- சந்திரனின் மறுபக்கத்தை முதன் முதலில் புகைப்படம் எடுத்தது – லூனா 3 (1959–ல்)
- சந்திரனில் காணப்படுவது
  - ✓ ஈரப்பசை , மலைகள், சமவெளிகள், பள்ளத்தாக்குகள் உள்ளன.
  - ✓ வளிமண்டலம் இல்லை, திரவ நிலையில் நீர் இல்லை.
- சந்திரனில் விண்கற்கள் மோதுவதால் ஏற்படுவது – கிண்ணக் குழிகள்
- **அமாவாசை** என்பது – பூமிக்கும், சூரியனுக்கும் இடையில் சந்திரன் வருவது. பூமி – சந்திரன்(இடையில்)– சூரியன்
- **பௌர்ணமி** என்பது – சூரியனுக்கும், சந்திரனுக்கும் இடையில் பூமி செல்வது . சூரியன் – பூமி(இடையில்) – சந்திரன்
- இரவு வானில் திடீரென ஏற்படும் ஒளிக்கீற்று – எரிநட்சத்திரம்.
- பனி, தூசு முதலிய பொருள்கள் நிறைந்த பனிப்பாறை – வால் நட்சத்திரம் ஆகும்.
- வால் நட்சத்திரத்தில் வால் எப்போதும் சூரியனுக்கு எதிர் திசையில் அமையும்.
- பல கோடி விண்மீன்களின் தொகுதி – அண்டம்
- பல கோடி அண்டங்கள் – பேரண்டமாகும்.
- பேரண்டத்தில் காணப்படும் சிறப்பு மிக்க அண்டம் – பால் வெளி அண்டம்.
- பால் வெளி அண்டத்தில் தான் நமது சூரிய குடும்பம் காணப்படுகிறது.
- இவ்வண்டத்தை நம் முன்னோர்கள் – ஆகாய கங்கை என்று அழைத்தனர்.
- வெள்ளியும், புதனும் மிக வெப்பமான கோள்களாகும்.
- செவ்வாய், சனி, வியாழன், யுரேனஸ், நெப்டியூன், – ஆகிய ஐந்தும் குளிர் கோள்களாகும்.
- பல்லுயிர்களும், பல்கிப்பெருகும் உயிர்க் கோளம் – பூமி
- தற்சுழற்சி (ரொட்டேஷன்)
  - ✓ 23 மணி 56 நிமிடத்திற்கு ஒரு முறை பூமி தன்னைத் தானே சுற்றுகிறது.
  - ✓ மேற்கண்ட தற்சுழற்சியால் பகல் – இரவு ஏற்படுகிறது.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

- சுமார் 1500 ஆண்டுகளுக்கு முன்பு பூமி தன்னை தானே சுற்றுகிறது என்று விளக்கியர்– ஆரியபட்டர்
- பூமி சூரியனை ஒரு முறை சுற்ற எடுத்து கொள்ளும் காலம் – 365.24 நாட்கள்.
- பூமி 23 ½ சாய்வாக சுற்றுகிறது.
- இந்த சாய்வால் பருவகால மாற்றம் ஏற்படுகிறது.
- பூமியின் வடதுருவத்தையும், தென் துருவத்தையும் இணைக்கும் கற்பனை கோடு அச்சு கோடு எனப்படும்.
- லீப் வருடம் எத்தனை ஆண்டிற்கு ஒரு முறை வரும் – 4 ஆண்டுகள்
- லீப் வருடத்தில் பிப்ரவரி மாதத்திற்கு ஒரு நாள் கூடும் – 28 + 1 = 29
- பூமி சூரியனை சுற்றி வருவதால் ஏற்படுவது – பருவ கால மாற்றம்
- பூமி – சூரியனுக்கு வெகு தொலைவில் அமையும் மாதம் –ஜூலை
- பூமி – சூரியனுக்கு அருகில் அமையும் மாதம் – ஜனவரி
- தமிழகத்தில் சூரியன் உதிக்கும் திசை – தென் கிழக்கு (அ) வடகிழக்கு
- அதிகப்பட்ச தென் கிழக்கு உதித்து வடக்கு நோக்கி செல்வது – வட ஓட்டம் (உத்ராயணம்)
- சூரிய உதயப்புள்ளி தெற்கு நோக்கி நகர்வது – தென் ஓட்டம் (தட்சிணாயனம்)
- சம இரவு – பகல் (Equinox) என்ற இரண்டு நாட்கள் – மார்ச் 21, செப்டம்பர் 23
- உயரமான முகடுகளுடன் கூடிய நில அமைப்பு – மலை எனப்படும்.
- உலகின் மிக உயரமான மலைத்தொடர் – இமயமலைத் தொடர்
- நிலப்பகுதிகளை விட சற்றே உயரமாகவும், அதன் மேற்பகுதி தட்டையாகவும் உள்ள நில அமைப்பு – பீடபூமி எனப்படும்.
- உலகின் உயரமான பீடபூமி – திபெத் பீடபூமி
- பரந்து விரிந்த தாழ்வான சமமான நிலப்பரப்பு – சமவெளி ஆகும்.
- உலகில் காணப்படும் மொத்த கண்டங்கள் – 7

  1. ஆசியா 2. ஆப்பிரிக்கா, 3. வட அமெரிக்கா, 4. தென் அமெரிக்கா, 5. ஐரோப்பா, 6. ஆஸ்திரேலியா 7. அண்டார்டிகா.

- **ஆசியா கண்டம்**
  - ✓ மிகப்பெரிய கண்டம்.
  - ✓ இது பூமியின் வட அரைகோளத்தில் உள்ளது.
  - ✓ இந்தியா ஆசியா கண்டத்தில் உள்ளது.
  - ✓ கோபி குளிர்ப்பாலைவனமும், உயரமான இமயமலை தொடரும் காணப்படுகிறது.
- **ஆப்பிரிக்கா கண்டம்**
  - ✓ இரண்டாவது பெரிய கண்டம்
  - ✓ இக்கண்டம் வட அரைகோளம், தென் அரைகோளத்திலும் பரவியுள்ளது.
  - ✓ நில நடுக்கோடு இக்கண்டத்தை இரண்டாக பிரிக்கின்றது.
  - ✓ உலகின் நீளமான நைல் நதி (6695) இக்கண்டத்தில் பாய்கிறது.
  - ✓ மிகப்பெரிய பாலை வனமான சஹாரா பாலைவனம் உள்ளது.
  - ✓ அடர்ந்த காடுகள், கனிம வளங்கள் காணப்படுகிறது.
- **வட அமெரிக்கா கண்டம்**
  - ✓ அட்லாண்டிக், பசிபிக், ஆர்டிக் போன்ற மூன்று பெருங்கடல் சூழப்பட்ட கண்டம்
  - ✓ மிக நீண்ட ராக்கி மலைத்தொடர் காணப்படுகிறது.
- **தென் அமெரிக்கா கண்டம்**
  - ✓ தென் அரை கோளத்தில் காணப்படும் கண்டம் தென் அமெரிக்கா

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

- ✓ உலகின் நீளமான ஆண்டிஸ் மலைத்தொடர் இக்கண்டத்தில் உள்ளது.
- ✓ உலகின் அகன்ற ஆறான அமேசான் ஆறு (6586 கி.மீ) இங்குள்ளது.

➢ **ஐரோப்பா கண்டம்**
- ✓ ஆசியாவின் மேற்கு பகுதியில் காணப்படும் கண்டம்
- ✓ ஆல்ப்ஸ் மலைத் தொடர் காணப்படுகிறது.

➢ **ஆஸ்திரேலியா கண்டம்**
- ✓ நான்கு பக்கமும் கடல்களால் சூழப்பட்ட ஒரு தீவுக் கண்டம்
- ✓ இக்கண்டத்தில் நியூசிலாந்து, பிஜி போன்ற தீவுகள் காணப்படுகிறது.
- ✓ உலகின் மிகப்பெரிய பவளப்பாறை, கிரேட் பாரியர் ரீப் (ஆஸ்திரேலியா) இக்கண்டத்தில் காணப்படுகிறது.

➢ **அண்டார்டிகா கண்டம்**
- ✓ தென் துருவப்பகுதியில் அமைந்த பனி படர்ந்த கண்டம்
- ✓ பென் குயின், சீல் போன்ற பறவைகள் வாழுமிடம்.
- ✓ இக்கண்டத்தில் தான் தட்சிண் கங்கோத்ரி, மைத்ரேயி போன்ற ஆய்வு மையங்களை இந்திய அரசு ஏற்படுத்தி உள்ளது.

➢ நான்கு பக்கம் நீரால் சூழப்பட்ட பகுதி – தீவு எனப்படும்

➢ தீவிற்கு எ.கா – இலங்கை , ஆஸ்திரேலியா.

➢ உலகில் காணப்படும் பெருங்கடல்கள் எத்தனை ? – **ஐந்து**

1. பசிபிக் பெருங்கடல், 2. அட்லாண்டிக் பெருங்கடல், 3. இந்திய பெருங்கடல்
4. ஆர்டிக் பெருங்கடல், 5. அண்டார்டிக் பெருங்கடல்

➢ **பசிபிக் பெருங்கடல்**
- ✓ உலகின் ஆழமான பெருங்கடல் இதுதான்.
- ✓ உலகின் மிகப்பெரிய ஆழமான பகுதி – மரியானா அகழி
- ✓ மரியானா ஆழியில் இமயமலையை கூட அமிழ்த்து விடலாம்.

➢ **அட்லாண்டிக் பெருங்கடல்**
- ✓ உலகின் இரண்டாவது பெருங்கடல்
- ✓ இப்பெருங்கடலில் வலிமை கொண்ட சூறாவளிகள் உருவாகிறது.

➢ **இந்தியப் பெருங்கடல்**
- ✓ உலகின் மூன்றாவது பெருங்கடல் இந்தியப் பெருங்கடல்

➢ **அண்டார்டிக் பெருங்கடல்**
- ✓ இது தென் பெருங்கடல் என்றழைக்கப்படுகிறது.

➢ **ஆர்டிக் பெருங்கடல்**
- ✓ வட துருவப் பகுதியில் அமைந்துள்ள மிகச்சிறிய பெருங்கடல்
- ✓ பனிப்பாறைகள் மிகுந்த பெருங்கடல்

➢ பூமியின் மேற்பகுதி நிலக் கோளம் (லித்தோஸ்பியர்)

➢ பூமியின் நீர் தேங்கிய பகுதி – நீர்க் கோளம் (ஹைட்ரோஸ்பியர்)

➢ பூமியின் பனி படர்ந்த பகுதி – வளி மண்டலம் (அட்மோஸ்பியர்)

➢ நிலக்கோளம், நீர்கோளம், வளிமண்டலம் ஆகிய மூன்றும் இணைந்த பகுதி – உயிர்க்கோளம் (பயோஸ்பியர்)

➢ மூன்று பக்கம் கடல், ஒரு பக்கம் நிலம் **–** தீபகற்பம் (எ.கா இந்தியா)

➢ மூன்று பக்கம் நிலம் ஒரு பக்கம் நீர் **–** விரிகுடா (எ.கா வங்காள விரிகுடா)

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

- மூன்று பக்கம் நிலம் ஒரு பக்கம் கடல் ஆனால் சிறியதாக இருந்தால் – வளைகுடா (Gulf) (எ.கா மன்னார் வளைகுடா
- விரிந்த நிலப்பரப்புகளிக்கிடையே, மிகக்குறுகிய நிலப்பரப்பு அமைந்தால் – நிலச்சந்தி (இஸ்தாமஸ்) (எ.கா பனாமா நிலச்சந்தி)
- பனாமா நிலச்சந்தி இணைப்பது –தென் அமெரிக்கா, வட அமெரிக்கா
- பூமிக்கருவின் வெப்பநிலை – 5000°C
- பூமிக்கருவிற்கு மேல் காணப்படுவது – இடை மண்டலம் (மேன்டில்)
- மேன்டில் அடுக்கில் 85% கனிமப் பொருட்கள் காணப்படுகிறது.
- கடல்களும், கண்டங்களும் காணப்படும் மேலோடு – பூமி ஓடு (கிரஸ்ட்) (தடிமன் 5 முதல் 10 கி.மீ. வரை)
- பூமியின் வடிவம் ஆங்கிலத்தில் – ஜியாய்ட்
- பூமியின் கிடைமட்டமாக கிழக்கு மேற்காக செல்லும் கற்பனை கோட்டின் பெயர் – அட்ச கோடு
- செங்குத்தாக தெற்கு வடக்காக செல்வது – தீர்க்க கோடு
- பூமியின் மையத்தில் கிழக்கு மேற்காக செல்வது – நில நடுக்கோடு
- பூமியின் மொத்த கோண அளவு – 360°
- நில நடுக்கோடு எந்த டிகிரியில் அமைந்துள்ளது – 0°
- உலகில் முதன் முதலில் வரைபடத்தில் அட்சகோடு, தீர்க்க கோடுகளை வரைந்தவர்– டாலமி (கி.பி. 2–ம் நூற்றாண்டு)
- டாலமி என்பவர் – கிரேக்க வானவியல் அறிஞர்
- வானவியல் ஆராய்ச்சி கூடம் உள்ள இடம் – கிரீன் வீச் (லண்டன்) (இங்கிலாந்து)
- கிரீன் வீச் வழியே தீர்க்க கோடு 0° செல்வதால் இதனை கீரின் வீச் தீர்க்க கோடு என்று அழைக்கிறோம்.
- இந்தியா – 8° வ அட்சகோடு முதல் 37°வ அட்சக்கோடு வரையும் 68° கி தீர்க்ககோடு முதல் 97°கி தீர்க்ககோடு வரையிலும் பரவியுள்ளது

7–ம் வகுப்பு – (புவியியல்)

- பூமி மற்றும் கோள்களின் தோற்றம் பற்றி கூறும் கொள்கை – பெரு வெடிப்பு கொள்கை (அ) காஸ்மிக் வெடிப்பு கொள்கை.

- பேரண்டம் விரிவாகிறது, மேலும் ஒன்றை ஒன்று விலகி செல்கிறது என்று கூறியவர்– எட்வின் ஹபிள்
- பெருவெடிப்பு சோதனையை பரிசோதனை செய்யும் கருவி – லார்ஜ் ஹெட்ரான் கொலாய்டர்
- தென் துருவ மிகப்பெரிய நிலப்பகுதி – பான்ஜியா (கிரேக்க சொல்)
- பான்ஜியா என்பதன் பொருள் – எல்லா நிலமும்
- நிலப்பகுதியை சுற்றி இருந்த நீர்பகுதி – பெந்தலாசா (கிரேக்க சொல்) (எல்லா நீரும்)
- பான்ஜியா பல தட்டுகளாக உடைந்தது – அவையே நிலக்கோள் தட்டு எனப்படும்.
- தட்டுகளில் மிகப்பெரியது – பசிபிக்தட்டு (1/5 பங்கை கொண்டது)
- இமயமலை ஒவ்வொரு ஆண்டும் – 5 மி.மீட்டர் அளவிற்கு உயர்கின்றது.
- புவி மூன்று அடுக்கு கொண்டது.
  1. மேலோடு, 2. கவசம் , 3. கருவம்
- புவி உள்ளமைப்பு கோட்பாட்டை உருவாக்கியவர்– ஐசக் நியூட்டன்
- மேலோடு, கவசம், கருவம் ஆகியவற்றை சியால், சிமா, நைஃப் என மாற்றி பெயரிட்டவர்– சூயஸ் (ஆஸ்திரியா)
- மேலோடு (அ) நிலக்கோளம் (சராசரி அடர்த்தி – 3 ஆகும்)
- நிலப்பகுதி சியால் (சிலிக்கா மற்றும் அலுமினியத்தினால் ஆனது) தடினமானது.
- கடலடியில் சிமா (சிலிக்கா மற்றும் மெக்னீசியம் ஆனது) இது பசால்ட் அடுக்கால் உருவனாது.
- **கவசம் (இரண்டாவது அடுக்கு) (அடர்த்தி எண் 8)**
  - பூமியின் எடையில் 83% கொண்டுள்ளது.
  - இவைதான் கண்ட நகர்வை உருவாக்குகிறது.
  - இவ்வடுக்கு மேல் காணப்படுவது – அஸ்தினோஸ்பியர்
  - இவ்வடுக்கின் கீழ் பகுதியில் மாக்மா (குழம்பு) காணப்படுகிறது.
- **கருவம் (பேரிஸ்பியர்) – சராசரி அடர்த்தி எண் 12**
  நிக்கல் + இரும்பு இருப்பதால் நைஃப் எனவும் கூறப்படுகிறது.
  பூமியின் காந்த விசையை உற்பத்தி செய்யும் அடுக்கு
- **கருவம் இரண்டு வகை**
  1. திரவ நிலை, 2. திட நிலை
- புவி மேலோட்டியிலிருந்து கீழ் நோக்கி செல்ல செல்ல வெப்பநிலை அதிகரித்து கொண்டே செல்கிறது.
- புவியின் மையப்பகுதி வெப்பநிலை – 5000°C
- ஒவ்வொரு 32 மீட்டர் ஆழத்திற்கும் 1°C வெப்பநிலை அதிகரித்து கொண்டே செல்கிறது.
- பூமியின் மேலோடு நிலையானது அல்ல.
- இமய மலை முன்னொரு காலத்தில் – டெத்திஸ் கடலாக இருந்தது.
- பூமியின் மேலோட்டை உருக்குலையச் செய்து ஒழுங்கற்ற நிலத்தோற்றம் உருவாகியது
- உள்இயக்க சக்தி (எண்டோஜெனிக்) (கண்ட நகர்வு)
- மெதுவாக நகர்தல் என்பது – டையஸ்ரோஸ்பியர்.
- செங்குத்து நகர்வானது மேல்நோக்கி தள்ளப்பட்டால் தோன்றுவது – 1. பிதிர்வு மலை (அ) பீடபூமி
- செங்குத்து நகர்வானது கீழ்நோக்கி தள்ளப்பட்டால் தோன்றுவது – 1. பிளவு பள்ளத்தாக்கு – கொப்பரை
- பூமியின் மேலோட்டில் மிகப்பெரிய செங்குத்து நகர்வின் பெயர் – எபிரோஜெனிக் (அ) கண்ட ஆக்க நகர்வு.

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

- நர்மதை பள்ளத்தாக்கு தோன்ற காரணம் – கண்ட ஆக்க நகர்வு (அ) எபிரோஜெனிக் நகர்வு.
- புவியோட்டில் மிகப்பெரிய கிடைமட்ட நகர்வு – மலையாக்க நகர்வு (ஒரோ ஜெனிக்)
- உலகில் மடிப்பு மலை தோன்ற காரணம் – மலையாக்க நகர்வு (எ.கா. இமய மலை)
- புவியின் மேலோட்டில் உள்ள ஒழுங்கற்றப் பகுதிகளை களைந்து சமநிலைபடுத்துவது ?
  வெளிஇயக்க சக்தி (அ) எக்ஸோஜெனிக்.
- புவிமேலோட்டில் திடீரென நிகழும் அசைதல் (அ) நடுங்குதல் – நிலநடுக்கம்.
- நிலநடுக்கம் தோன்றும் இடம் – நிலநடுக்க மையம்
- நிலநடுக்கோட்டு மையத்திற்கு நேர் எதிரே பூமியின் மேற்பரப்பில் அமைந்திருக்கும் புள்ளி – எ.கா. வெளி மையம்
- நிலநடுக்க அலைகளை பதிவு செய்வது – சிஸ்மோகிராஃப் (ரிக்டர் அளவுகோல் பயன்படுத்தப்படுகிறது) (0 முதல் 9 ரிக்டர் அளவுகள் இருக்கும்
- நில நடுக்க அலைகள் – 2 வகைப்படும்.

நில நடுக்க அலைகள்

பாடி வேய்ஸ்
(உட்புற அலைகள்)

சர்பேஸ் வேய்ஸ்
(மேற்புற அலைகள்)

(அனைத்து திசைகளும் பரவும்)

P- அலை
மிக வேகமாக பயணிக்கும்
(ஒலி, வாயு, திரவ, திடபொருட்களில் ஊடுருவிச் செல்லும்)

(ஒரு நொடிக்கு 8 கி.மீ வேகத்தில் பயணிக்கும்)

S – அலை
மெதுவாக பயணிக்கும்
(திடநிலை பொருட்களில் மட்டும் ஊடுருவும்)

(ஒரு நொடியில் 5 கி.மீ வேகத்தில் பயணிக்கும்)

L- அலை (அ) மேற்புற அலை

நிலநடுக்க மானியில் இறுதியாக பதிவாகிறது. பூமியில் அதிக அழிவுகளை ஏற்படுத்துவது – L – அலை.

(ஒரு நொடிக்கு 4 கி.மீ வேகத்தில் பயணிக்கிறது).

- வெப்பமான பாறைக் குழம்பை திறப்பு மற்றும் துளை வழியாக புவியின் மேற்பரப்பில் படிய வைப்பது – எரிமலை (இந்த பாறை குழம்பிற்கு லாவா என்று பெயர்)

எரிமலை 3 வகைப்படும்

எரிமலை

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

செயல்படும் **எரிமலை**	தணிந்த (உறங்கும்)	உயிரற்ற
1)மோனோலோவா (ஹவாய் தீவு)	1. வெசூவியஸ் – இத்தாலி	1.கிளிமாஞ்சாரோ (ஆப்பிரிக்கா)
2)பாரன்தீவு எரிமலை (இந்தியா)	2. மௌனகியா–ஹவாய் தீவு	2. நார்கண்டம் தீவு (வடக்கு அந்தமான்)
		3. திருவண்ணாமலை குன்று
		4. பனகா குன்று (ஆந்திரா)

- மிசிசிபி ஆறு– (வட அமெரிக்கா) மினோஸ்டாவின் இட்ஸ்கா ஏரியில் உருவாகிறது.

கங்கை

1. இந்திய துணைக்கண்டத்தின் நீண்ட ஆறு கங்கை
2. கங்கை வங்காளதேசத்தில் இறுதிஅடைகிறது.
3. உத்ரகாண்டில் உள்ள இமயமலையில் உருவாகி, 10,00,000 ச.கி.மீ வடிவ நிலத்தை உருவாக்கிறது.
4. இந்தியாவின் தேசிய ஆறாகும்.

- உலகின் நீண்ட கடற்கரை – மியாமி (அமெரிக்கா)
- உலகின் நீண்ட 2– வது கடற்கரை – மெரினா (சென்னை)
- பனிப்பாறைகள் நகர்வதால் தோன்றுவது – பனியாறுகள்.
- பனியாறுகள் காணப்படாத கண்டம் எது ? – ஆஸ்திரேலியா
- மலைகளின் மேல் அமைந்துள்ள பனியாறுகள் – பள்ளதாக்கு பனியாறுகள் (அ) ஆல்ஃபைன் பனியாறுகள் என்றழைக்கப்படுகிறது.
- கண்டப் பனியாறுகள் என்பது – ஆர்டிக் பிரதேசத்தில் காணப்படும் பனியாறு ஆகும்.
- பனியாறுகள் பறித்தெடுத்தல் செயலினால் உருவாகும் நாற்காலிபோன்ற அமைப்பினை கொண்டிருக்கும் நிலத்தோற்றம் – சர்க் எனப்படும்
- பள்ளத்தாக்கானது பனியாற்றினால் அரிக்கப்பட்டு ஆழப்படுத்தப்படுவதால் உருவாவது – “U” வடிவ பள்ளத்தாக்கு
- முதன்மை கண்டப் பனியாறு, துணைப் பனியாற்றினை விட அதிக அளவு அரிப்புத்திறன் கொண்டிருக்கும் போது உருவானது – “தொங்கும் பள்ளத்தாக்கு”
- மொரைன் என்பது – பாறைத் துகள், துண்டுகள், பாறை உருண்டை, சேறுகள் ஆகியவை கலந்த கலவை
- பாலைவனம் காற்றினால் அரிக்கப்பட்டு நீண்ட மலைத்தொடர் போல் காட்சி அளிப்பது– யார்டாங்.
- பாலைவனம் காற்றினால் அரிக்கப்பட்டு குன்று போல காட்சி அளிப்பது – இன்சல் பர்க்குகள்.
- பிறைச்சந்திர வடிவ மணற்குன்றுகள் – பர்கான் என்றழைக்கப்படுகிறது.
- குறுகலான மணற்குன்றுகள் – செஃப் (அ) நீள் வடிவ மணற்குன்றுகள்.
- பாலை வனத்திற்கு அருகாமையிலுள்ள படிந்திருக்கும் நுண்ணிய மணல் துகள்கள் – லோயஸ் ஆகும்.
- வெப்பமண்டலம் பகுதியின் முக்கிய பயிர் – நெல்
- மிதவெப்பமண்டலம் பகுதியின் முக்கிய பயிர் – கோதுமை
- Ice Cream – தமிழ் சொல் – பனிக்கூழ்
- Coffee (காப்பி) தமிழ் சொல் – குளம்பி
- Tea (டீ) தமிழ் சொல் – தேநீர்

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

- 24 மணி நேரத்திற்குள் நிலவும் வளிமண்டலத்தின் நிலை – வானிலை ஆகும்.
- காலநிலை என்பது – கிளைமா என்ற கிரேக்க சொல்.
- காலநிலை என்பது ஒழுங்கிலிருந்து விலகுதல்.
- சூரியனின் வெப்பக்கதிர்களை நேர்கதிராக பெறும்பகுதி – நிலநடுக்கோடு பகுதி.
- துருவப்பகுதிகளில் வெப்பக்கதிர்கள் சாய்வாக விழுகின்றது – எ.கா மாங்கோ (ரஷ்யா)
- சமவெளி பகுதியைக் காட்டிலும் மலைகளில் காற்றின் அடர்த்தி குறைவாக காணப்படுவதால் மலைகள் குளிர்ந்து காணப்படுகிறது.
- காலிபாத்திரம் – நிலம்
- தண்ணீர் பாத்திரம் – கடல்
- நிலப்பரப்பில் வெப்ப காற்றின் காரணமாக கோடையில் வெப்பம் அதிகமாகவும், குளிர் காலத்தில் குளிர் அதிகமாகவும் காணப்படும் நிலைக்கு – தீவிரக் காலநிலை மற்றும் கண்டக் காலநிலை என்கிறோம்.

<u>கடல் நீரோட்டங்கள் – 2 வகைப்படும்</u>

1. வெப்ப நீரோட்டம் – கடலில் பனிப்பாறை உருவாகாமல் தடுக்கிறது.
2. குளிர் நீரோட்டம் – பனிப்பாறை உருவாக்கும்.

- கடல் வாழ் நுண்ணுயிரிகள் வளர தக்க சூழ்நிலை நிலவும் இடம் – வெப்ப மற்றும் குளிர் நீரோட்டங்கள் சந்திக்கும் இடம்.
- கடல் போக்குவரத்தை பாதிக்கும் காரணி – 1. மூடுபனி , 2. தாழ் முகில்
- நிலத்திலிருந்து வீசும் காற்று – வெப்பக் காற்று
- ஈரமான காற்றிற்கு உதாரணம் – தென்மேற்கு பருவக்காற்று.
- பருவக்காற்று பொய்தலுக்கு முக்கிய காரணம் – எல்நினோ (என்பது ஸ்பானிய சொல்)
- எல்நினோ என்பதன் பொருள் – குழந்தை ஏசு.
- எல்நினோ காற்றின் காலம் – 5 முதல் 6 ஆண்டுகள் வரை
- எல்நினோவின் விளைவுகள் ஏற்பட்ட பகுதி ?
    1. புதர் தீ, வறட்சி – ஆஸ்திரேலியா
    2. பஞ்சம் – இந்தோனேஷியா
    3. காட்டு தீ – பிரேசில்
- சூரிய கதிர் புவியை அடைய எடுத்து கொள்ளும் நேரம் – 8 நிமிடம் 20 வினாடி
- சூரிய கதிர் புவியை அடைய எடுத்து கொள்ளும் முறை – கதிர் வீசல் முறை

<u>சூரிய கதிர்கள் பூமியை அடைந்து மூன்று வழிகளில் செயல்படுகிறது.</u>

1. வளிமண்டலத்தில் கதிர்வீசல் 2. நிலத்தில் கடத்தல் முறை 3. நீரில் வெப்பச்சலன முறை.

- பூமியின் வளிமண்டலமானது சூரிய கதிர் வீசலை விட புவிகதிர் வீசலால் அதிக வெப்பம் அடைகிறது.
- ஜப்பான் நாட்டைத் தவிர பிற ஆசிய நாடுகள் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களை இறக்கமதி செய்யும் நாடுகளாகும்.

ஆஸ்திரேலியா

- வேளாண்மை பொருள்கள் மற்றும் கனிமங்களை ஏற்றுமதி, செய்வதுடன் உணவு தானியங்கள், எண்ணெய் மற்றும் இயந்திரங்களை இறக்குமதி செய்கின்றது.

போக்குவரத்து மற்றும் தகவல் தொடர்புகள்

ஒரு நல்ல போக்குவரத்துத் தொகுதி அப்பகுதியிலுள்ள ஆதாரங்கள் மற்றும் மனித சக்தியை எடுத்துச் செல்லவும் பரிமாறிக் கொள்ளவும் பயன்படுகிறது.

முக்கிய போக்குவரத்து தொகுதிகள்:

சாலைப் போக்குவரத்து

- சாலைகளின் அடர்த்தி (ஒரு நாட்டின் மொத்த பரப்பிற்கும் அந்நாட்டின் சாலைகளின் மொத்த நீளத்திற்கும் உள்ள விகிதம்) மக்கள் அடர்த்தி (ஒரு நாட்டின் மொத்த பரப்பிற்கும் அந்நாட்டின்

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

மொத்த மக்கள் தொகைக்கும் உள்ள விகிதம்) மற்றும் ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சி நிலை ஆகியவை ஒரு நல்ல தொடர்புடையனவாக திகழ்கின்றன.

- சாலைகளை கண்டங்களுக்கு இடையேயான சாலைகள் (Transconitinental roads) , தேசிய சாலைகள், மற்றும் உள்ளூர் சாலைகள் என வகைப்படுத்தலாம்.
- கண்டங்களுக்கு இடையேயான சாலைகள் ஒரு எல்லையிலிருந்து மற்றொரு எல்லைக்கு இணைக்கம் நீண்ட சாலைகள் ஆகும். டிரான்ஸ் கனடியன் நெடுஞ்சாலை, அலாஸ்கன் நெடுஞ்சாலை மற்றும் ஆஸ்திரேலிய டிரான்ஸ் நெடுஞ்சாலை, ஆகியவவை இதற்க எடுத்துக்காட்டுகளாகும்.
- வாகன வேகம் மற்றும் வாகன எண்ணிக்கையின் வளர்ச்சி ஆகிய இரண்டும் அதிகரித்துக் கொண்டிருப்பதால், பல்வழி தேசிய நெடுஞ்சாலை வளர்ச்சிக்கும் வழிவகுத்துள்ளது. ஜெர்மனியில் உள்ள 'ஆட்டோபான்ஸ் சாலைகள்' முதலில் அமைக்கப்பட்ட இத்தகைய சாலைகள் ஆகும்

இந்தியாவின் கிராண்ட் டிரங்க் சாலை

- 2500 கி.மீ நீளமுள்ள கிராண்ட் டிரங்க் சாலை இந்தியாவின் நீளமான, முதன்மையான சாலையாகும். இந்நெடுஞ்சாலை வங்காள தேசத்திலுள்ள சோனார்கள் என்ற இடத்திலிருந்து பாகிஸ்தானிலுள்ள பெஷாவர் என்ற இடத்திற்க வட இந்தியாவின் வழியாக இணைக்கப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு மற்றும் கேரள கடற்கரைப் பகுதிகளிலும், மேற்கு வங்காளம், பஞ்சாப், அரியான மற்றம் உத்திரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களிலும் சாலைப்போக்குவரத்து வலையமைப்பு மிக அடர்த்தியாகக் காணப்படுகிறது.

இரயில் போக்குவரத்து

- கனமான பொருட்களை நீண்ட தூரத்திற்கு, வேகமாகவும், குறைந்த செலவிலும், கொண்டு செல்வதற்குப் இப்போக்குவரத்து பயன்படும்.
- மிகவும் வளர்ச்சியடைந்த தொழிற்சாலைப் பகுதிகளான ஐரோப்பா மற்றும் வட அமெரிக்க நாடுகளில் இரயில் போக்குவரத்து வலையமைப்பு மிகவும் அடர்த்தியாக உள்ளது.
- ஜப்பான், இந்தியான, தென்கிழக்கு, ஆஸ்திரேலியா மற்றும் அர்ஜென்டினா கடற்கரைப் பகுதிகளில் இரயில் போக்குவரத்து வலையமைப்பு மிதமான அடர்த்தியுடன் அமைந்துள்ளது.
- டிரான்ஸ் சைபீரியன் இரயில் பாதை கண்டங்களுக்கு இடையேயான ஒரு இருப்புப் பாதையாகும். இது ரஷ்யாவின் பால்டிக் கடற்கரையில் அமைந்துள்ள லெலின்கிராட் என்ற இடத்தினை, பசுபிக் கடற்கரைப் பகுதியில் அமைந்துள்ள விளாடிவாஸ்டாக் என்ற இடத்துடன் இணைக்கிறது.
- டிரான்ஸ் கனடியன் இரயில் போக்குவரத்து கனடாவின் கிழக்கு மற்றும் மேற்கு கடற்கரைப் பகுதியினை இணைக்கிறது. டிரான்ஸ் ஆண்டியன் இருப்புப்பாதை பியோனஸ்ஏர்ஸ் (அர்ஜெண்டினா) பகுதியை வால்பரைசோ (சிலி) பகுதியுடன் இணைக்கிறது.
- டிரான்ஸ் ஆசிய இரயில் போக்குவரத்து சிங்கப்பூரினை, 28 நாடுகளின் வழியாக 18,000 கி.மீ தொலைவில் உள்ள துருக்கியின் இஸ்தான்புல் பகுதியுடன் இணைக்கிறது.
- இந்தியாவின் இரயில் போக்குவரத்து ஆசியா கண்டத்திலேயே மிகப் பெரியது. மேலும் உலகில் இரண்டாவது இடத்தை வகிக்கின்றது.
- கங்கைச் சமவெளியில் உள்ள உத்திரபிரதேசம், பீகார் மற்றும் மேற்குவங்காளம் ஆகிய இடங்களில் இரயில் போக்குவரத்து மிகவும் அடர்த்தியாக உள்ளது.
- உலகிலேயே மிக அதிகளவு வேலை வாய்ப்பினை இந்திய இரயில் போக்குவரத்து அளிக்கிறது.
- எம்.ஆர்.டி.எஸ் என்பது தமிழ்நாட்டில், சென்னையில் அமைக்கப்பட்டுள்ள, உயர்பகுதியில் அமைந்துள்ள இரயில் போக்குவரத்து ஆகும். தற்போது இச்சேவை 17 இரயில் நிலையங்களோடு

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

சென்னை கடற்கரை இரயில் நிலையத்திலிருந்து வேளச்சேரி இரயில் நிலையம் வரையிலான 25 கி.மீ தூரத்திற்கு செயல்படுகிறது.

நீர் வழிப் போக்குவரத்து

- மலிவான போக்குவரத்து வழியாகும். அவற்றை உள்நாட்டு நீர்வழி மற்றும் கடல்வழிப் போக்குவரத்து என இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம்.
- மிக முக்கியமாக உள்நாட்டு நீர் வழிகள், தொழில் துறையில் முன்னேறிய மேற்கு ஐரோப்பிய நாடுகள் (ரைன், ரோன், டான்யூப் மற்றும் எல்ப் ஆறுகள்) வட அமெரிக்கா மற்றும் கனடாவில் (பெரிய ஏரிகள்) காணப்படுகின்றன. இவ்வுள்ளூர் நீர்வழிகள் இரயில் போக்குவரத்துடன் இணைந்து தொழில் வட்டாரங்களுக்கு அதிக அளவு பொருள்களை குறைந்த விலையில் எடுத்துச் செல்ல உதவுகிறது.
- இந்தியாவில் உள்நாட்டு நீர்வழிகள் அஸ்ஸாமிலுள்ள பிரம்மபுத்ரா ஆற்றிலும் கங்கை மற்றும் அதன் துணை ஆறுகள் பாயும் உத்திரப்பிரதேசம் மற்றும் பீகாரில் காணப்படுகிறது.
- பக்கிங்காம் கால்வாய் தமிழ்நாட்டில் ஒரு முக்கியமான உள்நாட்டு நீர் வழியாய் இருந்தது. இக்கால்வாய் போக்குவரத்து நெல்லூருக்கும் மரக்காணத்திற்கும் இடையே பொருள்களை கொண்டு செல்ல பயன்படுத்தப்பட்டது. ஆனால், இவ்வழி தற்போது மாசடைந்து வருந்தத்தக்கதாய் உள்ளது.

கடல்வழி போக்குவரத்து

- கண்டங்களுக்கிடையே பயணம் செய்வதற்கு கடல்வழிப் போக்குவரத்து முக்கியமான ஒன்றாகக் கருதப்பட்டது. ஆனால் இன்று அதிக எடையுள்ள பொருள்களை எடுத்துச் செல்வதற்கு மட்டுமே பயன்படுகிறது.

உலகின் முக்கிய கப்பல் போக்குவரத்து வழிகள்

- **வட அட்லாண்டிக் வழி :** இது மக்கள் நிறைந்த பகுதியாகிய மேற்கு ஐரோப்பிய நாடுகளையும் வட அமெரிக்காவில் கிழக்குப் பகுதிகளையும் இணைக்கும் வழியாகும்.
- **பனாமா கால்வாய் வழி :** இது வட மற்றும் தென் அமெரிக்காவின் மேற்கு கடற்கரைப் பகுதிகளை அக்கண்டங்களின் கிழக்கு கடற்கரை பகுதிகளோடு இணைக்கும் வழியாகும்.
- **பசுபிக்டிரான்ஸ் வழி:** இது கிழக்காசிய துறைமுகங்களை வட அமெரிக்காவின் மேற்கு கடற்கரை துறைமுகங்களோடு இணைக்கும் வழியாகம்.
- கொல்கத்தா, பாரதீப், விசாகப்பட்டினம், சென்னை, தூத்துக்குடி, கொச்சின், மங்களூர், கோவா, மும்பை மற்றும் காண்ட்லா ஆகியவை இந்தியாவில் உள்ள சில முக்கியத் துறைமுகங்களாகும்.

வான்வழிப் போக்குவரத்து

- நேரத்தை சேமிப்பது மட்டுமல்லாமல் தொலைதூரத்திற்கு களைப்பின்றி வெகு விரைவில் சென்றடைய ஏதுவாக இருப்பதால், மிகவும் புகழ்பெற்ற ஒரு சேவையாகக் கருதப்படுகிறது.

குழாய் போக்குவரத்து

- எண்ணெய் மற்றும் இயற்கை வாயுவை ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குக்கு கொண்டு செல்ல பயன்படுகிறது.

சில எண்ணெய் குழாய் போக்குவரத்துகள்

- பெரிய இன்ச் லைன் (Big Inch Line) டெக்சாஸ் முதல் நியூஜெர்சி வரை செல்லும் குழாய் வழி டாப்ஸ் வட அமெரிக்காவின் டிரான்ஸ் அலாஸ்கா குழாய் போக்குவரத்து டாப் லைன் சவுதி அரேபியாவின் கைசுமா பகுதியிலிருந்து லெபனானில் உள்ள சைடன் பகுதி வரை 1214 கி.மீ தூரத்திற்கு அமைந்துள்ள குழாய்ப் போக்குவரத்து ஆகும்.

தகவல் தொடர்பு

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

- தகவல் தொடர்பு எனப்படுவது வார்த்தைகளும், செய்திகளும் ஒளிபரப்பப்படுவதாகும். தகவல் தொடர்பு எனப்படுவது இருவகைகளாகும். ஆவை தொலைதொடர்பு மற்றும் மக்கள் தொடர்பு ஆகும்.
- தகவல் தொடர்பின் முதற்வளர்ச்சி 1844ல் கண்டுபிடிக்கப்பட்ட தந்தித் தொடர்பு ஆகும். 1875ல் கண்டுபிடிக்கப்பட்ட தொலைபேசி தொலைத் தொடர்பில் அடுத்த முக்கிய வளர்ச்சியாகும்.
- 1935ல் தந்தி தொடர்பில் (Telex) ஏற்பட்ட வளர்ச்சி செய்திகளை ஒரு இடத்தில் தட்டெழுதி தொலைவுப் பகுதிகளுக்கு அனுப்பும் போது அவை தொலை அச்சில் (Teleprinter) செய்திகளாகப் பெறப்பட்டன.
- பெருமளவு மக்களுக்கு செய்திகளை எடுத்துச் செல்லும் வடிவமைக்கப்பட்ட ஊடக தொடர்பு சாதனங்கள் மக்கள் தொடர்பு சாதனங்கள் என அழைக்கப்படுகின்றன.
- மக்கள் தொடர்பு சாதனங்கள் இரு வகைப்படுகின்றன. அவை அச்சிடப்படும் ஊடகங்கள் (செய்தித்தாள்கள், புத்தகங்கள், வார மற்றும் மாதப் பத்திரிகைகள்) எனவும் மின்னனு ஊடகங்கள் (வானொலி, தொலைக்காட்சி தொலைத்தொடர்பு, இணையதளம் எனவும் பிரிக்கப்பட்டுள்ளன.

மக்கள் தொகை வளர்ச்சியும் வள ஆதாரங்களும்

மக்கள் வேளாண் தொழிலை செய்யத் தொடங்கியபின் உருவான பொருளாதார மாறுபாடு ஏற்பட்ட காலம் முதல், மனிதர்களுக்கும் அவர்களை சார்ந்த சுற்றுப்புற சூழலுக்குமான தொடர்புகள் மாற்றியமைக்கப்பட்டன. அக்காலம் முதல் மக்கள் தொகை வளர்ச்சியடைய தொடங்கின.

மக்கள் தொகை வளர்ச்சி

உலக மக்கள் தொகை 1850 ஆம் ஆண்டு சுமார் 500 மில்லியனை எட்டியது. அப்பொழுது முதல் மக்கள் தொகை அதிகமாக வளர்ச்சியடைய தொடங்கியது.

- உலக மக்கள் தொகை முதன்முதலில் 1804 ஆம் ஆண்டு ஒரு மில்லியனை எட்டியது. 1927 ஆம் ஆண்டு 2 பில்லியனாக 123 ஆண்டுகளுக்குப் பிறகு அதிகரித்தது.
- 1950 ஆம் ஆண்டு முதல் மக்கள் தொகை வளர்ச்சித் தொடர்ந்து அதிகரித்துக் கொண்டே வந்துள்ளது.

வருடம்	உலக மக்கள் தொகை (பில்லியன்)	அடுத்த பில்லியன் மக்கள்தொகை அதிகரிக்க எடுத்துக் கொண்ட காலம்
1804	1	
1927	2	123
1960	3	33
1974	4	14
1987	5	13
1999	6	12
2011	7	12

- தொழில்துறை மற்றும் வேளாண் துறையில் ஏற்பட்ட வளர்ச்சி பொருளாதாரத்தின் வளர்ச்சியினை மேம்படுத்தியது. மருத்துவ நலம், உடல்நலம், வெள்ளத்தடுப்பு, தீ விபத்துகளிலிருந்து பாதுகாப்பு போன்றவற்றில் ஏற்பட்ட முன்னேற்றம் இயற்கையில் ஏற்படும் மக்களின் இழப்பைக் கட்டுப்படுத்தியது. எனவே, இறப்புகள் குறைந்து பிறப்புகள் அதிகமாக ஆரம்பித்தன.
- மக்கள் தொகை வளர்ச்சி பிறப்பு விகிதம் மற்றும் இறப்பு விகிதத்தினை பொறுத்தே அமையும்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

- உலகின் வளர்ச்சியடைந்த நாடுகளின் பிறப்பு விகிதம் மற்றும் இறப்பு விகிதம் குறைவாக உள்ளது. வளர்ந்து வரும் நாடுகளின், இறப்பு விகிதம் குறைவாகவும், பிறப்பு விகிதம் அதிகமாகவும் இருப்பதால், அதிக மக்கள்தொகை காணப்படுகிறது. எனவே, அந்நாடுகள் வளர்ந்துவரும் மக்கள் தொகையை கட்டுப்படுத்த பிறப்பு விகிதத்தினைக் கட்டுப்படுத்தும் முயற்சியினை மேற்கொண்டு வருகிறது.

மக்கள் தொகை பரவல் மற்றும் அடர்த்தி

- புவியில், மக்கள் பரவிக் காணப்படும் நிலையினையே மக்கள்தொகை பரவல் என்கிறோம். புவியில் 90 % மக்கள் 10% நிலப்பரப்பிலே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.
- மொனாகோ எனப்படும் மிகச் சிறிய நாட்டின் மக்கள் அடர்த்தி ஒரு சதுர கிலோ மீட்டருக்கு 16.779 மக்கள் ஆகும்.
- மொனாகோ மிகச்சிறய நாடாக (1.95 சதுர கி.மீ) இருப்பினும், அதன் மக்கள் அடர்த்தி மிகவும் அதிகமாகும்.
- மக்கள் தொகை அடர்த்தி மிக அதிகம் உள்ள நாடு வங்காளதேசமாகும். இங்கு 1 சதுர கிலோமீட்டருக்கு 1,069 மக்கள் வாழ்கின்றனர்.
- உலகில் மக்கள் அடர்த்தி மிக குறைவாக உள்ள நாடு மங்கோலியா ஆகும். இங்கு 1 சதுர கிலோமீட்டருக்கு 1.7 மக்கள் வாழ்கின்றனர்.
- ஆஸ்திரேலியா 1 சதுர கிலோமீட்டருக்கு 2.9 மக்களைக் கொண்டு இரண்டாம் நிலையில் உள்ளது.

மக்கள் தொகை பரவல் , அடர்த்தியினை பாதிக்கும் காரணிகள்

இயற்கை காரணிகள் : புறத்தோற்றம், காலநிலை, வள ஆதாரங்கள்

மனித காரணிகள் : அரசியல், சமுதாயம், பொருளாதாரம்

மக்கள் பரவல் மற்றும் அடர்த்தி (கண்டங்கள்)

கண்டம்	மக்கள் தொகை (மில்லியன்)	உலக மக்கள் தொகை (%)	அடர்த்தி
ஆசியா	3800	60	203
ஆப்பிரிக்கா	840	12	65
ஐரோப்பா	710	11	134
வடஅமெரிக்கா	514	08	32
தென்அமெரிக்கா	371	5.3	73
ஆஸ்திரேலியா	21	0.3	6.4

- பெருகிவரும் மக்கள்தொகை கிடைக்கப்பெறுகிற வளங்கள், நிலம் மற்றும் நீர்வளத்தில் அதிக அழுத்தத்தை ஏற்படுத்தி உள்ளது.
- வளருகின்ற நாடுகள் அதிக மற்றும் வளருகின்ற மக்கள் தொகையால் குறைந்த, வட்டார சூழ்நிலையில் அமைந்துள்ள குறைந்த அளவு வளங்களின் மீது அழுத்தம் ஏற்படுத்துகின்றன. இத்தகைய நாடுகள் மிகந்த போராட்டத்துடன், உணவு, நன்னீர், மரங்கள் மற்றும் எரிபொருள் போன்ற வளருகின்ற தேவைகளை சந்திப்பதற்கான இனிமையான சுற்றுச்சூழலை மாற்றி அமைகின்றன.
- வளர்ந்துவிட்ட நாடுகளிடம் புவியின் வளங்கள் இருப்பதுடன் அதிக அளவும் அவற்றை பயன்படுத்துகின்றன.

நன்னீர்

- கடந்த நூற்றாண்டில் நீரின் உபயோகத்தின் அளவு மக்கள்தொகை வளர்ச்சியை விட இரட்டிப்பு ஆகும். உலகில் பகுதிகளில் நீர்த்தேவை நீர் அளிப்பை மிஞ்சி உள்ளது.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

- உலகில் 0.03% நன்னீர் மட்டுமே கிடைக்கப் பெறுகிறது.
- வளரும் நாடுகளில் 95% கழிவு நீர் ஆறுகளில் சேர்க்கப்படுகிறது.
- கி.பி. 2025 ஆம் ஆண்டு 5 பில்லியன் மக்கள் தீவிர நீர் பற்றாக்குறைக்கு ஆட்படுவர்
- இந்தியா 20% மக்கள் தொகையை கொண்டிருக்கிறது. ஆனால் 4% நீரே கிடைக்கிறது.

உ ணவு அளித்தல் மற்றும் கிடைக்கப் பெற்ற நிலம்

- ஆப்பிரிக்கா ஆசியா ஆகிய நாடுகளில் கிராம மக்கள் தொகை 1950 ஆண்டு முதல் 1985 ஆண்டுகளுக்குள் இரட்டிப்பானது. ஆதனால் அதற்கிணையாக கிடைக்கப் பெற்ற நிலத்தின் அளவு குறைவாக உள்ளது.
- நகரங்களில் ஏற்படும் நெருக்கம் காரணமாக பயிரிடும் நிலங்கள் குறைக்கப்பட்டுவிடுகிறது. மக்கள் காடுகளை பயிரிடுவதற்காக அழிக்கின்றனர்.

காடுகளின் அழிவு

- உலகின் 80% இயற்கை காடுகள் மரங்களுக்காகவும், வேளாண் தொழிலின் பயன்பாட்டிற்காகவும், மேய்ச்சல் நில உபயோகத்திற்காகவும் அழிக்கப்படுகின்றன.
- வறட்சி, மண், அரிப்பு, வெள்ளம் மற்றும் வெப்பமயமாதல் ஆகியவவை காடுகளை அழிப்பதால் ஏற்படும் விளைவுகளாகும்.

பாலைவனமாதல்

- மூன்றில் ஒரு பகுதி (35%) பாலைவனமாக மாறுவதால், பாலைவனமாதல் 110 நாடுகளில் வாழ்கின்ற பெரும்பாலான மக்களை பாதிக்கின்றது.

கனிமங்கள்

- கனிமங்களின் தேவை அதிகரிப்பதால் கனிமங்கள் மிக அதிக ஆழத்திற்கு அடியிலிருந்து தோண்டி எடுக்கப்படுகிறது. இது நிலத்தடி மாசுபடுத்துவது மட்டுமின்றி நீர்மட்ட அளவினையும் குறைத்து விடுகிறது.

எரிபொருள்

- உலகின் 80% வணிக பயன்பாட்டு ஆற்றல் புதுப்பிக்க முடியாத நிலக்கரி எண்ணெய் மற்றும் இயற்கை வாயு போன்ற எரிபொருள்கலிருந்து கிடைக்கப் பெறுகிறது.

நிலம் பாழடைதல்

- அதிகமான அளவு காடுகளின் அழிவினால் நிலச்சரிவும், மண் அரிப்பு, மண்ணின் தரக்குறைவு, அதிக நீர்தேங்குதல், நீர்ப்பாசனப் பகுதிகளில் உப்பு படிதல், சுரங்கங்களில் முறைகேடற்ற சுரங்கமுறைகள், குவாரிங், சாலைபோடுதல் மற்றும் உபயோகமற்ற பொருள்களையும் குப்பைகளையும் கொட்டுதல் போன்ற செயல்களால் நிலம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது.

தொலை நுண்ணுணர்வு நுட்பங்களும் வள ஆதாரங்களும்

- மனித நலம் மேம்பட உலகில் கிடைக்கும் குறைந்து வரும் வள ஆதாரங்கள் ஒருங்கிணைந்து, திட்டமிட்டு பகிர்ந்து கொள்ளும் அவசியம் ஏற்பட்டுள்ளது. இதற்கு வளங்களில் பரவல்களையும் அவற்றின் இருப்புகளின் அளவுகளையும் பற்றி புரிதல் என்பது ஆகும்.
- முதல் செயற்கை கோள் ஸ்புட்னிக்–1 என்பது சோவியத் யூனியனால் 1951 ஆம் ஆண்டு முதலில் செலுத்தப்பட்ட செயற்கை கோளாகும்.
- தொலை நுண்ணுணர்வு செயற்கை கோள்கள் இயற்கை வள ஆய்வுகளிலும், சுற்றுச்சூழல் கண்காணிப்பிலும் மேலாண்மை பயன்பாட்டிலும் முக்கிய பங்கு வகிக்கின்றன.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

- அமெரிக்க ஐக்கிய நாட்டின் லாண்ட் சாட், பிரான்சின் ஸ்பாட், காரியாவின் கிட்சாட் மற்றும் சீனாவின் யாங்கான் ஆகிய செயற்கைக் கோள்கள் தொலை நுண்ணுணர்வு செயற்கை கோள்களில் முக்கியமானதாகும்.
- இந்தியாவின் முதல் தொலை நுண்ணுணர்வு செயற்கை கோளாகிய IRS – 1Aஎனப்படும் செயற்கைக்கோள் 1988 ஆம் ஆண்டு விண்ணில் செலுத்தப்பட்டது. இதனை தொடர்ந்து IRS – 1B, 1C, 1D, P3, P5, P6 கார்டோசாட் (CARTOSAT) மற்றும் ரிசோர்ஸ்சாட் (RESOURCESAT)o ஆகியவை செலுத்தப்பட்டுள்ளன.
- தொலை நுண்ணுணர்வு புள்ளி விவரங்கள் மதிப்புள்ள பயனள்ள தகவல்களைத் தருகிறது. புவி அமைப்பியல், மண்வளம், இயற்கை தாவரங்களின், பரப்பு நீர்நிலைகள், கனிமங்கள் ஆகிய நில வளத்தினை பற்றிய தகவல்களை தருகிறது. இத்தகைய தகவல்களை பேணத்தகுந்த எதிர்காலத்திற்கு திட்டமிட பயன்பாடு உடையதாக அமைகிறது

வள ஆதாரங்கள்

வள ஆதாரங்களும் அதன் வகைகளும்

நமது புவிக்கோள் பாறைக்கோளம் அல்லது நிலம், நீர்க்கோளம் அல்லது நீர் மற்றும் வளிக்கோளம் அல்லது புவியைச் சுற்றியுள்ள காற்று மண்டலம் என 3 முக்கிய கூறுகளால் உருவாக்கப்பட்டுள்ளது.

- வளர்ச்சியின் அடிப்படையில் வள ஆதாரங்களை, இயலாற்றல் வள ஆதாரங்கள் என்றும் வளர்ச்சியுற்ற வள ஆதாரங்கள் என்றும் 2 பிரிவுகளாக பிரிக்கப்படுகின்றன.
- மக்களால் பயன்படுத்தப்பட முடியாத சூழலில் உள்ள வள ஆதாரங்கள் “ இயலாற்றல் வள ஆதாரங்கள்” என அழைக்கப்படுகின்றன. எ.கா: சைபீரியா, அண்டார்டிக்கா போன்ற இடங்களில் காணப்படும் வள ஆதாரங்கள்.
- மனிதர்களால் பயன்படுத்தப்படும் வள ஆதாரங்களை “வளர்ச்சியுற்ற வள ஆதாரங்கள்” என்றுற அழைக்கப்படுகின்றன. எ.கா: நிலக்கரி, இரும்புத்தாது
- புதுப்பித்தல் அடிப்படையில், வள ஆதாரங்களை புதுப்பிக்க இயலாத / இருப்பு வளங்கள் என்றும் புதுப்பிக்கக்கூடிய / வற்றாத வளங்கள் என்றும் இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

புதுப்பிக்க இயலாத வள ஆதாரங்கள்

- புதுப்பிக்க இயலாத வள ஆதாரங்கள் வற்றக்கூடிய (தீர்ந்து போகக்கூடிய) வள ஆதாரங்கள் என அழைக்கப்படுகிறது. இவ்வளங்களின் இருப்பு நிர்ணயிக்கப்பட்டவை ஆகும்.
- இயற்கையில் இவ்வளங்கள் உருவாக எடுத்துக் கொள்ளும் காலத்தைவிட வேகமாக நம்மால் அவ்வளங்கள் நுகரப்படுகின்றன. எ.கா : புவியின் கனிம சுரங்கங்களிலிருந்து ஒருமுறை எடுக்கப்பட்ட கனிம வளங்கள் எடுக்கப்பட்டவையே. அவற்றை மீண்டும் நம்மால் உருவாக்கவோ அல்லது திரும்பபெறவோ இயலாது.
- அதிமாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கும் கனிமங்களின் வகைகள்
- உலோகக் கனிமங்கள் : உலோகத் தாதுக்கள் அடங்கிய மூலப்பொருட்கள்.
- உலாகமற்ற கனிமங்கள் : என்பது உலோகத் தாதுக்கள் அற்ற மூலப்பொருட்கள்.
- எரிபொருள் கனிமங்கள் : ஆற்றலை உருவாக்கும் கனிமங்கள்.
- ஒரு நாட்டின் பொருளாதார மேம்பாட்டிற்கு அந்நாட்டின் எரிபொருள் கனிமங்களே மிக முக்கியப்பங்கு வகிப்பதால் கனிம வகைகளுள் எரிபொருள் கனிமவளம் முக்கியமானது.
- நிலக்கரி, எண்ணெய், இயற்கைவாயு மற்றும் அணுசக்தி கனிமங்கள் ஆகியவை விரைவில் தீர்ந்து போகும் முக்கியமான எரிபொருள் கனிமங்கள் ஆகும்.

நிலக்கரி

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

- நிலக்கரி பல மில்லியன் வருடங்களாக உருவான கனிமம், எனவே இது 'புதை எரிபொருள்' என அழைக்கப்படுகிறது.
- புவி அமைப்பில் ஏற்பட்ட மாறுதல்களினால் மிகப்பெரிய பரப்புப் காடுகள் படிவுப் படுகைகளில் புதைந்து போயின. காலப்போக்கில் புவியின் வெப்பம் மற்றும் அழுத்தம் காரணமாக புதைந்து போன தாவரங்கள் நிலக்கரியாக மாற்றம் அடைந்தன.
- நிலக்கரியின் தரம் மற்றும் கார்பன் அளவின் அடிப்படையில் பல வகைகளாக பிரிக்கப்படுகிறது. அவையாவன ஆந்தரசைட், பிட்டுமினஸ், லிக்னைட், மரக்கரி.
- உலகின் மிக முக்கியமான நிலக்கரி வயல்கள் அமெரிக்க ஐக்கிய நாடுகள், இரஷ்யா, ஜெர்மனி, ஐக்கிய அரசு போன்ற நாடுகளில் காணப்படுகின்றன.
- ஆசியாவின் நிலக்கரி வயல்கள் சீனா, இந்தியாவில் உள்ளது.
- தமிழ்நாட்டில் உள்ள நெய்வேலியில் லிக்னைட் / பழுப்பு நிலக்கரி கிடைக்கிறது.

எண்ணெய் மற்றும் இயற்கை வாயு

- பொதுவாக எண்ணெய் கடலுக்கடியிலுள்ள படிவுப்பாறைகளான சேற்று மண் படிவுகள் (Mudstone) மென்களிகல் (shale) , மணற்பாறை (Sandstone) போன்ற அடுக்குகளில் காணப்படும்
- புவியின் அடியில் புதைந்துள்ள தாவரம் மற்றும் சுண்ணாம்பு ஓடுள்ள விலங்குகளின் படிமங்கள் புவியின் வெப்பம் மற்றும் அழுத்தத்திற்கு உட்படுத்தப்படுகின்றன. இவை எண்ணெயாக மாறி பாறை இடுக்குகளிலும், பாறைத் துளைகளிலும் காணப்படுகிறது.
- எண்ணெய் அடுக்கிற்கு மேல் லேசான ஹைட்ரோ கார்பன், இயற்கை வாயு வடிவில் காணப்படுகிறது.
- எண்ணெய் படிவுகள் நிலப்பகுதிகளிலும் (Onshore) கடல் பகுதிகளிலும் (Offshore) காணப்படுகின்றன. எடுத்துக்காட்டுகள் : தென்மேற்கு ஆசியாவின் நிலப்பகுதிகளில் காணப்படும் எண்ணெய் வயல்கள் மற்றும் வட கடலின் கண்டத்திட்டு பகுதிகளில் காணப்படும் எண்ணெய் வயல்கள்.
- இந்தியாவின் முக்கியமான எண்ணெய் வயல்கள் அஸ்ஸாம் நிலப்பகுதியில் காணப்படுகின்றன.
- இந்தியாவின் மிகப்பெரிய 'மும்பை ஹை' என்னும் எண்ணெய் வயல், கடற்பகுதியில் அமைந்துள்ளது.
- தமிழ்நாட்டில் காவிரி டெல்டா பகுதிகளில் எண்ணெய் வளம் கண்டறியப்பட்டுள்ளது.

அணு சக்திக் கனிமங்கள்

- யுரேனியம், தோரியம் போன்ற கனிமங்கள் அணுசக்தியை உற்பத்தி செய்யப் பயன்படுகின்றன.
- நமீபியா, கஜகஸ்தான் மற்றும் கனடா போன்ற நாடுகளில் யுரேனியம் அதிக அளவில் உள்ளது.
- உலகிலேயே அதிகளவு (30%) அணுசக்தியை உற்பத்தி செய்யும் நாடு அமெரிக்க ஐக்கிய நாடு.
- அணுசக்தி எரிபொருளை அதிகளவில் (75%) பயன்படுத்தும் நாடு பிரான்சு.

புதுப்பிக்கக்கூடிய வள ஆதாரங்கள்

- அதிகமாக காணப்படுவதுடன் தொடர்ந்து இயற்கையாகவே புதுப்பிக்கப்படுகிறது.
- காற்றாற்றல், புதுப்பிக்கக்கூடிய வள ஆதாரங்கள் மிக முக்கிய வளங்களாகக் கருதப்படுகின்றன.

நீர் மின்சக்தி

- நீர் மின்சக்தி, புதுப்பிக்கக்கூடிய வள ஆதாரங்களுள் வளர்ச்சியடைந்த வளம்.
- உலகில் மிகப்பெரிய ஆறுகள் அதிகமாக உள்ள பகுதிகளில் நீர் மின்சக்தி அதிகமாகப் பயன்படுத்தப்படுகிறது.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

- சீனாவில் உள்ள யாங்டிசி ஆற்றின் குறுக்கே அமைந்திருக்கும் 'முப்பள்ளத்தாக்கு அணையில்' உலகின் மிகப்பெரிய நீர் மின்சக்தி நிலையம் அமைந்துள்ளது.
- இந்தியாவின் மிகப்பெரிய நீர் மின்சக்தி நிலையம் பக்ராநங்கல் அணையில் உள்ளது.

சூரிய ஆற்றல்

- ஒளிமின் வோல்டா மின்கலம் (Photo voltic cells) சூரிய சக்தியை சேமிப்பதற்கு தேவைப்படுகிறது.
- உலகில் அதிக அளவு சூரிய ஆற்றலை உற்பத்தி செய்யும் நாடு ஜெர்மனி.
- அயன மண்டல சூழல் சூரிய ஆற்றலை மிக அதிக அளவில் உற்பத்தி செய்ய ஏதுவாக அமைந்துள்ளது.

காற்று ஆற்றல்

- காற்று வேகமாக தொடர்ந்து வீசும் பகுதிகளில் விசைப்பொறி உருளை (Turbine) பயன்படுத்தி காற்றாற்றல் உற்பத்தி செய்யப்படுகிறது.
- ஐரோப்பா கண்டம் காற்று ஆற்றலை அதிக அளவில் பயன்படுத்துகிறது.
- டென்மார்க்கின் 20% மின்சாரம் காற்று ஆற்றல் மூலமாகப் பெறப்படுகிறது.

உயிரி ஆற்றல்

- மரங்கள், பயிர்கள், வேளாண் மற்றும் விலங்குகளிலிருந்து கிடைக்கும் கழிவுப் பொருட்கள் உயிரி ஆற்றலுக்கு முக்கிய ஆதாரமாகத் திகழ்கின்றன.
- இவ்வனைத்து ஆதாரங்களில் மர எரிபொருளே (விறகு) வளரும் நாடுகளில் மிக முக்கியமாகத் திகழ்கிறது.
- சாண எரிவாயு / மீத்தேன் மாட்டுச் சாணத்திலிருந்து உற்பத்தி செய்யப்படுகின்றன.
- தற்பொழுது உயிரி எரிபொருள் கரும்பிலிருந்தும், ஆமணக்கு வகை தாவரங்களிலிருந்தும் உற்பத்தி செய்யப்படுகின்றன.

வள ஆதாரங்களும் பொருளாதார நடவடிக்கைகளும்

புவியில் மனிதர்களின் தொழில்களை வெவ்வேறு பகுதிகளில் கிடைக்கும் வள ஆதாரங்களே நிர்ணயிக்கின்றன. அவற்றுள் உணவு சேகரித்தல், வேட்டையாடுதல், மீன்பிடித்தல், சுரங்கத்தொழில் உதிரிபாகங்களை ஒன்றிணைத்தல், வியாபாரம் போன்ற பல தொழில்கள் அடங்கும். இத்தகைய தொழில்களால் மனிதர்கள் பொருளாதாரப் பயனை அடைகின்றனர். எனவே , இத்தகைய மனிதர்களின் நடவடிக்கைகள் 'பொருளாதார நடவடிக்கைகள்' என்று அழைக்கப்படுகிறது.

- இத்தொழில்களை, இதன் பரிணாம வளர்ச்சியின் அடிப்படையில் 5 பிரிவுகளாக பிரிக்கலாம்.

முதல்நிலைத் தொழில்கள்

- மனிதர்கள்ள இயற்கை வள ஆதாரங்களோடு நேரிடையாக இணைந்து செயல்படும் இவற்றை பழமையான தொழில் நடவடிக்கை எனலாம்.
- உணவு சேகரித்தல், விலங்குகளை வேட்டையாடுதல், கால்நடைகளை மேய்த்தல், கனிமங்களை வெட்டியெடுத்தல், மீன்பிடித்தல், மரம் வெட்டுதல், வேளாண்மை
- இத்தொழில்களில் ஈடுபடுபவர்களை 'சிவப்பு கழுத்துப்பட்டை பணியாளர்கள்' (Red Collar Workers) என்று அழைக்கின்றோம்.

இரண்டாம் நிலைத் தொழில்கள்

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

- மனிதர்கள்ள மூலப்பொருட்களை உற்பத்தி முறைகளுக்கு உட்படுத்தி அவற்றை முடிவுற்ற பொருளாக மாற்றுவதன் மூலம் மூலப்பொருள்களின் பயன்பாட்டினையும், மதிப்பினையும் பெருக்குகின்றனர்.
- கரும்பிலிருந்து தயாரிக்கப்படும் சர்க்கரை, இரும்பு தாதுவிலிருந்து கிடைக்கும் இரும்பு எஃகு போன்றவை.
- உற்பத்தி செயல்கள் இரண்டாம் நிலைத் தொழில்கள் என்றும் இத்தொழில் புரியும் பணியாளர்கள் 'நீல கழுத்துப்பட்டை பணியாளர்கள்' (Blue Collar Workers) எனவும் அழைக்கப்படுகின்றனர்.

மூன்றாம் நிலைத் தொழில்கள்

- இரண்டாம் நிலைத் தொழில்களின் வளர்ச்சியை மேம்படுத்தும் வணிகம், போக்குவரத்து, தகவல் தொடர்பு சேவைகளை மூன்றாம் நிலைத்தொழில்கள் என அழைக்கப்படுகின்றன.
- தொழில் நுட்பத்தில் சிறப்பு மிக்க தொழில்நுட்ப பணியாளர்களும், வங்கிப் பணியாளர்களும் மூன்றாம் நிலைத் தொழில்களில் ஈடுபடுத்தப்படுகின்றனர்.
- இத்தொழில்களில் பணிபுரிவோரை 'வெளிர்சிவப்பு கழுத்துப்பட்டை பணியாளர்கள்' (Pink Collar Workers) என்று அழைக்கிறோம்.

நான்காம் நிலைத் தொழில்கள்

- கல்வித்துறை, நீதித்துறை, மருத்துவம், பொழுதுபோக்கு, கேளிக்கைகள், நிர்வாகம், ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி ஆகிய தனித்தன்மை கொண்ட சூழல்களில் சேவை புரிவோர்.
- இத்துறையில் பணிபுரியும் பணியாளர்கள 'வெள்ளை கழுத்துப்பட்டை பணியாளர்கள்' (White Collar Workers) என்றழைக்கப்படுவர்.
- இத்தொழில்கள் பொதுவாக நகரங்களில் அதிமாக காணப்படும்

ஐந்தாம் நிலைத் தொழில்கள்

- ஆலோசனை வழங்குவோர் மற்றும் திட்டம் வகுப்போர், அரசு மற்றும் தனியார் துறைகளில் உள்ள தீர்மானிக்குகம் திறன் கொண்ட அறிவுரை வழங்குவோரும், சட்டபூர்வமான அதிகாரிகளும் அடங்குவர்.
- இவர்கள் 'தங்க கழுத்துப்பட்டை பணியாளர்கள்' (Gold Collar Workers) என அழைக்கப்படுவர்.
- இந்நிலைத் தொழிலாளர்கள் பெரு நகரங்களில் அதிகமாகக் காணப்படுகின்றனர். வளர்ந்து வரும் நாடுகளில் முதல்நிலை மற்றும் இரண்டாம் நிலைத் தொழில்களிலும், வளர்ச்சியடைந்த நாடுகளில் மூன்று, நான்கு மற்றும் ஐந்தாம் நிலைத் தொழில்களிலும் மக்கள் அதிகமாக ஈடுபட்டுள்ளனர்

9–ம் வகுப்பு (புவியியல்)

♣ தென் இந்தியாவின் கிழக்கு கடற்கரையில் – தமிழ்நாடு அமைந்துள்ளது.

♣ தமிழ்நாட்டின் எல்லைகளாவன

கிழக்கில் – வங்காள விரிகுடா தெற்கில் – இந்தியப் பெருங்கடல்

மேற்கில் – கேரளா வடக்கில் – கர்நாடகா, ஆந்திரா

♣ 1956 ஜனவரி 14–ம் தேதி தமிழ்மொழி ஆட்சி மொழியாக தேர்வு செய்யப்பட்டது.

♣ இந்தியாவில் மக்கள் தொகையில் தமிழ்நாடு – 6 வது இடம்.

♣ இந்தியாவில் பரப்பளவில் தமிழ்நாடு – 11 வது இடம்

தமிழ்நாடு முக்கோண வடிவில் காணப்படுகிறது.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

- இந்தியாவின் தென் எல்லையான இந்திராமுனை 2004–ல் சுனாமியால் கடலில் மூழ்கியது.
- தமிழ்நாட்டின் மொத்த நிலப்பரப்பு – 1.30.058 ச.கி. மீட்டர்.
- தமிழ்நாட்டின் மொத்த மாவட்டம் – 32.
- தமிழ்நாட்டின் மாநில பறவை – மரகதப்புறா
- தமிழ்நாட்டின் மாநில விலங்கு – வரையாடு
- தமிழ்நாட்டின் மாநில பூ – செங்காந்தள் மலர்
- தமிழ்நாட்டின் மாநில மரம் – பனை மரம்.
- தமிழ்நாட்டின் மாநகராட்சிகள் – 12 (சேலம் ஒரு மாநகராட்சி)
- தமிழ்நாட்டின் நகராட்சி – 125 (ஆத்தூர் ஒரு நகராட்சி)
- தமிழ்நாட்டின் பேரூராட்சி – 529 (நரசிங்கபுரம் ஒரு பேரூராட்சி)
- தமிழ் மொழிக்கே உரித்தான சிறந்த இலக்கண நூல் – தொல்காப்பியம்.
- முதல் தமிழ் அச்சகம் – தரங்கம் பாடியில் டச்சு பாதிரியரால் கட்டப்பட்டது.
- தமிழ்நாட்டின் இயற்கை அமைப்பு – 4 வகைப்படும்.
  1. மலைகள் (மேற்கு தொடர்ச்சி மலை (ம) கிழக்கு தொடர்ச்சி மலை)
  2. பீடபூமி பகுதி
  3. சமவெளிப் பகுதிகள்
  4. கடலோரப் பகுதிகள்
- மேற்கு தொடர்ச்சி மலை தமிழ்நாட்டில் நீலகிரி மாவட்டத்தில் நுழைந்து கன்னியாகுமரியில் முடிவடைகிறது.
- மேற்கு தொடர்ச்சி மலையின் சராசரி உயரம் – 1000 மீட்டர் முதல் 1500 மீட்டர் வரை.
- தமிழ்நாட்டின் உயர்ந்த சிகரம் – தொட்டபெட்டா (2637 மீட்டர்).
- மேற்கு தொடர்ச்சி மலையின் வடமேற்கு பகுதியில் காணப்படுவது – நீலகிரி.
- மேற்கு தொடர்ச்சி மலையும் கிழக்குத் தொடர்ச்சி மலையும் ஒன்று சேருமிடம் – நீலகிரி
- நீலகிரியின் கிழக்கில் காணப்படும் குன்று – பழனி மலை குன்று.
- பழனி குன்றின் தெற்கே உள்ளது – வருசநாடு மலை, ஆண்டிப் பட்டிமலை.
- பாலக்காட்டு கணவாய்க்கு தெற்கே – ஏலமலை, அகத்திய மலை காணப்படுகிறது.
- ஏலமலையில் காணப்படும் செழிப்புமிக்க பள்ளத்தாக்கு – கம்பம் பள்ளத்தாக்கு.
- வருச நாடு மலைக்கும் அகத்தியர் மலைக்கும் இடையில் காணப்படுவது – செங்கோட்டை கணவாய்
- சமவெளிப் பகுதியின் தெற்கில் காணப்படுவது – ஆத்தூர் கணவாய் (சேலம் மாவட்டம்)
- சமவெளிப் பகுதியின் வடக்கில் காணப்படுவது – செங்கம் கணவாய் (கடலூர் மாவட்டம்)
- தமிழ்நாட்டில் காணப்படும் மலைகள் விபரம்
  1. ஜவ்வாது (ம) ஏலகிரி மலை – வேலூர் மாவட்டம்
  2. சேர்வராயன் மலை – சேலம் மாவட்டம்
  3. கல்வராயன் மலை – விழுப்புரம் மாவட்டம்
  4. பச்சை மலை – திருச்சி மாவட்டம்
  5. கொல்லி மலை – நாமக்கல் மாவட்டம்
  6. சித்தேரி மலை – தருமபுரி (ம) சேலம்
  7. செஞ்சி மலை – திருவண்ணாமலை
- கிழக்கு தொடர்ச்சி மலையின் உயர்ந்த மலை – சேர்வராயன் மலை (1500 – 1600 மீட்டர்)
- மேற்கு தொடர்ச்சி மலையின் உயர்ந்த மலை – ஆனை மலை (2700 மீட்டர்)
- தமிழ்நாட்டில் காணப்படும் பீடபூமி – 1. கோயம்புத்தூர் பீடபூமி, 2. மதுரை பீடபூமி
- தனித்த குன்றாக காணப்படுவது –சென்னி மலை குன்று (ஈரோடு)
- தமிழ்நாட்டில் காணப்படும் கடற்கரைகள் – 2

  1. <u>**மெரினா கடற்கரை**</u>

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

- ✓ உலகின் இரண்டாவது பெரிய கடற்கரை (13 கிலோ மீட்டர்)
- ✓ சென்னை நகரில் காணப்படுகிறது.

2.இராமேஸ்வரம் கடற்கரை

- ✓ இங்கு கடல் அலை எழுச்சி 3 செ.மீட்டருக்கு மிகாமல் உள்ளது.
- ✓ அழகிய தோற்றம் கொண்ட கடற்கரை பகுதி.

- ♣ தமிழ் நாட்டின் முக்கிய ஆறு – காவிரி
- ♣ காவிரி ஆறு – குடகு மலை (கர்நாடகா)– ல் உற்பத்தி ஆகிறது.
- ♣ காவிரியின் முதன்மை கிளையாறு – கொள்ளிடம்.
- ♣ வைப்பாறு – (விருது நகர்) குண்டாறு (தூத்துகுடி)
- ♣ சிற்றாறு எதன் முக்கிய துணையாறு – தாமிரபரணி
- ♣ தமிழ்நாட்டின் நீளமான ஆறு – காவிரி.
- ♣ தமிழ்நாட்டின் சூறாவளி மழை பொழிவு மாதம் – நவம்பர்.
- ♣ தமிழ்நாட்டில் ஆண்டு மழைப் பொழிவு சதவிகிதம்
  1. தென் மேற்கு பருவக் காற்றுக் காலம் – 22%
  2. வடகிழக்கு பருவக் காற்றுக் காலம் – 57%
  3. சூறாவளி மழைப் பொழிவு – 21 %
- ♣ மேற்கண்ட மூன்று பருவக்காலங்களிலும் மழை பெறும் மாவட்டம் – கன்னியாகுமரி.
- ♣ மேற்கண்ட மூன்று பருவக்காலங்களிலும் குறைந்த மழை பெறுவது – கோயம்புத்தூர்.
- ♣ மனிதன் முயற்சி இன்றி தானே வளரும் தாவரம் – இயற்கைத் தாவரம்.
- ♣ தமிழ்நாட்டி ல் காடுகளின் சதவிகிதம் – 17%
- ♣ தமிழ்நாட்டி ல் அதிக காடுகள் நிலபரப்பு கொண்டது – நீலகிரி.
- ♣ கடலோரப் பகுதியில் வறண்ட வெப்பநிலை, வளமற்ற மண்ணில் விளைவது – சவுக்கு
- ♣ காடுகள் அதிக அடர்த்தியாக காணப்படும் இடம் – 1. வேலூர் (ஜவ்வாது குன்று), 2. சேலம்,
- ♣ சந்தன மரங்கள் காணப்படும் இடம் – கோவை, நீலகிரி, கன்னியாகுமரி
- ♣ எரிபொருள் மரங்கள் காணப்படும் இடம் – மதுரை, திருநெல்வேலி
- ♣ இரப்பர் தோட்ட மரங்கள் காணப்படும் இடம் – கன்னியாகுமரி
- ♣ கற்பூர, தைல மரங்கள் காணப்படும் இடம் – நீலகிரி.
- ♣ தீக்குச்சி செய்யும் மரங்கள் காணப்படும் இடம் – மேற்கு தொடர்ச்சி மலையின் அடிவாரம் மற்றும் விருதுநகர்.
- ♣ காடுகளின் வகைகள் – 5

1. அயனமண்டலம் பசுமை மாறாக் காடுகள்

- ✓ பசுமை மாறாதவை மற்றும் இலைகளை உதிர்க்காது.
- ✓ ஆண்டிற்கு 200 செ.மீ மேல் மழையை பெறுகின்றது.
- ✓ இக்காடுகள் தமிழ்நாட்டில் நீலகிரி, ஆனைமலை சரிவு, கடலோர பகுதியில் காணப்படுகிறது.
- ✓ இக்காடுகளில் எபோனி, தேக்கு, செம்மரம், கருங்காலி, வளர்கின்றது. (60 மீட்டர் உயரம் வரை வளரும்)

2. அயன மண்டல அகன்ற இலைக் காடுகள் (அ) பருவக்காற்று காடுகள்

- ✓ ஆண்டிற்கு மழைப்பொழிவு 100 செ.மீ–ல் இருந்து 200 செ.மீ உள்ள இடத்தில் இக்காடுகள் காணப்படுகிறது.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

- ✓ மேற்கு தொடர்ச்சி மலையின் கிழக்கு சரிவு.
- ✓ கோடை காலத்தில் ஈரப்பத இழப்பை தவிர்க்க இலைகளை உதிர்த்து விடுகின்றன.
- ✓ இங்கு தான் குட்டையான, உயரமான, மென்மையான, கடின மரங்கள் காணப்படுகிறது.
- ✓ சால், சந்தனம், தேக்கு, மூங்கில், படாக் ஆகிய மரங்கள் சிறப்பாக வளர்கின்றது.

3. முட்புதர் காடுகள்

- ✓ வறண்ட பகுதி (ம) குறைந்த மழைப் பொழிவு இடங்களில் காணப்படுகிறது.
- ✓ குட்டையான மரங்களும், புதர்களும் காணப்படுகிறது.
- ✓ ஆழமான வேர்களும், கனமான தண்டு அமைப்பு கொண்ட மரங்கள் காணப்படுகிறது.

4. சதுப்பு நிலக் காடுகள்

- ✓ உப்பு நீர் கொண்ட ஓதப் பகுதியில் காணப்படும் காடு.
- ✓ தமிழ்நாட்டில் பிச்சாவரம் (கடலூர்) கோடியக்கரை, வேதாரண்யம் ஆகிய பகுதிகளில் இக்காடுகள் காணப்படுகிறது.
- ✓ சதுப்பு நில காடுகள் ரைசோபோரா தாவர வகையை சேர்ந்தது.
- ✓ பிச்சாவர காடுகள் 25 ச.கீ. மீட்டரும், கோடியக்கரை 17 ச.கி. மீட்டர் பரப்பிலும் பரவியுள்ளது.

5. மலையகக் காடுகள்

- ✓ மழைப்பொழிவு அதிகமுள்ள மலைசரிவுகளில் காணப்படுகிறது.
- ✓ ஆனைமலை, நீலகிரி மலைகளில் காணப்படுகிறது.

- ♣ மிக அதிக அளவு காடுகள் உள்ள மாவட்டம் – ஈரோடு (10%)
- ♣ தரிசு நிலங்கள் மிகுதியாக காணப்படும் மாவட்டம் – திருநெல்வேலி

வ.எண்	மண்வகை	அதிகம் காணப்படும் மாவட்டங்கள்
1.	வண்டல் மண்	தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், விழுப்புரம்
2.	கரிசல் மண்	கோவை, மதுரை, இராமநாதபுரம்
3.	செம்மண்	சிவகங்கை, இராமநாதபுரம்
4.	துருக்கல் மண்	காஞ்சிபுரம், திருவள்ளூர், தஞ்சாவூர்
5.	உவர் மண்	மேற்கு தொடர்ச்சி மலை, கிழக்கு தொடர்ச்சி மலை ஆகியவற்றின் உச்சியில் வேதாரணயம், சோழ மண்டல கடற்கரை

- ♣ கொடைகானலில் 12 வருடங்களுக்கு ஒரு முறை பூக்கும் குறிஞ்சி மலர் மிகவும் சிறப்பு வாய்ந்தது.
- ♣ குறிஞ்சி மலரை தமிழக அரசு சிறப்பு மிக்க மலராக அறிவித்துள்ளது.
- ♣ மலேரியா நோயை கட்டுபடுத்த சின்கோனா மரத்திலிருந்து குயினைன் என்ற மருந்து பொருள் தயாரிக்கப்படுகிறது.
- ♣ கபம் மற்றும் உடல் வலியை போக்க பயன்படுவது – யூகலிப்டஸ் மரத்திலிருந்து தைலம் பெறப்படும்
- ♣ தமிழ்நாட்டில் அதிக மூலிகை கிடைக்கும் பகுதி – பழனி மலை, குற்றால மலை.
- ♣ விவசாயிகளின் உப தொழிலாக பனை மரம் வளர்த்தல் தொழில் அதிகம் காணப்படும் மாவட்டம் – திருநெல்வேலி.
- ♣ அரிய வகை சந்தன மரங்கள் – ஜவ்வாது மலையில் அடர்ந்து காணப்படுகிறது.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

- ♣ வன விலங்கு முக்கியத்துவத்தை உணர்த்த ஒவ்வொரு வருடமும் – அக்டோபர் மாதத்தில் வன மகோத்சவம் விழா நடைபெறுகிறது.
- ♣ உலக வனவிலங்கு தினம் – அக்டோபர் 4
- ♣ உலக காடுகள் தினம் – மார்ச் 21
- ♣ உலக நீர் தினம் – மார்ச் 22
- ♣ விலங்குகள் அவற்றிற்கு தேவையான சூழ்நிலையை உருவாக்கவும், பாதுகாக்கவும் ஏற்படுத்துவது – தேசியப்பூங்கா
- ♣ கனிமங்களை தன்னுள் கொண்டுள்ள இயற்கையான கனிமப்பொருட்கள் – தாதுக்கள்

உலோக கனிமங்கள்	கிடைக்கும் மாவட்டம்
இரும்புத்தாது	சேலம், நாமக்கல், திருவண்ணாமலை
செம்பு	சேலம், நீலகிரி, கோவை, மதுரை
பாக்ஸைட்	சேலம், நீலகிரி, கோவை
குரோமைட்	சேலம், நாமக்கல், திருச்சி
பைரைட்	விழுப்புரம்

- ♣ சூரிய ஆற்றலை மின் வெப்ப ஆற்றலாக மாற்ற போட்டோவால்டிக் செல்கள் பயன்படுகிறது.
- ♣ சூரிய சக்தி நிலையங்கள் காணப்படும் இடங்கள் – திண்டுக்கல், கிருஷ்ணகிரி, தருமபுரி.
- ♣ காற்று விசையாக சுற்று கலன்களிலிருந்து பெறப்படும் இயந்திர ஆற்றல் மின் ஆற்றலாக மாற்றப்படுகிறது.
- ♣ தமிழ்நாட்டில் வருடத்திற்கு சராசரியாக 5.208 மில்லியன் வாட் மின் ஆற்றல் ஆனது காற்றாலை மூலம் உற்பத்தி செய்யப்படுகிறது.
- ♣ ஓதச் சக்தியை பெற – துளைகளை உடைய தடுப்பு அணைகளை கட்ட வேண்டும்.
- ♣ முதல் ஓத சக்தி நிலையம் – பிரான்சில் கட்டப்பட்டது.
- ♣ உள்ளுறை வெப்பத்தை மின் சக்தியாக மாற்ற கிடைப்பது – புவி வெப்ப சக்தியாகும்.

வ.எண்	தளங்கள்	உற்பத்தி
1.	ஆரல்வாய் மொழி கணவாய் (முப்பந்தல் பகுதி) கன்னியாகுமரி, திருநெல்வேலி மாவட்டம்	1658 மில்லியன் வாட்டுகள்
2.	செங்கோட்டை கணவாய் (கயத்தாறு பகுதி) திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டம்	1105 மில்லியன் வாட்டுகள்
3.	பாலக்காட்டு கணவாய் (கீத்தனூர் பகுதி) கோயம்புத்தூர்	1995 மில்லியன் வாட்டுகள் (மிக அதிகம்)
4.	சென்னையின் கடலோரப் பகுதி இராமநாதபுரம், தேனி, பழனி	450 (மிக குறைவு)

- ♣ புவி வெப்பசக்தி – மாக்மா கற்பாறைகளிலிருந்து பெறப்படுகிறது.
- ♣ மழை காலங்களில் மாக்மா கற்பாறைகளின் மீது விழும் நீர் நீராவியாக மாறுகிறது. அந்நீராவியை சேமித்து புவி வெப்ப சக்தி பெறப்படுகிறது. இது மிகச்சிறிய அளவிலேயே கிடைக்கிறது.
- ♣ உயிர் எரிசக்தி – திரவ எரிப்பொருள் மற்றும் உயிர் வாயுக்கள் ஆகும்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

- தமிழ்நாட்டில் 13 உயிர் எரிசக்தி நிலையங்கள் உள்ளன.
- தமிழ்நாட்டில் கரும்புச் சக்கையிலிருந்து 411 மில்லியன் வாட் மின்சாரம் பெறப்படுகிறது.
- மொத்தம் 18 சர்க்கரை ஆலைகளிலிருந்து பெறப்படுகிறது.
- உயிரின வளங்கள் என்பது – உயிர்க் கோளம் ஆகும்.
- மண் அடுக்கின் கனத்தை தீர்மானிப்பது – நேரம்.
- தமிழ்நாட்டின் முதன்மையானதும், மிகப் பழமையான தொழில் – வேளாண்மை
- தமிழ்நாட்டின் மொத்த மக்கள் தொகையில் – 56% விவசாயத்தில் ஈடுபடுகின்றனர்.
- சிறிய அளவிலான விளை நிலத்தில் சுய தேவைக்கு மட்டும் பயன்படுத்துவது – தீவிர தன்னிறைவு விவசாயம்.
- தமிழ்நாட்டின் பெரும்பான்மையான விவசாய முறை – தீவிர தன்னிறைவு விவசாயம்.
- தோட்டப் பயிர் விவசாயத்தில் விளைவிக்கப்படுவது – தேயிலை, காபி,இரப்பர், மிளகு
- கலப்பு விவசாயம் என்பது விளை நிலங்களில் பல பயிர்களுடன் கால்நடை, மீன், தேனீ, பறவைகள் வளர்க்கும் முறையாகும்.
- ஆண்டு முழுவதும் மழையாலோ, பாசன வசதியாலோ நீர் கிடைக்கும் நிலங்களில் மேற்கொள்ளும் விவசாய முறை – நன் செய் விவசாயம் ஆகும்.
- நன்செய் பயிர்களுக்கு எ.கா – நெல், கரும்பு (தமிழ்நாட்டில் பெரும்பாலும் ஆற்று படுக்கைகளில் நடைபெறுகிறது).
- பருவ மழையை மட்டும் நம்பி விவசாயம் செய்யும் முறை – புன்செய் விவசாயம்.
- புன்செய் பயிர்களுக்கு எ.கா. சிறு தானியங்கள்.
- இவ்விவசாயம் வேலூர், திருவண்ணாமலை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்படுகிறது.
- விவசாயிகளுக்கு நிரந்தர வருமானம் தரும் முறை – கலப்பு விவசாய முறை
- உள்நாடு, மற்றும் வெளிநாட்டின் சந்தைக்காக வளர்க்கப்படுவது – காய், கனி, பூ
- காய், கனி, பூக்கள் ஒரு – சந்தை தோட்டப் பயிர் ஆகும்.
- சந்தை தோட்ட பயிர் வளர்க்கப்படும் இடம் – மதுரை, நீலகிரி, திருவள்ளூர், காஞ்சிபுரம்
- தமிழ்நாட்டில் சாகுபடி பருவங்கள் – 3 வகைப்படும்.
  1. சொர்ணவாரி – சித்திரைப்பட்டம்.
  2. சம்பா பருவம் – ஆடிப்பட்டம்.
  3. நவரை பருவம் – கார்த்திகைப்பட்டம்

1. சித்திரைப்பட்டம் (இதற்கு காரீப் என்று பெயர்)

- ✓ சித்திரையில் நடவு நட்டு புரட்டாசியில் அறுவடை
- ✓ மே நடவு நட்டு (அக்டோபர்) அறுவடை

2. சம்பா பருவம் (ஆடிப்பட்டம்)

- ✓ சூலை மாதத்தில் விதைத்து ஜனவரியில் அறுவடை

3. நவரைப் பருவம் –(கார்த்திகை பட்டம்) இதற்கு ராபி என்று பெயர்)

- ✓ இது குளிர் கால பயிராகும்.
- ✓ நவம்பரில் விதைத்து மார்ச் மாதத்தில் அறுவடை

- ஓரிடத்தின் விவசாயத்தை நிர்ணயிக்கும் காரணிகளை மூன்றாக பிரிக்கலாம்.
  1. இயற்கை , 2. சமூகம், 3. பொருளாதார காரணிகள்
- இயற்கை காரணிகள் :– மண்வகை, தட்பவெப்பம், மழை, ஈரப்பதம், நிலத்தின் சரிவு.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

- பொருளாதார காரணிகளும் (எ.கா) – விவசாயக் கடனுதவி, அச்சு மானியம் ஊக்கத்தொகை.
- ஆறுகளிலிருந்து நீரினை வயலுக்கு கொண்டு செல்ல மனிதனால் உருவாக்கப்பட்ட நீர்வழித் தடங்களை – கால்வாய் என்கிறோம்.
- கால்வாய் பாசனம் – காவிரி மற்றும் தாமிரபரணி படுக்கையில் அதிகம் நடைபெறுகிறது.
- தமிழ்நாட்டில் 27% கால்வாய் பாசனம் நடைபெறுகிறது.
- உலகின் மிகப் பழமையான நீர் மேலாண்மை திட்டம் – கல்லணை.
- இயற்கையாகவே அமைந்த நீர் ஆதாரம் – ஏரிகள்
- மிக அதிகமாக குளங்கள் காணப்படும் மாவட்டம் – இராமநாதபுரம்.
- குளங்களை பராமரிப்பவர் – பொதுப்பணித்துறை (அ) ஊர் பஞ்சாயத்தினர்
- தமிழ்நாட்டின் அதிக பயன்படுத்தும் விவசாய முறை – கிணற்று நீர் பாசனம் (52%)
- அதிக அளவு நீர் இருப்பளவு கொண்ட பகுதி – ஆர்டிசியன் நீர் கொள் படுகை
- தமிழ்நாட்டில் இது காணப்படும் இடம் – கடலூர், சிதம்பரம், விருதாச்சலம்.
- தமிழ்நாட்டின் முதன்மை உணவுப்பயிர் – நெல்
- தமிழ்நாட்டின் பாரம்பரிய நெற்பயிர் – பொன்னி, கிச்சிலி, சம்பா
- அதிக வீரிய விளைச்சல் தரும் இரகங்கள் – ஜெயா, ஐ.ஆர் 50
- காவேரி டெல்டா பகுதி – இது இந்தியாவின் நெற்களஞ்சியம் என அழைக்கப்படுகிறது.
- நெல் மூன்று பருவங்களில் பயிரிடப்படும் இடம் – தஞ்சாவூர்.
- தமிழ்நாட்டில் நெல் ஆராய்ச்சி நிறுவனம் – ஆடுதுறை
- தமிழ்நாட்டில் விவசாய பல்கலைக்கழகத்தின் திருவாரூர் கிளை அறிமுகப்படுத்திய நெல் ரகம் – TNRH 174 (இது ஏக்கருக்கு 4500 கிலோ உற்பத்தி தரும் வகை)

குறுதானியங்கள்	முதன்மை மாவட்டங்கள் (உற்பத்தியில்)
சோளம்	கோவை, திருச்சி, திண்டுக்கல்
கம்பு	விழுப்புரம், தூத்துக்குடி
கேழ்வரகு	கிருஷ்ணகிரி, தர்மபுரி, சேலம்
மக்காச் சோளம்	பெரம்பலூர், திண்டுக்கல்
கேரளா (திணை)	சேலம், நாமக்கல்

- நெல் அறுவடைக்கு பின் பயிரிடப்படுவது – பயிறு வகைகள்
- தமிழ்நாட்டில் வறண்ட பகுதியில் சாகுபடி செய்யப்படுவது – கம்பு, கேழ்வரகு, வரகு, திணை, சாமை
- தமிழ்நாட்டின் மிக முக்கிய இழை பயிர் – பருத்தி (கரிசல் மண்)
- அதிக அளவு பருத்தி பயிரிடப்படும் இடம் – கோவை, திருநெல்வேலி, கடலூர், விழுப்புரம்.
- தமிழ்நாட்டு பருத்தி ரகங்கள் – எம்.சி.யு4, எம்.சி.யு5, ஆர்.எ 5166.
- சுய தேவைக்கு அல்லாமல் சந்தை நோக்குடன் வளர்க்கும் பயிர் – பணப்பயிர் ஆகும்.
- தமிழ்நாட்டின் முதன்மை பணப்பயிர் – கரும்பு (என்பது மாத பயிராகும்)
- தமிழ்நாட்டில் கரும்பு மிகையாக சாகுபடி செய்யும் மாவட்டம் – கோவை, கரூர், விழுப்புரம், திருவள்ளூர்.
- தமிழ்நாட்டின் இரண்டாவது முக்கிய பணப்பயிர் – புகையிலை.
- புகையிலை பயிரிடப்படும் மாவட்டம்– திண்டுக்கல், தேனி, மதுரை

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

- இந்தியாவில் தேயிலை பயிரிடப்படுவதிலும், உற்பத்தியிலும் – 1. அஸ்ஸாம், 2. தமிழ் நாடு
- காப்பி சாகுபடியில் – 1. கர்நாடகா, 2. தமிழ்நாடு.
- தமிழ்நாட்டில் இரப்பர் – கன்னியாகுமரி, மிளகு – கன்னியாகுமரி, திருநெல்வேலி மிளகு – கடலூர்.
- மாங்காய் (ம) மாம்பழம் சாகுபடியில் முதலிடம் – கிருஷ்ணகிரி.
- வாழை – கோவை, ஈரோடு, திராட்சை – தேனி
- காய்,கனி மற்றும் பூ – தருமபுரி.
- தமிழ் நாடு பால் உற்பத்தி செய்வோர் கூட்டமைப்பு – ஆவின்
- கடலில் முழ்கி முத்தெடுக்கும் தொழில் நடைபெறுவது – மன்னார் வளைகுடா.
- தமிழ்நாட்டின் முதன்மை மீன்பிடி துறைமுகம் – தூத்துக்குடி.
- ஆழ்கடல் கிடைக்கும் மீன்கள் – சுறா, கெளுத்தி, கெண்டை, வெள்ளி கொண்டை.
- குளம், குட்டை, ஆறுகளில் கிடைக்கும் மீன்கள் – விலாங்கு, மிர்கல், கட்லா, ரோக்.
- சிறு மீன்பிடி துறைமுகங்கள் எவை – பாலிநோக்கம், கொளச்சல், நாகப்பட்டினம்.
- புலிகாட் ஏரியில் – இறால் மீன்கள் செயற்கை முறையில் வளர்க்கப்படுகிறது.
- 10% மீன் பிடிப்புடன் முதல் மாவட்டம் – வேலூர்.
- வேளாண்மை பல்கலைக்கழகம் – கோயமுத்தூர்
- M.S. சுவாமிநாதன் ஆராய்ச்சி மையம் – தரமணி.
- மண்ணீன் நீர் கொள்ளும் தன்மை அதிகரிக்க காரணம் – மண்சத்து, தழைச்சத்து.
- மேற்கண்ட இரண்டு சத்துக்களினால் – வேருக்கு தேவையான ஊட்டச்சத்து பெருகும்.
- விவசாய ஏற்றுமதி மண்டலம் உள்ள இடம் –நீலகிரி, கிருஷ்ணகிரி.
- நமது மாநிலத்தின் மொத்த வருமானத்தில் – 24% தொழிற்துறை மூலம் கிடைக்கிறது.
- தொழிற்சாலைகளின் காரணிகள்
  1. மூலப்பொருள், 2. தொழில் உரிமம், 3. மூலதன அளவு, 4. உற்பத்தியாகும் பொருள்
- விவசாயம் சார்ந்த தொழிற்சாலைகள் எவை
  1. பருத்தி ஆலை 2. சர்க்கரை ஆலை 3. உணவு பதப்படுத்தும் தொழிற்சாலை.
- காடுகள் சார்ந்த தொழிற்சாலைகள் எவை
  1. காகித ஆலை, 2. தேன் மற்றும் சந்தன மரப்பொருள்கள்
- கனிமம் சார்ந்த தொழிற்சாலைகள் எவை
  1. இரும்பு உற்பத்தி, 2. பீங்கான் உற்பத்தி, 3. சிமெண்ட் உற்பத்தி
- தனிந்தோ (அ) கூட்டு சேர்ந்தோ தொழில் நடத்தினால் **<u>தனியார் தொழிற்சாலை</u>** ஆகும்.
- அரசாங்கத்தால் நிர்வகிக்கப்பட்ட தொழிற்சாலை – பொதுத்துறை தொழிற்சாலை (TNPL) (கரூர்)
- TNPL – என்பது தமிழ்நாடு செய்தித்தாள் நிறுவனம்.
- இருவேறு நிறுவனங்கள் கூட்டு முயற்சியால் செயல்படும் தொழிற்சாலை இணைத்துறை தொழிற்சாலை. எ.கா கூடங்குளம் அணு மின் நிலையம்.
- கட்டமைப்பு வசதியுடன், அதிக பண முதலீட்டு தொழிற்சாலை – பெருநிலை தொழிற்சாலை (10 கோடிக்கு மேல்)
- 1 கோடி முதல் 10 கோடி வரை – மத்திய நிலை தொழிற்சாலை.
- 1 கோடிக்கு குறைவாக இருந்தால் – சிறு தொழிற்சாலை.
- மிகக் குறைந்த முதலீட்டில் செய்வது – குடிசைத் தொழில்

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

- குடிசை தொழிலுக்கு (எ.கா) – பாய்பின்னுதல், மரப்பொம்மை செய்தல், பனையோலை பொருட்கள் செய்தல், கைவினை பொருட்கள்
- நுகர்வோரை நேரடியாக சென்றடையும் நுகர்வு பொருட்கள் – பால் மற்றும் உணவு.
- தொழில் அமைவிடத்தை நிர்ணயிக்கும் காரணிகள்
  1. மூலப்பொருள், 2. எரிசக்தி,3. மூலதனம்,4. தொழிலாளர் 5. போக்குவரத்து,6. சந்தை வசதி.
- தென்னிந்தியாவின் மான்செஸ்டர் – கோயம்புத்தூர்.
- தமிழ்நாட்டின் நெசவு பள்ளத்தாக்கு – மூன்று மாவட்டங்கள்.
  1. திருப்பூர், 2. ஈரோடு, 3. கோவை,
- தமிழ்நாட்டில் உள்ளாடை ஏற்றுமதியில் 70% செய்யும் நகரம் – திருப்பூர்.
- படுக்கை விரிப்புகளின் உற்பத்தியில் முதலிடம் – ஈரோடு.
- தமிழ்நாட்டின் நெசவுத் தலைநகரம் – கரூர்.
- தமிழ்நாட்டின் சர்க்கரை ஆலைகள் மொத்தம் – 42 (16 கூட்டுறவு, 3 அரசு, 23 தனியார்)
- காகித உற்பத்தியில் முதல் இடத்தை ஆந்திராவும்,இரண்டம் இடம் தமிழகம் பெற்றுள்ளது
- காகிதம் தயாரிக்க தேவைப்படும் பொருட்கள் – சோடா, சோடா உப்பு, குளோரின், கந்தக அமிலம், மரக்கூழ் அதிகளவு தண்ணீர்.
- தமிழ்நாட்டின் காகித தொழிற்சாலைகள்
  1. புக்காத்துறை (காஞ்சிபுரம்)2. பவானிசாகர் (ஈரோடு), 3. பள்ளிப்பாளையம் (ஈரோடு)
  4. புகளூர் (கரூர்), 5. பரமத்தி வேலூர் (நாமக்கல்), 6. கோவை, 7. உடுமலை,
  8. தொப்பம் பட்டி (திண்டுக்கல்), 9. நிலக்கோட்டை (தேனி), 10 சேரமான்தேவி.
- உலக வங்கி உதவியுடன் தமிழ்நாடு அரசு துவங்கிய காகித நிறுவனம் –TNPL . இடம் – கரூர் , வருடம் – 1979 (உலகிலேயே பெரிய காகித ஆலை)
- தோல் பதனிடுதல் செய்து 60 % தமிழ்நாடு ஏற்றுமதி செய்கிறது.
- பெரிய விலங்கு மற்றும் மாடுகளின் தோல் – Hide (ஹைடு)
- சிறிய விலங்கு மற்றும் மாடுகளின் தோல் – Skin (ஸ்கின்)
- விலங்கு தோலைப் பதப்படுத்தத் தேவைப்படும் அமிலப் பொருள் – டானின்.
- பதப்படுத்தும் முறைக்கு – டானிங் என்று பெயர்.
- தோலைப் பதனிடும் போது அதிக இலகு தன்மையுடன் இருக்க பயன்படுத்துவது – மரப்பட்டை.
- இராசயன பதனிடுதலில் பயன்படும் அமிலப் பொருள் – அமில கொழுப்பு, குரோமியம்.
- மேற்கண்ட முறையில் அதிக இழுவைத்தன்மை கிடைப்பதால் கைப்பை, தோல் ஆடைகள் செய்யப்படுகிறது.
- தமிழ்நாடு சிமெண்ட் கூட்டுறவு நிறுவனம் – (Tancem) (டான்செம்) (இது பொதுத்துறை நிறுவனம்).
- டான்செம் அமைந்துள்ள இடம் – அரியலூர் (போர்லேண்ட் சிமெண்ட், சூப்பர் ஸ்டார் சிமெண்ட் தயாரிக்கிறது)
- **சிமெண்ட் தயாரிக்க மூலப்பொருட்கள்:–** சுண்ணாம்புக்கல், ஜிப்சம், களிமண், நிலக்கரி.
  தமிழ்நாட்டில் சிமெண்ட் தயாரிக்கும் இடங்கள்
  - சங்ககிரி,மதுக்கரை,புலியூர்,குன்னம்,செந்துறை,அரியலூர்,டால்மியாபுரம்,மானாமதுரை, துலுக்கம்பட்டி, ஆலங்குளம், சங்கர் நகர், தாழை யூத்து.
- தமிழ்நாட்டின் பொது வளர்ச்சி குறியீட்டில் (GDP) மோட்டார் வாகன தொழிற்சாலையின் பங்கு 8%
- தெற்காசியாவின் டெட்ராய்ட் – சென்னை

- இந்தியாவில் அதிக அளவில் உரம் தயாரிப்பது – ஸ்பிக் (தமிழ்நாடு)
- BHEL (பெல்) – பாரத உயர்மின் உற்பத்தி கழகம் (திருச்சி) உள்ளது
- பெல் கம்பெனி உற்பத்தி செய்வது – நீர்மின் சக்தி நிலையங்களுக்கு தேவையான கொதி கலன்கள், ஜெனரேட்டர்கள், விசை சுற்று கலன்கள்.
- இந்தியாவின் மிகப்பெரிய தகவல் தொழில் நுட்ப வளாகம் – தரமணி (சென்னை)
- தரமணி தொழில் நுட்ப பூங்காவை அமைத்தவர்கள்
  அஸண்டாஸ் நிறுவனம் (சிங்கப்பூர்) + தமிழ்நாடு தொழில் வளர்ச்சி கழகம்.
- இணைப்பு பெட்டி தொழிற்சாலை ICF – பெரம்பூர்
- இராணுவ வாகனம் மற்றும் இராணுவ தளவாடம் மற்றும் இராணுவ பீரங்கி செய்யும் இடம் – ஆவடி
- குட்டி ஜப்பான் – சிவகாசி (கூறியவர் நேரு)
- தமிழ்நாட்டில் சிறப்பு பொருளாதார மண்டலங்கள் – 7
  1. ஸ்ரீ பெரம்புதூர் தொழிற் பூங்கா
  2. இருங்காட்டு கோட்டை காலணி பூங்கா
  3. ஒரகடம் தொழில் வளர்ச்சி மையம் (காஞ்சிபுரம்)
  4. இராணிப்பேட்டை தோல் துறை சிறப்பு மண்டலம்
  5. பெருந்துறை பொறியியல் பொருட்கள் உற்பத்தி சிறப்பு மண்டலம்
  6. செய்யார் மோட்டர் வாகனம் / தானியங்கி உபகரணங்கள் உற்பத்தி சிறப்பு மண்டலம்
  7. கங்கை கொண்டான் போக்குவரத்து பொறியியல் உபகரணங்கள் சிறப்பு மண்டலம்.
- தமிழ்நாடு மாநில பொதுத்துறை தொழில் மேம்பாட்டு கழகம் – சிப்காட் (SIPCOT) (1972 துவக்கம்)
- சிறிய, நடுத்தர, பெரிய தொழிற்சாலைகளின் வளர்ச்சிக்கு ஊக்குவிப்பது – சிப்காட்
- பொருளாதார வளர்ச்சிக்கு முக்கிய பங்கு வகிப்பது – போக்குவரத்து மற்றும் தகவல் பரிமாற்றம்
- தேசிய வளர்ச்சியின் உயிரோட்டமாக இருப்பது – போக்குவரத்து மற்றும் தகவல் பரிமாற்றம்

  போக்குவரத்து – 4 வகைப்படும்

  1. சாலை போக்குவரத்து, 2. இருப்புப்பாதை போக்குவரத்து, 3. நீர்வழிப் போக்குவரத்து, 4. ஆகாய வழி போக்குவரத்து.
- சாலை போக்குவரத்து நான்கு வகையாக பிரிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது
  1. தேசிய நெடுஞ்சாலைகள், 2. மாநில நெடுஞ்சாலைகள், 3. மாவட்டச் சாலைகள்,
  4. கிராமச் சாலைகள்
- தமிழ்நாட்டின் 24 தேசிய நெடுஞ்சாலைகள் 4500 கி.மீ தூரத்தை இணைக்கின்றது.
- தங்க நாற்கார சாலையின் முடியும் இடம் – தமிழ்நாடு
- ஆசியாவிலேயே மிகப்பெரிய பேருந்து நிலையம் – கோயம்பேடு (சென்னை)
- தென்னிந்திய இரயில்வேயின் தலைமையிடம் – சென்னை.
- இரயில் பாதைகள் கீழ்கண்டவாறு வகைப்படுத்தப்பட்டுள்ளது.
  1. அகலப் பாதை, 2. மீட்டர்பாதை 3. குறுகிய பாதை 4. புறநகர்பாதை
- தமிழ்நாட்டின் மொத்த இரயில்வே பாதையின் நீளம் – 5952 கி.மீட்டர்
- தமிழ்நாட்டின் மொத்த இரயில்வே நிலையம் – 532.
- தெற்கு இரயில்வே 6 மண்டலங்கள் கொண்டது.
- MRTS திட்டம் – சென்னை கடற்கரை – வேளச்சேரி
- லீகக்குறைந்த போக்குவரத்து – நீர்வழிப் போக்குவரத்து

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

- நீர் போக்குவரத்து – 2 வகைப்படும்.
  1. உள்நாட்டு நீர்வழி போக்குவரத்து, 2. கடல்வழி போக்குவரத்து
- தமிழ்நாட்டின் கடற்கரை நீளம் – 1000 கி.மீ (ஏறக்குறைய)
- பெரிய துறைமுகங்கள் – சென்னை , தூத்துக்குடி, எண்ணூர்
- சிறிய துறைமுகங்கள் – கடலூர், நாகப்பட்டினம், குளச்சல், இராமேஸ்வரம்
- மரக்காணம் (விழுப்புரம்) பகுதியையும் விஜயவாடா (ஆந்திரா) பகுதியையும் இணைக்கும் கால்வாய் – பக்கிங்காம் கால்வாய்
- துரித மற்றும் விலை உயர்ந்த போக்குவரத்து – விமான போக்குவரத்து.

விமான நிலையம்

பன்னாட்டு விமான நிலையம்	உள்நாட்டு விமான நிலையம்
1. சென்னை (அண்ணா)	1. சென்னை (காமராஜர்)
2. கோயம்புத்தூர்	2. மதுரை
3. திருச்சிராப்பள்ளி	3. சேலம்
	4. தூத்துக்குடி

- தகவல் பரிமாற்றம் என்பது – அஞ்சல் சேவை, தந்தி, தொலைபேசி, இணையதளம், மின் அஞ்சல் தொலைதூர நகல் (பேக்ஸ்) ஆகியவற்றின் செயல்பாடு ஆகும்.
- தபால் தந்திதுறை – 4 மண்டலம் உடையது.
  1. சென்னை (தலைமையிடம் சென்னை) 2. மேற்கு மண்டலம் (தலைமையிடம்) (கோவை)
  3. மத்திய மண்டலம் (திருச்சி) 4. தென் மண்டலம் (மதுரை)
- தமிழ்நாட்டில் அஞ்சல் அலுவலக எண்ணிக்கை – 12,115
- தமிழ்நாட்டில் அஞ்சல் மற்றும் தந்தி அலுவலகம் – 3504
- தனியார் தொலைத்தொடர்பு சேவை செய்யும் நிறுவனங்கள்
  1. பாரதி இன்ஃபோடெல் 2. ரிலையன்ஸ்,3. வோடஃபோன் 4. ஏர்செல் 5. ஐடியா
- இந்திய வானொலி நிலையம் – 1927–ல் ஒலிபரப்பு துவக்கம்
- 1936–ல் அகில இந்திய வானொலி என்று பெயர் மாற்றப்பட்டது.
- தமிழ்நாட்டில் – 15 வானொலி நிலையங்கள் உள்ளது.
- பள்ளி, பல்கலைக்கழகங்களுக்குமான கல்வி நிகழ்ச்சிகளை ஒளிப்பரப்பது – EDUSAT.
- இந்திய தகவல் பரிமாற்றம் செய்யும் செயற்கை கோள்கள் – 2
  1. INSAT, 2. IRS
- செய்தி அச்சுத் துறைக்கு (எ.கா)
  1. இந்திய செய்தி நிறுவனம், 2. யுனைடெட் நியூஸ் ஆப் இந்தியா 3. செய்தி தகவல் நிறுவனம்.
- வானொலி அலைகளில் voice mail அனுப்ப பயன்படும் கருவி – GPRS
- புவியியல் அமைவிடங்களை தெளிவாக காண பயன்படும் கருவி – GBS
- பொருளாதார வளர்ச்சியை நிர்ணயிக்கும் அடிப்படை காரணி – வார்த்தகம்
- ஒரு நாட்டின் பொருளாதார அமைப்பை எடுத்துரைக்கும் கண்ணாடி – ஏற்றுமதி, இறக்குமதி
  ஏற்றுமதி ஒரு நாட்டில் உற்பத்தி செய்யும் பொருளை மற்றொரு நாட்டிற்கு வெளிநாட்டு பணத்திற்கு விற்பது ஆகும்.

  ஏற்றுமதி செய்யும் நாடு **அந்நிய செலவாணி** கையிருப்பு **அதிகமாக** கொண்டிருக்கும்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

எ.கா தணி வகைகள், ஆயத்த ஆடைகள், மருந்துகள், மருத்துவ பொருட்கள், இரசாயணப் பொருட்கள், தோல் பொருட்கள், தாது, கனிமம், இயந்திர பொருட்கள், மென்பொருட்கள், மிண் அணு பொருட்கள்.

இறக்குமதி

பலவகை பொருட்களையும், சேவைகளையும் வெளிநாடுகளிலிருந்து பெறுவது ஆகும். எ.கா எரிபொருள், தாதுக்கள், இரும்பு, பிளாஸ்டிக் பொருட்கள், தாவர கொழுப்பு

வர்த்தகம்

உள்நாட்டு வணிகம் (அ) வெளிநாட்டு வணிகம்
தாய் நிலத்தின் வணிகம் கடந்து நடைபெறும்
(உபரி பொருட்களை உள்நாட்டிலேயே பரிமாற்றம் செய்வது)
(சாலை மற்றும் இரயில் பாதைகள் முக்கிய பங்கு வகிக்கிறது)
(இவ்வணிகத்தில் தேசிய செலாவணி உபயோகிக்கப்படுகிறது)

பன்னாட்டு வணிகம் (அ)
(ஒரு நாட்டின் புவி எல்லையை வணிகமாகும்)
(இதனை இரு தரப்பு வணிகம் என்றழைக்கப்படுகிறது)
(பன்னாட்டு செலவாணி பயன்படுத்தப்படுகிறது.)
(துறைமுகம் அதிக முக்கிய அங்கம் வகிக்கும்)

- தமிழ்நாட்டில் அதிக முறைபடுத்தப்பட்ட விற்பனை கூடங்கள் உள்ள மாவட்டம் – ஈரோடு (34)
- தமிழ்நாட்டில் 2வது முறைபடுத்தப்பட்ட விற்பனை கூடங்கள் உள்ள மாவட்டம் – கோவை, தஞ்சை (21)
- தமிழ்நாட்டில் முதன் முதலில் உழவர் சந்தை அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு – 1999.
- தமிழ்நாடு கூட்டுறவு பட்டு உற்பத்தியின் தலைமை சங்கம் – காஞ்சிபுரம்.
- ஒரு நாட்டின் மிகப்பெரிய வளம் – மக்கள்
- மக்கள் தொகையை பற்றி படிக்கும் படிப்பு – **டெமோகிராபி (ஆங்கில மொழி)**

ஆண்டு	மக்கள் தொகை	ஆண்கள்	பெண்கள்	மொத்த விழுக்காடு
T.N-ல் 2001	6 24 05 679	3 14 00 909	3 10 04 770	6.05%
இந்தியா	102,87,37,436			
2011	121,01,93422	62 37 24 248	58 64 69 174	

- உயிருடன் பிறந்த குழந்தைகளின் எண்ணிக்கையை – கச்சா பிறப்பு விகிதமாகும்.
- 1000 மக்களின் எண்ணிக்கையில் இறந்தவர்களின் எண்ணிக்கை – கச்சா இறப்பு விகிதமாகும்.
- ஒரு ஆண்டில் 1–வயது குழந்தைகளின் இறப்பு விகிதத்தை குறிப்பது – குழந்தை இறப்பு விகிதம்.
- ஒர் ஆயிரம் ஆண்டுகளுக்கு உள்ள பெண்களின் எண்ணிக்கை– பாலின விகிதம் ஆகும்.
- 5 வயது குழந்தைகளின் எண்ணிக்கைக்கும்
- 15 முதல் 45 வயது பெண்களுக்கும் இடையே உள்ள விகிதம் – கருவள விகிதம் (ஆயிரம் பேருக்கு)
- தமிழ்நாட்டின் கருவள விகிதம் – 1.7%

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

- 2006–ல் தமிழ் நாட்டின் பிறப்பு விகிதம் – 16.2%
- 2006–ல் தமிழ்நாட்டின் இறப்பு விகிதம் –7.5%
- 2006–ல் தமிழ்நாட்டின் குழந்தைகள் இறப்பு விகிதம் – 37 மட்டும்
- தமிழ்நாட்டில் மக்கள் தொகை அதிகம் காணப்படுவது – சென்னை (6.96%), 2. கோவை, 3. வேலூர், 4. சேலம்
- தமிழ்நாட்டில் மக்கள் தொகை குறைந்து காணப்படுவது – பெரம்பலூர் (0.069%)
- தமிழ்நாட்டில் மக்கள் அடர்த்தி அதிகம் – சென்னை
- தமிழ்நாட்டில் மக்கள் அடர்த்தி குறைவு – சிவகங்கை
- தமிழ்நாட்டில் மொத்த மக்கள் தொகையில் – 19 % (தாழ்த்தப்பட்டோர்), 1.04 (பழங்குடி மக்கள்)
- தமிழ்நாட்டில் இந்துக்கள் – 88%
- தமிழ்நாட்டில் முஸ்லீம் – 5.5%
- தமிழ்நாட்டில் கிறிஸ்த்துவர் – 6%
- தமிழ்நாட்டில் அதிக பாலின விகிதம் காணப்படுவது – தூத்துக்குடி 1050/1000
- தமிழ்நாட்டில் குறைந்த பாலின விகிதம் காணப்படுவது – சேலம் 927 / 1000
- தமிழ்நாட்டில் ஊரக பகுதி (கிராமங்கள்) வாழ்வோர் – 56%
- தமிழ்நாட்டில் நகர பகுதி வாழ்வோர் – 44%
- தமிழ்நாட்டின் கல்வியறிவு – 73.5%
- தமிழ்நாட்டின் குறைந்த கல்வியறிவு பெற்றுள்ள மாவட்டம் – தர்மபுரி (61.39%)
- தமிழ்நாட்டின் அதிக கல்வியறிவு பெற்றுள்ள மாவட்டம் – கன்னியாகுமரி (87.55%)
- தாழ்த்தப்பட்டோரின் கல்வியறிவு சதவிகிதம் – 55%
- பழங்குடியினரின் கல்வியறிவு சதவிகிதம் – 35%
- 2001–ன் படி வேலை பார்ப்பவர்கள் – 44.6%

  இதில் முதன்மை தொழில் – 55.3%
  இரண்டாம் நிலை தொழில் – 27.7%
  மூன்றாம் நிலை தொழில் – 30.8%
  வேலையில்லாதோர் – 38.2%
- நகர பெண்களுக்கு தொழில் முனைவு முன்னேற்ற திட்டம் – EDP
- பெண்களின் தனித்திறமைகளை வெளிக்கொணரும் திட்டம் – EAP
- தமிழ்நாட்டில் முதன்முதலில் மகளிர் சுய உதவிக்குழு திட்டம் – தர்மபுரி (1989)
- ஒரு நாணயத்தின் இருபக்கம் போன்றது – 1. சுற்று சூழல் 2. வளர்ச்சி
- <u>**சுற்றுச்சுழல் பிரச்சனைகள்**</u>

  1. நகரமயமாதல், 2. காடுகளை அழித்தல்,3. சுற்றுச் சூழல் மாசுபடுதல் 4. புவி வெப்பமயமாதல்
- 2001–ன் கணக்குப்படி நகரமயமாதல் சதவிகிதம் – 44%
- இந்தியாவில் நகரமயமாதலில் தமிழ்நாடு – 2வது இடம் வகிக்கிறது.
- தமிழ்நாட்டில் மிக வேகமாக நகரம் ஆகும் பகுதிகள் – ஸ்ரீபெரும்புதூர் , காஞ்சிபுரம், அரக்கோணம்.
- தொடர்ந்து காடுகள் வெட்டப்படுவதால் ஏற்படுவது– நிலச்சரிவு – (2–ம் ஊட்டி, குன்னூர்)
- பசுமையான காட்டு பகுதிகள் அழியும் போது – மண் அரிப்பு
- திரவ மற்றும் திடக் கழிவு காற்றை – மாசுபட்ட காற்று என்கிறோம்.
- <u>**காற்று மாசுபடுதலின் விளைவுகள்**</u>

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

1. உலக வெப்பமயமாதல் , 2. அமில மழை, 3. ஓசோன் படலம் கரைதல்

- 4. புகை மூடுபனி, 5. சுகாதாரப் பிரச்சனைகள்
- **தீமை விளைவுக்கும் சில ராசயனங்கள் வருமாறு**

ராசாயன பொருள்	நோய்
1. ஈயம்	கல்லீரல் மற்றும் உணவுக்குடல் பாதிப்பு
2. காரியம்	மனவளர்ச்சி குன்றுதல் மற்றும் பக்கவாதம்
3. கார்பன் மோனாக்ஸைடு	இரத்தத்தில் பிராண வாயுவின் அளவை குறைத்தல்
4. நைட்ரஜன் டை ஆக்ஸைடு	கண்ணில் எரிச்சல் ஏற்படும்
5. சல்பர் டை ஆக்ஸைடு	நுரையீரல் பாதிப்பு
6. ஹைட்ரஜன் சல்பைடு	தொண்டை புண், இரத்தத்தில் இரும்பு சத்தை எடுத்தல்

- தகரம் – திசுக்களை பலவீனப்படுத்தல்
- நீரினால் பரவக்கூடிய வியாதிகள் – காலரா, மஞ்சள் காமாலை, வயிற்று போக்கு, டைபாய்ட்.
- தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தை கண்காணிக்கும் மத்திய அரசு நிறுவனம் – ஜெம்ஸ்
- ஓசோன் தினம் – செப்டம்பர் 16
- சீட்டுக்குருவிகள் இதனால் அதிக பாதிப்பு அடைகிறது – மின்னஞ்சல் கோபுரம் வெளியிடும் மின் அலைகள்
- தமிழகத்தில் காடுகள் பரவியிருப்பது – 17%
- தமிழ்நாட்டில் பறவைகள் சரணாலயம் – 13

  தேசிய பூங்காக்கள் – 5

  வனவிலங்கு சரணாலயம் – 7
- குளிர் காலத்தில் எப்பகுதியிலிருந்து பறவைகள் தமிழ்நாட்டை நோக்கி வருகிறது – ஆர்டிக் பகுதி
- அபிக்கோ இயக்கம் காணப்படுவது – கர்நாடக மாநிலத்தில் (மேற்கு தொடர்ச்சி மலை மற்றும் கிழக்கு தொடர்ச்சி மலை பாதுகாப்பு இயக்கம்)
- மனிதனும் உயிர் கோளமும் என்ற திட்டத்தை யுனஸ்கோ நிறுவிய ஆண்டு – 1977
2. நீர்ம நிலைமையிலான ஒரு படித்தான கலவை **எ.கா:– நீர்கலந்த ஆல்கஹால்**
3. வாயு நிலைமையிலான ஒரு படித்தான கலவை **எ.கா :– காற்று**

பலப்படித்தான கலவை:–

- ❖ ஒன்றிற்கு மேற்பட்ட நிலைமைகளை பெற்றிருக்கும்
- ❖ ஒரே வகையான பண்புகளை பெற்றிருக்காது
- ❖ நேரடியாக கண் மூலமாகவோ, நுண்ணோக்கி மூலமாக காணலாம்.

1. திண்மம் பலப்படித்தானக் கலவை **எ.கா:– சர்க்கரை + உப்பு**
2. திண்மம் நீர்மம் பலப்படித்தானக் கலவை **எ.கா:– பனிக்கட்டியுடன் நீர் சேர்ந்த கலவை**
3. வாயு நிலைமை பலப்படித்தானது **எ.கா:– புகைகலந்தக் காற்று**

→ ஒரு கலவையிலுள்ள பகுதிப்பொருள்களை பிரிக்கும் பல்வேறு முறைகள்:–

1. தெளியவைத்து இறுத்தல்
2. வடிகட்டுதல்
3. வாலை வடித்தல்

→ எளிதில் ஆவியாகும் நீர்மத்தில் கரைந்துள்ள திண்மத்தைப் பிரித்தெடுத்தல்

4. பின்ன வாலை வடித்தல் (பின்ன காய்ச்சி வடித்தல்)

- ❖ ஒன்றுடன் ஒன்று நன்கு கலந்த நீர்மம்
- ❖ கொதிநிலைகளில் அதிக வேறுபாடு உடைய இரண்டு (அ) அதற்கு மேற்பட்ட நீர்மங்களை தனித்தனியே பிரித்தெடுத்தல்

5. பிரிபுனல்

- ❖ ஒன்றுடன் ஒன்று கலவாத இரு திரவங்கள் அடங்கிய கலவையிலிருந்து அவற்றை தனித்தனியே பிரித்தெடுத்தல்.
- ❖ மண்ணெண்ணெய்யுடன் நீர்கலந்து காணப்படுதல்

6. பதங்கமாதல்

7. நிறபகுப்பு முறை

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

- ❖ பரப்பு கவரப்படும் தன்மையில் வேறுபடும் பொருள்களை பிரித்தெடுத்தல் **எ.கா:– லிட்மஸ் தாள்**

பதங்கமாதல்

- ❖ திண்ம நிலையில் இருந்து ஒரு பொருள் திரவமாகாமல் நேரடியாக வாயுநிலைக்கு மாறுவது பதங்கமாதல்
- ❖ **எ.கா:– கற்பூரம், நாஃப்தலீன், பென்சாயிக் அமிலம் ,அயோடின், அமோனியம் குளோரைடு**
- ❖ <u>பின்ன வாலை வடித்தலில்</u> இரு நீர்மங்களின் கொதிநிலைகள் குறைந்தது **25°k – லாவது வேறுபட்டு** இருக்கப்பட வேண்டும்.

→ ஐசோசேடாப்புகளை கண்டறிந்தவர் **– J.J. தாம்ஸன்**
→ பென்சின் நீர்மத்தின் கொதிநிலை = **353°K (80°C)**
→ டொலுவீன் நீர்மத்தின் கொதிநிலை = **384K**
→ அணுக்களின் நடுநிலைத்தன்மையை விளக்கிய முக்கியமான கொள்கை – **J.J. தாம்சனின் அணுக்கொள்கை**
→ அணுக்கருபற்றிய புதிய கொள்கையை உருவாக்கியவர் – **எர்ணஸ்ட் ரூதர்போர்டு (1909) (பிரிட்டிஷ்)**
→ அணுக்கரு இயற்பியலின் தந்தை – **எர்னஸ்ட் ரூதர்போர்டு**
→சிதறல் ஆய்வினை மேற்கொண்டவர் **– எர்ணஸ்ட் ரூத ர்போர்டு**
→ ரூதர்போர்டு சிதறல் ஆய்வின் போது பயன்படுத்தப்பட்ட தனிமம் **– தங்கம் Au (4.5 x 10^{-5} cm) கதிர் – ஆல்ஃபா**
→ ஆல்ஃபா துகள்கள் என்பவை – **ஹீலியம் அயனிகள்**
→ஒரு ஆல்ஃபா நிறை ஓர் எலக்ட்ரானின் நிறையை போல் **8000 மடங்கு அதிகம்**
→ ஆல்ஃபா கதிரின் திசை வேகம் ஏறக்குறையை **– 2 x 10^{7} மீ / வி**
→ ரூதர்போர்டு அணுக்கரு சோதனைக்காக நோபல் பரிசு பெற்ற ஆண்டு **–1908**

ரூதர்போர்டின் அணுக்கொள்கை:–

1. ஓர் அணுவில் <u>மிகச் சிறிய</u> அடர்த்தி அதிகமுள்ள நேர்மின் சுமை கொண்ட அணுக்கரு உள்ளது
2. அணுவின் பெரும் பகுதியான வெற்றிடத்தில் <u>அணுக்கருவை</u> சுற்றி எலெக்ட்ரான் இடம் பெறுகின்றன. இந்த எலெக்ட்ரான்கள் அணுவை சுற்றி வேகமாக நகர்வதால் இவை பெரும்பாலான பகுதியை ஆக்கிரமிக்கின்றன.

ரூதர்போர்டின் கருத்தினை ஏற்க மறுக்கக் காரணம்:–

- ❖ அணுவின் **நிலைப்புத் தன்மையை விளக்கவில்லை**
- ❖ நவீன இயற்பியலான குவாண்டம் கொள்கைக்கு அடிப்படையாக அமைந்தது **– நீல்ஸ்போரின் அணுக்கொள்கை** (டென்மார்க்) நீல்ஸ்போர் இயற்பியல் நோபல் பரிசு **1922** வழங்கப்பட்டது.
- ❖ நவீன தனிம வரிசை அட்டவணையை உருவாக்கியவர் **– நீல்ஸ்போர்**
- ❖ புவி வெப்ப உச்சி மாநாடு நடந்த இடம் **– கோபன்ஹேகன்**
- ❖ ரூதர்போர்டின் அணுமாதிரியில் திருத்தங்களை மேற்கொண்டு புதிய அணுமாதிரி கொள்கையை வெளியிட்டவர் **– நீல்ஸ்போர்**
- ❖ ஓர் அணுவில் எலெக்ட்ரான் நிலையான வட்டபாதையில் அணுக்கருவை சுற்றி வருகின்றன. இவ்வட்ட பாதையை **ஆர்பிட்** எனவும் **ஆற்றல் மட்டங்கள்** என அழைக்கப்படுகிறது

ஒரே வட்டப்பாதையில் எலெக்ட்ரான்கள் சுற்றி வரும் போது <u>ஆற்றலை இழப்பதோ ஏற்பதோ</u>

- ❖ **ஆர்பிட்டுகள்** <u>K -1, L -2, M -3 , N-4</u> எனப் பெயரிடப்படுகின்றன. இவ்வெண்கள் **முதன்மை குவாண்டம் எண்கள்** எனப்படும்.
- ❖ ஆர்பிட் உருவ அளவு சிறிதாக இருக்கும்போது அதன் ஆற்றல் அளவும் குறைவாகவே இருக்கும்
- ❖ உட்கருவிலிருந்து ஆர்பிட் தொலைவு அதிகரிக்க அதிகரிக்க ஆற்றலும் அதிகரிக்கும்.
- ❖ ஒரு ஆற்றல் மட்டத்தில் இடம் கொள்ளும் அதிகபட்ச எண்ணிக்கை **$2n^2$ ஆகும்**

  புரோட்டான் P (+) நியூட்ரான் N (+ -) எலக்ட்ரான் - (e^-)
- ❖ நியூட்ரானை கண்டிறிந்தவர் **– ஜேம்ஸ் சாட்விக் , ஆண்டு (1932)**

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

- **நியூட்ரான் கண்டுபிடிக்க காரணமானவை:–**
  1. பெர்ஃலியம் தனிமம்
  2. ஆல்ஃபாக் கதிர்
- நியூட்ரான்களின் எண்ணிக்கை + புரோட்டான்களின் எண்ணிக்கை = **நிறைஎண்**
- நியூட்ரான்கள் **மின்சுமை அற்றத் துகளாகும் (அ) நடுநிலையான துகள் (**ஹைட்ரஜன் அணுவைத் தவிர ஏனைய அணுக்களின் உட்கருவில் இல்லை.)
- ஒரு நியூட்ரானின் நிறை ஏறக்குறை புரோட்டானின் நிறைக்குச் **சமம்**
- **ஓர் அணுவின் அடிப்படைத் துகள்கள்:–**

1. புரோட்டான்**(கோல்டுஸ்டீன்) – நேர்மின்சுமை** (இது அணுவின் உட்கருவில் காணப்படும்.)

2. எலக்ட்ரான் **(J.J. தாம்சன்) – எதிர்மின் சுமை** – (இத்துகள்கள் உட்கருவின் வெளியே வட்ட பாதையில் சுற்றி வருகின்றன)

3. நியூட்ரான்கள் **(சாட்விக்)** – நடுநிலையான , மின்சுமை அற்றத் துகள். இத்துகள்கள் **உட்கருவில்** உள்ளன.

- எலெக்ட்ரான்களின் நிறை **மிக மிகக் குறைவு**
- ஓர் அணுவின் நிகர மொத்தநிறை அதன் **உட்கருவின் நிறையை சார்ந்துள்ளது.**
- நிலையான உட்கரு உருவாக காரணம், நியூட்ரான் (ம) புரோட்டானுக்கு இடையே காணப்படும் (நிலவும் **)விலக்கு விசை**

அணு எண்:–

- இது **Z** என்ற எழுத்தால் குறிக்கப்படுகிறது. உட்கருவிலுள்ள **புரோட்டான்களின் எண்ணிக்கை (அ)** வெளிவட்டப்பாதையில் உள்ள **எலக்ட்ரான்களின் எண்ணிக்கை**

நிறை எண்:–

- இது **'A'** என்னும் எழுத்தால் குறிக்கப்படுகிறது
- ஓர் அணுவின் உட்கருவிலுள்ள **புரோட்டான்கள் (ம) நியூட்ரான்களின் கூட்டுத் தொகை**
- ஓர் அணுவின் நிறை அதன் உட்கருவைப் பொருந்ததே.
- ஓர் உட்கருவின் நிலைப்பு தன்மைக்கு அடிப்படை காரணம் **நியூட்ரான், புரோட்டான் விகிதம்**

ஐசோடோப்புகள்:–

- ஒரே மாதிரியான அணு எண் வேறுபட்ட நிறை எண் கொண்ட தனிமங்கள் அ

$_3Li^7$ $_3Li$

ஐசோடோப்புகளின் பண்புகள்:–

- நிறை எண்களில் மட்டுமே வேறுபடும், காரணம் நியூட்ரான்களின் எண்ணிக்கை வேறுபடுதல்
- ஒரு தனிமத்தின் ஐசோடோப்புகள் ஒத்த மாதிரியான வேதியியல் பண்பினை பெற்றிருக்கும்
- ஐசோடோப்புகளை கொண்டுள்ள தனிம அணுக்கள் பின்ன அணு நிறைகளை பெற்றுள்ளன.

தனிமம்	ஐசோடோப்புகள்	குறியீடு
1. ஹைட்ரஜன்	1. புரோட்டியம்	$_1H^1$ (சாதாரண ஹைட்ரஜன்)
	2. டியூட்ரியம்	$_1H^2$ (or) $_1D^2$ (கன ஹைட்ரஜன்)
	3. டிரிட்டியம்	$_1H^3$ (or) $_1T^3$ (கதிரியக்க ஹைட்ரஜன்)
2. குளோரின்	–	$_{17}CL^{35}$ $_{17}CL^{37}$
3. கார்பன்	கார்பன் –12 கார்பன் –14	$6C^{12}$(or)$6C^{14}$
4. யுரேனியம்	யுரேனியம் –235 யுரேனியம் –238	$92U^{235}$ $92U^{238}$

ஐசோடோப்புகளின் பயன்கள்:–

- இரும்பு – 59 ஐசோடோப்பு – இரத்த சோகை நோய்

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

- ❖ அயோடின் – 131 ஐசோடோப்பு – முன் கழுத்து கழலை நோய்
- ❖ கோபால்ட் – 60 ஐசோடோப்பு – புற்று நோய் சிகிச்சை
- ❖ பாஸ்பரஸ் – 32 ஐசோடோப்பு – கண் மருத்துவம்
- ❖ கார்பன் – 11 ஐசோடோப்பு – மூளை நுண்ணாய்வு

→ அணுக்கரு உலைகளில் பயன்படும் ஐசோடோப்பு – **யுரேனியம் 235 , யுரேனியம் 238**

→ கன ஹைட்ரஜன் (or) டிரிட்டியம் குளோரின் அணுவின் சராசரி அணுநிறை – **35.5 கி.கி**

சமான நிறை:–

Cl 35 (75%) (75 /100 x 35) = 26/25

Cl 37 25% (25 / 100 x 35) = 9. 25 = 26.25

→ லெட் (Pb) (காரியம்) தனிமத்தில் ஐசோடோப்புகளை கண்டறிந்தவர் **– T.W. ரிச்சர்ட்ஸ்**

→ ஒரு தனிமங்களின் எலெக்ட்ரான் அமைப்பை கண்டறிய உதவுவது – **முதன்மை குவாண்டம் எண்**

முதன்மை குவாண்டம் எண்:

- ❖ ஒரு அணுவிலுள்ள மொத்தக் கூடுகளின் எண்ணிக்கை.முதல் வட்டப் பாதையில் இடம் பெறும் எலெக்ட்ரான் எண்ணிக்கை **2**
- ❖ இரண்டாவது வட்டப்பாதையில் இடம்பெறும் எலக்ட்ரான்களின் எண்ணிக்கை = 8 ($2n^2$ = 2x2x2 = 8)
- ❖ மூன்றாவது வட்டப்பாதையில் எலக்ட்ரான்கள் முழுமையாக நிரப்பப்படாமல் 4–ம் வட்டப்பாதையில் எலக்ட்ரான்கள் நிரம்புவது **குவாண்டம் கொள்கை** ஆகும்.
  எ.கா**பாஸ்பரஸ் : 15** K -2, L – 8 , M – 5

இணைதிறன் எலக்ட்ரான்:

- ❖ ஓர் அணுவின் வெளிவட்டப் பாதையில் இடம் பெற்றுள்ளது எலக்ட்ரான் ஆகும். இது வேதிப்பிணைப்புகளில் பங்கு கொள்கிறது
- ❖ ஓர் அணு மற்றொரு அணுவுடன் இணையும் திறன் அவ்வணுவின் இணை திறனால் நிர்ணயிக்கப்படுகிறது.

தனிமம்	**அணு எண்**	**இணைதிறன்**
ஹைட்ரஜன்	1	1
போரான்	5	3
கார்பன்	6	4
மெக்னீசியம்	12	2
அலுமினியம்	13	3
புளூரின்	9	1

அயனி:–

- ❖ அதிக வினைதிறன்உடைய உலோகம் சோடியம். சோடியம் அணு ஓர் எலக்ட்ரானை இழந்து நேர் **மின் அயனியாக** மாறுகிறது.

சோடியம் அயனி புரோட்டான்கள் = 11 எலக்ட்ரான்கள் = 10

சோடியம் அணு புரோட்டான்கள் = 11 எலக்ட்ரான்கள் = 11

- ❖ உலோகங்கள் நேர் அயனிகளை உருவாக்குகின்றன. ஓர் அணு எலெக்ட்ரானை **இழந்தால்** உருவாவது '**எதிர் மின் அயனி**'

→ அலோகங்கள் எதிர் அயனிகளை உருவாக்குகின்றன

→ ஓர் அணு அயனிகளுக்கு **– எ.கா** சோடியம் அயனி புளூரைடு அயனி

→ பலதொகுதி அயனிகளுக்கு **எ.கா** – சோடியம் சல்பேட்

சோடியம் ஹைட்ராக்ஸைடு + சல்பூரிக் அமிலம் → சோடியம் சல்பேட் + நீர்

2NaoH + H_2SO4 → Na_2SO4 + $2H_2O$

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

→ **ஒற்றை** இணைதிறன் உடைய பலஅணு அயனி தொகுதிகளுக்கு

எ.கா i) $H_2SO_4^-$ (பை சல்பேட்)

ii) HSO_3^- (பை சல்பைட்)

→ **இரட்டை** இணைதிறன் உடைய பலஅணு அயனி தொகுதிகளுக்கு

எ.கா i) $Cr_2O_7^{-2}$ – டை குரோமைட்

ii) $S_2O_3^{-2}$ – தையோ சல்பேட்

→ **மும்மை** இணைதிறன் உடைய பல அணு அயனி தொகுதிகளுக்கு

எ.கா i) BO_3^{-3} – போரேட்

ii) PO_3^{-3} – பாஸ்பேட்

ஹைட்ராக்ஸைடு – **காரம்**

சோடியம் – **காரம்**

சல்பேட் – **அமிலம்**

→ மாறுபட்ட இணைதிறன் உடைய நேர் அயனிகள்

Pb^{2+} – லெட் **Sn^{2+} – டின்** **Au 3+ - தங்கம்**

❖ இதுவரை கண்டு பிடிக்கப்பட்டுள்ள **13 மில்லியன்** சேர்மங்களில் **91%** சேர்மங்கள் (ம) **கார்பன் அடங்கிய சேர்மங்கள்** ஆகும்.

→ **வேதிச்சமன்பாட்டின் மூலம் அறியப்படுபவை:-**

1. வினைபடு பொருட்கள் (ம)வினை விளைப்பொருட்கள் அறியப்படுகிறது.
2. மூலக்கூறுகளின் எண்ணிக்கை
3. மோல்களின் எண்ணிக்கை
4. ஒப்பிட்டு நிறைகள்
5. ஒப்பிட்டு கன அளவுகள்

→ **வேதிச்சமன்பாட்டின் மூலம் அறியப்படாதவை:–**

1. வினைப்பொருள்களின் இயற்பியல் நிலை
2. வெப்ப மாற்றம்
3. வினைக்குரிய சூழ்நிலை
4. செறிவுகள்
5. வினைக்கான அமிலம்
6. ஐசோடோப்புகள் சார்ந்த விபரம்

→ **நீருடன் மிக வேகமாக வினைபுரியும் உலோகங்கள்**

1. சோடியம் 2. பொட்டாசியம்

→ மென்மையான உலோகங்கள் **எ.கா சோடியம், பொட்டாசியம்**

→ தனிமங்களை உலோகங்கள் (ம) அலோகங்கள் என இரு பிரிவாக வகைப்படுத்தியவர் – **லவாய்சியர் – 1789**

→ மும்மை விதியை கூறியவர் – **ஜோஹான் உல்ஃப்காங் டோபரீனர் – 1817**

எ.கா Li Na K 7 + 39 = 46 / 2 = 23

7 23 39

எண்ம விதி கூறியவர் – **நியூலேண்டு (ஆண்டு – 1863)**

❖ அணு நிறைகளின் ஏறுவரிசையில் தனிமங்களை வரிசைப்படுத்தும் போது முதல் தனிமமும் எட்டாவது தனிமமும் ஒரே மாதிரியான பண்புகளை கொண்டுள்ளது.

❖ 49 தனிமங்களை வரிசைப்படுத்தியுள்ளார்

❖ நியூலேண்டு காலத்தில் **மந்த வாயுக்கள்** கண்டுபிடிக்கபடவில்லை

ஆவர்த்தன மாற்றம்

❖ ஒத்த இயற்பியல் (ம) வேதியியல் பண்புகளை கொண்ட தனிமங்கள் ஒரே வரிசையில் அமைவது

❖ வெவ்வேறு தனிமங்களின் அணு நிறைகளின் மதிப்புகளை அவற்றின் அணு பருமன்களுடன் தொடர்பு படுத்தி வரைபடம் வரைந்தவர் – **லோதர் மேயர் – 1864**

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

- ❖ ஒத்த பண்புகளையும் இணைத்திறன்களையும் கொண்டுள்ள தனிமங்கள் வரைபடத்தில் ஒன்றன்கீழ் ஒன்றாக இருப்பதை கண்டறிந்தார்.
- ❖ தனிம வரிசை அட்டவணை கண்டுபிடித்தவர் – **மெண்டலீப் (ரஷ்யா) (1834 –1907)**
- ❖ புதிய தனிமங்களின் கண்டுபிடிப்பிற்கு ஊன்று கோலாக அமைந்தவை – **மெண்டலீவ் தனிம வரிசை அட்டவணை (முழு பெயர் – டிமிட்ரி இவனோவிச் மெண்டலீவ்)**
- ❖ மெண்டலீவ் தனிம வரிசை அட்டவணை உருவாக்கிய ஆண்டு – 1869

→ மெண்டலீவ் தனிம வரிசை அட்டவணையின் தொகுதிகள் எண்ணிக்கை – **8**

மெண்டலீவ் அட்டவணையில் விடுபட்ட தனிம பெயர்கள்

- ❖ ஈகா சிலிக்கன் – ஜெர்மானியம்
- ❖ ஈகா போரான் – ஸ்கேண்டியம்
- ❖ ஈகா அலுமினியம் – கேலியம்

பண்புகள்	**1871–ல் மெண்டலீவ் நிர்ணயம் செய்த மதிப்பு**	**1886–ல் ஜெர்மானியம் கண்டறியபட்ட பின் அளவிடப்பட்ட பண்பு**
1. அணுநிறை	தோராயமாக 72	72.59
2. ஒப்படர்த்தி	5.5 கி.செ.மீ$^{-3}$	5.47 கி.செமீ $^{-3}$
3. நிறம்	அடர்த்தியான சாம்பல் நிறம்	அடர்த்தியான சாம்பல் நிறம்
3.ஆக்ஸைடு வாய்பாடு	EsO_2	GeO_2
4.குளோரின் வாய்பாடு	$Escl_2$	$Ge\ Cl_2$

- ❖ **மெண்டலீவ்** தனிம வரிசை அட்டவணையில் உள்ள குறைபாடுகள் சரிசெய்யப்பட்டு புதிய தனிம வரிசை உருவாக்கப்பட்டது. இந்த புதிய அட்டவணைக்கு **நீள் வடிவ தனிம வரிசை அட்டவணை** என்றுபெயர்.
- ❖ இது எலக்ட்ரான்களின் எண்ணிக்கையை பிரதிபலிக்கும் வகையில் உருவாக்கப்பட்டது.
- ❖ **நீள்வடிவ தனிம வரிசை அட்டவணை** அணு எண்ணை அடிப்படையாக கொண்டு உருவாக்கப்பட்டது **(நீல்ஸ்போர்)**
- ❖ நாணய உலோகங்களுக்கு **எகா – காப்பர், சில்வர், கோல்டு**
- ❖ கார உலோகங்கள் **– சோடியம், பொட்டாசியம்**
- ❖ மனித உடல் வெப்பநிலையில் உருகும் உலோகம் **– காலியம்** (வெப்பநிலை **36.9° C)**

<u>மனித வெப்பநிலை</u>

- ❖ செல்சியஸ் = 36.9°C
- ❖ பாரன்ஹீட் = 98.4°F
- ❖ கெல்வின் = 310° K

<u>உலோக பண்புகள்</u>

- ❖ பளபளப்பானது. திண்மநிலையில் காணப்படும்.
- ❖ மின்சாரத்தையும் ,வெப்பத்தையும் கடத்தும்.
- ❖ தகடாகவும் கம்பியாகவும் மாற்ற முடியும்.
- ❖ மெர்குரி அறைவெப்பநிலையில் திரவமாக உள்ள உலோகம் ஆகும்.

→ நீருடனும் ஆக்ஸிஜனுடனும் வினைப்புரியாத உலோகங்கள் – **தங்கம், பிளாட்டினம்**

→ **நீருடன் விரைவில் வினைபுரியும் உலோகம் =சோடியம், பொட்டாசியம்**

ரூபிடியம் – இது காற்றுபடும்படி திறந்து வைத்தால் தீப்பற்றி எரியும் தன்மை கொண்டது

<u>அலோகங்கள்</u>

- ❖ குறைந்த அடர்த்தி பெற்றுள்ளது.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

- ❖ அலோகங்கள் திண்ம, திரவ, வாயு நிலையில் காணப்படுகின்றன.
- ❖ பளபளப்பற்றது, பளபளப்புள்ள ஒரே அலோகம் – **கிராபைட்**
- ❖ வெப்பத்தையும் மின்சாரத்தையும் கடத்தும் அலோகம் – **கிராபைட்**
- ❖ தகடாகவும், கம்பியாகவும் மாற்ற முடியாது .ஒசையை உருவாக்காது.

→ நீரின் நிறையில் சரிபாதி நிறையை பெற்றுள்ளது – எ.கா–**லித்தியம்**
→ உலோகப்போலிகள் – **எ.கா** சிலிக்கன், ஜெர்மானியம்
→ உலோகங்களில் அதிக மின்கடத்தும் திறன் உடையது – **சில்வர் (வெள்ளி)**
→ அதிக உருகுநிலை பெற்றுள்ள உலோகம் – **டங்ஸ்டன் (3300°C)**
→ மிகவும் எடை குறைந்த இலேசான உலோகம் – **லித்தியம்**
→ மிகவும் எடை அதிகம் கொண்ட உலோகம் – **ஆஸ்மியம்**
→ அழுகிய முட்டை மணமுடைய வாயு – **ஹைட்ரஜன் சல்பைட்**
→ கார்பன் ஹைட்ரஜனுடன் வினை புரிந்து உருவாகும் வாயு – **அசிட்டிலின்**
→ நீருடன் வினைபுரியம் உலோகங்களின் செயல்திறன் வரிசை – Na > Ca > Mg
→ தனிம வரிசை அட்டவணையின் வரிசையின் மேற்பகுதியிலுள்ள உலோகங்கள் நீர்த்த அமிலங்கள் (ம) நீருடன் வினைபுரிகின்றன
→ மேல் பகுதியிலுள்ள உலோகங்கள் கீழ்பகுதி உலோகங்களை இடப்பெயர்ச்சி செய்யும் திறன் உடையவை
→ ரசக்கலவை என்பது = **உலோகம் + மெர்குரி (பாதரசம் – Hg)**
→ஒரு நேனோ மீட்டர் = **10^{-9} மீட்டர்**
→ 1 முதல் 100nm அளவுள்ள அணுக்கள் மூலக்கூறுகள் (ம) பொருட்கள் சார்ந்த அறிவியல் பிரிவு **நேனோ டெக்னாலஜி**
→ 1 நேனோமீட்டர் என்பது 1 மீ நீளத்தில் 1 பில்லியனில் (10^{-12}) ஓர் அலகு உள்ள நீளத்திற்கு சமமாகும்.
→ இந்நீளம் தோராயமாக 10 அணுக்கள் தொடர்ச்சியாக உள்ள நீளத்திற்கு சமமாகும்.

உலோகங்களின் செயல்திறன் வரிசை	
பொட்டாசியம் (K) சோடியம் (Na) கால்சியம் (Ca)	இவ்வுலோகங்கள் நீருடன் வினை புரிகின்றன.
மெக்னீசியம் (Mg) அலுமினியம் (Al) மாங்கனீசு (Mn) ஜிங்க் (Zn) குரோமியம் (Cr) இரும்பு (Fe) நிக்கல் (Ni) டின் (Sn) லெட் (Pb)	இவ்வுலோகங்கள் நீர்த்த அமிலங்களுடன் வினை புரிகின்றன.
காப்பர் (Cu) சில்வர் (Ag) கோல்டு (Au)	இவ்வுலோகங்கள் நீர்த்த அமிலங்களுடன் வினைபுரிவதில்லை.

உலோக கலவைகள்:–

பெயர்	**பகுதிப்பொருள்கள்**	**பயன்கள்**
1. பித்தளை	காப்பர், ஜிங்க்	ஆணிகள், ஜன்னல் (ம) கதவுச் சட்டங்கள் செய்ய.
2. வெண்கலம்	காப்பர் + டின்	சிலைகள், இயந்திர பாகம் தயாரிக்க

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

3. பட்டாசு	லெட் + டின்	மின் சாதனங்கள் (ம) குடிநீர் குழாய் உற்பத்தி தொழிலில் உலோகங்கள் உருகாமல் இணைக்க
4. துருபிடிக்காத எஃகு	இரும்பு + கார்பன் + குரோமியம் + நிக்கல் + டங்ஸ்டன்	பாலங்கள்
5. டியூராலுமின்	அலுமினியம் + காப்பர் + மாங்கனீசு + மெக்னீசியம்	ஆகாய விமான சாதனங்கள், மோட்டார் வாகனங்கள், கப்பல் கட்டும் தொழில்
6. அல்னிகோ	இரும்பு + அலுமினியம் + நிக்கல் + கோபால்ட்	காந்தங்கள் தயாரிக்க பயன்படுகிறது. **(இது சாதாரண காந்தத்தை விட 25 மடங்கு காந்த தன்மை உடையது)**

<u>நேனோதொழில் நுட்பத்தின் பயன்கள்</u>

- ❖ திறன் வாய்ந்த விரைவாக செயல்படும் சிறிய கணிணிகளை உருவாக்க,
- ❖ மருத்துவத் துறையில் மிக மிக சிறிய பம்புகளை உருவாக்க,
- ❖ மின் உற்பத்தி கலன்களின் செயல்திறனை பன்மடங்கு அதிகரிக்க,
- ❖ குறை கடத்திகள்தயாரிப்பிலும் உயிர் தொழில் நுட்ப துறையிலும் ,
- ❖ புற்று நோயை குணப்படுத்த,
- ❖ ஆடைகள் தொழில் நுட்பத்தில் இழைகளில் கரை எதிர்ப்பு திறனை மேம்படுத்த பயன்படுகிறது.
- ❖ உணவு பொருட்களும், காய்கறிகளும் கெடாமல் பாதுகாக்க,
- ❖ ஒரு குறிப்பிட்ட அலைநீளம் கொண்ட ஒளிக்கதிரை வெப்ப ஆற்றலாக மாற்ற பயன்படுகிறது.

→ அணு ⟶ மூலக்கூறு ⟶ தனிமம் ⟶ சேர்மம் ⟶ கலவை → அணுக்கள்

இணைந்து மூலக்கூறுகள் உருவாவதையும், தனிமங்களில் எலக்ட்ரான் அமைப்பு அடிப்படையில் விளக்கியவர் **– கில்பர்ட் நியூட்டன் லூயிஸ் (G.N. லூயிஸ்)**

இணைதிறன் எலக்ட்ரான் கொள்கை வெளியிட்டவர் **– G.N. லூயிஸ்** (1916) இதற்கு **எண்ம விதி** என்று பெயர்,

<u>வேதி பிணைப்பு</u>

- ❖ இரண்டு (அ) மேற்பட்ட அணுக்கள் இணைந்து நிலைப்பு தன்மை கொண்ட மூலக்கூறு உருவாவதற்கு அணுக்களுக்கு இடையே நிலவும் கவர்ச்சி விசையே வேதி பிணைப்பு ஆகும்.
- ❖ ஒவ்வொரு அணுவும் தன் வெளிக்கூட்டில் 8 எலக்ட்ரான்களை பெறக்கூடிய விளைவு **– G.N. லூயிஸ்**
- ❖ நிலையான எலக்ட்ரான் அமைப்பை பெற்றுள்ளத் தனிமங்கள் – **மந்த வாயுக்கள்**
- ❖ நிலை மின்னியியல் கவர்ச்சி விசையின் மற்றொரு பெயர் **– கூலூம்பிக் கவர்ச்சி விசை**

<u>வேதி பிணைப்பின் வகைகள்</u>

1. அயனி பிணைப்பு
2. சகப்பிணைப்பு
3. ஈதல் சகபிணைப்பு

ஓர் அணு மற்றொரு அணுவுக்கு கொடுத்தாலோ பெற்றாலோ அது **அயனி** ஆகும்

1. அயனி பிணைப்பு

- ❖ எலக்ட்ரான் பரிமாற்றத்தின் விளைவாக உருவாகும் நேர்அயனியின் (+) எதிர் அயனியின் (–) ஒன்றுக் கொன்று நிலை மின்னியியல் கவர்ச்சி விசையால் உருவாகும் பிணைப்பு

<u>அயனிபிணைப்பு உருவாக தேவையான நிபந்தனைகள்</u>

1. இணைதிறன் எலக்ட்ரான்களின் எண்ணிக்கை
2. நிகர ஆற்றல் குறைவு
3. எலக்ட்ரான் மீதுள்ள கவர்ச்சி விசை

எ.கா 1. சோடியம் குளோரைடு உருவாதல்

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

எ.கா மெக்னீசியம் குளோரைடு உருவாதல்

சகப் பிணைப்பு – (G.N. லூயிஸ்)

- ❖ இரண்டு அணுக்கள் அவற்றிற்கிடையே எலக்ட்ரான்களை பங்கீடு செய்வதன் மூலம் அவற்றின் வெளிக்கூட்டில் நிலையான அமைப்பை பெறுவது ஆகும்.

நிபந்தனைகள்

1. இணைதிறன் எலக்ட்ரான்களின் எண்ணிக்கை
2. சம அளவு எலக்ட்ரான் கவர்ச்சி விசை
3. சம அளவில் எலக்ட்ரான்களை பங்கிடுதல்

எ.கா

1. ஹைட்ரஜன் மூலக்கூறு உருவாதல்
2. குளோரின் மூலக்கூறு உருவாதல்
3. நீர் மூலக்கூறு உருவாதல்
4. அம்மோனியா மூலக்கூறு உருவாதல் (NH_3)

ஈதல் சகப்பிணைப்பு

- ❖ ஓர் அணுவால் மட்டுமே சகப்பிணைப்பிற்குத் தேவையான இரண்டு எலக்ட்ரான்கள் வழங்கப்படும்.

எ.கா 1. அமோனியம் அயனி உருவாதல் 2. சல்பர் ட்ரை ஆக்ஸைடு உருவாதல் 3. கார்பன் மோனோக்ஸைடு உருவாதல் 4. போரான் டை புளுரைடு உருவாதல்

அயனிப் பிணைப்பு	**சகப்பிணைப்பு**
1. ஓர் உலோக அணுவிலிருந்து அலோக அணுவிற்கு எலக்ட்ரான்கள் இடம் பெயர்தல் **எ.கா** சோடியம்	1. அலோக அணுக்களுடையே எலக்ட்ரான்கள் பங்கிடப்படுவதால் சகபிணைப்பு ஏற்படுகிறது
2. நேர் (ம) எதிர் அயணிகளுக்கிடையே வலிமையான நிலைமின்னியல் விசை	2. மூலக்கூறுகளுக்கு இடையே வலிமை குறைந்த விசை காணப்படுகிறது.
3. அறை வெப்பநிலையில் அனைத்தும் திண்மங்களே	3. வாயுக்கள் (அ) நீர்மங்கள் (அ) மென்மையான திண்மங்கள்
4. உருகுநிலையும் கொதிநிலையும் அதிகம் .	4. உருகுநிலையும் , கொதிநிலையும் குறைவு.
5. இது கடினமானது .	5. கடினமற்றது.
6. நீரில் மட்டுமே கரையும்.	6. கரிம கரைப்பான்களான பென்சீன்/ டொலுவின் குளோரோபார்ம் , ஈத்தர்
7. உருகு நிலையிலும் ,கரைசல் நிலையிலும் மின்சாரத்தை கடத்தும்	7. மின்சாரத்தை கடத்தாது
8. வினைவேகம் அதிகம்	8. வினைவேகம் குறைவு

ஈதல் சகபிணைப்பு சேர்மங்களின் பண்புகள்

- ❖ அரிதாக மின்சாரத்தை கடத்தும்.
- ❖ கரிம கரைப்பானில் கரையும். நீரில் சிறிதளவில் கரையும்.
- ❖ சகபிணைப்பு சேர்மங்களை விட அதிக உருகுநிலை கொதிநிலையையும் அயனி சேர்மங்களை விட குறைந்த உருகுநிலை கொதிநிலையும் பெற்றுள்ளன.

→ வெர்னியர் அளவுகோலை கண்டறிந்தவர் – **பியரி வெர்னியர் (பிரான்ஸ்)**

→ வெர்னியர் அளவுகோலின் மீச்சிற்றளவு – **0.1 மி.மீ (ம) 0.01 செ.மீ**

→ வெர்னியர் அளவி என்பது **உயரமானி, அழுத்தமானி** (அ) அளவுகள் குறிக்கப்பட்டக் கருவிகளுடன் இணைக்கப்பட்ட நகரும் சிறு அளவுகோல் ஆகும்

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

→ வெர்னியர் அளவுகோலின் சுழிப்பிரிவு (0) முதன்மை அளவுகோலின் சுழிப்பிரிவுடன் இணைந்திருந்தால் **சுழி பிழை இல்லை**

- வெர்னியர் அளவு கோல் சுழி பிரிவு முதன்மை அளவு கோலிக்கு வலப்பக்கம் அமைந்தால் அது **நேர்பிழை.**
- வெர்னியர் அளவு கோலின் சுழிப்பிரிவு முதன்மை கோலின் இடப்பக்கமாக அமைதல் அது **எதிர் பிழை.**

நிறை

- பொருளிலுள்ள பருப்பொருள்களின் அளவு பொருளின் நிறை அலகு கிலோகிராம்.
- இது இடத்திற்கு இடம் மாறுபடாது.
-

எடை

- பொருளின் மீது செயல்படும் ஈர்ப்பியல் விசையின் மதிப்பு பொருளின் எடை எனப்படும்.
- இது இடத்திற்கு இடம் மாறுபடும். பொருளின் எடை சுருள் வில் தராசு மூலம் அளவிடப்படுகிறது.

→ பொருட்களின் எடைகளை துல்லியமாகவும், வேகமாகவும் அளவிடப்படுவது – **எண்ணிலக்க தராசு (Digital)**

→ Digital தராசு செயல்படக் கூடிய தத்துவம் **திரிபு அளவி தத்துவம்** (நீளத்திற்கு ஏற்ப மின் தடை)

எடை மேடை

- **திரிகு மானி** தத்துவத்தில் செயல்படுகிறது
- 1984–ம் ஒலிம்பிக் போட்டி வெண்கலப்பதக்கம் வென்றவர் – P.T. உஷா

→ அணு கடிகாரத்தில் பயன்படக்கூடிய உலோகம் – **சீசியம்**

→ மிக அதிக துல்லிய தன்மைக் கொண்ட கடிகாரம் – **அணு கடிகாரம்**

→ இந்தியாவின் திட்ட நேரம் – **82 . 5° கிழக்கு தீர்க்க ரேகை**

→ புவியானது **24 நேர** தீர்க்க மண்டலமாக பிரிக்கப்பட்டுள்ளது

→ ஒரு நேர மண்டலத்தில் காணப்படக்கூடிய தீர்க்க ரேகையின் எண்ணிக்கை – **15**

→ ஒரு நேர மண்டலத்தை சூரியன் கடக்க ஆகும் நேரம் – **60** நிமிடம்

ஒரு தீர்க்க கோட்டை கடக்க ஆகும் நேரம் – **4 நிமிடம்**

<u>இயக்கச் சமன்பாடுகள்</u>

1. $V = u + at$ 2. $S = ut + 1/2\ at^2$ 3. $V^2 = u^2 + 2\ as$

→ கோண இடப்பெயர்ச்சியின் அலகு – **ரேடியன்**

→ கோண திசைவேகத்தின் அலகு – **ரேடியன் / வினாடி**

→ தளக் கோணத்தின் அலகு – **ரேடியன்**

<u>மைய நோக்கு விசை எகா</u>

- நூலினால் கட்டப்பட்டுள்ள கல் வட்டப்பாதையில் இயங்குதல்.
- மகிழ்உந்து ஒன்று வளைவில் திரும்பும் போது டயருக்கும், தரைக்கும் இடைப்பட்ட உராய்வு விசை தேவையான மைய நோக்கு விசையை தருகின்றது.
- கோள்கள் சூரியனைச் சுற்றி வருதல்.
- உட்கருவைச் சுற்றி வரும் எலக்ட்ரான்கள்.

<u>மையவிலக்கு விசை எ.கா</u>

- தயிர் கடையும் போது வெண்ணெய் பாத்திரத்தின் ஓரத்தை நோக்கி விலக்கம் அடைதல்.
- மிதிவண்டி ஓட்டுபவர் வளைவானப் பாதையில் செல்லுதல்.
- நில நடுக்கோட்டுப் பகுதியில் புவியின் விட்டமானது துருவப் பகுதியின் விட்டத்தை விட **48 கி.மீ**
- நிலநடுக்கோட்டுப் பகுதியில் உள்ள துகள்களின் திசைவேகம் துருவப் பகுதிகளில் உள்ள துகள்களின் திசை வேகத்தை விட அதிகம்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

- ❖ நிலநடுக்கோட்டுப் பகுதியிலுள்ள துகள்களின் மீதான மைய விலக்கு விசை அதிகமாக இருக்கும்.

→ நெம்புகோல் தத்துவத்தை கண்டறிந்தவர் – **ஆர்க்கிமிடிஸ் (எகிப்து –ஆப்பிரிக்கா)**
→ எகிப்து நாட்டிலுள்ள வயல்களுக்கு பாசனத்திற்காக நீர் திருகினை கண்டறிந்தவர் – **ஆர்க்கிமிடிஸ்**
→ 'யுரேக்கா' (கண்டுபிடித்து விட்டேன்) என்ற வார்த்தையை கூறியவர் – **ஆர்க்கிமிடிஸ்**

ஆர்க்கிமிடிஸ் தத்துவம்

- ❖ ஒரு பொருள் பாய்மத்தில் தங்கு தடையின்றி மூழ்கி இருக்கும் போது அது இழப்பதாக தோன்றும் எடை அதனால் வெளியேற்றப்படும் பாய்மத்திற்குச் சமமாக இருக்கும்.
- ❖ அடர்த்தியின் அலகு – **நிறை / பருமன் = Kg / m^3**
  ஒப்படர்த்தியின் அலகு – இல்லை
- ❖ ஒப்படர்த்தி என்பது பொருளின் அடர்த்திக்கும், நீரின் அடர்த்திக்கும் உள்ள ஒப்புமை
- ❖ இரும்பினால் செய்யப்பட்ட கப்பல் நீரில் மிதக்கிறது காரணம் கப்பலின் வடிவமைப்பில் அதிக அளவில் காலியிடமானது காற்றால் நிரப்பப்பட்டுள்ளது.
- ❖ கப்பல் நீரில் மிதக்கும் போது வெளியேற்றும் நீரின் கன அளவு கப்பலின் கட்டுமான பணிகளுக்கு பயன்படுத்தப்பட்ட நீரின் கன அளவிட அதிகமாக இருக்கும் எனவே கப்பல் மிதப்பதனால் வெளியேற்றபடும் நீரின் எடையானது அதிகம்

மிதவை விதிகள்

1. மிதக்கும் பொருளின் எடையானது அதனால் வெளியேற்றப்படும் திரவத்தின் எடைக்குச் சமம்.
2. மிதக்கும் பொருளின் ஈர்ப்பு மையமும் வெளியேற்றப்படும் திரவத்தின் ஈர்ப்பு மையமும் ஒரே செங்குத்து கோட்டில் அமைய வேண்டும்.

→ காற்றின் அடர்த்தியானது ஹைட்ரஜன் வாயுவின் அடர்த்தியை விட சுமார் **14 மடங்கு** அதிகம்

திரவமானிகள் இரண்டு வகைப்படும்

1. மாறா மூழ்கு நிலை திரவமானிகள்:– **எடை மாறும், மூழ்கும் ஆழம் மாறாது**
2. மாறும் மூழ்கு நிலை திரவமானிகள்:– **எடை மாறாது , மூழ்கு நிலை மாறும்**

→ பொது திரவமானி **ஒரு மாறும் மூழ்கு நிலை திரவமானி** வகையைச் சார்ந்தது.
→ பால் மானி **ஒரு பொது திரவமானி வகையைச்** சார்ந்தது (மாறும் மூழ்கு நிலைமானி)

வேலை

- ❖ பொருள் ஒன்றின் மீது விசை செயல்பட்டு விசை செயல்படும் புள்ளியானது விசையின் திசையில் இடப்பெயர்ச்சி அடைவது.
- ❖ வேலையின் அலகு – **ஜீல்**

வேலையின் பெரிய அலகு

1. கிலோ ஜீல் – 1000 2. மெகா ஜீல் – 10,00,000 ஜீல்

மின்னோட்டத்தின் வெப்பவிளைவு

- ❖ ஆற்றல் அழிவின்மை விதியை சோதனை மூலம் சரிபார்த்தவர் – **ஜீல்**
- ❖ வெப்ப இயந்திரவில் இணை மாற்றியின் மதிப்பினை கண்டறிந்தவர் – **ஜீல்**
- ❖ ஆற்றலின் அலகு – **ஜீல்**

ஆற்றலின் பல்வேறு வகைகள்

1. இயந்திர ஆற்றல் 2. வேதிய ஆற்றல் 3. ஒளி ஆற்றல் 4. ஒலி ஆற்றல்
5. வெப்ப ஆற்றல் 6. மின்னாற்றல்

1. இயந்திர ஆற்றல் இரண்டு வகைப்படும்

1. நிலை ஆற்றல் 2. இயக்க ஆற்றல்

எ.கா 1. பளுதூக்குதல்
2. அணையில் சேமிக்கப்படும் நீரின் நிலை ஆற்றல்

நிலையாற்றல் சமன்பாடு = **Mgh**

இயக்க ஆற்றல்:–

1. ஆணியினை சுவரில் ஊடுருவி செல்ல உதவும் சுத்தியல் பெற்றுள்ள ஆற்றல்

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

2. துப்பாக்கியிலிருந்து வெளிப்படும் குண்டின் ஆற்றல் சமன்பாடு = **1/ 2 MV^2**

திறன்

- ❖ வேலை செய்யப்படும் வீதம் (அ) ஓர் அலகு நேரத்தில் செய்யப்படும் வேலை
- ❖ **திறன் = செய்யப்பட்ட வேலை / எடுத்துக் கொண்ட காலம் P = W / P**

→ திறனின் அலகு = **ஜீல் / வினாடி (அ) வாட்**

→நீராவி எந்திரத்தை மேம்படுத்தி வடிவமைத்தவர் – **ஜேம்ஸ் வாட் (ஸ்காட்லாந்து)**

→ வணிக முறையிலான திறனின் அலகு – **கிலோவாட் மணி**

1 யூனிட் = 1 கிலோ வாட் மணி, 1 கிலோ வாட் மணி = **3.6×10^6 ஜீல்**

வெப்ப ஏற்பு திறன்

- ❖ பொருள் ஒன்றின் வெப்பநிலையை ஒரு கெல்வின் உயர்த்த தேவையான வெப்ப ஆற்றலின் அளவு ஆகும் வெப்ப ஏற்பு திறன் அலகு = **JK^{-1}**

தன் வெப்ப ஏற்பு திறன்

- ❖ ஒரு கிலோகிராம் நிறையுள்ள பொருளின் வெப்பநிலையை ஒரு கெல்வின் (K) உயர்த்த தேவைப்படும் வெப்ப ஆற்றலின் அலகு ஆகும். ,தன் வெப்ப ஏற்புதிறன் = **JKg^{-1} K^{-1}**
- ❖ வெப்பநிலை உயர்வு நிறை (ம) பொருளின் தன்மையை சார்ந்தது

→ நீரின் தன் வெப்ப ஏற்புதிறன் = **4180 JKg^{-1} K^{-1}**

→ பாதரசத்தின் தன் வெப்ப ஏற்பு திறன் = **140 JKg^{-1} K^{-1}**

→ வெப்பத்திற்கான சமன்பாடு – **Q = MS θ** ,மெழுகின் உருகுநிலை = **57°C**

→ நீரின் உருகு நிலை = **0°C**

→ திரவ நிலையில் உள்ள மெழுகு திரவ நிலைக்கு மாறும் போது அதன் கன அளவு ? **குறையும்**

→ குக்கரில் நீரின் கொதிநிலை = **120°C** , நீரின் கொதிநிலை = **100°C**

→ தனி சுழி வெப்ப நிலை என்பது = **0°K**

வெப்ப நிலையை அளக்க

1. செல்சியஸ் 2. கெல்வின் 3. பாரன்ஹீட்

மனிதனின் வெப்பநிலை

செல்சியஸ் = 36.9 °C	எ.கா
பாரன்ஹீட் = = 98. 4 F	1 °K (- 272 °C)
கெல்வின் = 310 K	2 °K (- 271 °C)

→ தனி சுழி வெப்பநிலை என்பது = **0°K (அ) – 273 °C**

→ நீரின் உறைநிலை = **0°C (அ) 273 °K**

→ நீரின் கொதிநிலை = **373°K (அ) 100 °C**

→ தனிச்சுழி வெப்பநிலையில் மூலக்கூறுகளின் இயக்கம் **முழுவதுமாக** நின்றுவிடும்

→ முதல் நவீன வேதியியலாளர் என புகழப்பட்டவர் – **இராபர்ட் பாயில்**

வாயு விதிகள் (Gas rules) 1. பாயில் விதி 2. சார்ல்ஸ் விதி

1. பாயில் விதி – வெப்பநிலை மாறாமல் உள்ள போது குறிப்பிட்ட நிறையுள்ள வாயுவின் அழுத்தம் அதன் கன அளவுக்கு எதிர் தகவுகளில் அமையும். **P α 1 / V**

2. சார்லஸ் விதி (நேர் தகவு)

இதன் வேறுபெயர் **1. கன அளவு விதி 2. அழுத்த விதி**

1. கன அளவு விதி

- ❖ அழுத்தம் மாறாமல் உள்ள போது குறிப்பிட்ட நிறையும் வாயுவின் கன அளவு அதன் கெல்வின் வெப்பநிலைக்கு நேர்தகவில் அமையும்
- ❖ **V α T (அ) V / T**

அழுத்த விதி –கன அளவு மாறாமல் உள்ள போது குறிப்பிட்ட நிறையுள்ள வாயுவின் அழுத்தம் அதன் கெல்வின் வெப்பநிலைக்கு நேர் தகவில் அமையும்

- ❖ **P α T (அ) P / T**

→ நல்லியல்பு வாயு =**பாயில் விதி + சார்ல்ஸ் விதி**

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

→ Baloonist என்ற சிறப்பு பெயரை பெற்றவர் – **சார்லஸ்**
→ முதல் ஹைட்ரஜன் பலூனை வடிவமைத்தவர் – **சார்லஸ்**
→ திரவமானியை கண்டறிந்தவர் – **சார்லஸ்**
→ நல்லியல்பு வாயு (சமன்பாடு) **PV = nRT**
→ ஒலி வெற்றிடத்தின் வழியே பரவாது என நிரூபித்தவர் – **இராபர்ட் பாயில்**

அலைகள்

- மின்காந்த அலைகள்
  - எ.கா
    1. ஒளி அலைகள்
    2. அகசிவப்பு கதிர்கள்
    3. புற ஊதா கதிர்கள்
    4. காம கதிர்கள்
    5. ரேடியோ அலைகள் 6. கண்ணுறு ஒளி
- இயந்திர அலைகள்
  - குறுக்கலைகள்
  - நெட்டலைகள்

→ **நீரின் மேற்பரப்பின் மீது உருவாகும் அலைகள் குறுக்கலைகள்**
எ.கா 1. தண்ணீர் 2. ஒயர்

நெட்டலைகள் (கம்பிச் சுருள்)

❖ ஊடகத்திலுள்ள துகள்கள் அலைபரவும் திசைக்கு “இணையாகவோ” அவற்றின் திசையிலோ அதிர்வுறுவதால் உண்டாகும் அலைகள். **எ.கா ஒலி அலைகள் (Sound)**
❖ **ஒலி அலைகள் காற்றிலோ (அ) வாயுவிலோ நெட்டலையாக பரவுகின்றன.**

1. துகள்கள் அதிர்வுகளும் – அலைபரவும் திசை
→ ஊடகத்தின் வழியே நெட்டலைகள் பரவும் போது நெருக்கமும், நெகிழ்வும் உருவாகின்றன.
நெருக்கம் – அழுத்தம் அதிகம்
நெகிழ்வு – அழுத்தம் குறைவு

குறுக்கலைகள்:–

❖ ஊடகத் துகள்கள் அலைபரவும் திசைக்கு “ செங்குத்தான திசையில் ” அதிர்வுறுவதால் உருவாகும் அலைகள்
❖ எ.கா **1. நீர் அலைகள் 2. இழுத்த விடப்பட்ட கம்பி அதிர்வுகள்**
❖ **குறுக்கலைகள்** ஊடகத்தின் வழியே **அகடு, முகடு–** ஆக பரவுகின்றன.

வீச்சு (a)

❖ நடுநிலை புள்ளியிலிருந்து துகள் அடையும் பெரும இடப்பெயர்ச்சி ஆகும்.
❖ வீச்சின் அலகு – **மீட்டர்**

அலைவு காலம்–ஒரு முழு அதிர்வினை மேற்கொள்ள ஊடக துகள்கள் எடுத்துக் கொள்ளும் காலம் அலைவு காலம் ஆகும். அலைவுகாலத்தின் அலகு – **வினாடி**

அதிர்வெண்

❖ ஊடக துகள்கள் ஒரு வினாடியில் மேற்கொள்ளும் முழு அதிர்வுகளின் எண்ணிக்கை அதிர்வெண் ஆகும்.
❖ $N = 1 / T$

அலைநீளம் (λ)

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

- ❖ அதிர்வுறும் துகள்கள் ஓர் அதிர்வுக்கு எடுத்துக் கொள்ளும் முழு அதிர்வுகளின் எண்ணிக்கை அலைநீளம் ஆகும்.
- ❖ **அலகு – மீட்டர்**

→ "ஒலியானது" காற்றில் செல்லும் வேகத்தை விட "நீரில்" **5** மடங்கு வேகமாகவும் "இரும்பில் " **20 மடங்கு** வேகமாகவும் செல்கிறது.

→ ஒலியின் திசைசேகம் = **340 மீ / வி**

→ ஒளியின் திசைவேகம் = **3×10^8 மீ / வி (அ) 3,00,000 கி.மீ**

→ ஒளியானது ஒலியை விட மில்லியன் மடங்கு வேகமாக செல்வதால் மின்னல் முதலில் தெரிகிறது. பின்னர் இடி ஓசை (ஒலி) கேட்கிறது.

→ கேட்டலின் நீட்டிப்பு நேரம் = **1 / 10 வினாடி**

→ எந்த ஒரு ஒலியும் 1 / 10 வினாடியில் 34 மீட்டர் தொலைவு பயணம் செய்யும்.

→ ஒலியை எதிரொலிப்பு அடைய செய்யும் தடைப் பொருளானது அமைய வேண்டிய தொலைவு – **17 மீட்டர்**

→ ஒலியானது எதிரொலிப்பு பரப்புகளாகிய மேகக்கூட்டம் மற்றும் நிலப்பகுதிகளால் மீண்டும், மீண்டும் எதிரொலிப்பு அடைவதால் **இடி முழக்கம்** கேட்கிறது

எதிர் முழக்கம்

- ❖ பன்முக எதிரொலிப்பின் காரணமாக ஒலி கேட்டல் நீடித்திருக்கும் தன்மையே எதிர் முழுக்கம் ஆகும்
- ❖ **எ.கா கலை அரங்கம், பெரிய அறை, திரை அரங்கம், ஒளிப்பதிவு கூடங்கள்**
- ❖ எதிர் முழக்கம் நேரமானது பேச்சிற்கு – 0.5 வினாடியும் (பாடல்) இசைக்கு – 1 முதல் 1.5 வினாடி வரை
- ❖ எதிர் முழக்க நேரத்தை குறைப்பதற்கு கலை அரங்கத்தின் சுவர்கள் போன்றவை ஒலி உட்கவரும் தன்மை கொண்ட பொருள்களால் ஆன அமுக்கப்பட்ட நார் அட்டை, திரை சீலை மற்றும் பிளாஸ்டர் போன்ற போர்களால் மேற்பூச்சு செய்யப்பட்டு இருக்கும்

→ செவி உணர் நெடுக்கத்தின் அலகு – **20 HZ முதல் 20,000 HZ**

→ 20,000 ஹெர்ட்ஸ் அதிகமான அதிர்வெண் கொண்ட ஒலி – **மீயொலி**

→ 20 ஹெர்ட்ஸ்க்கு குறைவான அதிர்வெண் கொண்ட ஒலி – **குற்றொலி**

→ குற்றொலி எழுப்பும் விலங்குகள் – **யானை, பசு**

→ முதன் முதலாக ரேடியோ அலைகள் இருப்பதை ஆய்வின் மூலம் நிரூபித்தவர் – **ஹென்றி ரூபால்ஃப் ஹெர்பஸ்**

→ திரவங்களின் ஆவியாதல் பற்றி ஆய்வு செய்தவர் **– ஹென்றி ருடால்ஃப் ஹெர்பஸ்**

1 HZ = 1 சுற்று / வினாடி

- ❖ **மனிதன் = 20 முதல் 20,000 HZ**
- ❖ **யானை = 16 முதல் 12,000 HZ**
- ❖ **பசு = 16 முதல் 40,000 HZ**
- ❖ **பூனை = 100 முதல் 32,000 HZ**
- ❖ **நாய் = 40 முதல் 46,000 HZ**
- ❖ **முயல் = 1000 முதல் 1,00,000 HZ**
- ❖ **வௌவால் = 1000 முதல் 1,50,000 HZ**
- ❖ **டால்பின் = 70 முதல் 1,50,000 HZ**
- ❖ **கடல் நாய் = 900 முதல் 2,00,000 HZ**

RADAR = Radio Detection And Ranging

→ கருவில் உள்ள சிசுவினை ஆய்வு செய்யும் பாதுகாப்பான துல்லியமான முறை – **மீயொலி அலை கண்ணோட்டம்**

SONAR = Sound Navigation and Ranging

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

→ கடலின் ஆழம், நீருக்கு அடியில் பொருளின் தொலைவு, திசைவேகம், வேகம் ஆகியவற்றை அளக்க கூடிய கருவி – **Sonar**

டாப்ளர் விளைவு (Sound)

- ஒலி மூலத்திற்கும், கேட்பவருக்கும் இடையே ஒரு சார்பு இயக்கம் உள்ள போது ஒலியின் அதிர்வெண்ணில் தோற்ற மாற்றம் ஏற்படும் நிகழ்வு ஆகும்
- இரட்டை விண்மீன்களிலிருந்து வரும் வண்ண ஒளியை பற்றி ஆய்வின் மூலம் டாப்ளர் விளைவு கண்டறியப்பட்ட ஆண்டு – **1842 (முழு பெயர் – கிரிஸ்டியன் ஜோகன் டாப்ளர்)**

டாப்ளர் விளைவின் பயன்கள்

- ரேடார் கருவியானது நீர் மூழ்கி கப்பல், வானூர்திகளின் திசைவேகம் கண்டறிய பயன்படுகிறது.
- ரேடார் கருவி செயல்படும் தத்துவம் – டாப்ளர் தத்துவம்.
- வாகனத்தின் வேகத்தை கணக்கிடப் பயன்படுகிறது.
- வானூர்தி உள்ள உயரம், வேகம், நெருக்கம், வானூர்தியின் தொலைவு போன்றவை கணக்கிடப்படுகிறது.
- வெளவால்கள் இரையின் தொலைவு மற்றும் இயக்கத்தை அறிந்து கொள்ள இவை பயன்படுகிறது.

வ.எண்	இயக்கம்	வேகம்	
		மீ வி$^{-1}$	கிமீ மணி$^{-1}$
1.	எலி	0.5	1.8
2.	மனிதன்	1.0	3.6
3.	வண்டு	5.0	18
4.	P.T. உஷா	9	32.4
5.	சிறுத்தை	24	86.4
6.	ஒலியின் வேகம்	340	1224
7.	ஒளியின் வேகம்	3×10^{8}	10.8×10^{8}

பத்தாம் வகுப்பு

வெள்ளி (கோளின்) வளிமண்டலத்தில் அடர்ந்த வெள்ளை (ம) மஞ்சள் நிறமுள்ள கந்தக அமிலத்தால் ஆன மேகம் காணப்படுகிறது.

காரங்கள்

காரங்கள் நீரில் கரைந்து ஹைட்ராக்ஸில் (OH) அயனிகளை தருபவை காரங்கள் ஆகும்.

காரங்கள் கசப்பு சுவையையும் சோப்பு போன்ற வளவளப்பு தன்மையுடன் காணப்படும்.

எ.கா சலவை சோடா, எரிசோடா, எரிபொட்டாஷ்

இவை சிவப்பு லிட்மஸ் தாளை நீலமாக மாற்றும் இவை பினாப்தலீனுடன் இளஞ்சிவப்பு நிறத்தையும் மெத்தில் ஆரஞ்சுடன் மஞ்சள் நிறத்தையும் தரும்.

காரங்களின் வகைகள்

1. அயனியாதல் அடிப்படையில் காரங்கள்

வலிமை மிகு காரங்கள் – நீரில் முழுவதுமாக அயனி உருகின்றன. எ.கா NaOH, KOH

வலிமை குறைந்த காரங்கள் – நீரில் பகுதி அளவு அயனி உருகின்றன. எ.கா $NH_4(OH)_2$, $Ca(OH)_2$

2. அமிலத்துவத்துடன் காரம்

ஒர் அமிலத்துவ காரம்

நீருடன் சேரும் போது ஒரு ஹைட்ராக் NaOH, KOH

ஈரமிலத்துவ காரம் – $Na(OH)_2$, $Ca(OH)_2$, $Mg(OH)_2$

மூவமிலத்துவ காரம் – $Al(OH)_3$, $Fe(OH)_2$

3. செறிவின் அடிப்படையில் காரங்கள்

செறிவு மிகு காரங்கள்

இவை நீரில் காரங்களின் சதவீதத்தை அதிக அளவில் கொண்டுள்ளன.

நீர்த்த காரங்கள்

இவை நீரில் காரங்களின் சதவீதத்தை குறைந்தளவு கொண்டள்ளது.

காரங்களின் வேதிப்பண்புகள்

உலோகங்களின் காரங்களின் வினை

($Zn + NaOH$ ------> $Na_2 Zn_2O + H_2$)

உலோகம் + காரம் -----> உப்பு + H_2↑

நடுநிலை ஆக்கல் வினை

காரம் + அமிலம் ⟶ உப்பு + நீர் + ஆற்றல் (வெப்பம்)

காரங்களின் பயன்கள்

சோடியம் ஹைட்ராக்ஸைடு சோப்பு தயாரிக்க பயன்படுகின்றது.

கால்சியம் ஹைட்ராக்ஸைடு கட்டிடங்களுக்கு வெள்ளையடிக்க பயன்படுகிறது

மென்னீசியம் ஹைட்ராக்ஸைடு வயிற்று உபாதைகளுக்கு மருந்தாக பயன்படுகின்றது.

அமோனியம் ஹைட்ராக்ஸைடு துணிகளிலுள்ள எண்ணெய் கறை (ம) அழுக்கினை நீக்க பயன்படுகிறது.

P_H மதிப்பு

ஒரு கரைசலில் அமிலம் (அ) காரத்தின் வலிமையை அக்கரைசலின் ஹைட்ரஜன் அயனிகளின் செறிவின் அடிப்படையில் அளவிடுதலே P_H மதிப்பாகும்.

P_H மதிப்புகள் ஒரு கரைசலின் தன்மை அமிலமாக காரமா (அ) நடுநிலையா என்பதை தீர்மானிக்கிறது.

மதிப்பை அறிமுகப்படுத்தியவர் – சாரன்சன்

ஒரு கரைசலில் ஹைட்ரஜன் அயனியின் செறிவு 0.001m எனில் அதன் P_H மதிப்பும் ?

ஒரு கரைசலில் ஹைட்ராக்ஸைடு அயனியின் செறிவு 0.001m எனில் P_H மதிப்பு என்ன ? 11

ஒரு கரைசலின் ஹைட்ரஜன் அயனியின் செறிவு 1.0×10^{-9}m எனில் கரைசலின் P_H மதிப்பு = 9

P_H மதிப்பு 7–விட அதிகமாக இருப்பதால் இக்கரைசல் காரதன்மையுடையது.

ஒரு காரத்தில் ஹைட்ராக்ஸைடு அயனியின் செறிவு 1.0×10^{-9}m எனில் கரைசலின் P_H மதிப்பு = 5

கரைசல்	P_H மதிப்பு
1. எலுமிச்சை சாறு	2.2 – 2.4
2. தக்காளி சாறு	4.4
3. காபி	4.4 – 4.5
4. மனிதனின் உமிழ் நீர்	6.5 – 7.5
5. வீட்டில் பயன்படுத்தும் அமோனியா	12.0

அன்றாட வாழ்வில் P_H –ன் முக்கியத்துவம்

மதிப்பு 6.9 ஆகும் போது மனித உடம்பு குளிர், இருமல், ப்ளு இவற்றின் தாக்கித்திற்கு ஆளாகிறது.

மனித உடம்பில் 5.5 ஆக இருக்கும் போது புற்று நோய் உருவாக்கும் செல்கள் தோன்றி உடம்பில் உயிர் வாழ ஏதுவாகிறது.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

ஒரு ஆரோக்கியமான மனிதனின் உடம்பிலுள்ள தோலின் 4.5 – 6

நம் வயிற்றில் சுரக்கும் திரவத்தின் மதிப்பு = 2

மனித ரத்தத்தின் மதிப்பு – 7.35 – 7.45 (7.4)

நம் உடலின் கடினமான பகுதி – பற்களிலுள்ள எனாமல்

நம் வாயின் 5.5க்கு கீழே குறையும் போது இவ்வெனாமல் அரிக்கப்படுகிறது. பற்களை சுத்தப்படுத்த பயன்படும் பற்பசைகள் பொதுவாக காரத்தன்மை பெற்றிருப்பதால் அவை அதிகப்படியான அமிலத்தை நடுநிலையாக்கி பற்சிதைவை தடுக்கின்றன.

சிட்ரஸ் பழங்கள் காரத்தன்மையுடைய மண்ணிலும் அரிசி, அமிலத்தன்மை கொண்ட மண்ணிலும் கரும்பு நடுநிலை தன்மை கொண்ட மண்ணிலும் வளர்கின்றன.

மழைநீரின் மதிப்பு = 7

உப்புகளின் வகைகள்

சாதாரண உப்பு

அமில உப்புகள்

சோடியம் ஹைட்ரஜன் சல்பேட்

கார உப்புகள்

லெட் ஹைட்ராக்ஸைடு குளோரைடு

இரட்டை உப்பு

பொட்டாஷ் படிகாரம்

சாதாரண உப்பு – இது நம் அன்றாட உணவிலும் உணவை பாதுகாப்பதிலும் பயன்படுகின்றது.

1. இது கடின நீரை மென்னீராக மாற்றுகிறது.
2. இது வீடுகளில் (தூய்மை) பொருளாக பயன்படுகிறது.

சமையல் சோடா

இது ரொட்டி சோடா தயாரிக்க பயன்படுகிறது.

ரொட்டி சோடா

சமையல் சோடா + டார்டாரிக் அமிலம் இது கேக்கு (ம) ரொட்டிகளை மென்மையாக மாற்றுகிறது.

இது அமில நீக்கியில் உள்ள ஒரு பகுதிப் பொருள் இக்கரைசல் காரத்தன்மை பெற்றுள்ளதால் வயிற்றுள்ள அதிகப்படியான அமிலத்தை நடுநிலை ஆக்குகிறது.

கால்சியம் ஆக்ஸி குளோரைடு: சலவைத்தூள் (பிளிச்சிங் பவுடர்)

இது குடிநீரிலுள்ள பாக்டீரியாக்களை அழிக்க பயன்படுகிறது.

இது பருத்தி (ம) லினன் துணிகளை வெளுக்க பயன்படுகிறது.

பாரிசாந் (இது முறிந்த எலும்புகளை ஒட்ட வைக்கவும் (ம) சீலைகளுக்கு வார்ப்புகளை செய்யவும் பயன்படுகிறது.

தனிம வரிசை அட்டவணை

இது வரை கண்டு பிடிக்கப்பட்டுள்ள **தனிமங்களின் எண்ணிக்கை – 118.**

X கதிர்களை பயன்படுத்தி தனிமங்களின் அணு எண்ணை கண்டறிந்தவர் – **ஹென்றிஜின் ஜெப்ரிஸ் மோஸ்லே**

தனிம வரிசை அட்டவணையை தயாரித்த பெருமை யாரை சாரும் **? மெண்டலீவ்**

தனிமங்களை அவற்றின் ஒத்த பண்புகளுக்கு ஏற்ப வகைபடுத்தும் போது ஒரு தொகுதியிலுள்ள ஏதேனும் ஒரு தனிமத்தின் பண்புகளின் மூலம் அந்த தொகுதியில் உள்ள மற்ற தனிமங்களின் பண்புகளை ஊகிக்க முடிகிறது.

நவீன ஆவர்த்தன விதி (ம) அட்டவணையை கண்டறிந்தவர் **– மோஸ்லே**

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

நவீன ஆவர்த்தன அட்டவணை நவீன அணு எண் அமைப்பில் அமைந்தது.
நவீன ஆவர்த்தன விதியின் அடிப்படையில் ஏராளமான தனிம வரிசை அட்டவணைகள் அவ்வப்போது கொண்டு வரப்பட்டாலும் எல்லாவற்றிக்கும் அடிப்படையானது – மெண்டலீவ் தனிம வரிசை அட்டவணை

பொதுவாக பயன்படுத்தப்படும் நீள்வடிவ அட்டவணையானது தனிமங்களின் எலக்ட்ரான் அமைப்பின் அடிப்படையில் அமைக்கப்பட்டது – இது நவீன ஆவர்த்தன அட்டவணை என அழைக்கப்படுகிறது.

நவீன ஆவர்த்தன விதி

தனிமங்களின் இயற்பியல் (ம) வேதியியல் பண்புகள் அத்தனிமங்களின் அணு எண்ணுக்கேற்ப ஆவர்த்தன முறையில் மாற்றமடைகின்றன.

நீள்வடிவ தனிம வரிசை அட்டவணையில் கிடைமட்ட வரிசைகள் தொடர்கள் என்றும் செங்குத்து வரிசை தொகுதிகள் என்றும் அழைக்கப்படுகிறது.

நவீன ஆவர்த்தன அட்டவணை 4 தொகுதிகளாக முறையே s p d f எனப் பிரிக்கப்பட்டுள்ளன.

நீள்வடிவ தனிம வரிசை அட்டவணை

இடப்பகுதி நடுப்பகுதி வலப்பகுதி

தொகுதி 1 (ம) தொகுதி 3–12 தொகுதி 13 – 18 (சாதாரண தனிமம்)

தொகுதி 2

(சாதாரண தனிமங்கள்)

நடுப்பகுதி

இடைநிலை தனிமங்கள் உள்இடைநிலை தனிமங்கள்

லாந்தனைடுகள் ஆக்டினைடுகள்

14 14

தனிம வரிசை அட்டவணையில் உள்ளத் தொகுதிகள் =18 , தொடர்கள் = 7

முதல் தொடர் (அணு எண் 1 (ம) 2)

இது மிகவும் குறுகியத் தொடர்

இதில் 2 தனிமங்கள் (ம) உள்ளன (ஹைட்ரஜன், ஹீலியம்)

2–வது தொடர் (அணு எண் 3 – 10)

இது குறுகியத் தொடர். இதில் 8 தனிமங்கள் உள்ளன (லித்தியம் முதல் நியான் வரை)

3– வது தொடர் (அணு எண் 11 – 18)

இது ஒரு குறுகிய தொடர். இதில் 8 தனிமங்கள் உள்ளன. (சோடியம் முதல் ஆர்கான் வரை)

4– வது தொடர் (அணு எண் 19 – 36)

இது ஒரு நீண்டத் தொடர்

இதில் 18 தனிமங்கள் உள்ளன. (பொட்டாசியம் முதல் கிரிப்டான் வரை)

இதில் 8 சாதாரண தனிமங்களும் 10 இடைநிலை தனிமங்களும் உள்ளன.

5– வது தொடர் (அணு எண் 37 – 54 வரை)

இது ஒரு நீண்டத் தொடர்

இதில் 18 தனிமங்கள் உள்ளன. (ரூபிடியம் முதல் செனான் வரை)

இதில் சாதாரண தனிமங்கள் = 8, இடை நிலைத் தனிமங்கள் = 10

6– வது தொடர் (அணு எண் 55 – 86)

இது மிகவும் நீண்டத் தொடர்

இதில் 32 தனிமங்கள் உள்ளன. (சீசியம் – ரேடான் வரை)

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

இதில் 8 சாதாரண தனிமங்களும் 10 இடைநிலை தனிமங்களும் 14 உள்ளிடை நிலை தனிமங்கள் (லாந்தனைடுகள்)

7– வது தொடர் (அணு எண் 87 –118)

இது 6 – வது வரிசையை போலவே 32 தனிமங்களை கொண்டிருக்க முடியும் ஆனால் இதுவரை 26 தனிமங்கள் IUPAC –கால் அங்கிகரிக்கப்பட்டுள்ளன.

முதல் நிலை தொகுதி தனிமங்கள் (கார உலோகம்)

1. லித்தியம் – அணு எண் =3
2. சோடியம் – அணு எண் = 11
3. பொட்டாசியம் – அணு எண் = 19
4. ருபீடியம் – அணு எண் = 37
5. சீசியம் – அணு எண் = 55
6. பிரான்சியம் – அணு எண் = 87

2– ம் தொகுதி தனிமங்கள் – கார மண் உலோகங்கள்

1. பெர்லியம் – அணு எண் = 4
2. மெக்னீசியம் – அணு எண் = 12
3. கால்சியம் – அணு எண் = 20
4. ஸ்ரேன்டியம் – அணு எண் = 38
5. பேரியம் – அணு எண் = 56
6. ரேடியம் – அணு எண் = 88

தொகுதி 3 – 12 வரையுள்ள தனிமங்கள் இடைநிலைத் தனிமங்கள் எனப்படுகின்றன.

1. குரோமியம் – அணு எண் = 24
2. இரும்பு – அணு எண் =26
3. சில்வர் – அணு எண் = 47
4. தங்கம் – அணு எண் = 79
5. மெர்குரி – அணு எண் = 80
6. டங்ஸ்டன் – அணு எண் = 74

தொகுதிகள் 1, 2 (அ) 13 – 18 வரையுள்ள தனிமங்கள் சாதாரண தனிமங்கள் (அ) முக்கிய தனிமங்கள் (அ) பிரதிநிதித்துவ தனிமங்கள்

தொகுதி – 16 (போலேனியம் தவிர) – சால்கோஜென்ஸ் தனிமங்கள் (குடும்பம்) (அ) ஆக்ஸிஜன் குடும்பம்.

தொகுதி – 17 – இதிலுள்ள தனிமங்கள் ஹேலஜென்கள் (அ) உப்பீனிகள் என அழைக்கப்படுகின்றன.

தொகுதி – 18 – இதிலுள்ள தனிமங்கள் மந்த வாயுக்கள் ஆகும்

1. ஹீலியம் – அணு எண் = 2
2. நியான் – அணு எண் = 10
3. ஆர்கான் – அணு எண் = 18
4. கிரிப்டான் – அணு எண் =36
5. செனான் – அணு எண் = 54
6. ரேடான் – அணு எண் 86

தொகுதி 3–ல் தொடர் 6–ன் ஒரு பகுதியாக விளங்கும் லாந்தனைடுகள், (ம) ஆக்ட்டினைடுகள் உள் இடைநிலை தனிமங்கள் என அழைக்கப்படுகின்றன.

நவீன ஆவர்த்தன அட்டவணையின் சிறப்பு பண்புகள்

1. தொடர்களின் சிறப்பு

ஒரு தொடரில் எல்லா தனிமங்களிலும் அவற்றின் இணைதிறன் கூட்டிலேயே எலக்ட்ரான்கள் சேர்க்கப்படுகின்றன.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

தொடரிலுள்ள தனிமங்களின் எலக்ட்ரான் அமைப்பு மாறுபடுவதால் அவற்றின் வேதி பண்புகளும் மாறுபடுகின்றன.

அணுவின் உருவ அளவானது ஒரு தொடரில் இடமிருந்து வலமாக செல்லும் போது குறைகிறது. ஒரு தொடரில் தனிமத்தின் உலோக தன்மை குறைந்தும் அலோகத் தன்மை அதிகரித்துக் காணப்படுகிறது.

தொகுதிகளின் சிறப்பு பண்புகள்

ஒரு தொகுதியிலுள்ள தனிமங்கள் அவற்றின் இணைதிறன் கூட்டில் ஒரே எண்ணிக்கை உள்ள எலக்ட்ரான் பெற்றுள்ளன.

கார உலோக தனிமங்கள் மட்டும் அதன் வெளிக்கூட்டில் அதாவது இணைதிறன் கூட்டில் ஒரே ஒரு எலக்ட்ரான்கள் பெற்றிருக்கும்.

ஒரு தொகுதியிலுள்ள தனிமங்கள் ஒரே இணைதிறனை பெற்றுள்ளன.

ஒரு தொகுதியிலுள்ள தனிமங்கள் ஒத்த வேதிப் பண்பு காணப்படும்.

ஒரு தொகுதியிலுள்ள தனிமங்களின் உருகுநிலை, கொதிநிலை, அடர்த்தி போன்ற இயற்பியல் பண்புகள் சீராக மாறுபடுகின்றன.

ஒரு தொகுதியிலுள்ள தனிமங்களின் அணு ஆரமானது மேலிருந்து கீழாக வரும் போது அதிகரிக்கிறது.

IUPAC – International Union Pure Applied Chemistry.

IUPAC – அதிகாரப் பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ள இறுதி தனிமம் கோப்பெரன்சியம் Cn_{112}

விமானங்களின் பாகங்கள் தயாரிக்க பயன்படும் (தனிமம்) உலோகம் – அலுமினியம்.

நாணய உருவாக்களில் பயன்படும் தனிமம் – காப்பர்

உலகில் முதன் முதலில் பயன்படுத்தப்பட்ட உலோகம் – காப்பர், செம்பு, தாமிரம்

யுத்த நிமித்த உலோகங்கள் (படை கலன்களை உருவாக்க பயன்படும் உலோகங்கள்)

1. டைட்டானியம்
2. குரோமியம்
3. மாங்கனீசு
4. சிர்கோனியம்

அணு ஆற்றல் உற்பத்தியில் பயன்படும் உலோகம் – யுரேனியம்

நாணய உலோகங்கள் – காப்பர், வெள்ளி, தங்கம்

அணிகலன்கள் உருவாக்க 22 கேரட் பயன்படுத்தப்படும் இதில் 22 பாகம் தங்கமும், 2– பாகம் செய்யும் காணப்படும்.

தங்கத்தின் அலகு – கேரட் = 91.6

18 கேரட் தங்கம் 75% = 91.6 – தங்கம் மீதி கலவை ஆகும்.

ஒரு கிராம் தங்கத்தை 2km தூரத்திற்கு மெல்லியதாக நீட்ட முடியும்.

கனிமங்கள்

ஒரு கனிமம் என்பது தனித்த சேர்மமாகவோ (அ) பல சேர்மங்களின் கூட்டுக்கலவையாகவோ புவியில் காணப்படும்.

தாதுக்கள்

எந்த ஒரு குறிப்பிட்ட கனிமத்திலிருந்து இலாபகரமான முறையில் பெருமளவு உலோகம் பிரித்தெடுக்க முடிந்தால் அத்தனிமம் தாது எனப்படும்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

எ.கா அலுமினியத்தின் கனிமங்கள்

1. களிமண், 2. பாக்ஸைட்

அலுமினியம் பாக்ஸைட் கனிமத்திலிருந்து இலாபகரமாக பிரித்தெடுக்க படுகிறது. எனவே அலுமினியத்தின் முக்கிய தாது பாக்ஸைட் ஆகும். களிமண் அதன் கனிமமாகும்.

கனிமங்களுக்கும், தாதுக்களும் உள்ள வேறுபாடுகள்

கனிமங்களில் உலோகம் குறைந்த சதவீதமே காணப்படும். ஆனால் தாதுக்களில் உலோகம் அதிக சதவீதம் காணப்படும்.

கனிமங்களிலிருந்து உலோகத்தை எளிதில் பிரிக்க இயலாது ஆனால் தாதுக்களிலிருந்து உலோகத்தை லாபகரமாகவும் எளிய முறையிலும் பிரிக்க இயலும்.

எல்லா கனிமங்களும் தாதுக்கள் அல்ல ஆனால் எல்லா தாதுக்களும் கனிமங்களே.

இரத்தத்தின் சிவப்பு நிறமி (ஹீமோகுளோபின்) இரும்பை கொண்டுள்ளது.

எலும்பு, பற்களில் மிக முக்கிய பங்கு வகிப்பது – கால்சியம்

வைட்டமின் B_{12} வில் உள்ள உலோகம் – கோபால்ட்

தாவர பச்சையத்தில் உள்ள உலோகம் – மெக்னீசியம்

தொகுதி	தனிமங்கள்
முதல் தொகுதி	கார உலோகங்கள்
2–ம் தொகுதி	கார மண் உலோகங்கள்
3–12 – ம் தொகுதி	இடைநிலைத் தனிமங்கள்
1–2, 13 –8 தொகுதி	பிரதிநிதித்துவ தனிமங்கள் (அ) முக்கிய தனிமங்கள்
16–ம் தொகுதி	சால்கோஜன் (அ) ஆக்ஸிஜன் குடும்பம்
17–ம் தொகுதி	ஹேலஜென் (அ) உப்பீனிகள்
18–ம் தொகுதி	மந்த வாயு
3–ன் ஒரு பகுதி	உள் இடைநிலை தனிமங்கள்

உலோகங்கள்

உலோகத்தை அதன் தாதுவிலிருந்து பிரித்தெடுக்க உள்ள வெவ்வேறு படிநிலைகளையும் அதனை தூய்மைப்படுத்துதலையும் விரிக்கும் பகுதியே உலோகவியல் எனப்படும்.

கனிமம் தாது உலோகம்

உலோகவியலுடன் பொருந்தாதது எது

1. தூய்மைப்படுத்துதல்
2. மின் முலாம் பூசுதல்
3. வறுத்தல்
4. செறிவூட்டல்

1. தாதுக்கூலும்

தாதுப்பொருள்களுடன் கலந்துள்ள மண் (அ) களிமண் பாறை சம்பந்தபட்ட மாசுக்கள் தாதுக்கூலும் எனப்படும்.

2. இளக்கி

தாதுவுடன் உள்ள மாசுக்களை (காங்கு) உருகிடும் சேர்மமாக மாற்றி அதை நீக்கிட தாதுவுடன் சேர்க்கும் பொருளே இளக்கி என்பதாகும். எ.கா கால்சியம் ஆக்ஸைடு

3. கசடு

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

உலோகத்தை பிரித்தலில் இளக்கி தாதுப்பொருள்களுடன் வினைபுரிந்து உருவாகும் பொருள் கசடு.
தாதுக்கூளம் + இளக்கி --> கசடு

4. உருக்கி பிரித்தல்

வறுத்த உலோக ஆக்ஸைடை உலோகமாக உருகிய நிலையில் மாற்றும் ஒரு ஒடுக்க வினையே உருக்கி பிரித்தல்.

உருக்கி பிரித்தல் என்பது ஓர் ஆக்ஸிஜன் ஒடுக்க வினையாகும்

ஆக்ஸைடு தாது	கார்பனேட் தாது	ஹேலைடு தாது	சல்பைடு தாது
1. பாக்ஸைட்	காலமைன்	கிரையோலைட்	சின்னபார்
2. குப்ரைட்	மார்பின்	புளூரஸ்பார்	கலீனா
3. ஹேமடைட்	மெக்னசைட்	ஹார்ன் சில்வர்	இரும்பு பைரைட்
4. ஜிங்கைட்	சிடரைட்	பாறை உப்பு	ஜிங்க் பிளண்ட்

புவியின் புற பரப்பிலோ (அ) பரப்பின் அடியிலோ காணப்படும் தனிமங்களின் எண்ணிக்கை – 80

குறைந்த வினைதிறன் உள்ள உலோகங்கள் இயற்கையில் தனித்த நிலையில் கிடைக்கும் தனிமங்கள்

தனித்த நிலையில் காணப்படும் உலோகங்கள்

1. தங்கம், 2. வெள்ளி, 3. பிளாட்டினம்

உலோகம் பிரித்தெடுத்தலில் உள்ள வெவ்வேறு நிலைகள்

1. தாது

செறிவூட்டல் 1. புவிஈர்ப்பு முறை. 2. மின்காந்த பிரிப்பு முறை. 3. நுரைமிதப்பு முறை, 4. வேதியியல் முறை

செறிவூட்டபட்டதாது

அதிக வினைதிறன் உள்ள உலோகங்கள் மிதமான வினைதிறன்உள்ள உலோகங்கள் குறைவான வினைதிறன் உள்ள உலோகங்கள்

1. மின்னார் பகுப்பு ஒடுக்க தூய்மையாக்கல் 1. காற்றில்லாத சூழலில் வறுத்தல்
காற்று சூழலில்
தூய உலோகம் (கிடைக்கும்) 2. காற்று சூழலில் வறுத்தல்
3. ஒடுக்க தூய்மையாக்கல் – தூய உலோகம் கிடைக்கும்

1. ஆக்ஸைடு தாதுக்களை அடர்பிக்கும் முறை
2. சல்பைடு தாதுக்களை அடர்பிக்கும் முறை – நுரை மிதப்பு முறை (பை மரஎண்ணெய் பயன்படுகிறது) (யூக்கலிப்பஸ்)

அலுமினியம் – Al
நிறம் – வெள்ளியை போன்ற வெண்மை
அணு எண் =13
எலக்ட்ரான் அமைப்பு = 2,8,3
இணைதிறன் = 3
அணு நிறை =27
தனிம வரிசை அட்டவணையில் வரிசை = 3
தனிம வரிசை அட்டவணையில் தொகுதி = 3A
புவியின் மேற்பரப்பில் அதிகளவில் காணப்படும் உலோகம் – 1. அலுமினியம், 2. இரும்பு

அலுமினியத்தின் முக்கிய தாதுக்கள்

1. பாக்ஸைட், 2. கிரையோலைட் 3. கோரண்டம்

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

அலுமினியத்தின் முக்கிய தாதுவான பாக்ஸைட் தாதுவிலிருந்து அலுமினியம் பிரித்தெடுத்தல் 2 நிலைகளில் நடைபெறுகிறது.

1. பேயர் முறை 2. ஹால் முறை

பேயர் முறையின் மூலம் பாக்ஸைட் தாது அலுமினாவாக மாற்றப்படுகிறது.
பேயர் முறை பாக்ஸைட் பேயர் முறை அலுமினா
ஹால் முறை அலுமினா மின்னர் பகுப்பு அலுமினியம்

ஹால் முறைப்படி அலுமினாவானது மின்னார் பகுப்பு ஒடுக்கம் செய்யப்பட்டு அலுமினியமாக மாற்றப்படுகிறது.

1. கேதோடு – கிராப்பைட் பூசப்பட்ட இரும்புத் தொட்டி
2. ஆனோடு – உருகிய மின்பகுளியில் தொங்கவிடப்பட்ட கிராபைட் துண்டுகள்
3. மின் பகுளி – தூய அலுமினா + உருகிய கிரையோலைட் + புளுரஸ் பார்
4. வெப்பநிலை – 900 – 950°C

அலுமினியத்தின் பண்புகள்

1. இயற்பியல் பண்புகள்
   1. வெள்ளியின் வெண்மை கொண்ட உலோகம்
   2. இயல்பு – இலகுவானது, குறை அடர்த்தி கொண்டது
   3. தகடாக அடிக்கலாம், கம்பியாக நீட்டலாம்
   4. மின், வெப்பத்தை நன்கு கடத்தும்
   5. உருகுநிலை – 660°C

வேதிப்பண்புகள்
அலுமினிய வெப்ப ஒடுக்க வினை

அலுமினியம் ஒரு சிறந்த ஆக்ஸிஜன் ஒடுக்கி. அலுமினியம் பவுடரும் இரும்பாக்ஸைடு கொண்ட கலவையை சூடாக்கும் போது இரும்பாக ஒடுக்கப்படுகிறது. இந்நிகழ்வு அலுமினிய வெப்ப ஒடுக்க வினை ஆகும்.

$Fe2O3 + 2Al$ ------> $2Fe + Al2O3$

அலுமினியத்தின் பயன்கள்

பயன்கள்	**வடிவம்**	**காரணம்**
வீட்டுப்பாத்திரங்கள்	அலுமினிய உலோகம்	அலுமினியம் லேசானது அரிப்பைத் தடுப்பது சிறந்த வெப்பம் கடத்தி
மின்கம்பி உற்பத்தி	அலுமினியக் கம்பிகள்	சிறந்த மின்கடத்தி
விமானம் கட்டுவதில் உலோகக் கலவையாக	டியுராலுமின் மெக்னாலியம் – என்பது Al + Mg	அலுமினியத்தின் உலோகக் கலவைகள் லேசானவை இழுவிசை உள்ளவை. அரிப்பை எதிர்ப்பவை
வெப்பத்தால் ஒட்டி இணைத்தல்	அலுமினியம் பவுடர்	அலுமினியம் நல்ல ஒடுக்கி இரும்பு ஆக்சைடை இரும்பாய் ஒடுக்கும்

1. மனித உடற்செயலியல்

→ உடற் செயலியலை விளக்கியவர் - ஆண்டிரியாஸ் வெசாலியஸ்
இவர் மனித உடல் அமைப்பு எனும் நூலை பிரெஞ்சு மொழியில் வெளியிட்டார்

வாய்:

→ உமிழ்நீரிலுள்ள சுரப்பிகள் மொத்தம் மூன்று. அவை

1. மேல் அன்னச் சுரப்பி (பரோட்டிட்) – பெரியது

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

2. கீழ்த்தாடைச் சுரப்பி (சப்மாக்சிலரி)
3. நாவடிச் சுரப்பி (சப்லிங்குவல்) சிறியது

→ உமிழ்நீரில் லைசோசோம் உள்ளது. இது பாக்டீரியாவை அழிக்கிறது

→ உமிழ்நீரில் உள்ள நொதி – டயலின்

→டயலின் ஸ்டார்ச்சை மால்டோஸாக மாற்றுகிறது

→ குழந்தைகளின் பால்பற்கள் எண்ணிக்கை 20 (இருபது)

$$\text{பற்சூத்திரம்} \quad \frac{2123}{2123} \times 2$$

→ நமது உடலில் மிக கடினமான பகுதி – பல்லிலுள்ள எனாமல்

→ தொண்டைப் பகுதி ஏழு துவரங்களுடன் தொடர்புடையது

→உணவுக்குழலின் நீளம் 22 செமீ

→ வாய்க்குழியில் உணவு அரைக்கப்பட்டு உணவு கவளங்களாக மாற்றப்படுவதற்கு – மேஸ்டிகேசன் என்று பெயர்

→ வாய்க்குழியிலிருந்து இரைப்பைக்கு உணவு விழுங்கப்படுவது – டிகுளுட்டிஷன் என்று பெயர்

→ உணவு உண்ணும் போது மூச்சுக்குழலை மூடும் உறுப்பு – எப்பிகிளாட்டிஸ்

→ பறவைகளின் குரல்வளை „சிரிங்ஸ்" எனப்படும்

இரைப்பை:

→இரைப்பையின் சுவர் 4 அடுக்குகளால் ஆனது

→ இரைப்பை முன்சிறுகுடலுடன் இணையுமிடம் - பைலோரஸ்

→ இரைப்பையின் மையப்பகுதி – பன்ட்ஸ்

→ இதயத்துக்கருகே உள்ள பகுதி – கார்டியாக் இரைப்பை

→ரைப்பையில் சுரப்பவை ஹைட்ரோகுளோரிக் அமிலம் (உணவிலுள்ள பாக்டீரியாக்களை அழிக்க) மற்றும் இரைப்பை ஜீரண நீர்

→ இரைப்பை ஜீரண நீரில் உள்ளவை – பெப்சின், ரெனின், லிப்பேஸ்

→புரதம் பெப்சின் பெப்டோன்கள்

→கேசினோஜன் பால்புரதம் கேசின்

→ கொழுப்பு லிப்பேஸ் செரிக்க துவங்குதல்

→இரைப்பையின் சுவர்கள் சுரப்பது மியூகஸ். இது ஹைட்ரோகுளோரிக் அமிலம் மூலம் இரைப்பை சுவர் அரிப்பதைக் குறைக்கிறது. இதன் குறைவினால் அல்சர் ஏற்படும்

→ இரைப்பையிலுள்ள அரைக்கப்பட்ட உணவின் பெயர் - சைம்

சிறுகுடல்:

→ முன்சிறுகுடல் - டியோடினம்

→ நடுசிறுகுடல் - ஜிஜீனம்

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

→ பின்சிறுகுடல் - இலியம்

→ கணையம் மற்றும் கல்லீரல் சுரப்பிகள் இணையுமிடம் - டியோடினம்

→உடலின் மிகப்பெரிய சுரப்பி – கல்லீரல்

→ கல்லீரல் சுரப்பது – பித்தநீர்

→பித்தநீர் சேகரிக்கப்படுவது – பித்தப்பையில்

பித்தநீர் மஞ்சள் நிறமுடையது. கசப்பு சுவையுடையது

→ பித்தநீரிலுள்ள பித்த உப்புகள் கொழுப்புகளை எளிய துகள்களாக்கிக நீரில் பரப்பு இடுவிசையினை குறைத்து பால்மமாக்குகின்றன

→ ஹீமோகுளோபின் சிதைவதன் மூலம் கிடைக்கும் நிறமிகள் - பிலிரூபின், பிலிவெர்டின் என்னும் புரதங்கள் ஆகும்

→ கிளைகோஜன் கல்லீரலிலும், கொழுப்பு அடிப்போஸ் திசுவிலும் சேமிக்கப்படுகிறது

கணையம்

→ இரைப்பையின் கீழே உள்ள இலை வடிவ சுரப்பி – கணையம்

→ இது சுரப்பது கணைய நீர். இதன் PH மதிப்பு 8-9

→ இதன் மேல் லாங்கர்ஹான் திட்டுக்கள் உள்ளது. இது இன்சுலினைச் சுரக்கிறது.

→ நாளமுள்ள மற்றும் நாளமில்லா சுரப்பி இரண்டும் கணையம் காணப்படுவதால் கணையமானது „இரட்டைப்பண்பு சுரப்பி" எனப்படுகிறது

கணைய நீரிலுள்ள நொதிகள்

→ சோடியம் பை கார்பனேட் - ஹைட்ரோகுளோரிக் அமிலத்தை நடுநிலையாக்குகிறது

→ கணைய அமிலேஸ் - கார்போஹைட்ரேட்டைச் செரிக்கிறது

• கணைய லிப்பேஸ் - கொழுப்பை செரிக்கிறது

→ கணைய டிரிபிசின் - பெப்டோனை பாலிபெப்டைடு ஆக்குகிறது

→ கைமோ டிரிப்சின் - பால் புரதங்களைச் செரிக்கிறது

சிறுகுடல் சுரப்பு:

→ டியோடினத்தில் சுரக்கிறது

→ 6 நொதிகள் இதிலுள்ளன

→ எரிப்சின்: பெப்டோன் மற்றும் பாலிபெப்டைடுகளை அமினோ அமிலமாக்குகிறது

→ மால்டேஸ்: மால்டோஸை குளுக்கோஸாக்குகிறது

→ சுக்ரோஸ் (இன்வர்டேஸ்): சுக்ரோஸை குளுக்கோஸ் மற்றும் பிரக்டோஸாக்குகிறது

→ லாக்டோஸ்: லாக்டோஸை குளுக்கோஸ் மற்றும் காலக்டோஸாக்குகிறது

→குடல் லிப்பேஸ்: கொழுப்பை கொழுப்பு அமிலம் மற்றும் கிளிசராலாக்குகிறது

→ இலியத்தில் காணப்படுபவை – குடலுறுஞ்சிகள்

→ குடலுறுஞ்சிகள் உட்கிரகித்தலின் இறுதி அலகுகள் ஆகும். இது ரத்த தந்துகிகள் மற்றும் நிணநீர் குழாய்களால் ஆனது

→ ரத்த தந்துகிகள் கொழுப்பை தவிர பிற அனைத்தையம் உறிஞ்சுகிறது

→ நிணநீர் குழாய்கள் கொழுப்பை மட்டும் உறிஞ்சும்

பெருங்குடல்:

→□இங்கு செரிக்கப்படாத உணவு மலமாக்கப்படுகிறது

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

→ எஸஸெரிசியா கோலை என்ற பாக்டீரியா மூலம் மலம் உருவாகிறது
35. 225 மீட்டர் நீட்டளவு கொண்ட இடத்தில் 26 மரகன்றுகளை நடுகின்றனர். அதில், அந்த இடத்தின் இரு முனைகளில் இரு மரக்கன்றுகளை நடுகின்றனர் எனில், அடுத்தடுத்து இருக்கும் இரு மரக்கன்றுகளின் இடைப்பட்ட தூரத்தினைக் காண்க.
விடை : 9மீ
விளக்கம் :
26 மரக்கன்றுகளுக்கிடையே 25 இடைவெளி உள்ளது.
ஆகவே, தேவையான தூரம் **= (225/25)** மீ
= 9 மீ
அடுத்தடுத்து இருக்கும் இரு மரக்கன்றுகளுக்கிடைப்பட்ட தூரம் = 9 மீ

36. இரு தேர்வு அறைகள் **A** மற்றும் **B** உள்ளன. 10 மாணவர்கள் **A** யிலிருந்து **B** க்கு அனுப்பப்படுகின்றனர். தற்போது **A** மற்றும் **B** யில் உள்ள மாணவர்கள் எண்ணிக்கை சமமாக இருக்கிறது. பிறகு 20 மாணவர்கள் **B** யிலிருந்து **A** க்கு அனுப்பப்படுகின்றனர் எனில் **A** யில் உள்ள மாணவர்கள் எண்ணிக்கை **B** யில் உள்ள மாணவர்கள் எண்ணிக்கையைப் போல இருமடங்கு எனில், **A** யில் மாணவர்களின் எண்ணிக்கையினைக் காண்க.
விடை : 100 மாணவர்கள்
விளக்கம் :
A யில் உள்ள மாணவர்கள் எண்ணிக்கை **x** என்க.
B யில் உள்ள மாணவர்கள் எண்ணிக்கை **y** என்க.

$x - 10 = y + 10$
$x = y + 20$
$x - y = 20$ ---------------------- (1)
$x + 20 = 2(y - 20)$
$x + 20 = 2y - 40$
$x = 2y - 60$
$x - 2y = -60$ ---------------------- (2)
சமன்பாடு (1) - (2)
$x - y - x + 2y = 20 + 60$
$y = 80$
y யை (1) ல் பிரதியிட,
$x - y = 20$
$x - 80 = 20$
$x = 20 + 80$
$x = 100$
A யில் உள்ள மாணவர்கள் எண்ணிக்கை = 100 மாணவர்கள்

37. ஆசிரியர் மாணவனிடம் ஓர் எண்ணுடன் 25 யை பெருக்கச் சொல்கிறார். ஆனால் மாணவன் 52 யை அந்த எண்ணுடன் பெருக்குகிறான். அவ்வாறு பெருக்குகையில் அவருக்கு சரியான விடையைவிட 324 அதிகமாக கிடைக்கிறது. ஆகவே 324 என்ற விடை எந்த எண்ணுடன் 25 யை பெருக்க கிடைக்கும்?
விடை : 12
விளக்கம் :
ஓர் எண்ணினை **x** எனக் கொள்க.
பிறகு, $52x - 25x = 324$
$27x = 324$

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

x = 324/27
x = 12
ஆகவே, 25 யை 12 உடன் பெருக்க 324 என்ற விடை கிடைக்கும்.
38. 4 ஆண்கள் மற்றும் 2 பெண்களின் ஒரு மாத ஊதியத்தொகையின் கூடுதல் ரூ. 46,000 ஆகும். ஒரு பெண்ணின் ஊதியமானது ஆணின் ஊதியத்தினைவிட ரூ. 500 அதிகம் எனில் ஒரு பெண்ணின் மாத ஊதியத்தொகையினைக் காண்க.
விடை : ரூ. 8000
விளக்கம் :
ஒரு ஆணின் மாத ஊதியத்தினை ரூ. **x** எனக் கொள்க.
பிறகு,
ஒரு பெண்ணின் மாத ஊதியத்தினை ரூ. **(x + 500)** எனக் கொள்வோம்.
ஆகவே, **4x + 2 (x + 500) = 46000**
4x + 2x + 1000 = 46000
6x = 46000 - 1000
6x = 45000
x = 45000/6
x = 7500
ஒரு பெண்ணின் மாத ஊதியத்தொகை **=** ரூ. **(7500 + 500) =** ரூ. 8000

50. ஒரு வகுப்பில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கையானது, அவ்வகுப்பில் உள்ள மாணவிகளின் எண்ணிக்கையின் எண்ணிக்கையைப்போல 5 மடங்கிற்கு சமம் ஆகும் எனில், 72 மாணவ, மாணவிகள் அடங்கிய வகுப்பில் மாணவர்களின் எண்ணிக்கையைக் காண்க.
விடை : 60 பேர்
விளக்கம் :
மொத்த மாணவ மாணவிகள் **=** 72 பேர்
மாணவர்களின் எண்ணிக்கையை **x** எனக் கொள்க.
மாணவிகளின் எண்ணிக்கையை **y** எனக் கொள்க.
x + 5(x) = 72
6x = 72
x = 72/6
x = 12
மாணவர்களின் எண்ணிக்கை **=** 12 பேர்
ஆகவே, மாணவிகளின் எண்ணிக்கை **y =** 60 பேர்
51. $(64)^2 - (36)^2 = 20 * x$. எனில் **x = ?**
விடை : 140
விளக்கம் :
$(64)^2 - (36)^2$ என்பது $a^2 - b^2$ எனும் வடிவில் உள்ளது.
$a^2 - b^2 = (a + b) * (a - b)$
20 * x = (64 + 36) * (64 - 36)
20X = 100 * 28
X = (100 * 28) / 20
X = 5 * 28
X = 140
52. **517 * 324** என்ற எண்ணானது 3ஆல் முழுமையாக வகுபடும் எனில் ***** உள்ள இடத்தில் வரும் மிகச்சிறிய எண் எது ?

விடை : 2

ஒவ்வொரு இலக்கத்திலும் உள்ள எண்களின் கூடுதல் **(5 + 1 + 7 + x + 3 + 2 + 4) = (22 + x)** ஆனது 3ஆல் வகுபட வேண்டும். **x =** 2

53. சுருக்குக : **107 * 107 + 93 * 93 =** ?

விடை : 20098

விளக்கம் :

$(107 * 107) + (93 * 93) = (107)^2 + (93)^2$

$= (100 + 7)^2 + (100 - 7)^2$

$(a + b)^2 + (a - b)^2 = 2 * (a^2 + b^2)$

$= 2 * [(100)^2 + 7^2]$

$= 2 * [(100)^2 + 7^2]$

$= 2 * (10000 + 49)$

$= 2 * 10049$

$= 20098$

54. சுருக்குக : **8988 / 8 / 4 =** ?

விடை : 280.875

விளக்கம் :

$8988 / ((1 / 8) * (1 / 4))$

$= 8988 / (8 * 4)$

$= 8988 / 32$

$= 280.875$

55. 6 விளையாட்டு பொம்மைகளின் விலையானது ரூ. 264.37 எனில் 5 பொம்மைகளின் விலை என்ன?

விடை : ரூ.220.308

விளக்கம் :

5 பொம்மைகளின் விலையை **x** எனக் கொள்க.

பொம்மைகளின் எண்ணிக்கை குறைவாக இருந்தால் பொம்மைகளை வாங்கும் விலையானது குறைவாக இருக்கும். எனவே இதை நேர்மாறலாக கொள்ள வேண்டும்.

⇒ 6 : 5 :: 264.37 : **x**

$\Rightarrow 6x = 5 * 264.37$

$\Rightarrow x = (5 * 264.37) / 6$

$\Rightarrow x = 1321.85 / 6$

⇒ **x =** ரூ.220.308

56. சுருக்குக : **[(753 * 753 + 247 * 247 - 753 * 247) / (753 * 753 * 753 + 247 * 247 * 247)] =** ?

விடை : 1 **/** 1000

விளக்கம் :

கொடுக்கப்பட்டிருக்கும் வினாவானது $(a^2 + b^2 - ab) / (a^3 + b^3)$ எனும் வடிவில் உள்ளது.

எனவே $(a^2 + b^2 - ab) / (a^3 + b^3) = 1 / (a + b)$ என்ற சமன்பாட்டை பயன்படுத்தி சுருக்கலாம்.

$a = 753$

$b = 247$

$1 / (a + b) = 1 / (753 + 247)$

$1 / (a + b) = 1 / 1000$

57. 2 மேஜை மற்றும் 3 நாற்காலிகளின் விலையானது ரூ.3500 மற்றும் 3 மேஜை 2 நாற்காலிகளின் விலையானது ரூ.4000 எனில் ஒரு மேஜையின் விலை என்ன?

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

விடை : ரூ.1000
விளக்கம் :
மேஜையை **x** எனவும், நாற்காலியை **y** எனவும் கொள்க.
2x + 3y = 3500 --------- (1)
3x + 2y = 4000 ---------- (2)
(1) * 3 ⇒ 6x + 9y = 10500 ---------- (3)
(2) * 2 ⇒ 6x + 4y = 8000 ----------- (4)
(3) - (4) ⇒ 6x + 9y - 6x - 4y = 10500 - 8000
5y = 2500
y = 500
(2) ⇒ 3x + 2(500) = 4000
3x + 1000 = 4000
3x = 3000
x = 1000
எனவே ஒரு மேஜையின் விலை ரூ.1000 ஆகும்.
58. சுருக்குக : **(87 * 87 + 61 * 61 - 2 * 87 * 61)**
விடை : 676
விளக்கம் :
$= (87)^2 + (61)^2 - (2 * 87 * 61)$
$= (a^2 + b^2 - 2ab)$
இங்கு **a =** 87 மற்றும் **b =** 61
$(a - b)^2 = (87 - 61)^2$
$(26)^2 = (20 + 6)^2$
$(20)^2 + (6)^2 + (2 * 20 * 6)$
= (400 + 36 + 240)
= (436 + 240)
= 676

27- சதவீதம்

1). A யின் வருமானம் **B** யின் வருமானத்தைவிட 25**%** அதிகம் எனில் **B** யின் வருமானம் **A** யின் வருமானத்தைவிட எவ்வளவு குறைவு?
விடை : 20**%** குறைவு
விளக்கம் :
R = 25%
((R / (R + 100)) * 100) %
= ((25 / (25 + 100)) * 100) %
= ((25 / 125) * 100) %
ஆகவே **B** யின் வருமானம் **A** யின் வருமானத்தைவிட 20**%** குறைவு ஆகும்.

2). 240 யை விட 15**%** குறைவான எண் காண்க.
விடை : 204
விளக்கம் :
= 240 * (15 / 100)
240 ல் 15**% =** 36

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

240 யை விட 15% குறைவான எண் **= 240 - 36**
240 யை விட 15% குறைவான எண் **=** 204

3). 7500 மக்கள் தொகை கொண்ட கிராமத்தில் படித்தவர்கள் 47% எனில் படிக்காதவர்கள் எண்ணிக்கை எத்தனை?
விடை : 3975 பேர்
விளக்கம் :
7500 ல் 47**% = 7500 * (47 / 100)**
படித்தவர்களின் எண்ணிக்கை **= 3525** பேர்
படிக்காதவர்களின் எண்ணிக்கை **= 7500 - 3525**
படிக்காதவர்களின் எண்ணிக்கை **= 3975** பேர்

4). சென்ற ஆண்டு ஒரு ஸ்கூட்டரின் விலை ரூ.34,000. இந்த ஆண்டு இதன் விலை 25% கூடுதலாகின்றது. அக்கூடுதல் தொகையும், மொத்த தொகையையும் காண்க.
விடை : ரூ. 8500, ரூ. 42500
விளக்கம் :
சென்ற ஆண்டு ஒரு ஸ்கூட்டரின் விலை **=** ரூ.34,000
கூடுதலான விலை (சதவீதத்தில்) **= 25%**
= 34000 * (25 / 100)
= 340 * 25
கூடுதலான விலை **=** ரூ. 8500
ஸ்கூட்டரின் மொத்த விலை **=** சென்ற ஆண்டு ஒரு ஸ்கூட்டரின் விலை **+** கூடுதலான விலை
= 34000 + 8500
ஸ்கூட்டரின் மொத்த விலை **=** ரூ. 42500

9). ஒரு வகுப்பறையில் உள்ளவர்களில் 20% பேர் ஒவ்வொருவரிடமும் 2 கார்கள் வைத்துள்ளனர். அதுபோல, 40% பேர் ஒவ்வொருவரிடமும் 3 கார்கள் வைத்துள்ளனர். மீதமுள்ளவர்கள் ஒருவருக்கு ஒரு கார் வீதம் வைத்துள்ளனர். ஆகவே ஒரு கார் மட்டுமே வைத்துள்ளவர்களின் சதவீதத்தினைக் காண்க.
விடை : 48%
விளக்கம் :
மொத்த நபர்களின் எண்ணிக்கையை 100 எனக் கொள்வோம்.
2 கார்கள் மட்டும் வைத்துள்ளவர்களின் எண்ணிக்கை **=** 20 பேர்
3 கார்கள் மட்டும் வைத்துள்ளவர்களின் எண்ணிக்கை **=** 80 ல் 40%
= 80 * (40 / 100)
= 32 பேர்
ஆகவே, ஒரு கார் மட்டும் வைத்துள்ளவர்களின் எண்ணிக்கை **= 100 - (20 + 32)**
= 100 - 52
= 48 பேர்
ஆகவே, ஒரு கார் மட்டுமே வைத்துள்ளவர்களின் சதவீதம் **= 48%**

10). ஒரு பொருளை ரூ.100 க்கு வாங்கி, ரூ.125 க்கு விற்றால் லாப சதவீதம் எவ்வளவு?
விடை : 25%
விளக்கம் :

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

விற்றவிலை = ரூ.125
வாங்கிய விலை = ரூ.100
லாப சதவீதம் = (லாபம் / வாங்கிய விலை) * 100
லாபம் = விற்றவிலை - வாங்கிய விலை
= 125 - 100
= ரூ. 25
லாப சதவீதம் **= (25 / 100) * 100**
லாப சதவீதம் **= 25%**

11). ஒரு கிராமத்தின் மக்கள் தொகை ஆண்டொன்றுக்கு 7% வீதம் அதிகரிக்கின்றது. இப்பொழுது மக்கள் தொகை 90,000 எனில் 2 ஆண்டுகளுக்குப் பிறகு அக்கிராமத்தின் மக்கள் தொகை என்னவாக இருக்கும்?
விடை : 103041
விளக்கம் :
தற்போதைய மக்கள் தொகை **Q** = 90,000, அதிகரிப்பு விகிதம் **r = 7%**
n = 2 ஆண்டுகள்.
இரண்டு ஆண்டுகளில் மக்கள் தொகை $= P (1 + (r / 100))^n$
$= 90000 (1 + (7 / 100))^2$
$= 90000 (107 / 100)^2$
= 90000 * (107 / 100) * (107 / 100)
= 103041
இரண்டு ஆண்டுகளுக்கு பிறகு அந்த கிராமத்தின் மக்கட்தொகை = 103041

12). 70 பேர் கொண்ட வகுப்பில், 60% மாணவர்கள் எனில், மாணவ, மாணவிகளின் எண்ணிக்கையைக் காண்க.
விடை : 28
விளக்கம் :
மொத்த நபர்கள் = 70
மாணவர்களின் எண்ணிக்கை = 70 இல் 60%
= (60 / 100) * 70
= 42
மாணவர்களின் எண்ணிக்கை = 42
மாணவிகளின் எண்ணிக்கை = மொத்த மாணவர்கள் - மாணவர்களின் எண்ணிக்கை
= 70 - 42
= 28
மாணவிகளின் எண்ணிக்கை **= 28**

13). ஒரு உலோகக் கலவையில் **30%** தாமிரம், **40%** துத்தநாகம், மீதி நிக்கல் உள்ளது. 20 கி.கி உள்ள இந்த உலோகக் கலவையில் நிக்கலின் அளவு யாது?
விடை : 6 கி.கி
விளக்கம் :
மொத்த உலோகக் கலவையின் அளவு = 20 கி.கி
உலோகக் கலவையில் உள்ள தாமிரத்தின் அளவு **= 30%**
= 20 * (30 / 100) = 6 கி.கி
உலோகக் கலவையில் உள்ள துத்தநாகத்தின் அளவு **= 40%**
= 20 * (40 / 100) = 8 கி.கி
உலோகக் கலவையில் உள்ள நிக்கலின் அளவு = மொத்த உலோகக் கலவையின்

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

அளவு - (தாமிரத்தின் அளவு + துத்தநாகத்தின் அளவு)
= 20 - (6 + 8) = 20 - 14
உலோகக் கலவையில் உள்ள நிக்கலின் அளவு = 6 கி.கி

14). கணிணிக் குழுமத்தில் நடைபெற்ற நேர்முகத் தேர்வில் 1500 நபர்கள் கலந்து கொண்டனர். இதில் **12%** நபர்கள் தேர்வு செய்யப்பட்டனர் எனில், எத்தனை நபர்கள் தேர்வு செய்யப்பட்டனர்? மேலும் எத்தனை நபர்கள் தேர்வு செய்யப்படவில்லை எனக் காண்க.
விடை : 180, 1320
விளக்கம் :
கணிணிக் குழுமத்தில் நடைபெற்ற நேர்முகத் தேர்வில் கலந்து கொண்டவர்கள் = 1500 பேர்
தேர்வு செய்யப்பட்ட நபர்களின் எண்ணிக்கை = **12%**
= 1500 * (12/100)
தேர்வு செய்யப்பட்ட நபர்களின் எண்ணிக்கை = 180 பேர்
தேர்வு செய்யப்படாத நபர்களின் எண்ணிக்கை = மொத்த நபர்களின் எண்ணிக்கை - தேர்வு செய்யப்பட்ட நபர்களின் எண்ணிக்கை
= 1500 - 180
தேர்வு செய்யப்படாத நபர்களின் எண்ணிக்கை = 1320

15). ஓர் ஆடையின் விலை ரூ. 2100 லிருந்து ரூ. 2520 ஆக அதிகரிக்கின்றது எனில், அதிகரிப்பு சதவீதத்தைக் காண்க.
விடை : **20%**
விளக்கம்
முதலில், ஆடையின் விலை = ரூ. 2100
ஆடையின் இப்போதைய விலை = ரூ. 2520
விலையில் அதிகரிப்பு **= 2520 - 2100**
= ரூ. 420
அதிகரிப்பு சதவீதம் = (அதிகரித்த தொகை / முதல் தொகை) *** 100**
= (420 / 2100) * 100
= 0.2 * 100
அதிகரிப்பு சதவீதம் **= 20%**

15). 16 பொருட்களின் விற்பனை விலையானது 20 பொருட்களின் அடக்க விலைக்கு சமம் எனில், அது எத்தனை சதவீதம் இலாபம் ஈஸ்ரீ”” கழவெஸ்ரீ””, நஷ்டம் எனக் காண்க.
விடை : **25%**
விளக்கம் :
விற்பனை விலை **= (C - S) / (S) * 100**
அடக்க விலையுடைய பொருட்களின் எண்ணிக்கை **= C**
விற்ற விலையுடைய பொருட்களின் எண்ணிக்கை **= S**
= ((20 - 16) / 16) * 100
= (4 * 100) / 16)
= 100 / 4
= 25%
குறிப்பு : இத்தகைய கணக்குகளில் **C - S** என்பது எதிர்மறை எண்ணாக வந்தால் நஷ்டமென்றும், நேர்மறை எண்ணாக வந்தால் இலாபம் என்றும் கொள்ள வேண்டும்.

26. 5 : 8 என்ற விகித மதிப்பினை சதவீதத்தில் எவ்வாறு குறிப்பிடலாம்?
விடை : **62.5%**
விளக்கம் :
= (5/8) * 100
= 500 / 8
5 : 8 என்ற விகித மதிப்பின் சதவீதம் **= 62.5%**

27. ரூ.2650 ஆனது ரூ.1987.50 இல் எவ்வளவு சதவீதம் ஆகும்?
விடை : **75%**
விளக்கம் :
= ((1987.50/2650) * 100)
= 19875/265 = 75%

29. ஒரு கிரிக்கெட் வீரர் பத்து போட்டிகளில் சராசரியாக 38.9 ரன்கள் எடுக்கிறார். முதல் ஆறு போட்டிகளின் சராசரி 42 எனில், மீதமுள்ள கடைசி நான்கு போட்டிகளின் சராசரியைக் காண்க.
விடை : 34.25
விளக்கம் :
நான்கு போட்டிகளின் சராசரி :
= ((பத்து போட்டிகளின் சராசரி *** 10) -** (ஆறு போட்டிகளின் சராசரி *** 6)) / 4**
= ((38.9 * 10) - (42 * 6)) / 4
= (389 - 252) / 4
= 137/4
மீதமுள்ள கடைசி நான்கு போட்டிகளின் சராசரி **=** 34.25

30. 6 எண்களின் சராசரி 3.95 ஆகும். 6 எண்களில் ஏதாவது 2 எண்களின் சராசரி 3.4 மற்றும் மற்ற 4 எண்களில் ஏதாவது 2 எண்களின் சராசரி 3.85. ஆகையால், மீதமிருக்கும் 2 எண்களின் சராசரியினைக் காண்க.
விடை : 4.6
விளக்கம் :
6 எண்களில் மீதமிருக்கும் 2 எண்களின் கூடுதல் :
= (3.95 * 6) - [(3.4 * 2) + (3.85 * 2)]
= 23.70 - [6.8 + 7.7]
= 23.70 - 14.5
= 9.20
6 எண்களில் மீதமிருக்கும் 2 எண்களின் சராசரி **= 9.2 / 2**
6 எண்களில் மீதமிருக்கும் 2 எண்களின் சராசரி **=** 4.6

31. 16 குழந்தைகள் **A** மற்றும் **B** என இரு அணிகளாகப் பிரிக்கப்பட்டு 10 மற்றும் 6 குழந்தைகள் வீதம் உள்ளனர். ஒரு தேர்வில் **A** அணியில் உள்ள குழந்தைகள் சராசரியாக 75 மதிப்பெண்களைப் பெற்றிருந்தனர் மற்றும் 16 குழந்தைகளின் சராசரி மதிப்பெண் 76 ஆகும் எனில் **B** அணியில் உள்ள குழந்தைகள் பெற்ற மதிப்பெண்களைக் காண்க.
விடை : **77 * (2/3)**
விளக்கம் :
தேவையான சராசரி :

= [(76 * 16) - (75 * 10)] / 6
= [1216 - 750] / 6
= 466 / 6
= 233 / 3
அணியில் உள்ள குழந்தைகள் பெற்ற சராசரி மதிப்பெண்கள் **= 77 * (2/3)**

34. இரு எண்களுக்கு இடைப்பட்ட வித்தியாசம் 1500. ஒரு எண்ணின் **8%** ஆனது மற்றொரு எண்ணின் **12%** ஆகும் எனில் அவ்விரு எண்களைக் காண்க.
விடை : 3000, 4500
விளக்கம் :
இரு எண்களை **x, y** எனக் கொள்வோம்.
x ல் **8% = y** ல் **12%**
x = (120/80) * y = (3/2) * y
x - y = 1500
(3/2) * y - y = 1500
(1/2) * y = 1500
y = (1500 * 2) / 1
y = 3000
ஒரு எண் **=** 3000
மற்றொரு எண் **= 3/2 * y = 3/2 * 3000 =** 4500
மற்றொரு எண் **=** 4500

56. 5 **/** 10 என்பதைச் சதவீதமாக மாற்றுக ?
விடை : **50%**
விளக்கம் :
100 ஐ பகுதியாகக் கொண்ட பின்னம் சதவீதம் எனப்படும். சதவீதத்தை **%** என்ற குறியீடு கொண்டு குறிக்கலாம்.
= (5 * 10) / (10 * 10)
= 50 / 100
= 50 %

57. 20 **:** 100 என்பதை சதவீதமாக மாற்றுக ?
விடை : **20%**
விளக்கம் :
= 20 : 100
= 20 / 100
= 20%

28-சராசரி

1. 100 குழந்தைகளின் சராசரி வயது 10 வருடம். அவர்களில் 25 பேர்களின் சராசரி வயது 8 வருடம். மற்றொரு 65 பேர்களின் சராசரி வயது 11 வருடம். மீதமுள்ள 10 குழந்தைகளின் சராசரி வயது காண்க.
விடை : 8.5
விளக்கம் :
100 குழந்தைகளின் வயதில் கூடுதல் **= 100 * 10 = 1000**
25 குழந்தைகளின் கூடுதல் **= 25 * 8 = 200**
65 குழந்தைகளின் வயதின் கூடுதல் **= 65 * 11 = 715**
மீதமுள்ள 10 குழந்தைகளின் வயதின் கூடுதல் **= 1000 - (200 + 715) = 85**
சராசரி **= 85 / 10 = 8.5**

2. மூன்று எண்களின் சராசரி 20. அவற்றில் இரு எண்கள் 16, 22. ஆகவே, மூன்றாம் எண்ணைக் காண்க.
விடை : 22
விளக்கம் :
மூன்று எண்கள் முறையே **x, y, z** எனக் கொள்க.
(x + y + z) / 3 = 20
(16 + 22 + z) = 20 * 3
38 + z = 60
z = 60 - 38
z = 22
எனவே, மூன்றாம் எண் **= 22**

3. 100 குழந்தைகளின் சராசரி வயது 10 வருடம். அவர்களின் 25 பேர்களின் சராசரி வயது 8 வருடம். மற்றொரு 65 பேர்களின் சராசரி வயது 11 வருடம். மீதமுள்ள 10 குழந்தைகளின் சராசரி வயதினைக் காண்க.
விடை : 8.5
விளக்கம் :
100 குழந்தைகளின் கூட்டுத்தொகை **/ 100 = 100** குழந்தைகளின் சராசரி
100 குழந்தைகளின் கூட்டுத்தொகை **/ 100 = 10** வருடம்
100 குழந்தைகளின் கூட்டுத்தொகை **= 100 * 10 = 1000**
25 குழந்தைகளின் கூட்டுத்தொகை **/ 25 = 8** வருடம்
25 குழந்தைகளின் கூட்டுத்தொகை **= 8 * 25 = 200**
65 குழந்தைகளின் கூட்டுத்தொகை **/ 65 =** 11 வருடம்
65 குழந்தைகளின் கூட்டுத்தொகை **= 11 * 65 = 715**
மீதமுள்ள 10 குழந்தைகளின் சராசரி **= 1000 - (200 + 715)**
= 1000 - 915
= 85
மீதமுள்ள 10 குழந்தைகளின் சராசரி **= 85 / 10**
= 8.5

4. முதல் 40 இயல் எண்களின் சராசரியை காண்க.
விடை : 20.5
விளக்கம் :
முதல் **n** இயல் எண்களின் கூடுதல் **= (n (n + 1))/2**
n = 40
முதல் 40 இயல் எண்களின் கூடுதல் **= (40 (40 + 1))/2**
= (40 * 41) / 2 ; = 820

தேவையான சராசரி = 820/40
தேவையான சராசரி = 20.5

5. 2, 7, 6 மற்றும் **x** ஆகிய எண்களின் சராசரி 5 ஆகும். அதுபோல, 18, 1, 6, **x** மற்றும் **y** ஆகியவற்றின் சராசரி 10. ஆகவே, **y** இன் சராசரியைக் காண்க.
விடை : 5, 20
விளக்கம் :
2, 7, 6 மற்றும் **x** ஆகிய எண்களின் சராசரி 5 :
(2 + 7 + 6 + x) / 4 = 5
15 + x = 20
x = 20 - 15 = 5
x = 5
18, 1, 6, **x** மற்றும் **y** ஆகியவற்றின் சராசரி 10 :
(18 + 1 + 6 + x + y) / 5 = 10
x ன் மதிப்பினை பிரதியிட,
25 + 5 + y = 50
30 + y = 50
y = 50 - 30
y = 20

6. அடுத்தடுத்து வரும் நான்கு இரட்டைப்படை எண்களின் சராசரி 27. ஆகவே, அதில் பெரிய எண்ணைக் காண்க.
விடை : 30
விளக்கம் :
அடுத்தடுத்து வரும் நான்கு இரட்டைப்படை எண்களை **x, x + 2, x + 4** மற்றும் **x + 6** எனக் கொள்க.
(x + (x + 2) + (x + 4) + (x + 6)) / 4 = 27
(4x + 12) / 4 = 27
x + 3 = 27
x = 27 - 3
x = 24
பெரிய எண் **= x + 6 = 24 + 6 = 30**

7. 25 தேர்வு முடிவுகளின் சராசரி 18 ஆகும். அதில் முதல் பன்னிரெண்டு முடிவுகளின் சராசரி 14 மற்றும் கடைசி பன்னிரெண்டு முடிவுகளின் சராசரி 17. எனில் பதிமூன்றாவது தேர்வு முடிவினைக் காண்க.
விடை : 78
விளக்கம் :
பதிமூன்றாவது தேர்வு முடிவு = 25 தேர்வு முடிவுகளின் கூடுதல் - 24 தேர்வு முடிவுகளின் கூடுதல்
= { (18 * 25) - [(14 * 12) + (17 * 12)] }
= 450 - (168 - 204)
= 450 - 372 = 78

8. ஒரு வகுப்பிலுள்ள 10 மாணவர்களின் சராசரி உயரம் 166 செ.மீ. எனக் கணக்கிடப்பட்டது. தகவல்களைச் சரிபார்க்கும்போது ஒரு மதிப்பு 150 செ.மீ.க்கு பதிலாக 160செ.மீ. என்று குறிப்பிடப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டது எனில் சரியான சராசரி உயரத்தைக் காண்க.
விடை : 165 செ.மீ
விளக்கம் :
சராசரி உயரம் **=** 166 செ.மீ மற்றும் **n = 10**

சராசரி = 10 மாணவர்களின் உயரம் / மாணவர்கள் எண்ணிக்கை
166 = 10 மாணவர்களின் உயரம் / 10
10 மாணவர்களின் உயரம் (தவறான கூடுதல்) = 1660
சரியான கூடுதல் = தவறான கூடுதல் - தவறான மதிப்பு + சரியான மதிப்பு
= 1660 - 160 + 150 = 1650
சரியான சராசரி உயரம் **= 1650 / 10 = 165** செ.மீ

9. பின்வருவனவற்றுள் 10 மாணவர்களின் மதிப்பெண்கள் கொடுக்கப்பட்டுள்ளன. 45, 34, 67, 84, 73, 27, 71, 60, 70, 59. இவற்றின் வீச்சு மற்றும் இடைநிலை மதிப்பைக் காண்க.
விடை : 57, 63.5
விளக்கம் :
வீச்சு = மீப்பெரு மதிப்பு - மீச்சிறு மதிப்பு
மீப்பெரு மதிப்பு = 84
மீச்சிறு மதிப்பு =27
வீச்சு **= 84 - 27**
= 57
இடைநிலை :
இடைநிலை காண கொடுக்கப்பட்ட எண்களை ஏறுவரிசை அல்லது இறக்குவரிசையில் எழுத வேண்டும். வரிசையானது இரட்டைப்படை எண்களைக் கொண்டுள்ளதால் இரு மத்திய மதிப்புகளின் சராசரியே அவற்றின் இடைநிலை ஆகும்.
ஏறுவரிசையில் :
27, 34, 45, 59, 60, 67, 70, 71, 73, 84
இடைநிலை **= (60 + 67) / 2 = (127 / 2)**
இடைநிலை**= 63.5**

10. அடுத்தடுத்து வரும் மூன்று முழுக்களின் கூடுதல் 45. அந்த முழுக்களைக் காண்க.
விடை : 14, 15, 16
விளக்கம் :
முதல் முழு எண் **x** என்க.
இரண்டாவது எண் **= x + 1**
மூன்றாவது எண் **= x + 1 + 1 = x + 2**
அதன் கூடுதல் **= x + (x + 1) + (x + 2) = 45**
3x + 3 = 45
3x = 42 ; x = 14
ஆகவே அம்மூன்று முழுக்கள், **x = 14, x + 1 =** 15 மற்றும் **x + 2 = 16**

11. 43, 24, 38, 56, 22, 39, 45 ஆகிய புள்ளி விவரங்களின் வீச்சு மற்றும் வீச்சு கெழு காண்க.
விடை: 0.436
விளக்கம்:
வீச்சு **= L - S**
= 56 - 22
= 34
வீச்சுக்கெழு **= (L – s) / (L + s)**
= 56 - 22/56 + 22
= 34/78
= 17/39

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

= 0.436

12. 30 லிருந்து 50 ற்கு இடையே உள்ள பகா எண்களின் சராசரியைக் காண்க.
விடை : 39.8
விளக்கம் :
30 லிருந்து 50 ற்கு இடையே உள்ள பகா எண்கள் :
31, 37, 41, 43, 47
30 லிருந்து 50 ற்கு இடையே உள்ள பகா எண்களின் சராசரி :
= (31 + 37 + 41 + 43 + 47) / 5 = 199/5
30 லிருந்து 50 ற்கு இடையே உள்ள பகா எண்களின் சராசரி **=** 39.8

13. முதல் 30 இயல் எண்களின் கூடுதல் காண்க.
விடை : 465
விளக்கம் :
n இயல் எண்களின் கூட்டுத்தொகை :
= (n (n + 1)) / 2
இங்கு **n = 30**
= (30 (30 + 1)) / 2
= (30 * 31) / 2 = 930/2
n இயல் எண்களின் கூட்டுத்தொகை **=** 465

14. **A** மற்றும் **B** யின் மாத வருமானத்தின் சராசரி ரூ. 5050. **B** மற்றும் **C** யின் மாத வருமானத்தின் சராசரி ரூ. 6250. **A** மற்றும் **C** யின் மாத வருமானத்தின் சராசரி ரூ. 5200. ஆகவே, **A** யின் மாத வருமானம் எவ்வளவு?
விடை : 4000
விளக்கம் :
A யின் மாத வருமானம் **= a** என்க
B யின் மாத வருமானம் **= b** என்க
C யின் மாத வருமானம் **= c** என்க
a + b = 2 * 5050 ---------------- (1)
b + c = 2 * 6250 ---------------- (2)
a + c = 2 * 5200 ---------------- (3)
சமன்பாடு (1) **+** சமன்பாடு (3) **-** சமன்பாடு (2)
a + b + a + c - (b + c) = (2 * 5050) + (2 * 5200) - (2 * 6250)
2a = 2(5050 + 5200 - 6250)
a = 4000
A யின் மாத வருமானம் **=** ரூ. 4000

15. 7 ன் முதல் 10 பெருக்கற்பலன்களின் சராசரியைக் காண்க.
விடை : 38.5
விளக்கம் :
= (7 (1 + 2 + 3 + 4 + ... + 10)) / 10
= (7 (10 (10 + 1))) / 10 * 2
= (7 * 110) / 10 * 2
= 770 / 20
7 ன் முதல் 10 பெருக்கற்பலன்களின் சராசரி **=** 38.5

16. 6, 16 மற்றும் 8 ஆகியவற்றுடன் எந்த எண்ணைக் கூட்டினால் சராசரியானது 13 எனக் கிடைக்கும்?
விடை : 22
விளக்கம் :
6, 16, 8 மற்றும் **x** இன் சராசரி 13 ஆகும்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

(6 + 16 + 8 + x)/4 = 13
6 + 16 + 8 + x = 13*4
30 + x = 52
x = 52 - 30
x = 22

17. 50 எண்களின் சராசரி 30. இரண்டு எண்கள் 35, 40 நீக்கப்பட்டால் கிடைக்கும் புதிய சராசரியைக் காண்க.

விடை : 29.68

விளக்கம் :

இரண்டு எண்கள் நீக்கப்பட்டால் மீதம் இருப்பது = 48 எண்கள்
48 எண்களின் சராசரி **= (50 * 30) - (35 + 40)**
= 1500 – 75 ; = 1425
சராசரி **= 1425/48**
சராசரி = 29.68

18. ஒரு பொருளின் சரியான மதிப்பு 420 மற்றும் அதன் தவறாக கணிக்கப்பட்ட மதிப்பு 390 என்றால், முழுப்பிழையையும், சார்புப் பிழையையும் காண்க.

விடை : 30, 0.0714

விளக்கம் :

முழுப்பிழை = சரியான மதிப்பு - தவறாக கணிக்கப்பட்ட மதிப்பு
= 420 - 390
முழுப்பிழை = 30
சார்புப் பிழை = (முழுப்பிழை / சரியான மதிப்பு)
= (30/420)
சார்புப் பிழை = 0.0714

19. ஒரு நகரத்தின் மக்கட்தொகை 1,76,400. மக்கட்தொகையானது ஆண்டுக்கு **5%** அதிகரிக்கிறது எனில், இரண்டு ஆண்டுக்கு முன்பும், இரண்டு ஆண்டுக்கு பின்பும் அந்நகரத்தின் மக்கட்தொகையைக் கணக்கிடுக.

விடை : 194481, 160000

விளக்கம் :

2 ஆண்டுகளுக்குப் பிறகு நகரத்தின் மக்கட்தொகை **= 176400 * (1 + (5/100)2)**
= 176400 * ((100 + 5) / 100)2
= 176400 * (21/20) * (21/20)
2 ஆண்டுகளுக்குப் பிறகு நகரத்தின் மக்கட்தொகை **= 194481**
2 ஆண்டுகளுக்கு முன்பு நகரத்தின் மக்கட்தொகை **= 176400 / (1 + (5/100)2)**
= 176400 / ((100 + 5) / 100)2
= 176400 / (20/21) * (20/21)
2 ஆண்டுகளுக்கு முன்பு நகரத்தின் மக்கட்தொகை = 160000

20. 11 எண்களின் சராசரி 60 ஆகும்.அதில் முதல் 6 எண்களின் சராசரி 58 ஆகவும் கடைசி 6 எண்களின் சராசரி 63 ஆகவும் இருந்தால், ஆறாவது எண்ணின் மதிப்பு?

விடை : 66

விளக்கம் :

முதல் ஆறு எண்களின் மொத்த மதிப்பு **= 58 x 6 =** 348
கடைசி ஆறு எண்களின் மொத்த மதிப்பு **= 63 x 6 =** 378
மொத்த மதிப்புகளின் கூடுதல் **= 348 + 378 =** 726
11 எண்களின் மொத்த மதிப்பு **= 11 x 60 = 660**
= 66

21. 25 முடிவுகளின் சராசரி 18. முதல் 12 முடிவுகளின் சராசரி 14 மற்றும் இறுதி

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

பன்னிரண்டு முடிவுகளின் சராசரி 17. அப்படியானால் பதின்மூன்றாவது முடிவு என்ன?
விடை : 78
விளக்கம் :
25 முடிவுகளின் மொத்தம் **= 25 * 18 = 450**
முதல் 12 முடிவுகளின் மொத்தம் **= 12 * 14 = 168**
இறுதி 12 முடிவுகளின் மொத்தம் **= 12 * 17 = 204**
பதின்மூன்றாவது முடிவு **= 450 - (168 + 204)**
= 450 - 372
= 78

22. 10 எண்களின் சராசரி 7 ஆகும். 12 என்ற எண்ணை ஒவ்வொரு எண்ணுடனும் பெருக்கும் போது கிடைக்கும் புதிய சராசரியைக் காண்க.
விடை : 84
விளக்கம் :
10 எண்களின் சராசரி **=** 7
10 எண்களின் கூடுதல் **= 10 * 7 = 70**
X1 + x2 + ... + x10 = 70
12X1 + 12x2 + ... + 12x10 = 12 * 70 ; 12X1 + 12x2 + ... + 12x10 = 840
புதிய எண்களின் சராசரி :
(12X1 + 12x2 + ... + 12x10) / 10 = 840/10 ; (12X1 + 12x2 + ... + 12x10) / 10 = 84
புதிய எண்களின் சராசரி **=** 84

23. ஒரு வகுப்பில் உள்ள மாணவ மாணவிகளின் வயதின் சராசரி 15.8 ஆண்டுகள் ஆகும். ஆதில் மாணவர்களின் வயதின் சராசரி 16.4 ஆண்டுகள் எனவும், மாணவிகளின் வயதின் சராசரி 15.4 ஆண்டுகள் எனவும் கொண்டால் மாணவ, மாணவிகளின் எண்ணிக்கை விகிதத்தினைக் காண்க.
விடை : 2 : 3
விளக்கம் :
தேவையான விகிதம் **= k : 1** எனக் கொள்க.
= (k * 16.4) + (1 * 15.4) = (k + 1) + 15.8
16.4k + 15.4 = 15.8k + 15.8
16.4k - 15.8k = 15.8 - 15.4
0.6k = 0.4
k = 0.4/0.6
k = 2/3
தேவையான விகிதம் **= (2/3) : 1**
தேவையான விகிதம் **= 2 : 3**

24. 25 மாணவர்களின் உயரத்தின் சராசரி **1.4m.** பிறகு 5 மாணவர்கள் நீங்கினால் உயரத்தின் சராசரியில் **0.15m** அதிகரிக்கிறது எனில் நீங்கிய 5 மாணவர்களின் சராசரி உயரம் என்னவாக இருக்கும்?
விடை : **0.8m**
விளக்கம் :
5 மாணவர்களின் உயரத்தின் கூடுதல் **= ((25*1.4) - (20*1.55)) m**
= 4m
தேவையான சராசரி **= 4/5 = 0.8m**
தேவையான சராசரி **= 0.8m**

25. இரு நிலையங்கள் **A** மற்றும் **B** ஆகியவற்றிற்கு இடைப்பட்ட தொலைவு 778 கி.மீ. ஒரு தொடர்வண்டியானது **A** யிலிருந்து **B** க்கு மணிக்கு 84 கி.மீ வேகத்தில்

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

சென்று, மீண்டும் A யினை மணிக்கு 56 கி.மீ வேகம் வீதம் செல்கிறது எனில் தொடர்வண்டியின் மொத்த பயணித்திற்கான சராசரி வேகத்தினை காண்க.
விடை : 67.2 கி.மீ/மணி
விளக்கம் :
தேவையான சராசரி வேகம் **= [(2xy) / (x + y)]** கி.மீ/மணி
= [(2 * 84 * 56) / (84 + 56)] கி.மீ/மணி
= [(2 * 84 * 56) / (140)] கி.மீ/மணி
= 67.2 கி.மீ/மணி
26. அடுத்தடுத்து வரும் மூன்று ஒற்றைப்படை எண்களின் கூடுதல் ஆனது அந்த எண்களின் சராசரியைவிட 38 அதிகம் எனில், மூன்று எண்களில் முதல் எண்ணினைக் காண்க.
விடை : 17
விளக்கம் :
தேவையான ஒற்றைப்படை எண்களை **x, x + 2, x + 4** எனக் கொள்க.
[x + x + 2 + x + 4] - [x + x + 2 + x + 4]/3 = 38
(3x + 6) - (3x + 6)/3 = 38
9x + 18 - 3x - 6 = 38 * 3
6x + 12 = 114
6x = 114 - 12
6x = 102
x = 102/6
x = 17
மூன்று எண்களில் முதல் எண் **=** 17
27. ஒரு வகுப்பில் உள்ள 5 மாணவர்களின் வயதின் சராசரி 16 ஆண்டுகள். அதுபோல 8 மாணவிகளின் வயதின் சராசரி 15 ஆண்டுகள் எனில் அவ்வகுப்பில் உள்ள மாணவ மாணவிகளின் வயதின் சராசரியைக் காண்க.
விடை : 15.4 ஆண்டுகள்
விளக்கம் :
5 மாணவர்களின் வயது **= 5 * 16** ஆண்டுகள்
= 80 ஆண்டுகள் 8 மாணவிகளின் வயது **= 8 * 15** ஆண்டுகள்
= 120 ஆண்டுகள்
வகுப்பில் உள்ள மொத்த மாணவ, மாணவிகளின் வயதின் சராசரி **= (80 + 120) / (5 + 8)**
= 200 / 13
வகுப்பில் உள்ள மொத்த மாணவ, மாணவிகளின் வயதின் சராசரி **=** 15.4 ஆண்டுகள்
28. மூன்று குழுக்களின் மாணவர்களின் எண்ணிக்கை முறையே 55, 60 மற்றும் 45 ஆகும். அம்மூன்று குழுக்களின் மாணவர்களின் சராசரி மதிப்பெண்கள் 50, 55, 60 எனில், மொத்த மாணவர்களின் சராசரி மதிப்பெண்களைக் காண்க.
விடை : 54.68 மதிப்பெண்கள்
விளக்கம் :
தேவையான சராசரி **= [(55 * 50) + (60 * 55) + (45 * 60)] / (55 + 60 + 45)**
= [2750 + 3300 + 2700] / [160]
= 8750 / 160
மொத்த மாணவர்களின் சராசரி மதிப்பெண்கள் **=** 54.68 மதிப்பெண்கள்
29. 5 எண்களின் சராசரி 27 ஆகும். அதிலிருந்து ஒரு எண்ணை விலக்கினால் சராசரியானது 25 எனக் கிடைக்கிறது எனில், விலக்கப்பட்ட எண்ணினைக் காண்க.
விடை : 10

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

விளக்கம் :
விலக்கப்பட்ட எண் = (27 * 5) - (25 * 5)
= 135 - 125 = 10
ஆகவே, விலக்கப்பட்ட எண் = 10
30. ஒரு தேர்வினை 1100 மாணவர்கள் மற்றும் 700 பெண்கள் எழுதுகின்றனர். இதில் **42%** மாணவர்களும் **30%** பெண்களும் தேர்ச்சி பெறுகின்றனர் எனில் மொத்த மாணவ,மாணவிகளில் தேர்ச்சி பெறாதவர்களின் எண்ணிக்கை என்ன?
விடை : **62(2/3)%**
விளக்கம் :
மொத்த மாணவர்களின் எண்ணிக்கை **= 1100 + 700**
= 1800
தேர்ச்சிபெற்ற மாணவர்களின் எண்ணிக்கை **= (1100** ல் **42%) +** (700 ல் **30%)**
= (462 + 210)
= 672
தேர்ச்சி பெறாதவர்களின் எண்ணிக்கை **= 1800 - 672**
= 1128
தேர்ச்சி பெறாதவர்களின் சதவீதம் **= 1128 / 1800 x 100**
= 188 / 3
= 62(2/3)%
31. ஒரு குடும்பத்தில் தாத்தா, பாட்டி, பெற்றோர்கள் மற்றும் மூன்று குழந்தைகள் உள்ளன. இதில் தாத்தா, பாட்டியின் சராசரி வயது 63 மற்றும் பெற்றோர்களின் சராசரி வயது 37 மற்றும் மூன்று குழந்தைகளின் சராசரி வயது 7, எனில் குடும்பத்தில் உள்ள மொத்த நபர்களின் சராசரி வயது என்ன?
விடை : **(221/7)**
விளக்கம் :
சராசரி **= ((63 x 2) + (37 x 2) + (7 x 3)) / (2 + 2 + 3)**
= (126 + 74 + 21) / 7
= (221/7)
32. ஒரு வகுப்பில் 16 மாணவர்களின் சராசரி எடையானது 50.25 **kg** மீதம் உள்ள 8 மாணவர்களின் எடையானது 45.15 **kg** எனில் வகுப்பில் உள்ள மொத்த மாணவர்களின் சராசரி எடை என்ன?
விடை : 48.55**kg**
விளக்கம் :
சராசரி **=** (16 மாணவர்களின் சராசரி எடை **+** 8 மாணவர்களின் சராசரி எடை) **/** மொத்த மாணவர்களின் எண்ணிக்கை
= ((50.25 x 16) + (45.15 x 8)) / (16 + 8)
= (804 + 361.20) / 24
= 1165.20 / 24
வகுப்பில் உள்ள மொத்த மாணவர்களின் சராசரி எடை **= 48.55 kg**
33. அ மற்றும் ஆ வின் தற்போதைய சராசரி விகிதமானது 5 : 7 ஆகும். 6 வருடங்களுக்கு முன்பு ஆ மற்றும் அ வின் வயது வேறுபாடானது 2 வருடம் எனில் அ மற்றும் ஆ வின் தற்போதைய வயது என்ன?
விடை : 48 வயது
விளக்கம் :
அ மற்றும் ஆ வின் தற்போதைய வயது **5x** மற்றும் **7x**
7x - (5x + 6) = 2 ; 7x - 5x - 6 = 2
x = 4

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

அ மற்றும் ஆ வின் தற்போதைய வயது **= 5x + 7x**
= 12x ; = 12 * 4 = 48 வயது

29) பரப்பளவு

1. சதுர வடிவப் பூந்தோட்டத்தின் பக்கம் 40 மீ. பூந்தோட்டத்தைச் சுற்றி மீட்டருக்கு ரூ.10 வீதம் வேலிபோட ஆகும் செலவைக் காண்க.
விடை : ரூ.1600
விளக்கம் :
சதுர வடிவப் பூந்தோட்டத்தின் பக்கம் 40 மீ
வேலிபோட ஆகும் மொத்த செலவைக் காண தோட்டத்தின் சுற்றளவைக் கண்டு அதை மீட்டருக்கு ஆகும் செலவுடன் பெருக்கினால் போதுமானது
சதுர வடிவப் பூந்தோட்டத்தின் சுற்றளவு **= 4 *** பக்கம்
= 4 * 40
= 160 மீ
வேலிபோட ஒரு மீட்டருக்கு ஆகும் செலவு = ரூ.10
160 மீட்டருக்கு ஆகும் செலவு = ரூ.10 * 160
= ரூ.1600

2. 80 மீ நீளம் உடைய செவ்வக வடிவத் தோட்டத்தின் பரப்பளவு 3200 ச.மீ. தோட்டத்தின் அகலத்தைக் காண்க.
விடை : 40 மீ
விளக்கம் :
நீளம் =80 மீ , பரப்பளவு =3200 ச.மீ
செவ்வகத்தின் பரப்பளவு = நீளம் * அகலம்
அகலம் = செவ்வகத்தின் பரப்பளவு / நீளம்
= 3200 / 80 = 40 மீ
தோட்டத்தின் அகலம் = 40 மீ

3. 40 மீ உயரம் கொண்ட ஒரு முக்கோண வடிவத் தோட்டத்தின் பரப்பளவு 800 ச.மீ. அதன் அடிப்பக்கத்தின் நீளத்தைக் காண்க.
விடை : 40 மீ
விளக்கம் :
முக்கோணவடிவத் தோட்டத்தின் பரப்பளவு = 800 ச.மீ
1/2 * b * h = 800
1/2 * b * 40 = 800
20 * b = 800
b = 800 / 20 = 40 மீ
அடிப்பக்கத்தின் நீளம் = 40 மீ

4. இரண்டு சதுரத்தின் சுற்றளவு முறையே 40 செ.மீ மற்றும் 32 செ.மீ ஆகும். மூன்றாவது சதுரத்தின் பரப்பளவானது மற்ற இரண்டு சதுரத்தின் பரப்பளவின் வித்தியாசங்களுக்குச் சமம் ஆகும். ஆகவே மூன்றாம் சதுரத்தின் சுற்றளவு காண்க.
விடை : 24 செ.மீ
விளக்கம் :
முதல் சதுரத்தின் பக்கம் **= (40 / 4)** செ.மீ = 10 செ.மீ
இரண்டாம் சதுரத்தின் பக்கம் **= (32 / 4) = 8** செ.மீ
மூன்றாம் சதுரத்தின் பரப்பளவு = $[(10)^2 - (8)^2]$ செ.மீ^{2}
= (100 - 64) செ.மீ^{2}

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

= 36 செ.மீ2
மூன்றாம் சதுரத்தின் பக்கம்= $\sqrt{36}$ செ.மீ = 6 செ.மீ
மூன்றாம் சதுரத்தின் சுற்றளவு = 4 * 6 = 24 செ.மீ
5. ஓர் இணைகரத்தின் பரப்பளவு 480 செ.மீ2 அடிப்பக்கம் 24 செ.மீ கொண்ட இணைகரத்தின் குத்துயரம் என்ன?
விடை : 20 செ.மீ
விளக்கம் :
பரப்பளவு = **480** செ.மீ2 அடிப்பக்கம் **b = 24** செ.மீ
இணைகரத்தின் பரப்பளவு **= 480**
b * h = 480
24 * h = 480
h = 480 / 24
= 20 செ.மீ
6. சாய் சதுரம் ஒன்றின் பரப்பளவு 150 ச.செ.மீ. அதன் ஒரு மூலைவிட்டம் 20 செ.மீ. மற்றொரு மூலைவிட்டத்தின் அளவைக் காண்க.
விடை : 15 செ.மீ.
விளக்கம் :
பரப்பளவு = 150 ச.செ.மீ, ஒரு மூலைவிட்டம் **d1** = 20 செ.மீ
சாய் சதுரத்தின் பரப்பளவு **= 150**
(d1 * d2) / 2 = 150
(20 * d2) / 2 = 150
10 * d2 = 150
d2 = 15 செ.மீ
மற்றொரு மூலைவிட்டத்தின் அளவு = 15 செ.மீ.
7. ஓர் இணைகரத்தின் பரப்பளவு 56 செ.மீ2. அதன் குத்துயரம் 7 செ.மீ எனில் இணைகரத்தின் அடிப்பக்கம் என்ன?
விடை : 8 செ.மீ
விளக்கம் :
பரப்பளவு = 56 செ.மீ2, குத்துயரம் **h** = 7 செ.மீ
இணைகரத்தின் பரப்பளவு **= 56**
b * h = 56
b * 7 = 56
b = 56 / 7
= 8 செ.மீ.
இணைகரத்தின் அடிப்பக்கம் = 8 செ.மீ.
8. ஒரு கோளத்தின் புறப்பரப்பு 98.65 ச.செ.மீ எனில் ஆரத்தைக் காண்க.
விடை: 2.8**cm**
விளக்கம்:
கோளத்தின் புறப்பரப்பு = 98.56 ச.செ.மீ
$4 \pi r^2 = 98.56$
$4 \times \frac{22}{7} \times r^2 = 98.56$
= 98.56 x (1/4) x 7/22
$r^2 = 1.12 \times 7$
$r^2 = 7.84$

$r = \sqrt{7.84}$

r = 2.8cm

9. ஓர் உருளை வடிவ தொட்டியின் கொள்ளளவு 1848, **m^3**. அதன் விட்டம் **14 m** எனில், உருளை வடிவ தொட்டியின் ஆழத்தினைக் காண்க.

விடை : **12 m**

விளக்கம் :

கன அளவு **= 1848 m^3**

விட்டம் **= 14m** எனில் ஆரம் **= 14/2 = 7m**

தொட்டியின் ஆழத்தினை **h** எனக் கொள்வோம்.

$1848 = \Pi * (7)^2 * h$

h = ((1848*7) / (22*7*7))

h = (1848 / (22*7))

தொட்டியின் ஆழம் **(h) = 12 m**

10. ஒரு கனசதுரத்தின் ஒவ்வொரு முனையும் **50%** அதிகரிக்கப்பட்டால், அதன் மேற்பரப்பின் பரப்பில் ஏற்பட்டுள்ள அதிகரிப்பினை சதவீதத்தில் காண்க.

விடை : **225%**

விளக்கம் :

முனையின் நீளம் **= a**

மேற்பரப்பின் பரப்பு **= $6a^2$**

புதிய முனையின் நீளம் **= a** ல் **150% = (150/100)*a**

= (3/2) * a

புதிய மேற்பரப்பின் பரப்பு **= 6 * ((3/2) * a)^2**

= ((6 * 9 * a^2) / 4)

= $54a^2$ / 4

மேற்பரப்பில் ஏற்பட்டுள்ள அதிகரிப்பு சதவீதம் **= ($27a^2$ / 2) * (1 / $6a^2$) * 100**

= (27/2) * (1/6) * 100

= 225%

11. ஒரு செவ்வகத்தின் பரப்பு 16 சது மீட்டர். அதன் நீளம், அகலத்தைவிட நான்கு மடங்கு அதிகம் எனில் செவ்வகத்தின் சுற்றளவு எவ்வளவு?

விடை : 20 மீ

விளக்கம் :

செவ்வகத்தின் அகலம் **= x** என்க

(நீளம் அகலத்தைப்போல நான்கு மடங்கு அதிகம், எனில்)

செவ்வகத்தின் நீளம் **= 4x**

செவ்வகத்தின் பரப்பு **= 16** சதுர மீ

(l * b) = 16

(4x * x) = 16

$4x^2 = 16$

$x^2 = 4$

x = 2

எனவே, செவ்வகத்தின் சுற்றளவு **= 2(l + b)**

= 2 (8 + 2)

செவ்வகத்தின் சுற்றளவு **= 20** மீ

12. ஒரு செவ்வகத்தின் நீளம் அதன் அகலத்தினைப்போல இருமடங்கு ஆகும். நீளமானது 5 செ.மீ குறைக்கப்பட்டும், அகலமானது 5 செ,மீ அதிகரிக்கப்பட்டும் இருந்தால் செவ்வகத்தின் நீளமானது 75 ச.செ.மீ அதிகரிக்கிறது. ஆகவே

செவ்வகத்தின் நீளத்தினைக் காண்க.
விடை : 20 செ.மீ
விளக்கம் :
அகலம் = x என்க.
பிறகு, நீளம் = 2x
$(2x - 5) * (x + 5) - 2x * x = 75$
$5x - 25 = 75$; $x = 20$
ஆகவே செவ்வகத்தின் நீளம் = 20 செ.மீ

13. ஒரு செவ்வகத்தின் மூலைவிட்டத்தின் நீளம் 17 செ.மீ ஆகும். அதன் சுற்றளவு 46 செ.மீ எனில் செவ்வகத்தின் பரப்பளவினைக் காண்க.
விடை : 120 செ.மீ2
விளக்கம் :
நீளம் = x, அகலம் = y என்க
$2 (x + y) = 46$ அல்லது $(x + y) = 23$
மற்றும் $x^2 + y^2 = (17)^2 = 289$
$(x + y)^2 = (23)^2$
$x^2 + y^2 + 2xy = 529$
$289 + 2xy = 529$
$2xy = 529 - 289$
$2xy = 240$
$xy = 120$
செவ்வகத்தின் பரப்பளவு = 120 செ.மீ2

14. ஒரு புல்வெளியானது செவ்வக வடிவத்தில் 2 : 3 என்ற வீதத்தில் பக்கங்களைக் கொண்டுள்ளது. புல்வெளியின் பரப்பளவு 1/6 ஹெக்டேர்ஸ் எனில், செவ்வகத்தின் நீளம் மற்றும் அகலத்தினைக் காண்க.
விடை : நீளம் = 33 * (1/3) மீ, அகலம் = 50 மீ
விளக்கம் :
செவ்வகத்தின் நீளம் = 2x
செவ்வகத்தின் அகலம் = 3x
பரப்பளவு = (1/6) * (10000) மீ2 = (5000/3) மீ2
$2x * 3x = (5000/3)$
$6x^2 = (5000/3)$
$x^2 = (5000/3) * 1/6$
$x^2 = (2500/9)$
$x = (50/3)$
நீளம் 2x = 100/3 மீ = 33 * (1/3) மீ
அகலம் 3x = 150/3 மீ = 50 மீ

15. 5 மீ 44 செ.மீ நீளமும், 3 மீ 74 செ.மீ அகலமும் உடைய ஒரு அறையில் சதுர வடிவிலான ஓடுகள் பதிக்க முடிவெடுக்கப்படுகின்றது. ஆகவே, தேவைப்படும் குறைந்தபட்ச சதுர வடிவ ஓடுகளின் எண்ணிக்கையைக் காண்க.
விடை : 176 சதுர ஓடுகள்
விளக்கம் :
நீளம் = 5 * 100 + 44 = 544 செ.மீ
அகலம் = 3 * 100 + 74 = 374 செ.மீ
அறையின் பரப்பளவு = (544 * 374) செ.மீ2
தேவைப்படும் குறைந்தபட்ச சதுர வடிவ ஓடுகளின் எண்ணிக்கை = 544 மற்றும் 374 இன் மீ.பெ.வ

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

544 செ.மீ மற்றும் 374 செ.மீ இன் மீ.பெ.வ = 34 செ.மீ
ஆகவே ஒரு சது ஓட்டின் பரப்பளவு = (34 * 34) செ.மீ^{2}
தேவைப்படும் சதுர ஓடுகளின் எண்ணிக்கை = (544 * 374) / (34 * 34) = 176 சதுர ஓடுகள்.

16. ஒரு நகரத்தின் முதல் வருட மக்கட்தொகையானது **5%** அதிகரித்துள்ளது மற்றும் இரண்டாம் வருட மக்கட்தொகையானது **5%** குறைந்துள்ளது. இரண்டாம் வருட இறுதியில் இருந்த மொத்த மக்கட்தொகையானது 9975 ஆகும். ஆகவே முதல் வருட தொடக்கத்தில் இருந்த மக்கட்தொகையினைக் காண்க.
விடை : 10000
விளக்கம் :
முதல் வருட தொடக்கத்தில் இருந்த மக்கட்தொகை
= [(9975) / [(1 + (5/100) * (1 - (5/100)]]
= 9975 * (20/21) * (20/19)
முதல் வருட தொடக்கத்தில் இருந்த மக்கட்தொகை **= 10000**

17. ஒரு வட்டத்தின் ஆரத்தில் **50%** குறைந்தால், அதன் பரப்பளவில் குறைந்துள்ள சதவீதத்தினைக் காண்க.
விடை : **75%**
விளக்கம் :
ஆரம்பத்தில் வட்டத்தின் ஆரம் **= R**
புதிய ஆரம் **= (50/100) * R = R/2**
ஆரம்பத்தில் வட்டத்தின் பரப்பளவு = πR^2
புதிய பரப்பளவு = $\pi (R/2)^2 = (\pi R^2)/4$
பரப்பளவில் ஏற்பட்டுள்ள குறைவு = $[(3\pi R^2/4) * (1/\pi R^2) * 100]\%$
[3 * 25]% = 75%
பரப்பளவில் ஏற்பட்டுள்ள குறைவின் சதவீதம் **= 75%**

18. இரு முக்கோணங்களின் பரப்பளவின் விகிதம் 4 : 3 மற்றும் அவற்றின் உயரங்களின் விகிதம் 3 : 4 ஆகும். ஆகவே, இரு முக்கோணங்களின் அடிப்பக்கங்களின் விகிதத்தினைக் காண்க.
விடை : 16 : 9
விளக்கம் :
இரு முக்கோணங்களின் அடிப்பக்கம் முறையே **x, y** மற்றும் அவற்றின் உயரங்கள் **3h, 4h** ஆகும்.
[(1/2) * x * 3h] / [(1/2) * y * 4h] = 4/3
[(3x) / (4y)] = 4/3
x/y = [(4/3) * (4/3)] = 16/9
தேவையான விகிதம் = 16 : 9
ஆகவே, இரு முக்கோணங்களின் அடிப்பக்கங்களின் விகிதம் = 16 : 9

19. ஒரு இணைகரத்தின் அடிப்பக்கமானது அதன் உயரத்தினைப் போல இருமடங்காகும். இணைகரத்தின் பரப்பளவு 72 ச.செ.மீ எனில், அதன் உயரத்தினைக் காண்க.
விடை : 6 செ.மீ
விளக்கம் :
இணைகரத்தின் உயரத்தினை **x** செ.மீ எனக் கொள்க.
பிறகு,
அடிப்பக்கம் **= 2x** செ.மீ
ஆகையால், **2x * x = 72** ச.செ.மீ
$2x^2 = 72$; $x^2 = 72/2$

$x^2 = 36$; $x = 6$
இணைகரத்தின் உயரம் = 6 செ.மீ
20. ஒரு வட்ட வடிவிலான பூங்காவின் பரப்பு 13.86 ஹெக்டேர் ஆகும். பூங்காவினைச் சுற்றி வேலி அமைக்க மீட்டருக்கு ரூ. 4.40 ஆகும் எனில், மொத்தம் எவ்வளவு தொகை தேவைப்படும்?
விடை : ரூ. 5808
விளக்கம் :
பூங்காவின் பரப்பளவு = (13.86 * 10000) மீ^{2} = 138600 மீ^{2}
$\pi R^2 = 138600$
$R^2 = [138600 * (7/22)]$
$R^2 = 44100$
$R = 210$
ஆரம் R = 210 மீ
பூங்காவின் சுற்றளவு = $2\pi R$
= [2 * (22/7) * 210] மீ
= [44 * 30] மீ
பூங்காவின் சுற்றளவு = 1320 மீ
வட்ட வடிவிலான பூங்காவினைச் சுற்றி வேலி அமைக்க ஆகும் செலவு = ரூ. (1320 * 4.40) = ரூ. 5808
21. ஒரு சக்கரம் 88கி.மீ தூரத்தினை 1000 சுற்றுகள் சுழலுவதன் மூலம் அடைகிறது. ஆகவே, சக்கரத்தின் ஆரத்தினைக் காண்க.
விடை : 14 மீ
விளக்கம் :
ஒரு சுற்று சுழல்வதால் கடக்கும் தூரம் = [(88 * 1000) / 1000] மீ
= 88 மீ
$2\pi R = 88$ மீ
$R = [88 * (7/22) * (1/2)]$
$R = 2 * 7 = 14$ மீ
சக்கரத்தின் ஆரம் = 14 மீ
22. ஒரு முக்கோண வடிவ நிலத்தின் அடிப்பக்கமானது அதன் உயரத்தினைப்போல மூன்று மடங்காகும். நிலத்தில் விளைந்துள்ளதை அறுவடை செய்ய ஹெக்டேருக்கு ரூ. 24.68 வீதம் ரூ. 333.18 செலவாகிறது. ஆகவே, முக்கோண நிலத்தின் அடிப்பக்கத்தினையும், உயரத்தினையும் காண்க.
விடை : 900மீ, 300மீ
விளக்கம் :
முக்கோண நிலத்தின் பரப்பளவு = மொத்த தொகை / ஒரு ஹெக்டேருக்கு செலவாகும் தொகை
= (333.18 / 24.68) = 13.5 ஹெக்டேர்கள்
= (13.5 * 10000)m^2 = 135000 மீ^{2}
உயரத்தினை x மீ எனவும் அடிப்பக்கத்தினை 3x எனவும் கொள்வோம்.
பிறகு,
$1/2 * 3x * x = 135000$
$1/2 * 3x^2 = 135000$
$3x^2 = 135000 * 2$
$x^2 = 270000 / 3 = 90000$
$x = 300$
உயரம் 300 மீ ஆகும்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

ஆகவே, அடிப்பக்கம் **= 3 * 300 =** 900 மீ

23. ஒரு சதுரத்தின் ஒவ்வொரு பக்கங்களிலும் 25 சதவீதம் அதிகரிக்கிறது எனில், அதன் பரப்பளவில் அதிகரித்த சதவீதத்தினைக் காண்க.

விடை : **56.25%**

விளக்கம் :

சதுரத்தின் ஒவ்வொரு பக்கத்தினையும் **a** எனக் கொள்க.

பிறகு, பரப்பளவு $= a^2$

புதிய பக்கம் $= 125a / 100 = 5a / 4$

புதிய பரப்பளவு $= (5a/4)^2 = 25a^2/16$

பரப்பளவில் ஏற்பட்ட அதிகரிப்பு $= [(25a^2/16) - a^2]$

$= 9a^2 / 16$

அதிகரிப்பு சதவீதம் $= [(9a^2/16) * (1/a^2) * 100]\%$

$= [900/16] \%$

ஆகவே, பரப்பளவில் ஏற்பட்ட அதிகரிப்பு சதவீதம் **= 56.25%**

24. ஒரு சரிவகத்தின் இரு இணையான பக்கங்களின் வித்தியாசம் 4 செ.மீ மற்றும் அதன் உயரம் 19 செ.மீ ஆகும். ஆகவே, சரிவகத்தின் பரப்பளவு 475 செ.மீ^{2} எனில், இணையாக உள்ள பக்கங்களின் நீளத்தினைக் காண்க.

விடை : 27 செ.மீ, 23 செ.மீ

விளக்கம் :

சரிவகத்தின் இரு இணையான பக்கங்களை **a, b** செ.மீ எனக் கொள்க.

பிறகு, $a - b = 4$ ------------- (1)

$h = 19$ செ.மீ

சரிவகத்தின் பரப்பளவு 475 செ.மீ^{2}ஆகும்.

சரிவகத்தின் பரப்பளவு $= [(1/2) * (a + b) * h]$

$[(1/2) * (a + b) * 19] = 475$

$(a + b) = (475 * 2)/19$

$(a + b) = 50$ --------------- (2)

சமன்பாடு (1) + (2)

$a - b + a + b = 4 + 50$

$2a = 54$

$a = 54/2 = 27$ செ.மீ

a யை சமன்பாடு (2) இல் பிரதியிட **b** கிடைக்கும்.

$a + b = 50$

$27 + b = 50$

$b = 23$ செ.மீ

இணையாக உள்ள இரு பக்கங்களின் நீளம் 27 செ.மீ, 23 செ.மீ ஆகும

25. அரை வட்ட வடிவிலான புல்வெளி ஒன்றின் விட்டம் 14 மீ.அதற்கு சுற்று வேலி அமைக்க ஒரு மீட்டருக்கு ரூ. 10 வீதம் செலவு ஆகின்றது எனில் மொத்த செலவைக் காண்க.

விடை : ரூ.360

விளக்கம் :

விட்டம் $d = 14$மீ

ஆரம் $r = 14/2 = 7$மீ

அரை வட்டத்தின் சுற்றளவு, $P = (\pi + 2) * r$ அலகுகள்

$= (22/7 + 2) * 7$

$= (22 + 14 / 7) * 7$

$P = 36$மீ

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

1 மீட்டருக்கு சுற்று வேலி அமைக்க ஆகும் செலவு = ரூ. 10
எனவே 36 மீட்டருக்கு சுற்றுவேலி அமைக்க ஆகும் செலவு **= 36 * 10 =** ரூ.360
26. 80மீ நீளம் உடைய செவ்வக வடிவத் தோட்டத்தின் பரப்பளவு 3200ச.மீ தோட்டத்தின் அகலத்தைக் காண்க.
விடை : 40மீ
விளக்கம் :
நீளம் = 80மீ, பரப்பளவு = 3200 ச.மீ
செவ்வகத்தின் பரப்பளவு = நீளம் * அகலம்
அகலம் = செவ்வகத்தின் பரப்பளவு / நீளம்
= 3200 / 80
= 40மீ
தோட்டத்தின் அகலம் = 40மீ
27. ஒரு நாற்கரத்தின் பரப்பளவு 525 ச.மீ அதன் இரு உச்சிகளிலிருந்து மூலை விட்டத்திற்கு வரையப்படும் செங்குத்தின் நீளங்கள் 15மீ, 20மீ எனில் மூலைவிட்டத்தின் நீளமென்ன?
விடை : 30மீ
விளக்கம் :
பரப்பளவு = 525 ச.மீ
h1 = 15மீ, **h2 =** 20மீ
நாற்கரத்தின் பரப்பளவு = 525 ச.மீ
1/2 * d * (h1 + h2) = 525
1/2 * d * (15 + 20) = 525
1/2 * d * 35 = 525
d = 525 * 2 / 35
= 1050 / 35
= 30மீ
மூலைவிட்டத்தின் நீளம் = 30மீ
28. நான்கு சுவர்களைக் கொண்ட ஓர் அறையின் நீளம், அகலம் மற்றும் உயரம் விகிதம் 7 : 5 : 4 அதன் பரப்பு 864மீ^{2} எனில் அதன் தரைதளத்தின் பரப்பு என்ன?
விடை : 315மீ
விளக்கம் :
நான்கு சுவர்களைக் கொண்ட அறையின் பரப்பளவு **= 2 (l + b) * h**
l = 7x, b = 5x, h = 4x
பரப்பு **= 2 (l + b) h**
864 = 2(7x + 5x) * 4x
96 x^2 = 864
x^2 = 864 / 96
x = 3
நீளம் 21மீ, அகலம் 15மீ, உயரம் 12மீ ஆகும்
எனவே தரை தளத்தின் பரப்பு **= l * b**
21 * 15 = 315மீ
29. வட்ட வடிவிலான ஒரு தாமிரக் கம்பியின் ஆரம் 35 செ.மீ. இது ஒரு சதுர வடிவில் வளைக்கப்படுகிறது எனில், அச்சதுரத்தின் பக்கத்தைக் காண்க.
விடை : 55 செ.மீ
விளக்கம் :
வட்டத்தின் ஆரம் **r =** 35 செ.மீ
அதே கம்பியானது சதுரமாக வளைக்கப்படுகிறது

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

வட்டத்தின் சுற்றளவு = சதுரத்தின் சுற்றளவு
வட்டத்தின் சுற்றளவு = $2\pi r$ அலகுகள்
p = 2 * 22/7 * 35 செ.மீ
P = 220 செ.மீ
சதுரத்தின் சுற்றளவு **= 4a** அலகுகள்
4a = 220
a = 55 செ.மீ
சதுரத்தின் பக்கம் **=** 55 செ.மீ
30. 80 மீ நீளம் உடைய செவ்வக வடிவத் தோட்டத்தின் பரப்பளவு 3200 ச.மீ தோட்டத்தின் அகலத்தைக் காண்க.
விடை : 40 மீ
விளக்கம் :
நீளம் **=** 80 மீ, பரப்பளவு **=** 3200 ச.மீ
செவ்வகத்தின் பரப்பு **=** நீளம் ***** அகலம்
அகலம் **=** செவ்வகத்தின் பரப்பளவு **/** நீளம்
= 3200 / 80
தோட்டத்தின் அகலம் **=** 40 மீ
31. ஓர் இணைகரத்தின் பரப்பளவு 480 செ.மீ^{2}, அடிப்பக்கம் 24 செ.மீ கொண்ட இணைகரத்தின் குத்துயரம் என்ன?
விடை : 20 செ.மீ
விளக்கம் :
பரப்பளவு **=** 480 செ.மீ^{2}
அடிப்பக்கம் **=** 24 செ.மீ
இணைகரத்தின் பரப்பளவு **= 480**
b * h = 480
24 * h = 480
h = 480/24
h = 20 செ.மீ
இணைகரத்தின் குத்துயரம் **=** 20 செ.மீ
32. 40 மீ உயரம் கொண்ட ஒரு முக்கோண வடிவத் தோட்டத்தின் பரப்பளவு 800 ச.மீ அதன் அடிப்பக்கத்தின் நீளத்தைக் காண்க.
விடை : 40 மீ
விளக்கம் : முக்கோணவடிவத் தோட்டத்தின் பரப்பளவு **=** 800 ச.மீ
1/2 *bh = 800
1/2 * b * 40 = 800
20 b = 800
b = 40 மீ
33. மொத்தப் புறப்பரப்பு 216 ச.செ.மீ கொண்ட கனச்சதுரத்தின் பக்க அளவைக் காண்க.
விடை : 6 செ.மீ
விளக்கம் :
மொத்தப் புறப்பரப்பு **=** 216 ச.செ.மீ
$6a^2$ = 216
a^2 = 216 / 6
a^2 = 36
a = 6 செ.மீ
34. ஒரு கனச்செவ்வகத்தின் நீளம், அகலம் மற்றும் உயரம் முறையே 20 செ.மீ, 12

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

செ.மீ மற்றும் 9 செ.மீ எனில், அதன் மொத்தப் புறப்பரப்பைக் காண்க.
விடை : 1056 ச.செ.மீ
l = 20 செ.மீ, **b** = 12 செ.மீ, **h** = 9 செ.மீ
மொத்தப் புறப்பரப்பு **= 2(lb * bh * lh)**
= 2[(20 * 12) + (12 * 9) + (20 * 9)]
= 2 (240 + 108 + 180)
= 2 * 528
= 1056 ச.செ.மீ

35. நீளம், அகலம் மற்றும் உயரம் முறையே 20 செ.மீ, 45 செ.மீ மற்றும் 50 செ.மீ அளவுடைய ஒரு **C.P.U** விற்கு உறை தைக்க ஜானி விரும்பினான். உறையின் விலை 1 சதுர மீட்டருக்கு ரூ. 50 எனில், உறை தைக்க ஆகும் செலவைக் காண்க.
விடை : ரூ.37
விளக்கம் :
l = 20 செ.மீ = 0.2 மீ, **b** = 45 செ.மீ = 0.45 மீ, **h** = 50 செ.மீ = 0.5 மீ
உறையின் பரப்பு = பக்க பரப்பு + மேல் பரப்பு
= 2 (l + b)h + lb
= 2 (0.2 + 0.45) 0.5 + (0.2 * 0.45)
= (2 * 0.65 * 0.5) + 0.09
= 0.65 + 0.09
= 0.74 ச.மீ
1 சதுர மீட்டர் துணியின் விலை = ரூ.50
எனவே 0.74 சதுர மீட்டர் துணியின் விலை **= 50 * 0.74**
= ரூ.37

36. ஆரம் 28 செ.மீ உடைய அரைவட்டத்தின் சுற்றளவு, பரப்பளவு ஆகியவற்றைக் காண்க.
விடை : 144 செ.மீ, 1232 ச.செ.மீ
விளக்கம் :
அரைவட்டத்தின் சுற்றளவு = $(\pi + 2)r$
= (22/7 + 2)28
= 144 செ.மீ
அரைவட்டத்தின் பரப்பளவு = $\pi r2$ **/ 2**
= (22 /7) * (28 * 28 /2)
= 1232 ச.செ.மீ

37. ஒரு செவ்வகத்தின் நீள, அகலங்களின் விகிதம் 4 : 7, அகலம் 77 செ.மீ எனில் அதன் நீளத்தை காண்க ?
விடை : 44 செ.மீ
விளக்கம் :
அகலம் = 77செ.மீ
நீள அகலங்களின் விகிதம் = 4 : 7
செவ்வகத்தின் அகலம் = 7பங்குகள்
7 பங்குகள் = 77 செ.மீ
1 பங்கு **= 77 / 7** செ.மீ = 11 செ.மீ
நீளம் = 4 பங்குகள்
4 பங்குகள் **= 4 * 11** செ.மீ = 44 செ.மீ
செவ்வகத்தின் நீளம் = 44 செ.மீ

38. ஒரு உள்ளீடற்ற உருளையின் உள் மற்றும் வெளி ஆரங்கள் முறையே 12 செ.மீ. மற்றும் 18 செ.மீ. என்க. மேலும் அதன் உயரம் 14 செ.மீ எனில் அவ்வுருளையின்

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

வளைபரப்பு மற்றும் மொத்தப் புறப்பரப்பைக் காண்க?
விடை : 2640 ச.செ.மீ, 3771.42 ச.செ.மீ
விளக்கம் :
r, R மற்றும் **h** என்பன முறையே உள்ளீடற்ற உருளையின் உள்ஆரம், வெளிஆரம் மற்றும் உயரம் என்க.
ஆகவே, **r =** 12 செ.மீ, **R =** 18 செ.மீ, **h =** 14 செ.மீ,
வளைபரப்பு = $2\pi h(R + r)$
= 2 * (22/7) * 14 * (18 + 12)
= 2640 ச.செ.மீ
மொத்தப் புறப்பரப்பு = $2\pi (R + r)(R - r + h)$
= 2 (22/7) * (18 + 12) (18 - 12 + 14)
= 2 * (22/7) * 30 * 20
= 26400 / 7
மொத்தப் புறப்பரப்பு **= 3771.42** ச.செ.ம
39. ஒரு திண்ம நேர் வட்ட உருளையின் ஆரமும் உயரமும் 2 : 5 என்ற விகிதத்தில் உள்ளன. அதன் வளைப்பரப்பு **3960/7** ச.செ.மீ எனில், உருளையின் ஆரம் மற்றும் உயரம் காண்க?
விடை : 6 செ.மீ, 15 செ.மீ
விளக்கம் :
r : h = 2 : 5
r / h = 2 / 5 ; r = (2/5) h
நேர்வட்ட உருளையின் வளைபரப்பு = $2\pi rh$
2 * (22/7) * (2/5) * h * h = 3960 / 7
h^2 = (3960 * 7 * 5) / (2 * 22 * 2 * 7)
h^2 = 225 = h = 15
r = (2/5) * 15 ; r = 6
உருளையின் உயரம் 15 செ.மீ மற்றும் ஆரம் 6 செ.மீ
40. 120 செ.மீ நீளமும், 84 செ.மீ விட்டமும் கொண்ட ஒரு சாலையை சமப்படுத்தும் உருளையைக் **(road roller)** கொண்டு ஒரு விளையாட்டுத்திடல் சமப்படுத்தப்படுகிறது. விளையாட்டுத் திடலை சமப்படுத்த இவ்வுருளை 500 முழுச் சுற்றுக்கள் சுழல வேண்டும். விளையாட்டுத்திடலை சமப்படுத்த ஒரு ச. மீட்டருக்கு 75 பைசா வீதம், திடலைச் சமப்படுத்த ஆகும் செலவைக் காண்க?
விடை : ரூ.1188
விளக்கம் :
சாலையை சமப்படுத்தும் உருளையின் ஆரம் 42 செ.மீ மற்றும் நீளம் 120 செ.மீ.
உருளையின் வளைபரப்பு = $2\pi rh$
= 2 * (22/7) * 42 * 120 ; = 31680 செ.$மீ^2$
500 முழுச் சுற்றுகளில் சமப்படுத்தப்படும் திடலின் பரப்பு **= 31680 * 500 =** 15840000 செ.$மீ^2$ அதாவது,(10000 செ.$மீ^2$ **=** 1 ச.மீ)
= 15840000 / 10000 = 1584 $மீ^2$
1 ச. மீட்டருக்கு சமப்படுத்த ஆகும் செலவு **=** ரூ.**(75 / 100)**
விளையாட்டுத்திடலை சமப்படுத்த ஆகும் மொத்தச் செலவு **= (1584 * 75) / 100 =** ரூ.1188

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

30-மாறல் (Chain Rule)

1. ஒரு வேலையை 36 ஆண்கள் 25 மணி நேரத்தில் முடிக்கின்றனர். அதே வேலையை 15 ஆண்கள் செய்தால் எத்தனை மணி நேரத்தில் அவ்வேலையானது செய்து முடிக்கப்படும்?
விடை : 60 மணி நேரம்
விளக்கம் :
தேவைப்படும் மணிநேரம் **= x** எனக் கொள்க.
ஆண்களின் எண்ணிக்கை குறையும்போது தேவைப்படும் நேரத்தின் அளவு அதிகரிக்கும். எனவே இது எதிர்த்தகவில் அமையும்.

36 : 15 : : 25 : x
(36 * 25) = (15 * x)
x = (36 * 25) / 15
x = 900/15
x = 60

15 ஆண்கள் அதே வேலையினை செய்து முடிக்க 60 மணி நேரம் ஆகும்.

2. 6 ஆண்களின் 15 நாட்களுக்கான ஊதியம் ரூ.2100 ஆகும். அதுபோல, 9 ஆண்களின் 12 நாட்களுக்கான ஊதியத்தினைக் காண்க.
விடை : ரூ.2520
விளக்கம் :
தேவையான ஊதியத்தொகையினை **x** எனக் கொள்க.
ஆண்கள் எண்ணிக்கை அதிகரிக்கும்போது ஊதியத் தொகையும் அதிகரிக்கும். ஆண்கள் எண்ணிக்கை குறையும்போது ஊதியத் தொகையும் குறையும். ஆகவே இது நேர்த்தகவில் அமைந்துள்ளது.

ஆண்கள் 6 : 9, நாட்கள் **15 : 12 : : 2100 : x**
6 * 15 * x = 9 * 12 * 2100
x = (9 * 12 * 2100) / (6 * 15)
x = (108 * 2100) / (90)
x = 226800/90
x = 2520

9 ஆண்களின் 12 நாட்களுக்கான ஊதியத்தொகை ரூ.2520 ஆகும்.

3. 20 ஆண்கள் 56 மீட்டர் நீளமுள்ள ஒரு சுவரினை 6 நாட்களில் கட்டி முடிக்கின்றனர். அதேபோல, 35 ஆண்கள் 3 நாட்களில் கட்டி முடிக்கும் சுவரின் நீளத்தினைக் காண்க.
விடை : 49 மீட்டர்
விளக்கம் :
தேவையான நீளத்தினை **x** எனக் கொள்வோம்.
ஆண்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்போது அதிக நீளம் கட்ட முடியும். ஆண்களின் எண்ணிக்கை குறையும்போது குறைந்த நீளம் கட்ட முடியும். ஆகவே இது நேர்த்தகவில் அமைந்துள்ளது.

ஆண்கள் 20 : 35, நாட்கள் **6 : 3 : : 56 : x**
20 * 6 * x = 35 * 3 * 56
x = (35 * 3 * 56) / (20 * 6)
x = 5880/120
x = 49 மீ

35 ஆண்கள் 3 நாட்களில் கட்டி முடிக்கும் சுவரின் நீளம் 49 மீட்டர் ஆகும்.

4. ஒரு குறிப்பிட்ட வேலையானது ஒரு நாளுக்கு 8 மணி நேரம் வீதம் 46 நாட்களில் 117 ஆண்களால் செய்து முடிக்கப்படுகிறது. 33 நாட்களுக்கு பிறகு **4/7** பங்கு

www.Padasalai.Net

வேலையானது முடிக்கப்படுகிறது. ஆகவே வேலையினை உரிய நேரத்தில் முடிக்க தேவைப்படும் ஒவ்வொரு ஆணும் 9 மணி நேரம் வேலை செய்கிறார்கள் எனில், மீதமுள்ள வேலையை முடிக்க தேவைப்படும் புதிய ஆண்களின் எண்ணிக்கையைக் காண்க.
விடை : 81 ஆண்கள்
விளக்கம் :
மீதமுள்ள வேலை **= 1 - (4/7) = 3/7**
மீதமுள்ள நேரம் **= (46 - 33) = 13** நாட்கள்
தேவைப்படும் மொத்த ஆண்களின் வேலையை **x** என்க.
குறைந்த வேலை செய்ய குறைவான ஆண்கள் தேவை. அதிக வேலை செய்ய அதிகமான ஆண்கள் தேவை. அதிகமான மணிநேரம் **/** நாள் எனில் குறைந்த ஆண்கள் தேவை. ஆகவே இவையனைத்தும் நேர்த்தகவில் அமைந்துள்ளன.
வேலை **4/7 : 3/7,** நாட்கள் 13 : 33, மணிநேரம்**/**நாள் **9 : 8 : : 117 : x**
4/7 * 13 * 9 * x = 3/7 * 33 * 8 * 117
((36 * 13)/7) * x = (99 *117 * 8)/7
x = (99 * 117 * 8 * 7)/(7 * 36 * 13)
x = (22 * 117)/13 ; x = 198
தேவைப்படும் புதிய ஆண்களின் எண்ணிக்கை **= 198 - 117 = 81** ஆண்கள்
5. ஒரு பெண்கள் காப்பிடமானது 150 பெண்களுக்கு 35 நாட்களுக்கு தேவையான உணவை வழங்கியது. 10 நாட்களுக்கு பிறகு, 25 பெண்கள் அக்காப்பிடத்தை விட்டு சென்றுவிடுகின்றனார் என்றால், அந்த உணவுப்பொருட்களை மீதம் இருக்கும் பெண்களுக்கு அதிகபட்சமாக எத்தனை நாட்கள் வழங்கலாம் ?
விடை : 42
விளக்கம் :
150 பெண்களுக்கு 35 நாட்களுக்கு தேவையான உணவானது வழங்கப்படுகிறது. 25 பெண்கள் அக்காப்பிடத்தை விட்டு சென்றுவிட்டால் 125 பெண்களுக்கு உணவு வழங்கப்படும் நாட்களை **x** எனக் கொள்க.
குறைந்த பெண்கள் இருந்தால் அதிக நாட்களுக்கு உணவினை வழங்கலாம். எனவே இதை எதிர்மாறலாக கொள்ள வேண்டும்.
⇒ 125 **: 150 :: 35: x**
⇒ **125 * x = 150 * 35**
⇒ **x = (150 * 35)/125**
⇒ **x = 6 * 7**
⇒ **x =** 42
6. 35 மாம்பழங்களின் விலையானது ரூ.1517.25 எனில் 49 டஜன் மாம்பழத்தின் தோராயமான விலை என்ன ?
விடை : ரூ.2500
விளக்கம் :
49 டஜன் மாம்பழத்தின் விலையானது **x** எனக் கொள்க.
அதிகமான மாம்பழங்கள் வாங்கினால் அதிக ரூபாய் தேவைப்படும். எனவே இதை நேர்மாறலாக கொள்ள வேண்டும்.
⇒ 357 : (49 *** 12) :: 1517.25 : x**
⇒ **357x = (49 * 12)* 1517.25**
x = (588 * 1517.25) / 357
x = 892143 / 357
x = ரூ.2499
49 டஜன் மாம்பழத்தின் தோராயமான விலை ரூ.2500 ஆகும்.
7. 36 ஆண்கள் ஒரு வேலையை 18 நாட்களில் செய்து முடிகின்றனர் என்றால் அதே

வேலையை 27 ஆண்கள் எத்தனை நாட்களில் செய்து முடிப்பார்கள் ?
விடை : 24 நாட்கள்
விளக்கம் :
வேலையை செய்து முடிக்கும் நாட்கள் **x** எனக் கொள்க.
குறைவான ஆட்கள் வேலையை செய்து முடிப்பதற்கு அதிக நாட்கள் எடுத்து கொள்வார்கள். எனவே இதை நேர்மாறலாக கொள்ள வேண்டும்.

⇒ 27**: 36 :: 18 :x**

⇒ **(27 * x) = (36 * 18)**

⇒ **x = (36 *18) / 27**

x = 12*2

x = 24

27 ஆண்கள் 24 நாட்களில் வேலையை செய்து முடிப்பார்கள்.

8. 7 ஆட்கள் ஒரு கட்டிடத்தை 52 நாள்களில் கட்டி முடிக்கின்றனர். அதே வேலையை 13 ஆட்கள் எத்தனை நாள்களில் செய்து முடிப்பார்கள்?
விடை : 28
விளக்கம் :
கண்டுபிடிக்க வேண்டிய நாள்களின் எண்ணிக்கையை **a** என்று குறிப்பிடுவோம்.
ஆட்களின் எண்ணிக்கை **=** 7 : 13
நாள்களின் எண்ணிக்கை **=** 52 : **a**
ஆட்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் பொழுது, நாள்களின் எண்ணிக்கை குறையும். எனவே இது எதிர்மாறல் ஆகும்.

7 *** 52 = 13 * a**

13 * a = 7 * 52

a = (7 * 52) / 13

a = 28

13 ஆட்கள் இந்த வேலையை 28 நாள்களில் முடிப்பார்கள்.

9. ஒவ்வொரு பக்கத்திலும் 35 வரிகளைக் கொண்ட புத்தகத்தின் மொத்தப் பக்கங்கள் 120. அதே செய்தி ஒவ்வொரு பக்கத்திலும் 24 வரிகளாக இருந்தால், புத்தகத்தின் மொத்தப் பக்கங்கள் எவ்வளவாக இருக்கும்?
விடை : 175
விளக்கம் :
கண்டுபிடிக்கவேண்டிய பக்கங்களின் எண்ணிக்கையை **x** என்று குறிப்பிடுவோம்.
ஒவ்வொரு பக்கத்திலும் உள்ள மொத்த வரிகளின் எண்ணிக்கை **=** 35 : 24
பக்கங்களின் எண்ணிக்கை **= 120 : x**
ஒரு பக்கத்தில், வரிகளின் எண்ணிக்கை குறையும் பொழுது, புத்தகத்தில் பக்கங்களின் எண்ணிக்கை அதிகரிக்கின்றது. எனவே இது எதிர்மாறல் ஆகும்.

(35 **/ 24) = (x / 120)**

(35 * 120) = (x * 24)

x = (35 * 120) / 24

x = 35 * 5

x = 175

ஒரு பக்கத்தில் 24 வரிகள் இருக்கும் பொழுது, புத்தகத்தின் மொத்தப் பக்கங்களின் எண்ணிக்கை **=** 175

10. 16 பென்சில்களின் விலை ரூ. 48 எனில், 4 பென்சில்களின் விலையைக் காண்க. ?
விடை : ரூ. 12
விளக்கம் :
4 பென்சில்களின் விலையை **x** எனக் கொள்வோம்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

பென்சில்களின் எண்ணிக்கை = 16 : 4
விலை(ரூ) = **48 : x**
பென்சில்களின் எண்ணிக்கை குறைந்தால், அதன் விலையும் குறையும்.
எனவே இந்த இரு அளவும் நேர் மாறல் ஆகும்.
(16 / 48) = (4 / x)
16 * x = (48 * 4)
x = (48 * 4) / 16 ; x = ரூ. 12
நான்கு பென்சில்களின் விலை = ரூ. 12

31 -Partnership

1. **A, B, C** ஆகியோர் ஒரு தொழிலை ரூ.1,20,000, ரூ1,35,000 மற்றும் ரூ.1,50,000 போன்ற முதலீட்டுடன் தொடங்குகின்றனர். பிறகு ஆண்டு இலாபம் ரூ.56,700 கிடைக்கிறது எனில், ஒவ்வொருவரின் பங்கினைக் காண்க.
விடை : ரூ.16800, ரூ.18900, ரூ.21000
விளக்கம் :
A, B, C ஆகியோரின் முதலீட்டின் விகிதம் **= 120000 : 135000 : 150000 = 8 : 9 : 10**
A இன் பங்கு **= (56700 * (8/27)) = 453600/27**
= Rs.16800
B இன் பங்கு **= (56700 * (9/27)) = 510300/27**
= Rs.18900
C இன் பங்கு **= (56700 * (10/27)) = 567000/27**
= Rs.21000
2. **A, B, C** ஆகியோர் ஒரு தொழிலில் முதலீடு செய்கின்றனர். **A** என்பவர் **B** செய்ததைப்போல மூன்று மடங்கு முதலீடு செய்கிறார். **B** என்பவர் **C** இன் முதலீட்டின் அளவில் **2/3** பங்கு முதலீடு செய்கிறார். வருடத்தின் இறுதியில் ரூ.6600 இலாபம் பெறுகிறார்கள் எனில் **B** இன் பங்கினைக் காண்க.
விடை : ரூ.1200
விளக்கம் :
C இன் முதலீட்டு தொகை **= Rs.x** என்க.
B இன் முதலீட்டு தொகை **= Rs. 2/3 * x**
A இன் முதலீட்டு தொகை **= Rs. (3 * (2/3) * x) = Rs.2x**
A, B, C ஆகியோரின் முதலீட்டுத்தொகையின் விகிதம் **= 2x : (2/3)*x : x = 6 : 2 : 3**
B இன் பங்கு **= (6600 * (2/11)) = 600 * 2 = Rs.1200**
3. **A, B, C** ஆகியோர் தலா ரூ.20,000 வீதம் ஒரு தொழிலில் முதலீடு செய்கின்றனர். 5 வருடங்களுக்கு பிறகு **A** என்பவர் ரூ.5000 யையும், **A** என்பவர் ரூ.4000 யையும் திரும்பப் பெறுகின்றனர். ஆனால் **C** என்பவர் ரூ.6000 யை முதலீடு செய்கிறார். ஆகவே, ஆண்டின் இறுதியில் ரூ.69,900 ஆனது இருக்கிறது எனில், மூவருடைய பங்கினைக் காண்க.
விடை : ரூ.20500, ரூ.21200, ரூ.28200
விளக்கம் :
A, B, C ஆகியோரின் முதலீட்டுத்தொகையின் விகிதம் **= [(20000 * 5) + (15000 * 7)] : [(20000 * 5) + (16000 * 7)] : [(20000 * 5) + (26000 * 7)]**
= [100000 + 105000] : [100000 + 112000] : [100000 + 182000]
= 205000 : 212000 : 282000
= 205 : 212 : 282

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

A இன் பங்கு **= (69900 * (205/699)) = Rs.20500**
B இன் பங்கு **= (69900 * (212/699)) = Rs.21200**
C இன் பங்கு **= (69900 * (282/699)) = Rs.28200**

4. ஆனந்த் மற்றும் தீபக் ஆகிய இருவரும் ஒரு தொழிலில் ரூ.22500, ரூ35000 வீதம் முதலீடு செய்வதன் மூலம் ரூ.13800 யை மொத்த இலாபமாக பெறுகின்றனர் எனில் தீபக்கின் பங்கினைக் காண்க.

விடை : **= Rs. 8400**

விளக்கம் :

ஆனந்த் மற்றும் தீபக் ஆகிய இருவரின் பங்கு **= 22500 : 35000**
= 225 : 350 = 9 : 14
தீபக்கின் பங்கு **= (13800 * (14/23)) = 600 * 14**
தீபக்கின் பங்கு **= Rs. 8400**

5. மூன்று நபர்கள் ஒரு தொழிலில் கூட்டாளிகளாக 10 மாதங்கள், 8 மாதங்கள், 7 மாதங்கள் என்ற கணக்கில் குறிப்பிட்ட தொகையினை முதலீடு செய்கின்றனர். அவர்கள் அத்தொழிலில் கிடைக்கும் இலாபத்தினை 5 : 7 : 8 என்ற விகிதத்தில் பிரித்துக் கொள்கின்றனர். ஆகவே, அவர்கள் முதலீடு செய்த தொகையின் விகிதத்தினைக் காண்க.

விடை : 28 : 49 : 64

விளக்கம் :

மூன்று நபர்கள் செய்த முதலீட்டினை ரூ.**x** ஆனது 10 மாதங்களுக்கும், ரூ.**y** ஆனது 8 மாதங்களுக்கும், ரூ.**z** ஆனது 7 மாதங்களுக்கும் செய்வதாக கொள்வோம். பிறகு,
10x : 8y : 7z = 5 : 7 : 8
இப்பொழுது, **10x/8y = 5/7**
70x = 40y
y = (7/4)*x
மற்றும்,
10x/7z =5/8
80x = 35z
z = 80x/35
z = 16x/7
ஆகவே, மூன்று நபர்கள் செய்த முதலீட்டின் விகிதம் **x : y : z = x : (7/4)*x : (16/7)*x =** 28 : 49 : 64

6. **A** என்பவர் ரூ.3500 தொகையுடன் ஒரு தொழிலை ஆரம்பிக்கிறார். 5 மாதங்களுக்கு பிறகு **B** என்பவர் **A** இன் கூட்டாளியாக இணைகிறார். ஒரு வருடத்திற்கு பிறகு, இலாபமானது 2 : 3 என்ற விகிதத்தில் பிரித்துக் கொள்ளப்படுகிறது. எனவே, **B** ஆனவர் **A** உடன் இணையும்பொழுது செலுத்திய ஆரம்பத் தொகையினைக் காண்க.

விடை : ரூ. 9000

விளக்கம் :

B இன் ஆரம்பத்தொகையினை **x** எனக் கொள்க.
பிறகு, **[(3500 * 12) / (7x)] = 2/3**
14x = 126000
x = 126000/14
x = ரூ. 9000
B ஆனவர் **A** உடன் இணையும்பொழுது செலுத்திய ஆரம்பத்தொகை **=** ரூ. 9000

7. **P** மற்றும் **Q** ஆகியோர் இணைந்து ஒரு தொழிலை ரூ. 85,000 மற்றும் ரூ. 15,000 என்ற தொகையுடன் ஆரம்பிக்கின்றனர். இரு வருடங்களுக்குப் பிறகு இருவருக்கும் கிடைக்கும் இலாபத்தொகையின் விகிதத்தினைக் காண்க.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

விடை : 17 : 3
விளக்கம் :
P : Q = 85000 : 15000
= 85 : 15 = 17 : 3
இரு வருடங்களுக்குப் பிறகு இருவருக்கும் கிடைக்கும் இலாபத்தொகையின் விகிதம் = 17 : 3

8. 4 கூடை பின்னுபவர்கள் 4 கூடைகளை 4 நாட்களில் பின்னுகின்றனர். அதேபோல, 8 கூடை பின்னுபவர்களால் 8 நாட்களில் எத்தனை கூடைகளை பின்ன முடியும்?
விடை : 16 கூடைகள்
விளக்கம் :
கூடை பின்னுபவர்களின் எண்ணிக்கை அதிகரிக்க கூடைகளின் எண்ணிக்கையும் அதிகரிக்கும். அதேபோல,
நாட்களின் எண்ணிக்கை அதிகரிக்க கூடைகளில் எண்ணிக்கையும் அதிகரிக்கும்.
கூடை பின்னுபவர்கள் 4 : 8 = நாட்கள் **4 : 8 : : 4 : x**
ஆகவே, **4 * 4 * x = 8 * 8 * 4**
x = (8 * 8 * 4) / (4 * 4)
x = 16
8 கூடை பின்னுபவர்களால் 8 நாட்களில் பின்னும் கூடைகளின் எண்ணிக்கை = 16 கூடைகள்

9. 8 ஆண்கள் 80 ஹெக்டேர்களில் பயிரிட்ட பயிர்களை 24 நாட்களில் அறுவடை செய்கின்றனர். ஆகவே, 36 ஆண்கள் 30 நாட்களில் எவ்வளவு ஹெக்டேர் பயிர்களை அறுவடை செய்ய முடியும்?
விடை : 450
விளக்கம் :
தேவையான ஹெக்டேர்களின் எண்ணிக்கையை **x** எனக் கொள்க.
ஆண்கள் எண்ணிக்கை அதிகரிக்க ஹெக்டேர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கும்.
நாட்களின் எண்ணிக்கை அதிகரிக்க ஹெக்டேர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கும்.
ஆகவே, இது நேர்த்தகவில் உள்ளது.
ஆண்கள் 8 : 36 = நாட்கள் **24 : 30 : : 80 : x**
8 * 24 * x = 36 * 30 * 80
x = (36 * 30 * 80) / (8 * 24)
x = 90 * 5
x = 450 ஹெக்டேர்கள்
36 ஆண்கள் 30 நாட்களில் 450 ஹெக்டேர்கள் பயிர்களை அறுவடை செய்ய முடியும்.

10. 10 ஆண்கள் ஒரு நாளுக்கு 6 மணிநேரம் வேலை செய்வதால் 18 நாட்களில் ஒரு குறிப்பிட்ட வேலையை முடிக்கின்றார்கள். அதே வேலையை 15 ஆண்கள் ஒரு நாளுக்கு எத்தனை மணிநேரம் செய்தால் 12 நாட்களில் அவ்வேலையை முடிக்க முடியும்?
விடை : 6 மணிநேரம்
விளக்கம் :
ஒரு நாளில் தேவைப்படும் நேரத்தினை **x** எனக் கொள்வோம்.
ஆண்களின் எண்ணிக்கை அதிகரிக்க ஒரு நாளுக்கு தேவைப்படும் நேரத்தின் எண்ணிக்கை குறையும்.
நாட்களின் எண்ணிக்கை குறையும் போது, ஒரு நாளுக்கு அதிக நேரம் தேவைப்படும்.
ஆகவே, இவை எதிர்த்தகவில் அமைந்துள்ளது.
ஆண்கள் 15 : 10 = நாட்கள் **12 : 18 : : 6 : x**
15 * 12 * x = 10 * 18 * 6
x = (10 * 18 * 6) / (15 * 12)
x = 6 மணிநேரம்

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

அதே வேலையை 15 ஆண்கள் ஒரு நாளுக்கு 6 மணிநேரம் செய்தால் 12 நாட்களில் அவ்வேலையை முடிக்க முடியும்

32)- இலாபம் மற்றும் நட்டம்

1. ஒரு ஸ்கூட்டியை ரூ.13,600 க்கு விற்பனை செய்யும்பொழுது 15% நட்டம் ஆகிறது எனில், அதன் அடக்க விலை என்ன?
விடை : ரூ.16,000
விளக்கம் :
நட்டம் = 15%
விற்ற விலை = ரூ. 13,600
அடக்க விலை = ((100) / (100 - நட்டம்%)) * விற்ற விலை
= (100 / (100 - 15)) * 13600
= (100/85) * 13600
= ரூ.16,000
2. இராசு ரூ.36,000க்கு ஒரு மோட்டார் சைக்கிளை வாங்கி, அதன் தோற்றப் பொலிவு நன்கு அமையவும் மேலும் நன்முறையில் இயங்கவும் சில இதர பாகங்களைப் பொருத்தினார். பின்பு அம்மோட்டார் சைக்கிளை ரூ.44,000க்கு 10% இலாபத்தில் விற்கின்றார் எனில் இதர பாகங்கள் வாங்க எவ்வளவு செலவு செய்தார்?
விடை : ரூ.4,000
விளக்கம் :
அடக்க விலை ரூ.100 என்க.
இலாபம் = 10%, விற்பனை விலை = ரூ.110
விற்பனை விலை ரூ.110 எனில் அடக்க விலை ரூ.100
விற்பனை விலை ரூ.44,000 எனில்
அடக்க விலை = (44000 * 100) / 110
= ரூ.40,000
மொத்த செலவினங்கள் = 40,000 - 36,000 = ரூ.4,000
3. ஒரு புத்தகத்தின் விலையில் 10% தள்ளுபடி செய்தாலும் ஒரு வியாபாரிக்கு 10% இலாபம் கிடைக்கின்றது. அப்புத்தகத்தின் குறித்த விலை ரூ.220 எனில், அதன் அடக்க விலை யாது?
விடை : ரூ.180
விளக்கம் :
தள்ளுபடி = 10%
இலாபம் = 10%
குறித்த விலை = ரூ.220
அடக்க விலை = ((100 - தள்ளுபடி %) / (100 + இலாபம் %)) * குறித்த விலை
= (100 -10) / (100 + 10) * 220
= (90 /110) * 220
அடக்க விலை = ரூ.180
4. ராமின் தந்தை அவனிடம் ரூ.70 கொடுத்தார். இப்போது அவனிடம் ரூ.130 இருக்கிறது எனில் முதலில் அவனிடம் எவ்வளவு ரூபாய் இருந்தது?
விடை : ரூ.60
விளக்கம் :
முன்பிருந்த தொகை X என்க

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

x + 70 = 130
x = 130 - 70
x = 60

முன்பிருந்த தொகை = ரூ.60

5. ஒருவர் 80 கி.கி சர்க்கரையை ரூ.13.50 க்கும், 120 கி.கி சர்க்கரையை ரூ.16 க்கும் வாங்கி அவற்றை ஒன்றாகக் கலந்து என்ன விலைக்கு விற்றால் **16%** இலாபமாகப் பெறுவார்?

விடை : ரூ. 17.40

விளக்கம் :

கலக்கப்பட்ட சர்க்கரையின் அளவு = 200 கி.கி

கலக்கப்பட்ட 200 கி.கி சர்க்கரையின் அடக்க விலை = ரூ. **(80 * 13.50) + (120 * 16)**

= ரூ. **(1080 + 1920) =** ரூ. 3000

விற்ற விலை = ரூ. 3000 ல் **116% = (3000 * (116 / 100))**

= ரூ. 3480

கலக்கப்பட்ட 200 கி.கி சர்க்கரையின் விற்ற விலை (கிலோவிற்கு) **= 3480 / 200**

ஒரு கிலோ கலக்கப்பட்ட சர்க்கரையின் விலை = ரூ. 17.40

6. சுனில் என்பவர் ஒரு பழைய ஸ்கூட்டரை ரூ.4700 க்கு வாங்கி, ரூ.800 யை அதில் ஏற்பட்டுள்ள பழுதினை சரிபார்க்க செலவழிக்கிறார். பிறகு, அவர் அந்த ஸ்கூட்டரை ரூ.5800 க்கு விற்கிறார் எனில், அவர் பெற்ற இலாப சதவீதம் எவ்வளவு?

விடை : **5*(5/11)%**

விளக்கம் :

அடக்க விலை **= 4700 + 800 =** ரூ. 5500

விற்ற விலை = ரூ. 5800

இலாபம் = விற்ற விலை - அடக்க விலை

= ரூ. 5800 - ரூ. 5500

= ரூ. 300

இலாப சதவீதம் = (இலாபம் **/** அடக்க விலை) *** 100**

= (300 / 5500) * 100

= (300/55) = 60/11

இலாப சதவீதம் **= 5*(5/11)%**

7. ஒருவர் மோட்டார் சைக்கிளை ரூ. 50,000க்கு வாங்கினார். இதன் மதிப்பு ஒவ்வொரு ஆண்டும் **8%** வீதம் குறைகின்றது, ஓராண்டிற்குப் பின் இதன் மதிப்பு எவ்வளவாக இருக்கும்?

விடை : ரூ. 46000

விளக்கம் :

மோட்டார் சைக்கிளின் விலை = ரூ. 50,000

மோட்டார் சைக்கிளின் ஒவ்வொரு ஆண்டும் குறையும் வீதம் **= 8%**

முதல் ஆண்டிற்கு பிறகு அதன் மதிப்பு = மோட்டார் சைக்கிளின் விலை **- (50000 * 8 * 1) / 100**

= ரூ. 50000 - ரூ. 4000 = ரூ. 46000

8. ஒரு தொப்பியின் அடக்க விலை ரூ.80.90 மற்றும் அதன் நட்ட சதவீதம் **10%** ஆகும். எனில் அத்தொப்பியானது எந்த விலைக்கு விற்கப்பட்டிருக்கும்?

விடை : ரூ.72.81

விளக்கம் :

ஒரு தொப்பியின் அடக்க விலை = ரூ.80.90

நட்ட சதவீதம் **= 10%**

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

விற்ற விலை = ரூ.80.90 க்கு **(100 - 10)%**
= (80.90 * (90/100)) = ரூ.72.81
தொப்பியின் விற்ற விலை **=** ரூ.72.81

9. ஒரு புத்தகமானது ரூ.27.50 க்கு **10%** லாபத்துடன் விற்கப்பட்டது. ஆனால் அப்புத்தகமானது ரூ.25.75 க்கு விற்கப்படுமேயானால், கிடைக்கும் இலாப அல்லது நஷ்ட சதவீதத்தினைக் காண்க.
விடை : **3 %**
விளக்கம் :
விற்ற விலை **=** ரூ.27.50
இலாபம் **= 10%**
அடக்க விலை **=** ரூ.**[(100/110) * 27.50]**
= ரூ.25
புத்தகத்தின் விற்ற விலை ரூ.25.75 ஆக உள்ளபோது இலாபம் **=** ரூ**(25.75 - 25)**
= ரூ. 0.75
இலாபம் **% = [(0.75/25) * 100] %**
இலாபம் **% = 3 %**

10. ஒரு வியாபாரி 6 வாழைப்பழங்களை ரூ.10 க்கு வாங்கி, பிறகு 4 வாழைப்பழங்களை ரூ.4 க்கு விற்பனை செய்கிறார் எனில் அவருக்கு கிடைத்த இலாப அல்லது நஷ்ட சதவீதத்தினைக் காண்க.
விடை : **10%**
விளக்கம் :
வாங்கிய வாழைப்பழங்களின் எண்ணிக்கை **=** 6, 4 இன் மீ.சி.ம **=** 12
அடக்க விலை **=** ரூ. **(10/6) * 12 =** ரூ.20
விற்ற விலை **=** ரூ. **(6/4) * 12 =** ரூ.18
நஷ்டம் **% = [(2/20) * 100] = 10%**

11. மோனிதா என்பவர் ஒரு மிதிவண்டியினை அதன் விற்பனை விலையின் **9/10** பங்கு விலைக்கு வாங்குகிறார். பின் அதனை **8%** விற்பனை விலையைவிட அதிகமாக விற்கிறார் எனில் அவர் அடைந்த இலாப சதவீதத்தினைக் காண்க.
விடை : **20%**
விளக்கம் :
விற்ற விலையினை **x** எனக் கொள்வோம்.
அடக்க விலை **= (9/10) * x**
இலாப சதவீதம் **= 100% + 8% =** ரூ.**x** ல் **108% = (108/100) * x = (27x/25)**
இலாபம் **= Rs. [(27x/25) - (9x/10)]**
= Rs. [(108x - 90x) / 100]
= Rs. 18x /100
இலாபம் **= [(18x/100) * (10/9x) * 100]% = 20%**

12. ஒரு விற்பனையாளர் நாற்காலியை **20%** நஷ்டத்திற்கு விற்றார். நாற்காலியின் விற்பனை விலை ரூ.100 அதிகரிக்கிறது எனில் **5%** இலாபம் கிடைக்கிறது. ஆகையால் அந்த நாற்காலின் அடக்க விலையினைக் காண்க.
விடை : ரூ. 400
விளக்கம் :
அடக்க விலையை **x** எனக் கொள்க.
பிறகு, **(x** ல் **105%) - (x** ல் **80%) =** 100 அல்லது **(x** ல் **25%) = 100**
x/4 = 100 அல்லது **x =** 400
ஆகவே, நாற்காலியின் அடக்க விலை **=** ரூ. 400

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

13. ஒரு தொப்பியின் அடக்க விலை ரூ.80.90 மற்றும் அதன் நட்ட சதவீதம் **10%** ஆகும். எனில் அத்தொப்பியானது எந்த விலைக்கு விற்கப்பட்டிருக்கும்?
விடை : ரூ.72.81
விளக்கம் :
ஒரு தொப்பியின் அடக்க விலை **=** ரூ.80.90
நட்ட சதவீதம் **= 10%**
விற்ற விலை **=** ரூ.80.90 க்கு **(100 - 10)%**
தொப்பியின் விற்ற விலை **= (80.90 * (90/100)) =** ரூ.72.81
14. 21 பொருள்களின் அடக்க விலையானது 18 பொருள்களின் விற்ற விலைக்குச் சமமாகும் எனில், தற்போது ஏற்பட்டுள்ள இலாபம் அல்லது நஷ்டத்தினைக் காண்க.
விடை : **16 * 2/3%**
விளக்கம் :
ஒரு பொருளின் அடக்க விலை **=** ரூ.1
பிறகு, 18 பொருட்களின் விலை **=** ரூ.18, 18 பொருட்களின் விற்ற விலை **=** ரூ.21
இலாபம் **% = [(3/18) * 100] = 16 * 2/3%**
15. சரண் என்பவர் 20 டஜன்கள் அடங்கிய பொம்மைகளை ஒரு டஜனிற்கு ரூ.375 வீதம் வாங்குகிறார். பிறகு, ஒவ்வொரு பொம்மையையும் ரூ.33 க்கு விற்கிறார் எனில், அவர் பெற்ற இலாபத்தின் சதவீதத்தினைக் காண்க.
விடை : **5.6 %**
விளக்கம் :
ஒரு பொம்மையின் அடக்க விலை **=** ரூ. **(375/12) =** ரூ. 31.25
ஒரு பொம்மையின் விற்ற விலை **=** ரூ. 33
இலாபம் **% = [((33 - 31.25) / 31.25) * 100] %**
= [(1.75 / 31.25) * 100] %
= [175 / 31.25] %
இலாபம் **% = 5.6 %**
16. ஒரு பொருளானது ரூ.34.80 விற்கப்படும்போது **2%** ந'டம் ஏற்படுகிறது. ஆகவே, அந்த பொருளின் அடக்க விலையினைக் காண்க.
விடை : ரூ. 46.4
விளக்கம் :
அடக்க விலை **=** ரூ. **[(100/75) * 34.80] = [3480/75]**
பொருளின் அடக்க விலை **=** ரூ. 46.4
27. ஒரு பொருளின் விற்பனை விலையானது அப்பொருளின் விற்பனை வரியுடன் சேர்த்து ரூ.616 ஆகும். விற்பனை வரியானது **10%** ஆகும். விற்பனையாளர் அப்பொருளின் மூலம் **12%** இலாபம் பெறுகிறார் எனில், அப்பொருளின் அடக்க விலையினைக் காண்க.
விடை : ரூ. 500
விளக்கம் :
பொருளின் விற்ற விலையின் **110% =** 616
விற்ற விலை **=** ரூ. **[(616 * 100) / 110]**
விற்ற விலை **=** ரூ. 560
அடக்க விலை **=** ரூ. **[(560 * 100) / 112]**
அடக்க விலை **=** ரூ. 500
18. ஒரு காய்கறி விற்பனையாளர் 70 கி.கி உருளைக்கிழங்கினை ரூ. 420 க்கு வாங்கி, கிலோகிராம் ரூ. 6.50 வீதம் விற்பனை செய்கிறார் எனில், அவர் அடைந்த இலாப சதவீதத்தினைக் காண்க.
விடை : **8 * 1/3 %**

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

விளக்கம் :

ஒரு கி.கி உருளைக்கிழங்கின் அடக்க விலை = ரூ. **(420/70) =** ரூ. 6

ஒரு கி.கி உருளைக்கிழங்கின் விற்பனை விலை = ரூ. 6.50

இலாபம் **% = [(6.50 - 6) / 6 * (100)] %**

= [(0.50 / 6) * 100] %

= [50 / 6] %

= [25 / 3] %

இலாபம் **% = 8 * 1/3 %**

19. ஒருவர் ஒரு மிதிவண்டியினை ரூ. 1400 க்கு வாங்கி, அதை 15**%** நஷ்டத்திற்கு விற்கிறார் எனில், அவர் மிதிவண்டியை விற்ற விலையினைக் காண்க.

விடை : ரூ. 1190

விளக்கம் :

விற்ற விலை **= [(100 - loss%) / 100] *** அடக்க விலை

= [(100 - 15) / 100] * 1400

= (85 / 100) * 1400

= 85 * 14

= ரூ. 1190

20. ராகுல் என்பவர் ஒரு மனை ரூ. 6,75,958 வீதம் இரு மனைகளினை வாங்குகிறார். பின்பு, ஒன்றை **16%** இலாபத்திற்கும், மற்றொன்றை **16%** நட்டதிற்கும் விற்கிறார் எனில், அவர் அடைந்த இலாப அல்லது நட்ட சதவீதத்தினைக் காண்க.

விடை : **2.56%**

விளக்கம் :

இத்தகைய சூழ்நிலையில் நட்டம் மட்டுமே இருக்கும். ஆகவே, இதற்கு விற்ற விலை முக்கியமானதல்ல.

நட்டம் **% = [**(பொதுவான நட்டம் மற்றும் இலாபம்**%) / 10]^2**

= [16 / 10]^2 %

= [8 / 5]^2 %

= [64 / 25] %

ராகுல் அடைந்த நட்ட சதவீதம் **= 2.56%**

21. ஒருவர் ஒரு குதிரையையும், அதற்கான வண்டியையும் ரூ. 3000 ற்கு வாங்கி, பின்பு குதிரையை **20%** இலாபத்திற்கும், குதிரைக்கான வண்டியை **10%** நட்டத்திற்கும் விற்கும்போது, மொத்தத்தில் **2%** இலாபம் அடைகிறார் எனில், குதிரை மற்றும் குதிரை வண்டியின் அடக்க விலையினைக் காண்க.

விடை : ரூ. 1200, ரூ. 1800

விளக்கம் :

குதிரையின் அடக்க விலையை **x** எனக் கொள்க.

குதிரை வண்டியின் அடக்க விலையை ரூ. **(3000 - x)** எனக் கொள்க.

x இல் **20% - (3000 - x)** இல் **10% = 3000** இல் **2%**

(x/5) - [(3000 - x) / (10)] = 3000 * (2/100)

(x/5) - [(3000 - x) / (10)] = 60

5, 10 இன் மீ.சி.ம **= 10**

2x - 3000 + x = 60 * 10

3x - 3000 = 600

3x = 3600

x = 3600 / 3

x = 1200

ஆகவே, குதிரையின் அடக்க விலை = ரூ. 1200
குதிரவண்டியின் அடக்க விலை = ரூ. **(3000 - 1200) = Rs. 1800**
22. ஒரு பொருளை ரூ. 100 ற்கு விற்று ஒருவர் ரூ. 15 இலாபம் அடைகிறார், எனில் அவருடைய இலாப சதவீதத்தினைக் காண்க.
விடை : **17 * (11/17)%**
விளக்கம் :
பொருளின் விற்ற விலை = ரூ. 100
இலாபம் = ரூ. 15
இலாப சதவீதம்**(%) = [(15/85) * 100] %**
= [300 / 17]%
அவர் பெற்ற இலாப சதவீதம் **= 17 * (11/17)%**

33)-நேரம் மற்றும் வேலை

1. ஆனந்த் என்பவர் மணிக்கு 20 கி.மீ வேகத்தில் ஓடுகிறார். எனில் அவருக்கு 400 மீ தொலைவினைக் கடக்க ஆகும் நேரத்தினைக் காண்க.
விடை : **1 * (1/ 5)min**
விளக்கம் :
ஆனந்த் **-** இன் வேகம் **= 20 km / hr**
= (20 * (5/18))m/sec = 50 / 9 m/sec
400 மீ தொலைவினைக் கடக்க ஆகும் நேரம் **= (400 * (9 / 59)) sec**
= 1 * (1/ 5) min
= 72 sec = 1 * (12 / 60) min
= 1 * (1 / 5) min
2. 100 மீட்டர் நீளமுள்ள தொடர்வண்டியானது மணிக்கு 30 கி.மீ வேகத்தில் செல்கிறது. ஆகவே, அந்த தொடர்வண்டியானது இரயில்வே பாதையில் நின்று கொண்டுள்ள ஒரு மனிதனை கடந்து செல்ல எடுத்துக் கொள்ளும் நேரத்தினைக் காண்க.
விடை : 12 **sec**
விளக்கம் :
தொடர்வண்டியின் வேகம் **= (30 * (5/18)) m/sec = (25/3) m/sec**
நின்று கொண்டிருக்கும் மனிதனை கடக்க தொடர்வண்டி எடுத்துக் கொள்ளும் தூரம் **=**
100 மீ தேவைப்படும் நேரம் **= (100 / (25/3)) = (100 * (3/25)) sec**
= 12 sec
3. ஒருவர் முதல் நாள் ரூ. 20 பெற்று அதில் ரூ. 15 யை செலவழிக்கிறார். பின்பு மூன்றாம் நாள் மீண்டும் ரூ.20 பெற்று ரூ.15 யை செலவழிக்கிறார். ஆகவே, இவ்வாறு அவர் செலவு செய்து சேமித்தால் எத்தனை நாள்களுக்குப் பிறகு அவரது கையில் ரூ. 60 இருக்கும்?
விடை : 17 வது நாள் அவரது கையில் ரூ. 60 இருக்கும்
விளக்கம் :
அவர் இரண்டு நாட்களில் ஈட்டிய தொகை = ரூ. 5
அவர் 16 வது நாட்களில் ஈட்டிய தொகை = ரூ. **((5/2) * 16)**
= ரூ. 40
எனவே, 17 வது நாள் அன்று அவர் கையில் உள்ள தொகை = ரூ. **(40 + 20)**
17 வது நாள் அன்று அவர் கையில் உள்ள தொகை = ரூ. 60
4. A என்பவர் ஒரு வேலையை 20 நாட்களிலும், **B** என்பவர் அதே வேலையை 30 நாட்களிலும் செய்து முடிப்பார்கள். அவ்விருவரும் சேர்ந்து அவ்வேலையைச் செய்து

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

முடிக்க எத்தனை நாட்கள் ஆகும்?
விடை : 12 நாட்கள்
விளக்கம் :
ஒரு நாளில் **A** செய்யும் வேலை **= 1/20**
ஒரு நாளில் **B** செய்யும் வேலை **= 1/30**
ஒரு நாளில் **A, B** இருவரும் சேர்ந்து செய்யும் வேலை **= ((1/20) + (1/30))**
= ((3 + 2) / 60) = 5 /60 = 1/12 பகுதி வேலை
A, B இருவரும் சேர்ந்து அவ்வேலையை செய்து முடிக்க ஆகும் நாட்கள் **= (1 / (1/12)) =** 12 நாட்களில் முடிப்பர்.

5. ஒரு வேலையை **A, B** இருவரும் சேர்ந்து 8 நாட்களில் முடிப்பர். **A** மட்டும் அவ்வேலையை 12 நாட்களில் முடிப்பார். **B** மட்டும் அவ்வேலையை எத்தனை நாட்களில் முடிப்பார்?
விடை : 24 நாட்கள்
விளக்கம் :
A, B இருவரும் சேர்ந்து ஒரு நாளில் முடிக்கும் வேலை **= 1/8**
ஒரு நாளில் **A** மட்டும் செய்யும் வேலை **= 1/12**
ஒரு நாளில் **B** மட்டும் செய்யும் வேலை **= ((1/8) - (1/12))**
= ((3 -2) / 24) = 1/24
B மட்டும் அவ்வேலையைச் செய்து முடிக்க ஆகும் காலம் **= (1/ (1/24)) =** 24 நாட்கள்

6. **A** ஒரு வேலையை 10 நாட்களிலும், **B** அதை 15 நாட்களிலும் செய்து முடிப்பர். இருவரும் சேர்ந்து அவ்வேலையைச் செய்து ரூ. 1500 - ஐ ஈட்டினால், அத்தொகையை எவ்வாறு பிரித்துக் கொள்வர்?
விடை : 900, 600
விளக்கம் :
A ஒரு நாளில் செய்யும் வேலை **= 1/10**
B ஒரு நாளில் செய்யும் வேலை **= 1/15**
எனவே அவர்களின் வேலைத்திறன்களின் விகிதம் **= (1/10) : (1/15) = 3 : 2**
மொத்தத் தொகை **= 1500**
A இன் பங்கு **= (3/5) * 1500 = 900**
B இன் பங்கு **= (2/5) * 1500 = 600**

7. அருண் என்பவர் மணிக்கு 30 கி.மீ வேகத்தில் சென்றால் அவர் 500மீ யைக் கடக்க எவ்வளவு நேரம் ஆகும்?
விடை : **1 min**
விளக்கம் :
நேரம் **=** தொலைவு **/** வேகம்
வேகம் **=** மணிக்கு 30 கி.மீ
30 * (5/18) m/sec = 50/6
நேரம் **= 500 * (6/50) = 60 sec = 1 min**

8. A என்பவர் ஒரு வேலையை 8 நாட்களிலும் அதே வேலையை **B** என்பவர் 10 நாட்களிலும் முடிக்கிறார்கள் எனில் அவ்விருவரும் சேர்ந்து செய்ய அவ்வேலை எத்தனை நாட்களில் முடிக்கப்படும்?
விடை : **4 * (4/9)**
விளக்கம் :
A யின் ஒரு மணிநேர வேலை **= 1/8**
B யின் ஒரு மணிநேர வேலை **= 1/10**
(A + B) யின் ஒரு மணிநேர வேலை **= (1/8) + (1/10) = 9/40**

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

ஆகவே, **A** மற்றும் **B** ஆகிய இருவரும் அந்த வேலையை **40/9 = 4 * (4/9)** மணிநேரத்தில் செய்து முடிப்பர்.

9. ஒரு குறிப்பிட்ட வேலையை முடிக்க **A** என்பவர் 30 நாட்களும், **B** என்பவர் 40 நாட்களும் எடுத்துக் கொள்கின்றனர். அவ்வேலையை **A, B** ஆகிய இருவரும் சேர்ந்து முடிக்க எத்தனை நாட்கள் ஆகும்?

விடை : **17 * (1/7)** நாட்கள்

விளக்கம் :

A யின் ஒரு நாள் வேலை **= 1/30**

B யின் ஒரு நாள் வேலை **= 1/40**

A, B யின் ஒரு நாள் வேலை **= ((1/30) + (1/40))**

= 7/120

அவ்வேலையை **A, B** ஆகிய இருவரும் சேர்ந்து முடிக்க எடுத்துக்கொள்ளும் நாட்கள்

= 120/7 நாட்கள்

= 17 * (1/7) நாட்கள

10. ராம் என்பவர் கரண் என்பவர் ஒரு வேலையை செய்து முடிக்க ஆகும் நாட்களில் பாதி நாட்களில் அதே வேலையை செய்து முடிப்பார். கரண் என்பவர் ஒரு குறிப்பிட்ட வேலையை 24 நாட்களில் செய்து முடிப்பார். ஆகவே, இருவரும் சேர்ந்து அவ்வேலையை முடிக்க எத்தனை நாட்கள் ஆகும்?

விடை : 8 நாட்கள்

விளக்கம் :

கரண் ஒரு வேலையை முடிக்க ஆகும் நாட்கள் **=** 24 நாட்கள்

ராம் அதே வேலையை முடிக்க ஆகும் நாட்கள் **=** 12 நாட்கள்

இருவரும் சேர்ந்து அவ்வேலையை முடிக்க ஆகும் நாட்கள் **= [(1/24) + (1/12)]**

12, 24 இன் மீ.சி.ம **= 24**

= [(1 + 2)/24]

= 3/24 = 1/8

ஆகவே, இருவரும் சேர்ந்து அவ்வேலையை முடிக்க ஆகும் நாட்கள் **=** 8 நாட்கள்

11. **A** என்பவர் ஒரு பணியினை முடிக்க 20 நாட்கள், **B** என்பவர் அப்பணியினை முடிக்க 30 நாட்கள் எனவும் எடுத்துக் கொள்கிறார்கள். **A** மற்றும் **B** ஆகிய இருவரும் சேர்ந்து அப்பணியினைச் செய்தால் 10 நாட்களுக்கு முன் அப்பணியை முடிக்கின்றனர் எனில் அப்பணியை முடிக்க எத்தனை நாட்கள் ஆகும்?

விடை : 18 நாட்கள்

விளக்கம் :

A என்பவர் ஒரு பணியினை முடிக்க ஆகும் நாட்கள் **=** 20 நாட்கள்

B என்பவர் அப்பணியினை முடிக்க ஆகும் நாட்கள் **=** 30 நாட்கள்

A மற்றும் **B** ஆகிய இருவரும் சேர்ந்து அப்பணியினை முடிக்க ஆகும் நாட்கள் **= x** நாட்கள்

B என்பவர் **x** நாட்கள் அப்பணியினை செய்தால், **A** என்பவர் **(x - 10)** நாட்கள் அப்பணியினை செய்வார்.

A என்பவர் பணியை **(x - 10)/20** நாட்களிலும், **B** என்வர் **x/30** நாட்களிலும் முடிப்பர்.

[(x - 10)/20] + x/30 = 1

20, 30 இன் மீ.சி.ம **= 60**

[3(x - 10) + 2x]/60 = 1

3x - 30 + 2x = 60

5x - 30 = 60

5x = 90

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

x = 90/5
x =18
12. **A** என்பவர் ஒரு வேலையை 12 நாட்களில் முடிக்கிறார். **B** என்பவர் **A** யைவிட **60%** கூடுதலாக வேலை செய்கிறார். எனவே, **B** மட்டும் அவ்வேலையை செய்ய எத்தனை நாட்கள் ஆகும்?
விடை : **7*(1/2)** நாட்கள்
விளக்கம் :
A மற்றும் **B** ஆகியோர் வேலையை செய்ய எடுத்துக் கொள்ளும் நாட்களின் விகிதம் **=** 160 : 100
B வேலையை செய்ய எடுத்துக் கொள்ளும் நாட்கள் **= x** நாட்கள்
பிறகு,
8 : 5 : : 12 : x
8x = 5 * 12
x = 60/8
x = 7*(1/2) நாட்கள்
13. 45 ஆண்கள் ஒரு வேலையை முடிக்க 16 நாட்கள் எடுத்துக் கொள்கின்றனர். 6 நாட்களுக்குப் பிறகு அவர்கள் வேலையை தொடங்குகின்றனர், அவர்களுடன் 30 ஆண்கள் சேர்ந்து கொள்கின்றனர், இப்பொழுது அவர்கள் அவ்வேலையை செய்து முடிக்க எத்தனை நாட்கள் ஆகும்?
விடை : 6 நாட்கள்
விளக்கம் :
ஒரு ஆணின் ஒரு நாள் வேலை **1/(45 * 16)**
= 1/720
45 ஆண்களின் 6 நாட்களின் வேலை **= (1/16) * 6 = 3/8**
மீதமுள்ள வேலை **= 1 - (3/8) = 5/8**
75 ஆண்களின் ஒரு நாள் வேலை **= 75/720 = 5/48**
5/8 வேலையானது 75 ஆண்களால் செய்து முடிக்க ஆகும் நாட்கள் **= (48/5) * (5/8)**
= 6 நாட்கள்
14. ஒரு விமானமானது ஓர் சதுரத்தின் நான்கு பக்கங்களில் முறையே மணிக்கு 200, 400, 600, 800 என்ற கி.மீ வீதத்தில் பறக்கிறது எனில், அப்பகுதியில் அவ்விமானத்தின் சராசரி வேகத்தினை கணக்கிடுக.
விடை : 384 கி.மீ **/** மணி
விளக்கம்
சதுரத்தின் நான்கு பக்கங்களை **x** கி.மீ எனக் கொள்வோம்.
அப்பகுதியில் விமானத்தின் சராசரி வேகத்தினை மணிக்கு **y** கி.மீ எனக் கொள்வோம்.
(x/200) + (x/400) + (x/600) + (x/800) = (4x/y)
200, 400, 600 மற்றும் 800 இன் மீ.சி.மக **= 2400**
(25x/2400) = (4x/y)
y = (2400 * 4) / 25
y = 384
விமானத்தின் சராசரி வேகம் **=** 384 கி.மீ **/** மணி
15. 7 ஆட்கள் ஒரு வேலையை 52 நாட்களில் செய்து முடிக்கின்றனர். அதே வேலையை 13 ஆட்கள் எத்தனை நாட்களில் செய்து முடிப்பார்கள்?
விடை: 28 நாட்கள்
விளக்கம்:
கண்டுபிடிக்க வேண்டிய நாட்களின் எண்ணிக்கையை **a** என்று குறிப்பிடுவோம்.
இங்கு ஆட்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் பொழுது, நாட்களின் எண்ணிக்கை

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

குறையும். எனவே, இது எதிர்மாறல்.
எதிர்மாறலின்படி

7 * 52 = 13 * a

13 * a = 7 * 52

a = (7 * 52)/13

a = 28

எனவே, 13 ஆட்கள் இந்த வேலையை 28 நாட்களில் முடிப்பார்கள்.

16. A மற்றும் **B** ஆகிய இருவரும் ஒரு வீட்டினை கட்டிமுடிக்க 72 நாட்களும், **B** மற்றும் **C** ஆகிய இருவரும் அதே வீட்டினை கட்டிமுடிக்க 120 நாட்களும் எடுத்துக் கொள்கின்றனர். அதே வேலையினை **A, C** ஆகிய இருவரும் சேர்த்து 90 நாட்களில் செய்து முடிக்கின்றனர். ஆகவே, **A** மட்டும் அவ்வேலையை செய்தால் எத்தனை நாட்களில் முடிப்பார்?

விடை : 120 நாட்கள்

விளக்கம் :

(A + B) இன் ஒரு நாள் வேலை **= 1/72**

(B + C) இன் ஒரு நாள் வேலை **= 1/120**

(A + C) இன் ஒரு நாள் வேலை **= 1/90**

2 * (A + B + C) ஆகிய மூவரின் ஒரு நாள் வேலை **= [(1/72) + (1/120) + (1/90)]**

72, 120, 90 இன் மீ.சி.ம **= 720**

2 * (A + B + C) = [(10 + 6 + 8) / 720]

2 * (A + B + C) = 24/720

2 * (A + B + C) = 1/30

(A + B + C) = (1/30) * 1/2

(A + B + C) = 1/60

ஆகவே, **A** இன் ஒரு நாள் வேலை **= [(1/60) - (1/120)]**

60, 120 இன் மீ.சி.ம **= 120**

= [(2 - 1) / 120]

A இன் ஒரு நாள் வேலை **= 1/120**

A அவ்வேலையை முடிக்க ஆகும் நாட்கள் **= 120** நாட்கள்

17. A மற்றும் **B** ஒரு குறிப்பிட்ட வேலையை செய்வதன் மூலம் ரூ. 600 பெறுகின்றனர். **A** என்பவர் மட்டும் அவ்வேலையை 6 நாட்களில் முடிக்கிறார். **B** மட்டும் அதே வேலையினை 8 நாட்களில் முடிக்கிறார். **C** என்பவரின் உதவியுடன் **A, B** ஆகிய இருவரும் 3 நாட்களில் அவ்வேலையினை செய்து முடிக்கின்றனர் எனில், மூவரின் பங்கினைக் காண்க.

விடை : ரூ. 300, ரூ. 225, ரூ. 75

விளக்கம் :

C இன் ஒரு நாள் வேலை **= [(1/3) - ((1/6) + (1/8))] = 1/24**

A : B : C = மூவருடைய ஒரு நாள் வேலையின் விகிதம் **= (1/6) : (1/8) : (1/24)**

6, 8, 24 இன் மீ.சி.ம **=48**

A : B : C = 4 : 3 : 1

A இன் பங்கு **=** ரூ. **[600 * (4/8)] =** ரூ. 300

B இன் பங்கு **=** ரூ. **[600 * (3/8)] =** ரூ. 225

C இன் பங்கு **=** ரூ. **[600 - (300 + 225)] =** ரூ. 75

18. இரு ஆண்கள் மற்றும் 3 மாணவர்கள் ஒரு குறிப்பிட்ட வேலையை 10 நாட்கள் செய்கின்றனர். அதே வேலையை 3 ஆண்கள் மற்றும் 2 மாணவர்கள் ஒரு குறிப்பிட்ட வேலையை 8 நாட்கள் செய்கின்றனர். ஆகையால், 2 ஆண்கள் ஒரு சேர்ந்தால் அவ்வேலையினை முடிக்க ஆகும் நாட்களைக் காண்க.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

விடை : 12.5 நாட்கள்
விளக்கம் :
ஒரு ஆணின் ஒரு நாள் வேலை **= x**
ஒரு மாணவரின் ஒரு நாள் வேலை **= y**
பிறகு,
2x + 3y = 1/10 ---------------------- (1)
3x + 2y = 1/8 ---------------------- (2)
சமன்பாடு (1), (2) யைத் தீர்க்க கிடைப்பது,
x = 7/200
y = 1/100
2 ஆண்கள் மற்றும் 1 மாணவரின் ஒரு நாள் வேலை **= [(2 * (7/200)) + (1 * (1/100))] = 16/200**
2 ஆண்கள் மற்றும் 1 மாணவரின் ஒரு நாள் வேலை **= 2/25**
ஆகவே, இரு ஆண்களும் ஒரு மாணவரும் சேர்ந்து அவ்வேலையை முடிக்க ஆகும் காலம் **= 25/2** நாட்கள் **=** 12.5 நாட்கள்
19. ஒருவர் ஒரு குறிப்பிட்ட வேலையினை 5 நாட்களில் முடிக்கின்றார். பின் அவரது மகனின் உதவியுடன் 3 நாட்களில் அதே வேலையை முடிக்கின்றார். ஆகவே, அவரது மகன் மட்டும் அவ்வேலையை முடிக்க ஆகும் காலத்தினைக் காண்க.
விடை : 7.5 நாட்கள்
விளக்கம் :
மகனின் ஒரு நாள் வேலை **= [(1/3) - (1/5)]**
= [(5 - 3) / (15)]
= 2/15
மகன் மட்டும் அவ்வேலையை முடிக்க ஆகும் காலம் **= 15/2** நாட்கள்
மகன் மட்டும் அவ்வேலையை முடிக்க 7.5 நாட்கள் ஆகும்.
20. A மற்றும் **B** ஆகிய இருவரும் ஒரு வீட்டினை சுத்தம் செய்ய 8 நாட்களும், **B** மற்றும் **C** ஆகிய இருவரும் அதே வீட்டினை சுத்தம் செய்ய 12 நாட்களும் எடுத்துக் கொள்கின்றனர். அதே வேலையினை **A, B, C** ஆகிய மூவரும் சேர்த்து 6 நாட்களில் செய்து முடிக்கின்றனர். ஆகவே, **A** மற்றும் **C** ஆகிய இருவரும் இணைந்து அவ்வேலையில் செய்தால் எத்தனை நாட்களில் முடிப்பர்?
விடை : 8 நாட்கள்
விளக்கம் :
(A + B + C) ஆகிய மூவரின் ஒரு நாள் வேலை **= 1/6**
(A + B) இன் ஒரு நாள் வேலை **= 1/8**
(B + C) இன் ஒரு நாள் வேலை **= 1/12**
(A + C) இன் ஒரு நாள் வேலை **= [(2 * (1/6)) - ((1/8) + (1/12))]**
= [(1/3) - ((3 + 2) / 24)]
= [(1/3) - (5/24)]
= 3/24 = 1/8
ஆகவே, **A** மற்றும் **C** ஆகியோர் இணைந்து செய்தால் வீட்டினை 8 நாட்களில் சுத்தம் செய்வர்.
21. 6 பெண்கள் மற்றும் 8 ஆண்கள் சேர்ந்து ஒரு வேலையை 10 நாட்களில் செய்து முடிக்கின்றனர். அதே வேலையை 26 பெண்கள் மற்றும் 48 ஆண்கள் சேர்ந்து 2 நாட்களில் முடிக்கின்றனர் எனில் 15 பெண்கள் மற்றும் 20 ஆண்கள் சேர்ந்து அதே வேலையை எத்தனை நாட்களில் முடிப்பார்கள்?
விடை : 4 நாட்கள்
விளக்கம் :

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

ஒரு பெண் ஒரு நாள் செய்து முடிக்கும் வேலையை **x** எனக் கொள்க
ஒரு ஆண் ஒரு நாள் செய்து முடிக்கும் வேலையை **y** எனக் கொள்க
6x + 8y = 1 / 10 ----------------(i)
26x + 48y = 1 / 2 -------------- (ii)
(i) * 6 = 36x + 48y = 6 / 10
(i) - (ii)
36x + 48y - 26x - 48y = (6/10) - (1/2)
10x = (6 - 5) / 10
x = 1 / 100 என சமன்பாடு **(i)** ல் பிரதியிட
6 (1/100) + 8y = 1/10
(3/50) + 8y = 1/10
8y = 2 / 50
x = 1/100 மற்றும் **y = 1/200**
(15 பெண்கள் **+** 20 ஆண்கள்) ஒரு நாள் வேலை **= ((15/100) + (20/200))**
= (30 + 20) / 200
= 1/4
15 பெண்கள் மற்றும் 20 ஆண்கள் அவ்வேலையை 4 நாட்களில் செய்து முடிப்பார்கள்.

22. அ ஒரு வேலையை 10 நாட்களிலும், ஆ அதை 15 நாட்களிலும் செய்து முடிப்பர். இருவரும் சேர்ந்து அவ்வேலையைச் செய்து ரூ. 1500 ஐ ஈட்டினால், அத்தொகையை எவ்வாறு பிரித்துக் கொள்வர்?
விடை : ரூ. 600
விளக்கம் :
அ ஒரு நாளில் செய்யும் வேலை **= 1 / 10**
ஆ ஒரு நாளில் செய்யும் வேலை **= 1 / 15**
எனவே அவர்களின் வேலைத்திறன்களின் விகிதம் **= (1 / 10) : (1 / 15)**
மொத்தத் தொகை **=** ரூ. 1500
அ இன் பங்கு **= (3 / 5) * 1500 =** ரூ. 900
ஆ இன் பங்கு **= (2 / 5) * 1500 =**ரூ. 600

23. கவிதா ஒரு வேலையை 15 நாட்களிலும், புனிதா அதே வேலையை 20 நாட்களிலும் செய்து முடிக்கின்றனர்.இவர்கள் இருவரும் சேர்ந்து அதே வேலையை நான்கு நாட்கள் செய்திருக்கின்றனர் என்றால் மீதம் உள்ள வேலையின் அளவை பின்னத்தில் கூறுக?
விடை : **8 / 15**
விளக்கம் :
கவிதாவின் ஒரு நாள் வேலை **= 1 / 15**
புனிதாவின் ஒரு நாள் வேலை **= 1 / 20**
(கவிதா **+** புனிதா) வின் ஒரு நாள் வேலை **= (1 / 15 + 1 /20)**
= 7 / 60
(கவிதா **+** புனிதா) வின் நான்கு நாட்கள் வேலை **= (7 / 60) * 4**
= 7 / 15
மீதம் உள்ள வேலையின் அளவு **= (1 - (7 / 15))**
= (15 - 7 / 15) ; = 8 / 15

24. அ ஒரு வேலையை 4 மணி நேரத்தில் செய்து முடிக்கிறார். அதே வேலையை ஆ மற்றும் இ சேர்ந்து 3 மணி நேரத்திலும், அ மற்றும் இ சேர்ந்து 2 மணி நேரத்திலும் செய்து முடிக்கிறார் எனில், அவ்வேலையை ஆ ஆனவர் எத்தனை மணி நேரத்தில் செய்து முடிப்பார்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

விடை : 12 மணி நேரம்
விளக்கம் :
அ யின் ஒரு மணி நேர வேலை **= 1/4**
(ஆ **+** இ) யின் ஒரு மணி நேர வேலை **= 1/3**
(அ **+** இ) யின் ஒரு மணி நேர வேலை **= 1/2**
(அ **+** ஆ **+** இ) யின் ஒரு மணி நேர வேலை **= (1/4 + 1/3)**
= (3 + 4) / 12
= 7/12
ஆ யின் ஒரு மணி நேர வேலை **= (7/12 - 1/2) = 1/12**
ஆ ஆனவர் அவ்வேலையை செய்து முடிப்பதற்கு 12 மணி நேரம் எடுத்துக் கொள்வார்.

25. ரவி என்பவர் ஒரு வேலையை 20 நாட்களிலும், ராஜா என்பவர் அதே வேலையை 30 நாட்களிலும் செய்து முடிப்பார்கள். அவ்விருவரும் சேர்ந்து அவ்வேலையைச் செய்து முடிக்க எத்தனை நாட்கள் ஆகும்?
விடை : 12 நாட்கள்
விளக்கம் :
ஒரு நாளில் ரவி செய்யும் வேலை **= 1/20**
ஒரு நாளில் ராஜா செய்யும் வேலை **= 1/30**
ஒரு நாளில் ரவி, ராஜா இருவரும் சேர்ந்து செய்யும் வேலை **= 1/20 + 1/30**
= 3 + 2 / 60
= 5 / 60
= 1 / 12
எனவே ரவி, ராஜா இருவரும் சேர்ந்து அவ்வேலையை 12 நாட்களில் செய்து முடிப்பர்

26. ஒரு வேலையை கவிதா, திவ்யா இருவரும் சேர்ந்து 8 நாட்களில் முடிப்பர். கவிதா மட்டும் அவ்வேலையை 12 நாட்களில் முடிப்பார். திவ்யா மட்டும் அவ்வேலையை எத்தனை நாட்களில் முடிப்பார்?
விடை : 24 நாட்கள்
விளக்கம் :
கவிதா, திவ்யா இருவரும் சேர்ந்து ஒரு நாளில் முடிக்கும் வேலை **= 1/8**
ஒரு நாளில் கவிதா மட்டும் செய்யும் வேலை **= 1/12**
ஒரு நாளில் திவ்யா மட்டும் செய்யும் வேலை **= 1/8 - 1/12**
= 3 - 2 / 24
திவ்யா மட்டும் அவ்வேலையைச் செய்து முடிக்க ஆகும் காலம் **= 1 / 24 =** 24 நாட்கள்

27. **A, B** இருவரும் ஒரு வேலையை 12 நாட்களில் செய்து முடிப்பர். **B, C** அதே வேலையை 15 நாட்களில் செய்து முடிப்பர். **C, A** அதே வேலையை 20 நாட்களில் செய்து முடிப்பர். மூவரும் சேர்ந்து மற்றும் தனித்தனியாகவும் அவ்வேலையை எத்தனை நாட்களில் செய்து முடிப்பர்?
விடை : 10 நாட்கள்
விளக்கம் :
A , B ஒரு நாளில் செய்யும் வேலை **= 1 / 12**
B, C ஒரு நாளில் செய்யும் வேலை **= 1 / 15**
C, A ஒரு நாளில் செய்யும் வேலை **= 1 / 20**
ஒரு நாளில் **(A + B) + (B + C) + (C + A)** செய்யும் வேலை **= (1 / 12) + (1 / 15) + (1 / 20)**
ஒரு நாளில் **(2A + 2B + 2C)** செய்யும் வேலை **= 5 + 4 + 3 / 60**
ஒரே நாளில் **2 (A + B + C)** முடிக்கும் வேலை **= 12 / 60**

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

ஒரே நாளில் **A, B, C** முடிக்கும் வேலை **= (1 / 2) * (12 / 60) = 1 / 10**
மூவரும் சேர்ந்து அவ்வேலையை 10 நாட்களில் முடிப்பர்.

34)-நேரம் மற்றும் வேகம்

1. இரு நிலையங்கள் **A** மற்றும் **B** க்கு இடைபட்ட தொலைவு 220 கி.மீ. ஒரு புகைவண்டியானது **A** என்ற நிலையத்திலிருந்து **B** க்கு மணிக்கு 80 கி.மீ வேகத்தில் செல்கிறது. அடுத்து அரை மணி நேரத்திற்கு பிறகு, **B** என்ற நிலையத்திலிருந்து **A** க்கு மணிக்கு 100 கி.மீ வேகத்தில் செல்கிறது. ஆகவே, இரு புகைவண்டியும் **A** யிலிருந்து எந்த தொலைவில் சந்தித்துக் கொள்ளும்?
விடை : 120 கி.மீ
விளக்கம் :
தேவையான தொலைவு **x** எனக் கொள்க.
(x/80) - ((220 - x)/100) = 1/2
80 மற்றும் 100 மீ.சி.ம **= 400**
5x - 4(220 - x) = 400/2
5x + 4x - 880 = 200
9x = 1080
x = 1080/9 x = 120 கி.மீ
இரு புகைவண்டியும் **A** யிலிருந்து 120 வது கி.மீட்டரில் சந்தித்துக் கொள்ளும்.
2. இரு நிலையங்கள் **A** மற்றும் **B** ற்கு இடைபட்ட தொலைவு 800 கி.மீ. ஒரு தொடர்வண்டியானது **A** யிலிருந்து **B** யை அடைய மணிக்கு 90 கி.மீ வேகத்தில் செல்கிறது. மீண்டும் **A** நிலையத்தை அடைய மணிக்கு 65 கி.மீ வேகத்தில் செல்கிறது. ஆகவே, தொடர்வண்டி சென்ற மொத்த தூரத்தின் சராசரி வேகத்தைக் காண்க.
விடை : **75.48 km/hr**
விளக்கம் :
சராசரி வேகம் **= ((2xy) / (x + y)) km/hr**
x = 90 km/hr
y = 65 km/hr
= ((2 * 90 * 65) / (90 + 65))
= 11700/155
தொடர்வண்டி சென்ற மொத்த தூரத்தின் சராசரி வேகம் **= 75.48 km/hr**
3. ஒரு மோட்டார் காரானது 70 கி.மீ **/** மணி என்ற வேகத்தில் செல்கிறது. அதன் வேகம் ஒவ்வொரு 2 மணி நேரத்திற்கு பிறகு 10 கி.மீ **/** மணி என்று அதிகரிக்கிறது எனில் அக்காரால் 345 கி.மீ தூரத்தினை எவ்வளவு நேரத்தில் அடைய முடியும்?
விடை : **4*(1/2)** மணி நேரம்
விளக்கம் :
முதல் 2 மணி நேரத்தில் கார் கடந்த தொலைவு **= (70 * 2) =** 140 கி.மீ
அடுத்த 2 மணி நேரத்தில் கார் கடந்த தொலைவு **= (80 * 2) =** 160 கி.மீ
மீதமுள்ள தொலைவு **= 345 - (140 + 160) = 345 - 300 =** 45 கி.மீ
ஐந்தாவது மணி நேரத்தில் காரின் வேகம் **= 90** கி.மீ **/** மணி
45 கி.மீ யை கடக்க காருக்கு தேவைப்படும் நேரம் **= (45/90)** மணி **= 1/2** மணி
தேவைப்படும் மொத்த நேரம் **= (2 + 2 + (1/2)) = 4*(1/2)** மணி நேரம்
4. ஒரு தடகள வீரர் ஒரு போட்டியில் 200 மீட்டரை 24 வினாடியில் ஓடுகிறார் எனில்

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

அவரது வேகத்தினைக் காண்க.
விடை : 30 கி.மீ/மணி
விளக்கம் :
வேகம் **= (200/24)** மீ/வினாடி
= (25/3) மீ/வினாடி
= (25/3) * (18/5) கி.மீ/மணி
தடகள வீரரின் வேகம் **=** 30 கி.மீ/மணி
5. ஒரு மனிதன் 5 கி.மீ/மணி என்ற வேகத்தில் நடந்து 15 நிமிடத்தில் ஒரு பாலத்தினைக் கடக்கிறார். ஆகவே பாலத்தின் நீளத்தினை (மீட்டரில்) காண்க.
விடை : 1250 மீ
விளக்கம் :
வேகம் **= (5) * (5/18)** மீ/வினாடி
= (25/18) மீ/வினாடி
15 நிமிடத்தில் அவர் கடந்த தொலைவு **= (25/18) * (15) * (60) =** 1250 மீ
15 நிமிடத்தில் அவர் பாலத்தினை கடந்த தொலைவு **=** 1250 மீ
6. ஒருவர் மணிக்கு 5 கி.மீ வேகத்தில் நடக்கிறார் எனில் 7 நிமிடத்தில் தொடர்வண்டியினை தவறவிடுகிறார். அதே சமயம் மணிக்கு 6 கி.மீ வேகத்தில் நடந்தால் தொடர்வண்டி வருவதற்கு 5 நிமிடம் முன்னதாக அடைகிறார் எனில், அவர் தொடர்வண்டி நிலையத்தினை அடைய ஆகும் தொலைவினைக் காண்க.
விடை : 6 கி.மீ
விளக்கம் :
தேவையான தொலைவு **= x** கி.மீ
இரு விதமான நேரங்களில் ஏற்படும் வித்தியாசம் **=** 12 நிமிடம் **= 1/5** மணி நேரம்
[(x/5) - (x/6)] = 1/6
6x - 5x = 6
x = 6
எனவே தேவையான தொலைவு **=** 6 கி.மீ
7. ஒரு சரக்கு இரயில் ஆனது ஒரு குறிப்பிட்ட நேரத்தில் மாறாத வேகத்தில் நிலையத்திலிருந்து புறப்படுகிறது. 6 மணி நேரத்திற்கு பிறகு ஒரு எக்ஸ்பிரஸ் இரயில் ஆனது நிலையத்திலிருந்து அதே திசையினை நோக்கி மணிக்கு 90 கி.மீ வேகத்தில் செல்கிறது. எக்ஸ்பிரஸ் இரயில் ஆனது சரக்கு இரயிலை 4 மணி நேரத்தில் அடைகிறது. ஆகவே சரக்கு இரயிலின் வேகத்தினைக் காண்க.
விடை : 36 கி.மீ / மணி
விளக்கம் :
சரக்கு இரயிலின் வேகத்தினை மணிக்கு **x** கி.மீ எனக் கொள்வோம்.
10 மணி நேரத்தில் சரக்கு இரயில் கடந்த தொலைவு **=** 4 மணி நேரத்தில் எக்ஸ்பிரஸ் இரயில் கடந்த தொலைவு
10 * x = 4 * 90
x = 360/10 ; x = 36 கி.மீ / மணி
8. இரு தொடர்வண்டிகளின் வேகங்களின் விகிதம் 7 : 8. இரண்டாவது தொடர்வண்டியானது 4 மணி நேரத்தில் 400 கி.மீ தொலைவினைக் கடக்கிறது எனில், முதல் தொடர்வண்டியின் வேகத்தினைக் காண்க.
விடை : 87.5 கி.மீ / மணி
விளக்கம் :
இரு தொடர்வண்டியின் வேகங்களினை மணிக்கு **7x** கி.மீ மற்றும் **8x** கி.மீ எனக் கொள்வோம்.
பிறகு, **8x = (400/4) = 100**
x = 100/8 = 12.5

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

முதல் தொடர்வண்டியின் வேகம் **= (7 * 12.5)** கி.மீ **/** மணி
முதல் தொடர்வண்டியின் வேகம் **=** 87.5 கி.மீ **/** மணி
9. ஒரு எக்ஸ்பிரஸ் தொடர்வண்டியானது மணிக்கு 100 கி.மீ என்ற சராசரி வேகத்தில் செல்கிறது. அத்தொடர்வண்டியானது ஒவ்வொரு 75 கி.மீ க்கு ஒரு முறை 3 நிமிடம் நின்று செல்கிறது. ஆகவே, அத்தொடர்வண்டி 600 கி.மீ தொலைவினை அடைய எவ்வளவு நேரம் ஆகும்?
விடை : 6 மணி நேரம் 21 நிமிடம்
விளக்கம் :
600 கி.மீ தொலைவினை அடைய ஆகும் நேரம் **= 600/100** மணி நேரம் **=** 6 மணி நேரம்
75 கி.மீ க்கு ஒரு முறை நிற்கும் மொத்த இடங்களின் எண்ணிக்கை **= [(600/75) - 1] =** 7
நிற்பதற்கு எடுத்துக் கொண்ட மொத்த நேரம் **= 7 * 3 =** 21 நிமிடம்
600 கி.மீ யை அடைய தேவைப்படும் மொத்த நேரம் **=** 6 மணி நேரம் 21 நிமிடம்
10. ஒருவர் **A** யிலிருந்து **B** வரை உள்ள தொலைவினை நடந்தும், மீண்டும் **B** யிலிருந்து **A** க்கு ஓடியும் வர 5 மணிநேரம் 45 நிமிடம் எடுத்துக் கொள்கிறார். அவர் இருமுறைகளிலும் ஓடுகிறார் எனில் 2 மணிநேரம் மீதியாகிறது. ஆகவே, அவர் இருமுறைகளிலும் நடந்து செல்கிறார் எனில் அவருக்கு தேவைப்படும் நேரத்தினைக் காண்க.
விடை : 7 மணிநேரம் 45 நிமிடம்
விளக்கம் :
தேவையான தொலைவினை **x** கி.மீ எனக் கொள்வோம்.
(x கி.மீ யை நடந்து கடக்க ஆகும் நேரம்) **+ (x** கி.மீ யை ஓடி கடக்க ஆகும் நேரம்) **= 5 + (45/60)**
= 5 + (3/4) = (23/4) மணிநேரம்
(2x கி.மீ யை நடந்து கடக்க ஆகும் நேரம்) **+ (2x** கி.மீ யை ஓடி கடக்க ஆகும் நேரம்) **= 2 * (x** கி.மீ யை நடந்து கடக்க ஆகும் நேரம்)
= 2 * (23/4) = (23/2) மணிநேரம்
ஆனால், **2x** கி.மீ யை ஓடி கடக்க ஆகும் நேரம் **= 23/4 - 2**
= (15/4) மணிநேரம்
2x கி.மீ யை நடந்து கடக்க ஆகும் நேரம் **= (23/2) - (15/4)**
= (46 - 15)/4
2x கி.மீ யை நடந்து கடக்க ஆகும் நேரம் **= 31/4** மணிநேரம் **=** 7 மணிநேரம் 45 நிமிடம்
11. ஒருவர் மணிக்கு 15 கி.மீ வீதம் ஓடினால் 80 கி.மீ நீளமுள்ள பாலத்தினைக் கடக்க ஆகும் நேரத்தினைக் காண்க.
விடை : 5 மணிநேரம் 20 நிமிடம்
விளக்கம் :
வேகம் **= 15** கி.மீ **/** மணி
தொலைவு **=** 80 கி.மீ
நேரம் **= 80 / 15 = 5*(1/3)**
80 கி.மீ நீளமுள்ள பாலத்தினைக் கடக்க ஆகும் நேரம் **=** 5 மணிநேரம் 20 நிமிடம்
12. ஒரு மனிதன் 6 கி.மீ**/**மணி என்ற வேகத்தில் நடந்து 18 நிமிடத்தில் ஒரு பாலத்தினைக் கடக்கிறார். ஆகவே பாலத்தின் நீளத்தினை (மீட்டரில் காண்க.)
விடை : 1800 மீ
விளக்கம் :
வேகம் **= (6) * (5/18) m /sec = (30/18) m /sec**

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

18 நிமிடத்தில் அவர் பாலத்தினை கடந்த தொலைவு **= (30/18) * (18) * (60) =** 1800 மீ

13. ஒரு தொடர்வண்டி அ ஆனது மீரட்டிலிருந்து காலை 5 மணிக்கு புறப்பட்டு 9 மணிக்கு டெல்லியை சென்றடைகிறது. மற்றொரு தொடர்வண்டி ஆ டெல்லியில் இருந்து 7 மணிக்கு புறப்பட்டு மீரட்டை 10.30 மணிக்கு வந்தடைகிறது. இவ்விரண்டு தொடர்வண்டியும் எந்த நேரத்தில் சந்தித்துக்கொள்ளும்?

விடை : 7.56 மணிக்கு சந்திக்கும்

விளக்கம் :

மீரட்டிற்கும் டெல்லிக்கும் இடைபட்ட தொலைவு **x** கி.மீ என்க. காலை மணிக்கு பிறகு, இரு தொடர்வண்டியும் சந்தித்துக்கொள்ளும் நேரம் **y** மணிநேரம்

அ ஆனது 4 மணிநேரத்தில் **x** கி.மீ தூரத்தினைக் கடக்கிறது. ஆ என்ற தொடர்வண்டி **x** கி.மீ தூரத்தினை **(7/2)** மணிநேரத்தில் கடக்கிறது.

அ என்ற தொடர்வண்டியின் வேகம் **= x/4 km/hours**

ஆ என்ற தொடர்வண்டியின் வேகம் **= 2x/7 km/hours**

அ என்ற தொடர்வண்டி **(y + 2)** மணிநேரத்தில் கடந்த தொலைவு **+ y** மணிநேரத்தில் கடந்த தொலைவு **= x**

[(x/4) * (y + 2)] + [(2x/7) * y] = x

4, 7 இன் மீ.சி.ம **= 28**

[(7x(y + 2)) + (8xy)] / 28 = x

[(7(y + 2)) + (8y)] / 28 = x/x

7y + 14 + 8y = 28

15y = 28 - 14 = 15y = 14

y = 14/15 மணிநேரம் **= (14/15) * 60 =** 56 நிமிடம்

ஆகவே, இரு தொடர்வண்டியும் 7.56 மணிக்கு சந்திக்கும்.

14. இரண்டு பேருந்துகள் அ மற்றும் ஆ 300 கி.மீ தொலைவுள்ள ஒரு பயணத்தினை **7*(1/2)** மணிநேரத்தில் அடைகின்றன. மற்றும் அவ்விரண்டு பேருந்துகளும் 450 கி.மீ தொலைவுள்ள மற்றொரு பயணத்தினை 9 மணிநேரத்தில் முடிக்கின்றது எனில், இரண்டு பேருந்தின் வேகங்களின் விகிதத்தினைக் காண்க.

விடை : 4 : 5

விளக்கம் :

வேகத்தின் விகிதம் **= [300 / (15 / 2)] : [450 / 9]**

= [300 * (2 / 15)] : [450 / 9]

= (20 * 2) : (50)

= 40 : 50

= 4 : 5

இரண்டு பேருந்தின் வேகங்களின் விகிதம் **=** 4 : 5

15. ஒரு காரானது மணிக்கு 108 கிலோமீட்டர் வேகத்தில் ஓடுகிறது. ஆகவே, 15 நிமிடத்தில் கார் கடந்த தொலைவினைக் காண்க.

விடை : 450 மீட்டர்

விளக்கம் :

வேகம் **=** 108 கி.மீ/மணி

= [108 * (5/18)] மீட்டர்/வினாடி

= 6 * 5 மீட்டர்/வினாடி

= 30 மீட்டர்/வினாடி

15 நிமிடத்தில் கார் கடந்த தொலைவு **= (30 * 15)** மீட்டர்

= 450 மீட்டர்

16. ஒரு மகிழுந்து 360 கிலோ மீட்டர் தூரத்தை 4 மணி நேரத்தில் கடக்கின்றது.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

அதே வேகத்தில் மகிழுந்து செல்லும் பொழுது, 6 மணி 30 நிமிடங்களில் எவ்வளவு தூரத்தைக் கடக்கும் ?
விடை : 585 கி.மீ
விளக்கம் :
[6 * (1 / 2)] மணி நேரத்தில் கடந்த தூரத்தை **x** என்று குறிப்பிடுவோம்.
நேரம் (மணி) **= 4 : [6 * (1 / 2)]**
பயணித்த தூரம் (கி.மீ) **= 360 : x**
பயணநேரம் அதிகரித்தால், பயணித்த தூரமும் அதிகரிக்கும். எனவே இது நேர்மாறல் ஆகும்.
(4 **/ 360) = [6 * (1 / 2)] / x**
4 * x = (13 / 2) * 360
x = (13 * 360) / (4 * 2)
x = 585 கி.மீ
6 மணி 30 நிமிடங்களில் பயணித்த தூரம் **=** 585 கி.மீ.

35- Pipes and Cistern

1. ஒரு தொட்டியை இரு குழாய்கள் தனித்தனியே முறையே 30 நிமிடங்கள், 40 நிமிடங்களில் நிரப்புகின்றது. மற்றொரு குழாய் நீர் நிரம்பிய தொட்டியை 24 நிமிடங்களில் காலி செய்யும். தொட்டி காலியாக இருந்து இம்மூன்று குழாய்களும் ஒரே சமயத்தில் திறந்து விடப்பட்டால், அத்தொட்டி எத்தனை நிமிடங்களில் நிரம்பும்?
விடை : 1 மணி
விளக்கம் :
முதல் குழாய் 1 நிமிடத்தில் அத்தொட்டியை நிரப்பும் பாகம் **= 1/30**
இரண்டாம் குழாய் 1 நிமிடத்தில் அத்தொட்டியை நிரப்பும் பாகம் **= 1/40**
மூன்றாம் குழாய் 1 நிமிடத்தில் நீர் நிரம்பிய தொட்டியை காலி செய்யும் பாகம் **= 1/24**
ஒரே சமயத்தில் இம்மூன்று குழாய்களையும் திறந்து விட்டால், 1 நிமிடத்தில் தொட்டியில் நிரம்பும் பாகம்
= ((1/30) + (1/40) - (1/24))
= ((4 + 3 - 5)/120)
= (7 - 5) / 120
= 2 / 120
= 1/ 60
எனவே, அத்தொட்டி நிரம்பும் காலம் **= (1 / (1/60)) =** 60 நிமிடங்கள்
= 1 மணி
2. இரு குழாய்கள் ஒரு தொட்டியை நிரப்ப முறையே 12 மணிநேரம், 15 மணிநேரம் வீதத்தில் நிரப்பப்படுகிறது. மூன்றாம் குழாயின் மூலம் தொட்டியில் உள்ள நீரானது வெளியேற்றப்பட்டால் நீர் முழுவதும் வெளியேற 25 மணிநேரம் ஆகிறது எனில், மூன்று குழாய்களும் ஒரே சமயம் திறந்து விடப்பட்டால் தொட்டியானது எத்தனை மணிநேரத்தில் நிரப்பப்படுகிறது?
விடை : **9 * (1/11)** மணிநேரம்
விளக்கம் :
மூன்று குழாய்களாலும் ஒரு மணிநேரத்தில் நிரப்பப்படும் நீரின் அளவு
= ((1/12) + (1/15) - (1/25))

= (25 + 20 - 12) / (300)
= 33/300 ; = 11/100
ஆகவே, தொட்டியானது நிரம்ப ஆகும் நேரம் **= 100/11 = 9 * (1/11)**
3. மூன்று குழாய்கள் முறையே **A,B** மற்றும் **C** ஆகியவை ஒரு தொட்டியை 5 மணிநேரத்தில் நீரால் நிரப்ப எடுத்துக்கொள்கிறது. குழாய் **C** ஆனது **B** யைவிட இரு மடங்கு வேகமாகவும், குழாய் **B** ஆனது **A** யைவிட இரு மடங்கு வேகமாகவும் செயல்படுகிறது எனில், குழாய் **A** மட்டும் தொட்டியை நிரப்ப எவ்வளவு நேரம் ஆகும்?
விடை : 35 மணிநேரம்
விளக்கம் :
குழாய் **A** ஆல் தொட்டியை நிரப்ப **x** மணிநேரம் தேவைப்படுகிறது எனில்,
குழாய் **B, C** ஆனது **2/x, 4/x** என எடுத்துக் கொள்கிறது.
((1/x) + (2/x) + (4/x)) = 1/5
7/x = 1/5
x = 35 மணிநேரம்
குழாய் **A** மட்டும் தொட்டியை நிரப்ப எடுத்துக் கொள்ளும் நேரம் **= 35** மணிநேரம்
4. இரு குழாய்கள் **A** மற்றும் **B** ஒரு தொட்டியினை முறையே 36 நிமிடம், 45 நிமிடம் என்ற நேரத்தில் நிரப்புகின்றன. குழாய் **C** ஆனது 30 நிமிடத்தில் தொட்டியினை காலி செய்கிறது. தொடக்கத்தில் **A** மற்றும் **B** என்ற இரு குழாய்களும் திறந்து விடப்படுகின்றன. 7 நிமிடங்களுக்குப் பிறகு குழாய் **C** ஆனதும் திறந்து விடப்படுகின்றது எனில், தொட்டியானது காலியாக எவ்வளவு நேரம் ஆகும்?
விடை : 46 நிமிடம்
விளக்கம் :
7 நிமிடத்தில் **A** மற்றும் **B** ஆல் தொட்டியை நிரப்பப்படும் அளவு **= [7 * ((1/36) + (1/45))] = 7/20**
மீதி அளவு **= [1 - (7/20)] = 13/20**
குழாய்கள் **A, B** மற்றும் **C** ஆகியவை திறந்து இருக்கும் ஒரு நிமிடத்தில் நிரப்பப்படும் நீரின் அளவு **= [(1/36) + (1/45) - (1/30)] = 1/60**
1/60 என்பது ஒரு நிமிடத்தில் நிரப்பப்படும் நீரின் அளவு ஆகும்.
13/20 அளவு நீரானது நிரப்ப தேவைப்படும் நேரம் **= 60 * (13/20) =** 39 நிமிடம்
தொட்டியை நிரப்ப தேவைப்படும் மொத்த நேரம் **= (39 + 7) =** 46 நிமிடம்
5. இரு குழாய்கள் ஒரே நேரத்தில் வேலை செய்யும் சமயத்தில் தொட்டியானது 12 மணி நேரத்தில் நிரப்பப்படுகிறது. முதல் குழாயானது தொட்டியினை மற்றொரு குழாயுடன் ஒப்பிடுகையில் 10 மணி நேரம் முன்னதாக நிரப்புகிறது. ஆதலால் இரண்டாவது குழாயால் எத்தனை மணி நேரத்தில் தொட்டியினை நிரப்ப முடியும்?
விடை : 30 மணி நேரம்
விளக்கம் :
முதல் குழாய் தொட்டியினை நிரப்ப எடுத்துக்கொள்ளும் நேரம் **= x** மணி நேரம்
இரண்டாவது குழாய் தொட்டியினை நிரப்ப எடுத்துக்கொள்ளும் நேரம் **= (x + 10)** மணி நேரம்
[(1/x) + (1/(x + 10))] = 1/12
[(x + 10 + x) / (x (x + 10))] = 1/12
x^2 - 14x - 120 = 0
(x - 20) * (x + 6) = 0
x = 20
இரண்டாவது குழாய் தொட்டியினை நிரப்ப எடுத்துக்கொள்ளும் நேரம் **= 20 + 10 =** 30 மணி நேரம்

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

6. மின்பம்பானது ஒரு தொட்டியினை நீரினால் நிரப்ப 3 மணி நேரம் ஆகிறது. ஆனால் தொட்டியில் ஏற்பட்டுள்ள சிறு துளை காரணமாக தொட்டி நிரம்ப **3*1/2** மணி நேரம் ஆகிறது. ஆகவே, தொட்டியானது முழுவதும் நிரம்பியிருக்குமேயானால், அதனை சிறு துளை வழியாக மட்டும் காலியாக்க எத்தனை மணி நேரம் தேவைப்படுகிறது?
விடை : 21 மணி நேரம்
விளக்கம் :
சிறு துளை வழியாக 1 மணி நேரத்தில் வெளியேறும் நீரின் அளவு **= [(1/3) - (1/(7/2))**
= [(1/3) - (2/7)]
= 1/21
சிறு துளை வழியாக நீரானது வெளியேற ஆகும் நேரம் **=** 21 மணி நேரம்
7. இரு குழாய்கள் ஒரு தொட்டியினை 14 மணி நேரம், 16 மணி நேரம் என்ற வீதத்தில் நிரப்புகின்றன. இரு குழாய்களும் ஒரே சமயத்தில் திறந்து விடப்படுகிறது மற்றும் தொட்டியின் அடிப்பகுதியில் ஏற்பட்ட துளை காரணமாக அவற்றை நிரப்ப 32 நிமிடம் அதிகமாக தேவைப்படுகிறது. ஆகவே, தொட்டியானது முழுவதும் நிரம்பியிருக்குமேயானால், அதனை சிறு துளை வழியாக மட்டும் காலியாக்க எத்தனை மணி நேரம் தேவைப்படுகிறது?
விடை : 112 மணி நேரம்
விளக்கம் :
இரு குழாய்களால் தொட்டியினை நிரப்ப செய்யப்படும் வேலை **= [(1/14) + (1/16)]**
= 15/112
இரு குழாய்களால் தொட்டியினை நிரப்ப எடுத்துக்கொள்ளும் நேரம் **= 112/15** மணி நேரம் **=** 7 மணி 28 நிமிடம்
